# ஸ்ரீ ராமாநந்த சரிதம்.

T02501
R001F06

ஸத்குரு ப்ரஸாத மாலா — மலர் 1.

# ஸ்ரீ ராமாநந்த சரிதம்.

---

திருநெல்வேலி அட்வொகேட்
**R. கிருஷ்ணஸ்வாமி அய்யரால்**
இயற்றப்பட்டு

மதுரை
ஸ்ரீராமகிருஷ்ண பிரஸ்ஸில்
பிரசுரிக்கப்பட்டது.

1940.

[விலை ரு. 1-0-0.]

SRI RAMAKRISHNA PRESS
MADURA

# ஸ்ரீ ராமாநந்த சரிதம்

## முகவுரை.

மதுரை அட்வொகேட்

ஸ்ரீமான் K. ராமய்யங்காரவர்கள் B. A., B. L.,

எழுதியது.

---

அபூர்வ அற்புதப் புதல்வரான ஸ்ரீ R. கிருஷ்ண ஸ்வாமி அய்யரவர்களின் அன்பினல் ஸ்ரீராமானந்த சரிதம் என்னும் இந்தப் புஸ்தகத்திற்கு ஒரு முன்னுரை எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

ஸ்ரீ ராமானந்தரின் பூர்வாசிரமப் பழக்கம் அவர்கள் திருநெல்வேலியிலிருக்கும்போது எனக்கு அடிக்கடி நேர்ந்திருக்கிறது. பூர்வ ஸந்ததி ஸம்ஸ்காரங்களின் பல வடிவாக அவர்கள் ப்ராப்தமானவர்கள் என்பது அவர்களிடம் ஸ்வல்பகாலம் பழகினவர்களுக்குக்கூட நன்ருக விளங்கியது. அவர்கள் வடிவமும், நடை உடை பாவனைகளும் அவர்கள் ஸாதுதமர் என்பதையும், உள்நோக்குடன் பரம கிருபையும் அன்பும் ஸகல ஜந்துக்களிடமும் உள்ளவர்கள் என்பதையும், அதிர்ந்து பேசாது மனதிற்குத் தெளிந்த விஷயங்களைக் கைவிடாமல் மேல் மேலும் உண்மையான ஞானுதிகத்தை நாடியவர்கள் என்பதையும் ஸ்பஷ்டமாகக் காட்டிவந்தன. தன் வ்ருத்தியிலிருந்தே மன உயர்வுக்கும் ஆத்ம பரிசுத்திக்கும் ஆத்ம நிலை உயர்வுக்கும் பாடுபட்டு வந்தவர்கள் என்பது அவர்களுடன் பழகினவர் எவருக்கும் பளிங்கம்போல் தெளிவாக இருந்தது.

அவருடைய அருமைப் புதல்வரான இந்நூலாசிரியர் சாந்தத்துடனும் விசேஷ சிரத்தையுடனும் பகுத்து ஆராய்ந்து பதங்கள் சேர்த்து எழுதியிருக்கும் இந்தச் சரித்திரம் ஒவ்வொரு பாகத்திலும் ஆசிரியரின் சிரத்தையைக் காட்டுவதுடன், ஸ்ரீ ராமானந்தரின் குண குணங்களைக் கேவலம் சொல்லால் இல்லாமல், நடத்தைகளின் விவரணத்தினாலேயே படிப்போர் மனதுக்குள் ஆழ்ந்து பதியும்படி அவர் எழுதியிருக்கிறார். ஸ்வாமிகளின் மனோநிலை, ஆத்மநிலை, ஐக்கியநிலை, சாஸ்திரங்களில் ஊக்கத்துடன் வழிவழியாக ஸமாதி நிலை அடைந்ததெல்லாம் பூர்ணமாக விவரிக்கப்பட்டு, அவ்விதம் நோக்கமுள்ளவர்கள் அதை ஒரு வழிகாட்டியாக வைத்துக்கொண்டு உயர்வுபெற ஒத்தாசை செய்யக்கூடியதாக விருக்கிறது. அவ்விதம் இது ஒரு அபூர்வ க்ரந்தமாக எல்லாராலும் உபயோகிக்கப்படுமென்று எனது சிற்றறிவுக்குப் புலப்படுகிறது.

Madura,<br>
21—1—40.

**K. Rama Aiyangar.**

## விசேஷக்குறிப்பு.

இச்சரித்திரம் 150-வது பக்கத்தில் "வீண் விக்ஷேபம்" என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீராமாநந்தர் தண்டகமண்டலங்களில்லாமலிருப்பது அசாஸ்திரீயமென்று ஸ்ரீ ஸச்சிதாநந்த தீர்த்தஸ்வாமிகள் சொல்லிவந்தாரென்று எழுதியிருப்பதும், 154-வது பக்கத்தில் அவர்களைப்பற்றி பிரஸ்தாபித்திருப்பதும் ஸ்ரீ ஸச்சிதானந்ததீர்த்த ஸ்வாமிகளுடைய பார்வைக்கு வந்தவுடன் அவர்கள் அவ்விஷயங்களை மறுத்து எனக்கு எழுதியிருக்கிறார்கள். அதன் ஸாரமாவது:—

"பரமஹம்ஸர்களுக்கு விவிதிஷாவஸ்தையில் தண்டதாரணம் அவச்யமாகையால் விவிதிஷா—பரமஹம்ஸர்கள் தண்டாதிகளை த்யாகம்செய்வது அசாஸ்திரீயமேயாகும் என்று நான் பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தது வித்வத்ஸன்யாஸியாகிய ஸ்ரீ ராமாநந்தரை ஸம்பந்தப்படுத்தமாட்டாது. வித்வத்ஸன்யாஸியான ஸ்ரீ ராமாநந்தஸ்வாமிகள் தண்டாதிபரித்யாகம்செய்தது அசாஸ்திரீயம் என்று ஒரு பொழுதும் நான் சொன்னதே கிடையாது. மேலும்,

பரமஹம்ஸதர்மவிஷயங்களைபற்றி எங்களுக்குள் அபிப்ராயபேதம் ஏற்பட்டிருந்தபோதிலும், அதை நிவர்த்தித்துக்கொள்வதற்காக நாங்கள் ஒருவருக்கொருவர் சர்ச்சை செய்துகொண்டிருந்தபோதிலும், எங்களுக்கிருந்த பரஸ்பரப்ரீதிக்கு இதனுல் ஒருநாளும் குறைவு ஏற்படவேயில்லை. அதனுல்தான் அவர்கள் கொல்லிமலையில் ஸித்தியடைந்துவிட்டாரென்று தெரிந்தவுடன் வெகு துக்கத்துடன் ராமாநந்தவியோகவிலாபம் என்றதோர் ஸ்தோத்ரத்தைச்செய்து மனதை ஒருவாறு ஸமாதானப்படுத்திக்கொண்டிருந்தேன். இப்படியிருக்கையில் என்னை விரோதிகோடியில் சேர்த்து, அதிலும் 154-வது பக்கம் கடைசியில் கண்டபடி என்னைப்பற்றி பிரஸ்தாபித்திருப்பது உசிதமில்லை."

ஸ்ரீ ஸ்வாமிகள் இவ்விதம் எழுதியிருப்பதை கவனிக்கையில் அவர்கள் ஸ்ரீ ராமாநந்தரைக் கண்டித்ததாக இப்புஸ்தகத்தில் காணும் அம்சங்களையும், 154-வது பக்கம் கடைசியில் ஸ்ரீ ஸ்வாமிகளைப்பற்றி பிரஸ்தாபித்திருப்பதையும் திருத்திக்கொள்ளவேண்டியதவச்யமேயாகும். வாசகர்கள் இதை அவச்யம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலேகண்ட ராமாநந்த வியோக விலாபஸ்துதியை மிகவும் ஸந்தோஷத்துடன் இதனடியில் பிரசுரிக்கிறேன். ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் மறுப்பு எழுதும்படி ஏற்பட்டதற்கு மிகவும் வருந்துகிறேன்.

**R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.**

## श्रीरामानन्दवियोगबिलापस्तुतिः ॥

अद्राक्षं परमोपशान्तवपुषं वैराग्यसीमाजुषं
कारुण्यार्द्रकटाक्षसन्ततिपुषं कामादिदोषद्विषम् ।
राकाचन्द्रसमत्विषं समदृशं दूरीभवत्कल्मषं
संसाराख्यतमोमुषं गतरुषं कंचिन्महापूरुषम् ॥ १ ॥

अद्राक्षं निलमामठाधिपगुरोः संन्यासदीक्षाजुषं
शृंगाद्रौ परहंसधर्मनिचयानुष्ठाननिष्ठापरम् ।
आत्मध्यानपरायणं परिहृताहंकारदोषाङ्कुरं
रामानन्दयतिं स्वलंकृतमहादानाग्रहारोत्तमम् ॥ २ ॥

रामानन्दयतीश ते गुणगणानाकर्ण्य शृङ्गाचले
त्वत्साक्षात्कृतयेऽभ्यगां किल महादानाग्रहारं मुदा ।
किं तु त्वत्सहवाससौख्यघटना दैवेन यद्वाञ्छिता
स्मारं स्मारमिदं मदीयहृदयं संप्रत्यहो ताम्यति ॥ ३ ॥

साक्षात्कृत्य पदेपदेऽपि च भवन्मूर्तिं समीपे वसन्
त्वन्मन्दस्मितमञ्जुदर्शनसमालापादिलाभादहम् ।
किंचिन्निर्वृतमानसोऽपि सपदि त्वन्मुक्तिवार्तामिह
श्रुत्वा दूरवियोगखिन्नहृदयो भूयोऽपि दूयेतराम् ॥ ४ ॥

श्रीमच्छंकरदेशिको यमिवरो यत्रावतीर्णः पुरा
तस्मिन्नत्रिकुले द्वयोर्जनिरभूदेको गुरुश्चावयोः ।

इत्थं हन्त सतीर्थ्ययोरपि कुतः शास्त्रार्थतो भेदधी-
रित्याद्यं तव नर्मभाषणगणं श्रोष्यामि भूयः कदा ॥ ५ ॥

श्रीमत्पारमहंस्यधर्मविषये प्रश्नोत्तराण्यावयो-
र्यान्यासन् खलु तत्त्वनिर्णयकृते शास्त्रार्थचर्चा च या ।
तावन्मात्रत एव नित्यसुहृदोः सौहार्दभङ्गं मुधा
केचिच्चेदिह कल्पयन्ति किमिदं शाठ्यं मयैकाकिना ॥ ६ ॥

त्वत्सेवानिरता जनाः सुकृतिनस्तत्तत्फलं लेभिरे
त्वत्सान्निध्यवतस्तु मे फलमिदं मिथ्यापवादः परम् ।
इत्थं मामिह वञ्चयन्नवसितौ मुक्तिं गतोऽभूः स्वयं
न्याय्यं किं तदिदं त्वमेव कथय त्वं न्यायवक्ता खलु ॥ ७ ॥

सङ्गः सत्सु विधीयतामिति वचः श्रीशांकरं संस्मरन्
वैराग्यादिगुणाकरेण भवता संगार्थमस्म्यागतः ।
प्रारब्धैकवंशवदस्य तु कथं तादृक्सुयोगो भवेत्
यस्मान्मां प्रविहाय निर्दयतया प्राप्तोऽसि विष्णोः पदम् ॥

यद्वा नात्र हि खेदनीयमधुना यस्माद्भवान् ब्रह्मवित्
प्राणा ब्रह्मविदां हि नोत्क्रमगतिं यान्तीति चाह श्रुतिः ।
तस्माद्भिन्नघटांबरादिनयतः पूर्णस्य ते सन्निधौ
ब्रह्मात्मानुभवो ममापि सुदृढीभूयादिति प्रार्थये ॥ ९ ॥

सच्चिदानन्दतीर्थस्य काचिदेषा कृतिः शुभा ।
रामानन्दयतेः काममामोदाय प्रकल्पताम् ॥ १० ॥

# ஸ்ரீ ராமாநந்த சரிதம்.

## கிரந்த கர்த்தரின் விக்ஞாபனம்.

ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளவர்கள் அகண்ட காவேரீ தீரத்தில் ஸஞ்சாரம் செய்து வந்த காலம் முதல் அநேக பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் சரித்திரத்தை எழுதி பிரசுரிக்கவேண்டுமென்று என்னை வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் அவர்கள் பூர்வாசிரமத்தில் எனக்குத் தகப்பனாராகயிருந்ததால் அவர்களுடைய சரித்திரத்தை நானே எழுதுவது அவ்வளவு உசிதமாகத் தோன்றாமலிருந்தது. வேறு யாரேனும் சிஷ்யர்கள் எழுதிக்கொள்ளட்டுமென்றிருந்துவிட்டேன். அவர்களிடம் விசேஷ பக்தியுள்ள மதுரை ஸ்வாமிகள் என்கிற ஸ்ரீ ஸச்சிதாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளவர்கள் கொஞ்சம் எழுதவாரம்பித்ததில் பலவித காரணங்களால் பூர்த்தியாகவில்லை. ஸ்ரீ ராமாநந்தர் ஸித்தியான பிறகு அநேக நண்பர்கள் மறுபடியும் என்னையே வற்புறுத்தவாரம்பித்தார்கள். அவர்களுடைய தாக்ஷிண்யத்திற்கும் நிர்பந்தமான வேண்டுகோளுக்கும் கட்டுப்பட்டு சரித்திரம் எழுதுவதாக கடைசியாக ஒப்புக்கொண்டேன். பூர்வாசிரமத்திலும் துரீயாசிரமத்திலும் ஜாஸ்தியாக நேரில் பழகக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தபடியால் நான் எழுதுவதும் உசிதம்தான் என்று ஒருவாறு ஸமாதானம் செய்துகொண்டேன். பூர்வாசிரமத்தில் அவர்களுடைய உதார ஸ்வபாவத்தையும் மேலாசிரமத்தில் அவர்களுடைய தீவிரமான வைராக்கிய நிலையையும் கண்டு அனுபவித்தவர்கள் யாவரும் நான் எழுதியிருப்பது போதாதென்றே நினைப்பார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் ஸித்தியடைந்தது கொல்லி மலையில். ஸமாதி ஏற்பட்டது விசுவாம்பா ஸமுத்திரம் என்ற கிராமத்தில். அப்படியிருந்தும் அவர்களுடைய ஞாபகார்த்தமாக மஹாதானபுரத்திலும் ஓர் அதிஷ்டானம் செய்யவேண்டுமென்று ஸமாதி ஸ்தலத்திலிருந்து மிருத்திகை கொண்டுவந்து மஹாதானபுரத்தில் ஸ்தாபனம் செய்து நித்ய பூஜாதிகள் செய்து வருவதுடன் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் ஆசிரம குருவான ஸ்ரீ நிலமாவுமடம் கமலாநந்த நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகளவர்களின் அதிஷ்டானத்திற்கு ஸமீபத்தில் இவர்களுக்கும் ஓர் அதிஷ்டானம் வெகு அழகாகக் கட்டி முடித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் மூல காரணமாயிருந்து வருகிற டாக்டர் பிரஹ்மஸ்ரீ M. P. நடேசய்யரவர்களே இப்புஸ்தகம் வெளியிடும் விஷயத்திலும் விசேஷ ஊக்கத்துடன் உதவி செய்து வந்திருக்கிறார். அவர்களுடைய குரு பக்திக்குத் தக்கபடி அவர்களுடைய ஸர்வ மனோபீஷ்டங்களும் நிறைவேறவேண்டுமென்று ஆசார்ய ரூபியான பரமேசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

மஹாதானபுரம் அதிஷ்டானத்தில் நித்ய பூஜைக்கு உபயோகப்பட்டு வரும் அஷ்டோத்தர சத நாமாவளி ஸ்தோத்திரத்தையும் இதில் சேர்த்திருக்கிறேன்.

ஸ்ரீ ஸ்வாமிகளுடன் பூர்வாசிரமத்தில் ஸ்நேஹபாவத்துடன் பழகி வந்திருக்கிற மதுரை அட்வொகேட் பிரஹ்மஸ்ரீ K. ராமய்யங்காரவர்கள் இப்புஸ்தகத்திற்கு முகவுரை எழுத ஸம்மதித்தது என் பாக்கியமே. ஸ்ரீஸ்வாமிகளவர்களிடம் அவர்கள் வைத்திருக்கும் விசேஷ மதிப்பும் அவர்கள் ஸந்ததியாரிடம் வைத்திருக்கும் விசேஷ வாத்

ஸல்யமும் அன்பு ததும்பும் அம்முகவுரையில் நன்கு தெரியவரும்.

இப்புஸ்தகம் அச்சிடும் விஷயத்தில் உத்ஸாஹத்துடன் ஈடுபட்டு இவ்வளவு அழகாக அச்சிட்டுக்கொடுத்திருக்கிற மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ் ஸ்வான்தார் பிரஹ்மஸ்ரீ S. N. ஸுப்ரஹ்மண்ய அய்யரவர்களுக்கும் நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1—2—40. **R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.**

ॐ

॥ श्रीगुरुभ्यो नमः ॥

# ॥ श्रीरामानन्दाष्टोत्तरशतनामावलिस्तोत्रम् ॥

श्रीमान् रामो रामचन्द्रो रमणीयगुणाकरः ।
सर्वलोकप्रियो धीमानात्रेयकुलचन्द्रमाः ॥ १ ॥

प्रभवाब्दसमुद्भूतः पुनर्वसुसुतारकः ।
मान्यो मार्गशिरःकृष्णद्वितीयालब्धजन्मकः ॥ २ ॥

धन्यो भागीरथीसूनुः गोपालसुन्दरात्मजः ।
शेषाद्रिनाथदौहित्रो रामस्वामिसुतात्मभूः ॥ ३ ॥

नवसाल[1]पुरश्रेष्ठप्रथमस्पृष्टभूमिकः ।
सन्यासिग्रामवास्तव्यो राजगोपालपूर्वजः ॥ ४ ॥

कालोपदिष्टसावित्रो विनीतः सत्यवाक् शुचिः ।
मानी तातवियोगज्ञो मातृप्रेमविवर्धितः ॥ ५ ॥

---

1. புதுக்கோட்டை

भ्रातृस्नेहपराधीनो राजभाषाविचक्षणः ।
मयूरेशपुरीवासी सह्यजाधूतकल्मषः ॥ ६ ॥

मुक्तभूपसमुद्राख्यग्रामवासप्रियः प्रभुः ।
वावदूकवरो वाग्मी बहुमित्रः प्रसन्नधीः ॥ ७ ॥

वेदशीर्षसमध्येता नानाग्रन्थविलोकनः ।
शालिवाटीपुरीवासः शास्त्रार्थपरिशीलकः ॥ ८ ॥

तत्त्वज्ञो व्यवहारज्ञः सज्जनप्रतिपूजकः ।
अधर्मद्वेषकोधर्मपक्षपाती द्विजोत्तमः ॥ ९ ॥

वदान्यो विगताहंतो ममतागन्धवर्जितः ।
दयार्द्रहृदयो दक्ष आत्मविद्याविशारदः ॥ १० ॥

नृसिंहभारतीपादपद्मसेवापरायणः ।
गोकर्णादिमहापुण्यक्षेत्राटनसमुत्सुकः ॥ ११ ॥

जाह्नवीस्नानपूतात्मा विश्वेश्वरकटाक्षितः ।
मातृसेवोद्यतः शान्तो भवमुक्तित्वसन्वितः ॥ १२ ॥

गृह्यधर्मस्थितो धीरो गुर्वाज्ञापरिपालकः ।
सर्वसंपत्समायुक्तो विषयेच्छाविदूरधीः ॥ १३ ॥

---

2. மாயவரம் 3. காவேரி 4. குழித்தலை 5. திருநெல்வேலி

संप्राप्ततीव्रवैराग्यः शृङ्गेरीगमनोद्यतः ।
आचार्येन्द्रकृपाभूमिः शान्तिदान्तिविभूषितः ॥ १४ ॥

नेलेमावुमठाधीशलब्धतुर्याश्रमक्रमः ।
ऋश्यशृङ्गपुरावासो वेदान्तश्रवणोत्सुकः ॥ १५ ॥

कावेरीतटसंचारी करपात्रोऽपरिग्रहः ।
भस्मोद्धूलितसर्वाङ्गः कौपीनैकपरिच्छदः ॥ १६ ॥

विद्वत्परमहंसेड्यो नदीतीरनिकेतनः ।
पादाम्बुजरजस्स्पर्शपूतानेकाग्रहारकः ॥ १७ ॥

विविक्तदेशसंसेवी देवाचलकृतालयः ।
निदिध्यासपरो मौनी मुक्तिमार्गानुचिन्तकः ॥ १८ ॥

परहंसविधानस्थो धर्मसूक्ष्मविमर्शनः ।
आर्यधर्मोपसंदेष्टा नानाभक्तनिषेवितः ॥ १९ ॥

श्रीमद्रामसमुद्राख्यक्षेत्रसेवितदेशिकः ।
तुर्याश्रमप्रदाचार्यमहापूजाकृतोद्यमः ॥ २० ॥

नेलेमावुनवाधीशमहावाक्योपदेशकृत् ।
गुर्वधिष्ठानसंशुद्धमहादानपुरोषितः ॥ २१ ॥

---

6. சிருங்கேரி 7. தேவர்மலை 8. அயனூர்

जनसंसर्गविमुख एकान्तावासलोलुपः ।
चतुरश्रगिरिं प्राप्तो धर्मकोशेशंपादगः ॥ २२ ॥

धातृमार्गशिरश्शुक्लत्रयोदश्युज्झिताङ्गकः ।
विश्वाम्बिकासमुद्राख्यग्रामसंक्लृप्तवेदिकः ॥ २३ ॥

सर्वबन्धविनिर्मुक्तो ज्ञानानन्दसुपूजितः ।
मायातीतो गुणातीतो देहातीतो निरञ्जनः ॥ २४ ॥

प्रत्यगात्मा परब्रह्म सच्चिदानन्दलक्षणः ।
सर्वतः पातु नः सर्वान् रामानन्दसरस्वती ॥ २५ ॥

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य-नेलेमावुमठाधीश-श्रीकमलानन्दनरसिंह्मभारतीपूज्यपाद — करकमलसंजातानां श्रीमत्परमहंसपरिव्राजक — श्रीरामानन्दसरस्वतीपूज्यपादानां अष्टोत्तरशतनामावलिस्तोत्रं संपूर्णम् ॥ ओं तत्सत् ॥

---

9. கொல்லிமலை. 10. அறப்பளீசுவரர்.


Sridhara Printing House, Trivandrum.

# விஷய ஸூசிகை.


| | | |
|---|---|---|
| ஸ்ரீமான் K. ராமய்யங்காரவர்களுடைய முகவுரை | | i |
| கிரந்த கர்த்தரின் விக்ஞாபனம் | | iii |
| ஸ்ரீராமாநந்த அஷ்டோத்தர சத நாமாவளி ஸ்தோத்ரம் | | vii |
| விஷய ஸூசிகை | | xi |
| அத்யாயம் 1. | வம்ச வரலாறு | 1 |
| ,, 2. | பால்யம் | 15 |
| ,, 3. | ஞானத்தில் ஊக்கம் | 28 |
| ,, 4. | ஆசார்யானுக்ரஹம் | 39 |
| ,, 5. | காசி யாத்திரை | 47 |
| ,, 6. | ஸன்யாஸ ப்ரயத்னம் | 62 |
| ,, 7. | கார்ஹஸ்த்யச் சிறப்பு | 80 |
| ,, 8. | சிருங்கேரி வாஸம் | 96 |
| ,, 9. | காவேரீதீர வாஸம் | 116 |
| ,, 10. | தேவகிரி வாஸம் | 131 |
| ,, 11. | மஹாதானபுரம் | 147 |
| ,, 12. | கொல்லிமலை | 158 |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 18 | 20 | ராஜகோபர்லன் | ராஜகோபாலன் |
| 29 | 1 | மதப்பற்று | ஞானத்தில் ஊக்கம் |
| 31 | 1 | மதப்பற்று | ஞானத்தில் ஊக்கம் |
| 33 | 1 | மதப்பற்று | ஞானத்தில் ஊக்கம் |
| 34 | 4 | ஸமயம் | ஸமயம். |
| 35 | 1 | மதப்பற்று | ஞானத்தில் ஊக்கம் |
| 37 | 1 | மதப்பற்று | ஞானத்தில் ஊக்கம் |
| 39 | 1 | ஸ்ரீங்கேரி யாத்திரை | ஆசார்யானுக்ரஹம் |
| 42 | 24 | இவ்வரத்தினல் | இல்லாததினல் |
| 46 | 5 | பிரதயக்ஷ | பிரத்யக்ஷ |
| 105 | 20 | சிரம்ம | சிரமம் |
| 133 | 19 | மாஹாத்மயம் | மாஹாத்ம்யம் |
| 136 | 6 | அதற்கு அவர்களும் | அதற்கும் அவர்கள் |
| 154 | 25 | அஸெக்கியம் | அஸௌக்கியம் |



ஸ்ரீராமாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்,

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீராமாநந்த சரிதம்

## அத்யாயம் 1

## வம்ச வரலாறு

---

### 1. கோத்திர மஹிமை

ஸர்வ ஜகந்நியந்தாவான ஸர்வேசுவரன் கல்பாரம்பத்தில் பிரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவரைக்கொண்டு மற்ற ஜகத்தை ஸ்ருஷ்டி செய்யக்கருதி அவருக்கு ஸாதனமாயிருக்கும் பொருட்டு வேதங்களைக் கொடுத்ததாகவும், பிறகு பிரஹ்மா ஸனத்குமாரர் முதலான நான்கு மானஸிக புத்திரர்களை ஸ்ருஷ்டித்ததில் அவர்கள் ஞானநிஷ்டாபரர்களாக அந்தர்முகர்களாக நிவிருத்தி மார்க்கத்திலேயேயிருந்துவிட்டபடியால் ஜகத்தில் ஸந்ததி விருத்திக்கு பிரயோஜனப்படாமலிருந்தது தெரிந்து பிரஹ்மா மறுபடியும் மானஸிகமாகவே மரீசி, அத்ரி, அங்கிரஸ் முதலிய மஹர்ஷிகளை ஸ்ருஷ்டி செய்து அவர்கள் மூலமே ஜகத் விஸ்தாரமடைந்ததாகவும் புராணாதிகள் மூலமாகத் தெரிய வருகிறது. தேவர்கள், மனிதர்கள், பசு பக்ஷிகள் முதலான ஸகல ஜீவர்களுமே அம்மஹர்ஷிகளின் ஸந்ததிகளாக இருந்தபோதிலும் அவர்களின் ஸ்வபாவ குணங்களான சாந்தி முதலியதுகளையும் கர்மாக்களான தபோ, யக்ஞ

யாகாத்யயனாதிகளையும் காப்பாற்றி வரவேண்டிய பொறுப்புடன் ஏற்பட்ட ஸந்ததிகளே பிரஹ்மகுலத்தைச் சேர்ந்தவர்கள் எனப்படுவார்கள். தம் முன்னோர்கள் பிரஹ்மாவின் புத்திரர்களென்றும் மிகப்பெருமை வாய்ந்தவர்களென்றும் பிரதிதினம் அவர்களுக்கு ஞாபகமிருந்து வந்தால் தங்கள் பரம்பரா தர்மங்களை கூடியமட்டும் சரிவரக் காப்பாற்றி வருவார்களென்று கருதி இன்னின்ன மஹர்ஷியின் கோத்திரத்தில் பிறந்தோமென்ற பிரஸித்தி அவிச்சின்னமாய் ஏற்பட்டு வந்திருக்கிறது.

அம்மஹர்ஷிகளில் அத்ரி என்போரின் புதல்வராகப் பிறக்க ஆசைகொண்ட மும்மூர்த்திகளும் சந்திரன், தத்தாத்ரேயர், தூர்வாஸஸ் என்று முறையே அவதரித்தார்களென்று ஒரு சரித்திரமும், மும்மூர்த்திகளும் ஒருருவாகக்கொண்டு தத்தாத்ரேய வடிவம் தரித்தார்களென்று மற்றொரு சரித்திரமும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வத்ரியையும் அவர் பத்னி அனஸூயையையும் ஸ்ரீமத் ராமாயணத்தில் மிகவும் போற்றப்பட்டிருக்கிறது. பின்னால் இக்கலியில் வைதிக மார்க்கம் சீரழிந்திருப்பதைப் பார்த்து அம்மூர்த்திகளில் ஒருவரான பரமேசுவரன் தர்ம ஸம்ஸ்தாபனம் செய்யக்கருதி அவதரிக்கப் பார்த்தபோது கேரள தேசத்தில் காலடியில் இருந்த அவ்வத்ரி குலத்திலேயே பிறந்த சிவகுரு என்பவரை பிதாவாகக்கொண்டார் என்று சங்கரவிஜயம் கூறுகிறது.

## 2. மாயவரம் கோபுவய்யர்

இப்பெருமை பெற்ற அத்ரி குலத்தில் உதித்த மஹான்களில் கோபாலய்யர் என்றொருவர் சோளதேசத்தில்

காவேரிக்கரையில் மாயவரம் என்ற க்ஷேத்திரத்தில் வெகு வருஷங்களுக்கு முன் வஸித்துவந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் அப்பிரதேசத்திலுள்ள சிற்றரசர்களில் ஒருவரிடம் இவர் மந்திரி ஸ்தானம் பெற்றிருந்ததாகவும், அவ்வரசன் மீது துருஷ்கர்கள் படையெடுத்து ஜயித்துவிட்ட ஸமயத்தில் கோபாலய்யர் அவ்வரசனை பந்தோபஸ்தாக மறைத்து வைத்து உயிர்தப்பிப் பிழைத்துக்கொடுத்ததாகவும், அவ்வரசனை காட்டிக்கொடுக்க வேண்டுமென்று சத்துரு சேனைத்தலைவர் நயமாய் சொல்லியும் கேட்காததினால் இவரை பலவிதமாக ஹிம்ஸித்து கடைசியில் கழுவில் ஏற்றிவிடவாரம்பித்ததாகவும், அக்கழுவிலிருந்தும் அவர் ஒரே திருடமாக தன் அரசனிருக்குமிடம் சொல்ல மறுத்ததாகவும், பிறகு இவருடைய யஜமான விசுவாஸத்தையும் மன உறுதியையும் மெச்சி அத்தலைவன் இவரை ஸந்தோஷமாக விடுதலை செய்து அவ்வரசனுக்கும் அபயதானம் செய்தார் என்றும் சொல்வதுண்டு. இப்பொழுதும் அக்குலத்தில் பிறந்தவர் யாரேனும் பிடிவாதமாயிருந்தால் “கழுவிலிருந்து கை யசைக்கிய கோபுவய்யர் கூட்டம்” என்று சொல்வார்கள்.

அவர் லௌகிகத்தில் பெரிய ஸ்தானம் வஹித்ததுடன் தன் குலத்திற்கேற்பட்ட தர்மாசரணைகளையும் சரிவர நடத்தி வந்தார். அவர் ஸந்தான கோபாலமூர்த்தியை விசேஷமாய் ஆராதித்து வந்ததாகவும், அக்காலத்திலேற்பட்ட ராஜ்யக்கலகங்களில் இவர் கிருஹத்தில் கொள்ளை போட்ட சில சிப்பாய்கள் அந்த மூர்த்தியை அபஹரித்துக் கொண்டு கொஞ்சதூரம் போனதும் அவர்களுக்கு கண்

தெரியாமல் போய்விட, உடனே அவ்விக்கிரஹத்தை கீழே எறிந்துவிட்டு ஓடிவிட்டார்களென்றும், மறுபடியும் அம்மூர்த்தியை கிரஹத்திற்குக் கொண்டுவர யத்தனித்த தில் விழுந்த விடத்திலேயே ஸாந்நித்யம் மிகுந்து அசைக்க முடியாமல் அங்கேயே பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் பெரியோர்கள் சொல்வார்கள். அந்த ஸ்தலம் எங்கிருக்கிற தென்று விசாரித்துப் பார்த்ததில் துலங்கவில்லை.

கோபாலய்யருக்கு ஸேதுராமய்யர் என்ற ஒரே புத்திரர் இருந்தார். அவர் தஞ்சாவூர் ராஜவம்சத்தைச்சேர்ந்து திருவிடமருதூரில் சிற்றரசராயிருந்தவர்களிடம் உபதேசக ஸ்தானத்தில் உயர்ந்த வேலை பார்த்து வந்ததாகத் தெரிகிறது. அவருக்கு அப்பாத்துரை அய்யர், ராமஸ்வாமி சாஸ்திரிகள், மஹாலிங்கய்யர் என்று மூன்று புத்திரர் களும் ஸுப்பலக்ஷ்மி, ருக்மணி என்று இரண்டு புத்திரி களுமிருந்தார்கள். ஸுப்பலக்ஷ்மியை அருவிழிமங்கலம் மஹாலிங்கய்யருக்கு விவாஹம் செய்து கொடுத்தார். இத் தம்பதிக்கு நாராயணஸ்வாமி அய்யர், வெங்கடராமய்யர் என்று இரண்டு புத்திரர்கள் ஜனித்தார்கள். இவர்களைப் பற்றி பின்னால் பிரஸ்தாபிக்க அவசியமேற்படும். ருக்மணியை சாத்தனூர் ஸ்வாமிநாத சாஸ்திரிகளுக்கு விவாஹம் செய்து கொடுத்ததில் அவர்களுக்கும் நன்கு ஸந்ததி விருத்தி யேற்பட்டது. இந்த ராஜதானியில் அதிபிரஸித்தராக ஸமீப காலத்தில் ஜட்ஜ் வேலை பார்த்து வந்த R. A. கிருஷ்ணஸ்வாமி அய்யர் இவர்களுடைய ஒரு புத்திரியின் பௌத்திரர். அப்பாத்துரை அய்யர் வெகு தீரர், சரீர பலமும் நன்கு வாய்ந்தவர். அக்காலத்தி

லேற்பட்ட ஒரு ராஜகீய கலகத்தில் இவரையும் கைதியாக்கி பலாத்காரமாக வேலை செய்யும்படி செய்தார்கள். பின்னால் இவர் தம்பிகள் மதுரையில் குடித்தனமாக அமர்ந்த பிற்பாடும் ஸம்பவித்த ஒரு பெரிய கலகத்தில் சிப்பாய்கள் ஊருக்குள் நுழைந்து ஜயகோஷத்துடன் ஆர்பாடம் செய்துகொண்டு சூறையிட்டார்கள். வீட்டிலுள்ளவர்களை பந்தோபஸ்தாக வேறு இடத்திற்கு அனுப்ப ஸாவகாசமில்லை, என்ன செய்வதென்று தோன்றாமல் எல்லாரும் பரிதபித்தார்கள். அப்பொழுது இவர் மற்றவர்களெல்லாரையும் வீட்டிற்குள்ளேயே எவ்வித சப்தமும் செய்யாமல் இருக்கச்சொல்லி, வாசல் கதவை வெளிப்பக்கத்தில் தாளிட்டு பூட்டிக்கொண்டு, தான் மாத்திரம் வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டுவிட்டார். அத்தெருவில் சிப்பாய்கள் வந்தவுடன் அவர்களின் தலைவரை தானே கூப்பிட்டு தன் பந்துக்கள் தன்னை தனியே விட்டுவிட்டுப் போய்விட்டார்களென்றும் இக்காலத்தில் நன்றியே கிடையாமல் போய்விட்டதென்றும் உருக்கமாகப் பேசினதில் அத்தலைவர் இவருக்கு எவ்வித கெடுதலும் வராமல் தான் பார்த்துக்கொள்வதாகச் சொல்லி இவர் வீட்டைக்கடந்து மற்றவிடங்களுக்கு சிப்பாய்களை அனுப்பிவிட்டார். இவருடைய தைர்யத்தினாலேயே அக்குடும்பம் காப்பாற்றப்பட்டது. அவருக்கு ஆண் ஸந்ததியில்லாததினால் தத்காலம் அவருடைய பரம்பரை விபரம் தெரியவில்லை.

## 3. முனிவீப் மஹாலிங்கய்யர்

ஸேதுராமய்யரின் மூன்றாவது புத்திரரான மஹாலிங்கய்யர் தன் குலதர்மமான வித்யாப்யாஸத்துடன் வியவ

ஹாரத்திற்கு வேண்டிய தர்மசாஸ்திர பாகங்களையும் நன்கு அறிந்திருந்தார். கொஞ்சநாள் வக்கீலாக இருந்து பிறகு டிஸ்டிரிக்ட் முனிஸீபாக நியமிக்கப்பட்டார். ஸ்ரீவில்லிப் புத்தூர், அம்பாஸமுத்திரம், திருநெல்வேலி முதலான இடங்களில் வேலை பார்த்து வந்தார். மிகவும் ஈசுவர பக்தியுள்ளவர். எந்த வியவஹாரத்திலும் உண்மையைக்கண்டு பிடிப்பதில் விசேஷ ஸாமர்த்தியம் வாய்ந்தவரென்ற பிரஸித்தியை அடைந்தார். அவர் இருந்த விடமெல்லாம் அவர் நீதி செலுத்திவந்த மேன்மையை மெச்சாதாரில்லை. பந்துக்களிடத்தில் மிகவும் பிரியம் வைத்தவர். தன்னை அண்டினவர்களுக்கு தன்னாலாகக்கூடிய உபகாரத்தை தடையன்னியில் செய்து கொடுக்கக்கூடிய ஸ்வபாவமுள்ளவர். அவர் திருநெல்வேலி ஜில்லாவில் உத்யோகம் பார்த்து வந்த ஸமயத்தில் அவரை ஆசிரயித்து காலக்ஷேபம் நடத்திக்கொள்ள உத்தேசித்து தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து அநேகம் பேர்கள் திருநெல்வேலிப் பக்கம் குடியேறியிருப்பதாகத்தெரிகிறது. இவருடைய ஸ்வபாவத்தைக்கேட்டு சோளதேசத்திலிருந்தும் அதற்கு வடக்கேயிருந்தும் திருவனந்தபுரம் ராஜ ஸதஸ்ஸுக்குப்போகும் வித்வான்கள் யாவரும் வழியில் இவர் கிரஹத்தில் கொஞ்சநாளாவது தங்கிவிட்டுத்தான் போவார்கள்.

அவருக்கு மூன்று புத்திரிகளிருந்தார்கள். மூத்தவளான ஸுந்தரியை மதுரையில் வக்கீலாயிருந்த திருவிசநல்லூர் நீலகண்ட சாஸ்திரிகளுக்கும், இரண்டாவதான குப்பச்சியை திருவையாறு ஸ்ரீநிவாஸய்யருக்கும், மூன்றுவதான ஜானகியை தன் ஸஹோதரி ஸுப்பலக்ஷ்மியின்

பௌத்திரனும் பின்னால் ஸப்ஜட்ஜாயுமிருந்த V. ஸ்வாமி நாதய்யருக்கும், விவாஹம் செய்து கொடுத்தார். புத்திர ஸந்தானமில்லாத குறையை நீக்கிக்கொள்ள தன் தமயனார் ராமஸ்வாமி சாஸ்திரிகளின் பௌத்திரனான இனி சொல்லப் போகிற ராஜகோபாலனை ஸ்வீகாரம் செய்துகொண்டார். தன் சொத்துக்களில் புத்திரிகளுக்கும் ஸ்வீகார புத்திரனுக்கும் வைத்ததுபோக பாக்கியுள்ளஏராளமான ஐவேஜை தர்மத்திற்கே விநியோகப்படுத்தும்படி ஏற்பாடு செய்தார். அவர் அபிப்பிராயத்தை நிறைவேற்றும் பாக்யம் அந்த ஸ்வீகார புத்திரனுக்கே கிடைத்தது. திருவிடமருதூரில் பன்னிரண்டு கிரஹங்கள் கட்டி ஒவ்வொரு கிரஹத்திற்கும் வேண்டிய பாத்திரங்களும் ஒரு வருஷத்திற்கு வேண்டிய சாமான்களும் சேர்த்து பெரியோர்களை பலவிடங்களிலிருந்து தருவித்து தானம் செய்யப்பட்டது. "மஹாலிங்கய்யர் அக்ரஹாரம்" என்றும் "பன்னிரண்டு வீடு" என்றும் இன்னமும் பிரஸித்தமாக இருந்து வருகிறது. திருவிடமருதூரிலேயே ஒரு தண்ணீர் பந்தலும் திருநெல்வேலியில் அன்னதான தர்மமும் ஏற்பட்டு இன்னமும் நடந்து வருகின்றன.

## 4. மதுரை ராமஸ்வாமி சாஸ்திரிகள்

ராமஸ்வாமி சாஸ்திரிகள் விசேஷமான சாஸ்திரக்ஞர். மிகவும் தர்மானுஷ்டானபரர். ஆத்மகுணம் மிக்க வாய்ந்தவர். அவர் மதுரையில் வக்கீலாயிருந்து விசேஷ ஸம்பாத்தியமும் செய்து வந்தார். அவருடைய கொடைக்கு அளவேயில்லை. அவர் கைப்பெட்டியில் கையிட்டு எடுத்து

வந்ததை எண்ணிப்பார்க்காமல் அப்படியே கொடுத்துவிடுவார் என்று சொல்வார்கள். அவர் கிரஹத்திற்கு வந்த பந்துக்களோ அதிதிகளோ மாஸக்கணக்காகத்தான் தங்குவார்கள். அப்புறமும் அவர்களை அனுப்பிக்கொடுக்க சாஸ்திரிகளுக்கு மனம் வராது. காலையில் பிராஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்திருந்து வைகை நதியில் நீராடி ஸூர்யோதய காலத்தில் கிரஹம் திரும்பி ஔபாஸனம் முதலான கர்மாக்களை யதாவத்தாக நடத்திவந்தார். பூஜை, பிரஹ்ம யக்ஞம், வைசுவதேவம் முதலானதுகளை முடித்து போஜனம் செய்ய மத்தியானம் பதினெட்டு நாழிகையாகிவிடும். அதுவரை இதர ஜாதியாரிடம் ஸம்பாஷணை செய்வது கிடையாது. ஸாயங்காலம் ஸ்நாநத்திற்கு மறுபடியும் ஐந்து மணி சுமாருக்கு வைகைக்குப் புறப்பட்டுவிடுவார். ஆகையால் இவர் கச்சேரியில் ஒருமணிக்கு மேல் நாலரை மணி வரை தான் இருக்க நேரிடும். இவருடைய தர்மசிரத்தை ஜட்ஜ் முதலான அதிகாரிகளுக்கும் நன்ருய் தெரியுமாதலால் அவருடைய ஸௌகர்யத்தை கவனித்தே விசாரணைக்கு எடுப்பார்கள். ஒருமணிக்கு மேலும் ஸாயங்காலம் நதிக்குப் போகும்போதும் தான் கக்ஷிக்காரர்களிடம் நேரில் பேச அவருக்கு அவகாசம் கிடைக்கும். ஆனல் ஒரு நிமிஷம் கூட வீணுக்காமலிருந்தபடியால் ஸகல காரியங்களும் எவ்வித குறையுமன்னியில் நடைபெற்றன. ராத்திரியானேனும் வித்வான்களைக்கொண்டு புராண பிரவசனம் செய்விப்பார். யாரும் இல்லாத ஸந்தர்ப்பங்களில் தானேயும் பிரவசனம் செய்வார். இப்படியே தன்னுயுஸ் வரை காலங்கழித்து வந்தார். வயது முதிர்ந்த காலத்தில் தனக்கு அவலம்பமாயிருப்பானென்று நம்பியிருந்த மூத்தகுமாரன்



மாணவன்

G. ராமசந்திரன்.

கோபாலஸுந்தரய்யர் இறக்க, சோகத்தினால் மிகவும் வருந்தினர். தன்னிடம் ரசீது கொடுத்து ஏராளமான தொகை வாங்கிப்போன ஒரு பெரிய மனுஷியர் அகஸ்மாத்தாக வழியில் இறந்துபோய் அவர் வசமுள்ள பணத்தை யாரோ அபஹரித்துக்கொண்டு போய்விட, பின்னால் ரசீது கொடுத்திருந்தும் தொகை கொடுபடவில்லை என்று அவர் வாரிசுகள் வியவஹாரம் செய்யத் தலைப்பட்டதில் மறுபடியும் தொகை கொடுக்கும்படி ஏற்பட்ட நஷ்டத்தினால் லௌகிக ஸௌகர்யமும் குறைபட்டது. சரீரத்தில் வியாதியும் கண்டது. இவ்விதமாக பலவிதத்தில் தேகமும் மனதும் தளர்ச்சியடைந்தும் கூட தன் ஸ்வபாவ நிலையை விட்டுத்தவராமல் சாஸ்திர பரிசீலனையிலும் ஆத்ம விசாரத்திலுமே தன் பாக்கி வாழ்நாட்களைக் கழித்து 1880 ம் வருஷத்தில் தன் இஷ்ட தேவதையான ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவராளின் திருவடி சேர்ந்தார்.

## 5. அவர் ஸந்ததிகள்

அவருக்கு கோபாலஸுந்தரம், ஸேதுராமன், சிவராமகிருஷ்ணன் என்று மூன்று புத்திரர்களும், மீனாக்ஷி, ருக்மணி என்ற இரண்டு புத்திரிகளுமிருந்தார்கள். மீனாக்ஷியை மாயவரத்திற்கு அடுத்த பில்லூரிலிருந்த ஸ்வாமிநாத சாஸ்திரிகளுக்கும், ருக்மணியை கும்பகோணத்தில் வக்கீலாயிருந்த ராமகிருஷ்ண சாஸ்திரிகளுக்கும், விவாஹம் செய்து கொடுத்தார். ஸேதுராமய்யருக்கு மிகவும் அனுகூலமாக அம்பா என்பவள் இரண்டாம் தாரமாக வமைந்தாள். அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தும் பால்யத்திலேயே காலஞ் சென்றுவிட்டான். அதன் பேரில்

அவர் பல இடங்களில் ஓவர்ஸீயர் முதலிய உத்தியோகங்களிலிருந்து வந்ததை நிறுத்திக்கொண்டு திருவிடமருதூருக்கு வந்து தன் கிரஹகிருத்யம் நடக்கவேண்டியதற்காக ஸ்டாம்புவெண்டராக இருந்துவந்தார். பின்பு அதையும் விட்டு விட்டு, வீடு முதலியதுகளை விற்று ரொக்கத்தொகையாக்கிக்கொண்டு, காசி யாத்திரை போனார். அந்த தேசம் தன் தேகத்திற்கு ஏற்றுக்கொள்ளாததினால் மறுபடியும் திருவிடமருதூருக்கே திரும்பி வந்தார். கொஞ்சநாள் சென்ற பிறகு அவர் பார்வைக்கு க்ஷயரோகம் ஏற்பட்டு சிரமப்பட்ட மத்தியில் தன் தம்பியின் குமாரியான காமாக்ஷியின் ஸம்ரக்ஷணையிலிருக்கக்கருதி அவள் பர்த்தாவான கோவிந்தபுரம் வைத்யேசுவர சாஸ்திரிகள் கிரஹத்தில் போய் இருந்தார்கள். அங்கேயே அம்பா அம்மாள் தேகவியோகம் அடைய நேரிட்டது. பிறகு இருப்புக்கொள்ளாமல் பலவிடங்களில் சுற்றிப்பார்த்தும் மனதுக்கும் சரீரத்திற்கும் ஸுகப்படாமல் ஸேதுராமய்யர் கோவிந்தபுரத்திற்கே திரும்பி வந்து கொஞ்சநாளில் பரமபதமும் அடைந்தார்.

அவர் தம்பி சிவராமகிருஷ்ணய்யருக்கு மதுரையில் பிரஸித்தராயிருந்த வக்கீல் வைத்யநாத சாஸ்திரிகளின் புத்திரி ஸாவித்திரியை விவாஹமாயிருந்தது. அவர் அடச்சாணி, ரங்கஸமுத்திரம், திருநெல்வேலி முதலிய இடங்களில் உபாத்தியாயராகவிருந்து வந்தார். அவருக்கு லக்ஷ்மி, தர்மாம்பா, காமாக்ஷி என்று மூன்று புத்திரிகளும் ராமச்சந்திரன் என்று ஒரு புத்திரனும் உண்டு. லக்ஷ்மியை பாஸ்கரராஜபுரம் சிவசங்கரய்யருக்கும், தர்மாம்பாளை

மதுரை வெங்கடராமய்யருக்கும், காமாக்ஷியை கோவிந்த புரம் வைத்யேசுவர சாஸ்திரிகளுக்கும் விவாஹம் செய்து கொடுக்கப்பட்டது. சிவராமகிருஷ்ணய்யர் வறுமையினு லும் மற்றும் பலவிதத்திலும் மிகவும் சிரமப்பட்டவர். இவ்வளவு சிரமங்களையும் தாங்க வல்லமையேற்பட்டது அவர் பார்யையின் சிறப்பே. அவளும் இறந்து போக, ஜாஸ்தி வருந்தினர். கடைசியில் வியாதியினுலும் பீடிக் கப்பட்டு தன் குமாரனுடன் மதுரையில் அந்திய காலத் தைக் கழித்தார்.

ராமஸ்வாமி சாஸ்திரிகளின் மூத்த குமாரரான கோபாலஸுந்தரய்யர் ஸம்ஸ்கிருதத்தைவிட தமிழில் விசேஷ பாண்டித்யம் பெற்று அருட்கவி என்று சொல்லக் கூடிய நிலமையில் திறமை வாய்ந்தவர். அவர் ஸ்ரீவில்லிப் புத்தூரிலும் அப்புறம் திருநெல்வேலியிலும் வக்கீல் உத் யோகம் பார்த்து வந்தார். தன் ஸ்வய ஸம்பாத்யமாக திருநெல்வேலி ஸன்யாஸிக்ராம அக்ரஹாரத்தில் இரண்டு வீடுகளும் திருநெல்வேலி ஜில்லா குன்னத்தூரில் சுமார் பதினறு ஏக்கர் நஞ்சை நிலங்களும் வாங்கினர். அவருக்கு பாகீரதி என்ற உத்தமியை விவாஹம். அவள் புதுக் கோட்டை சேஷு சாஸ்திரிகளுடைய ஜ்யேஷ்ட புத்திரி. இந்த தம்பதியே நம் கதா நாயகரான ஸ்ரீ ஸ்வாமிகளை ஈன்றெடுத்த தந்தையும் தாயுமாவர்.

## 6. புதுக்கோட்டை சேஷு சாஸ்திரிகள்.

இவர் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் முனிஸீப், தாசில், ஜட்ஜ் முதலிய லௌகிக உத்யோகங்களை வஹித்து

வந்த போதிலும் ப்ராசீன ஸம்பிரதாயமாக எல்லா சாஸ் திரங்களையும் கற்றறிந்தவர். விசேஷமாக வியாகரணத்தில் பாண்டித்யமடைந்து அந்த ஸம்ஸ்தானத்தில் வியாகரணத் தில் பரீக்ஷாதிகாரியாகவுமிருந்தார். இவருடைய விசேஷ ஞானத்தைக்கண்டு மெச்சின மன்னார்குடி மஹாமஹோ பாத்யாய ராஜு சாஸ்திரிகள் இவரை "குட்டி பதஞ்ஜலி" என்று அழைப்பார். இவருக்கு பதினொரு வயதில் கண்ட ரக்கோட்டை வெங்கடஸுப்பா தீக்ஷிதர் பெண் ஸுப்ப லக்ஷ்மியை விவாஹம். அந்த வயதில் விதிவத்தாக ஆரம் பிக்கப்பட்ட ஔபாஸனத்தை தன்னாயுட்காலம் வரை விடாமல் மிகச்சிரத்தையுடன் நடத்திவந்தார். இவருடைய இரண்டு தமயனார்களான மீனாக்ஷிஸுந்தர சாஸ்திரிகளும் பாலகிருஷ்ண சாஸ்திரிகளும் புதுக்கோட்டையிலேயே வக்கீல்களாக இருந்தார்கள். இவர் லௌகிகத்திலும் வைதிகத்திலும் தக்க அந்தஸ்து பெற்றிருந்தபோதிலும் அதிசாந்த ஸ்வபாவமுள்ளவர். உதாஹரணமாக, ஒரு வைஷ்ணவ வித்வான் வியாகரணத்தில் வாக்யார்த்தம் சொல்லவேண்டுமென்று ராஜ ஸதஸ்ஸுக்கு வந்து சேஷு சாஸ்திரிகள் கூட வாக்யார்த்தம் நடந்து வருகையில் ஒரு கிரந்தத்தில் ஒரு வாக்ய பங்க்தி இருப்பதாகச் சொன்னார். அது அவ்விதமில்லை யென்று நம் சாஸ்திரிகள் ஆக்ஷேபித் தவுடன் வந்தவருக்குக் கோபம் மேலிட்டு "நான் சொல் கிறபடியில்லையானால் பூணூலை அறுத்துக்கொள்கிறேன்" என்றார். அதற்கு சாஸ்திரிகள் "ஒரு கிரந்தத்தில் ஒரு பங்க்தி இருக்கிறதா இல்லையா என்கிற விஷயம் சபதத் தினால் தீர்மானிக்கக்கூடியதில்லை. தவிரவும் யக்ஞோப வீதம் அவ்வளவு ஸுலபமாய் தியாகம் செய்யக்கூடியது

மில்லை" என்று மிருதுவாக பதில் சொல்லிவிட்டு, மஹா ராஜாவின் அனுமதி பெற்று, வீட்டுக்குப்போய் கிரந்தத் தையே எடுத்துக்கொண்டு வந்து காட்டினார். அக்காலத்தில் பண்டிதர்களுக்குள்ளிருந்த உத்தமஸ்வபாவத்தினால், வந்த பண்டிதர் இவரை மிகவும் சிலாகித்து நண்பரானார்.

---

இவர் பின்னால் வயது முதிர்ந்த காலத்தில் தன் ஆசார ஸௌகர்யத்தை யுத்தேசித்து திருவையாற்றில் இருந்து வந்த ஸமயத்தில் இதற்கு முன் தன்னிடம் சிஷ்யராக விருந்த கிருஷ்ண சாஸ்திரிகள் என்பவர் புதுக்கோட்டை கலாசாலையில் ஸமஸ்கிருத உபாத்யாயராக அமையக்கருதி அப்பொழுது அந்த ஸமஸ்தானத்தை நிர்வாஹம் செய்து வந்த ஸர். ஏ. சேஷய்யா சாஸ்திரிகளைப்போய் பேடி கண்ட தில் அவர்கள் "நீ யாரிடம் வாசித்தாய்?" என்று கேட் டார்கள். "சேஷு சாஸ்திரிகளை வைத்துக்கொண்டு பார்த்தேன்" என்று இவர் பதில் சொன்னதும் சேஷய்யா சாஸ்திரிகளுக்கு அடங்காக் கோபம் வந்து விட்டது. "சேஷு சாஸ்திரிகளை வைத்துக்கொண்டு நீ என்னடா பார்க்கிறது? அதிக பிரஸங்கி! போ, வெளியிலே" என்று சொல்லிவிட்டார். உடனே தான் தன் குருவுக்கு செய்த அபசாரத்தையுணர்ந்தவரான அந்த சிஷ்யர் திருவையாற் றுக்கு வந்து சேஷு சாஸ்திரிகளை ஸாஷ்டாங்கமாக நமஸ் கரித்து தன் தவறுதலை தெரியப்படுத்திக்கொண்டார். இதைக்கேட்ட சேஷு சாஸ்திரிகள் சேஷய்யா சாஸ்திரிகள் தன்னிடம் வைத்திருக்கும் மதிப்பினாலே இவ்விதம் கோபித்துக்கொண்டாரென்று தெரிந்துகொண்டு, தன் நிமித்தமாக இவருக்கு வேலையில்லாமல் போகக்கூடா

தென்று நினைத்து, தானே அவரையும் அழைத்துக் கொண்டு புதுக்கோட்டைக்கு வந்து சேஷய்யாசாஸ்திரிகளை ஸமாதானப்படுத்தி வேலை வாங்கிக்கொடுத்தார். ஆத்ம குணம் அவ்வளவு மிகச்சிறந்தவர்.

---

# அத்யாயம் 2

# பால்யம்

## 1. ஜனனம்.

---

விவாஹமும் விவாதமும் ஸமமானவர்களுக்குள் ஏற்பட்டால் தான் சோபிக்கும் என்ற வசனப்படி லௌகிக பதவியிலும் வைதுஷ்யத்திலும் ஸத்கர்மானுஷ்டான நிஷ்டையிலும் மற்றும் ஸகல அம்சங்களிலும் ஸமானர்களாயிருந்த புதுக்கோட்டை சேஷு சாஸ்திரிகளும் மதுரை ராமஸ்வாமி சாஸ்திரிகளும் ஸம்மந்திகளாக ஏற்பட்டதில் பரஸ்பரம் எவ்வளவு குதூஹலம் அடைந்திருப்பார்களென்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல. விவாஹ காலத்தில் கோபாலஸுந்தரய்யருக்கு வயது எட்டு, பாகீரதிக்கு வயது நான்கு, என்று தெரிகிறது. அது முதல் பெரியோர்களின் ஆசிர்வாதத்தைப்பெற்று தாம்பத்யத்தில் வளர்ந்து வந்த இவர்களுக்கு பரஸ்பரம் பிரேமை எவ்வளவு திருடமாயிருக்குமென்பதையும் ஊகிக்கலாம். வயதுடன் அப்பிரேமையும் விருத்தியாய்க்கொண்டே வந்தது. ஸங்கீதம், சித்திரவேலை முதலியதுகளில் இருவரும் ரஸிகர்கள், ஸமர்த்தர்கள். தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் அருமையான பாடல்கள், கீர்த்தனங்கள், ஸ்தோத்ரங்கள் இவைகளை வெகு இனிமையாக பாடுவதிலும் புதிதாக ரசனை செய்வதிலும் இருவரும் தேர்ந்தவர்கள், அந்யோந்யம் மிகப்பிரேமையுடன் இல்லறம்

கழித்து வருகையில் பாகீரதி கர்ப்பவதியாகி கிரமப்படி ஸீமந்தாதி ஸம்ஸ்காரங்களெல்லாம் பெரியோர்களின் அனுக்ரஹத்தினுல் நடத்தி வைக்கப்பட்டு பிரஸவத்திற்காக தன் பிதா சேஷு சாஸ்திரிகளால் புதுக்கோட்டைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டாள். சுபகரமான பிரபவ வருஷம் கார்த்திகை மாஸம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை ராத்திரி $50\frac{1}{4}$ நாழிகைக்கு (இங்கிலீஷ் கணக்குப்படி 1867 டிஸம்பர் 14ம் தேதி காலை 2 மணி சுமார்) துலா லக்னத்தில் புருஷப்பிரஜை பிறந்தது. மதுரையிலிருந்த பிதாமஹர் ராமஸ்வாமி சாஸ்திரிகளும் பிதா கோபாலஸுந்தரய்யரும் இந்த சுப விருத்தாந்தத்தைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார்கள். அம்பிகைக்குப் பிரியமான சுக்கிரவாரமும் கௌஸல்யையிடம் ராகவன் ஜனித்த நக்ஷத்திரமான புனர்வஸுவும் அன்று சேர்ந்திருந்தபடியால் குழந்தைக்கு "ஸ்ரீராம" என்றே நாமம் கொடுத்தார்கள். பிதாமஹர் பெயரும் ராமஸ்வாமி சாஸ்திரிகள் என்றிருந்தபடியால் அப்பெயர் பலவிதத்திலும் உசிதமாக ஏற்பட்டது.

## 2. தீரஸ்வபாவம்.

ஸாதாரணமாக ஜீவ்ய சரித்திரங்களில் பால்ய லீலையைப்பற்றி கொஞ்சம் வர்ணிப்பதுண்டு. அதிலும் ஸ்ரீகிருஷ்ண பகவானின் சரித்திரத்தில் பால்ய லீலையே முக்கியமாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீராமர் விஷயத்தில் மாத்திரம் ஸ்ரீமத் வால்மீகி மஹர்ஷி பால்ய லீலையைப் பற்றி ஒன்றும் சொல்லாமலே ஒரே ஸர்க்கத்தில் ஜனனத்தையும் வித்யாப்யாஸத்தையும் விவாஹத்திற்காக தசரதர் யோசித்துக்கொண்டிருந்த ஸமயத்தில் விசுவாமித்ரர்

வந்தார் என்பதையும் சேர்த்தே சொல்லிவிட்டார். ஸ்ரீராமர் பெயருக்கு இணங்க இவர் விஷயத்திலும் பால்ய லீலைகளை விட்டு விட்டு மேல் சரித்திரத்தை கவனிப்போம். பெரியோர்கள் இவரிடம் வைத்திருந்த அன்பின்பெருக்கினாலும், இவருடைய தைர்ய குணத்தை மெச்சியும், இவருக்கு பள்ளிக்கூடத்திற்குப்போக மான் குட்டி யிழுக்கும் ஸாரட்டும் ஸவாரி செய்ய சிறு மட்டக்குதிரையும் கொடுத்திருந்தார்கள். இவருடைய தைர்யத்தைப்பற்றி ஒரு ஸம்பவம் மாத்திரம் குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். ஒரு ஸமயம் ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருக்கும்போது தகப்பனார் கச்சேரிக்குப்போயிருக்கிற ஸந்தர்ப்பத்தில் அகஸ்மாத்தாக அவருடைய பெரிய குதிரை கட்டியிருந்த லாயம் திடீரென்று நெருப்புப் பிடித்துக்கொண்டது. வேலைக்காரர்களும் ஸ்தலத்திலில்லை. அப்பொழுது பையனுக்கு வயது நான்கு. இருந்தாலும் எப்படியும் குதிரையை தப்பிவிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் பின் கட்டில் வைத்திருந்த க்ஷௌரக்கத்தியை எடுத்துக்கொண்டு போய் பயமன்னியில் குதிரையைக் கட்டியிருந்த கயற்றையும் வாரையும் அறுத்துவிட்டான். குதிரை ஓடி உயிர் பிழைத்தது. நிர்பயமாயிருக்கும் தன்மை, ஸமயோசிதமாக கார்யம் செய்யும் திறமை, இவை போன்ற குணங்கள் குழந்தைப்பர்வம் முதற்கொண்டே இவரிடம் குடி கொண்டிருந்தனவென்பதைத் தெரிவிக்கவே இவ்வுதாஹரணம் கொடுக்கப்பட்டது.

## 3. தம்பி ராஜகோபாலன்.

இவர் ஜனனமாகி நான்கு வருஷங்களுக்குள்ளாக பிரஜோத்பத்தி ஆனி மாஸம் (1871 ஜூன்) மிருகசீர்ஷ

நக்ஷத்திரத்தில் மற்றொரு புத்திரர் ஜனித்தார். ராமஸ்வாமி சாஸ்திரிகளின் தம்பி முன் சொல்லிய முனிசீப் மஹாலிங்கய்யருக்கு ஆண் ஸந்ததியில்லை யென்ற குறைவினால் இப்பையனை தனக்கு ஸ்வீகாரம் கொடுக்கவேண்டுமென்று அவர் தன் தமயனை கேட்கலாயினார். குழந்தையின் பெற்றோர்கள் ஸம்மதிக்கவில்லை. இவ்விதமே கொஞ்ச காலம் சென்றது. பிறகு அம்மஹாலிங்கய்யர் சரீர அஸௌகர்யத்தினால் படுத்த படுக்கையிலிருக்கும்போது திருநெல்வேலியிலேயே ஸன்யாஸிக்கிராமத்திலிருந்த தன் தமயன் புத்திரனான கோபாலஸுந்தரய்யரை நேரில் தருவித்து தன் ஸந்ததி பூமியில் நீடூழிகாலமிருந்து வரும்படி செய்து கொடுக்கவேண்டுமென்று மிகவும் இறக்கத்துடன் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டதின் பேரில் தனக்கு மனமில்லாமல் போனாலும் பெரியோர்களின் வேண்டுகோளைத் தட்டமுடியாதவராக அவ்விதமே கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். கிரமப்படி ஸ்வீகாரமும் நடந்தது. மஹாலிங்கய்யரும் அவர் பார்யை பார்வதியம்மாளும் மிக்க ஸந்தோஷத்தை யடைந்தார்கள். மஹாலிங்கம் என்றிருந்த பெயரை மாற்றி ராஜகோபாலன் என்று அப்பையனுக்குப் பெயரிட்டார்கள். மேலே சொல்லியபடி தன் பெண்களுக்கும் தர்மங்களுக்கும் ஏற்படுத்திய சொத்துக்கள் போக மற்றதெல்லாம் அப்பையனையே சேரவேண்டியதாயிருந்தது. அப்பையனின் சொத்துக்களை மேல்பார்த்து வர தன் தமயனார் ராமஸ்வாமி சாஸ்திரிகள் வயது முதிர்ந்தவரென்றும், ஜனக தகப்பனார் கோபாலஸுந்தரய்யர் சிலவாளியென்றும், நினைத்து தன் பார்யை பார்வதியம்மாளையும் தன் ஸஹோதரியின் புத்திரரான டிஸ்டிரிக்ட் முனிசீப்

வெங்கடராமய்யரையும் இப்பொறுப்பை வஹிக்கும்படி நியமித்துவிட்டு தேஹவியோகமடைந்தார். பிறகு அச் சொத்துக்களை பார்வதியம்மாளே சரிவர கவனித்துக் கொண்டு அவசியமான வேளைகளில் வெங்கடராமய்யரிடம் கேட்டுக்கொண்டு குடும்ப நிர்வாஹம் செய்து வந்தாள்.

## 4. குடும்பநிலை.

கோபாலஸுந்தரய்யருக்கு 37 வயது கூட ஆகாம லிருந்தும் பலத்த அஸௌக்கியமேற்பட்டு பிரமாதி வருஷம் சித்திரை மாஸம் 15ம் தேதி (26—4—1879) யில் காலவசமானார். இப்புத்திர சோகம் ஏற்பட்ட பிறகு ராமஸ்வாமி சாஸ்திரிகளும் அதிக காலமிருக்கவில்லை. இவ் விதமாக குடும்பத்திலுள்ள பெரியோர்களெல்லாம் கால மானதும் இனி திருநெல்வேலியில் தனியாக பாகீரதி குழந்தை ராமச்சந்திரனை வைத்துக்கொண்டிருப்பது உசித மில்லையென்று அவள் பிதா சேஷு சாஸ்திரிகள் நினைத் தார். தஞ்சாவூர் ஜில்லாவுக்கே போய்விடுகிறதுதான் உசிதமென்று தீர்மானித்தார். ஸன்யாஸிக்கிராமத்திலுள்ள ஒரு சின்ன வீட்டை ராமய்யங்காரென்பவருக்கு விற்று சில்லரைக்கடன்களை கொடுத்து தீர்த்துவிட்டு எல்லாரும் திருவையாறுக்கு புறப்பட்டுச்சென்றார்கள். பையனுடைய படிப்பை உத்தேசித்து அவனும் தாயாரும் கும்பகோணத் தில் வஸித்து வந்தார்கள். திருநெல்வேலி ஜில்லா குன்னத்தூரிலிருந்த சுமார் பதினறு ஏக்கர் நஞ்சை நிலங் களை வண்ணாரப்பேட்டை ஸ்வாமிநாதய்யரென்பவருக்கு விற்று கிரயத்தொகையின் பெரும்பாகத்தைக்கொண்டு திருவையாறுக்கு அடுத்த தில்லைஸ்தானம் என்ற ஊரில்

நிலம் வாங்கப்பட்டது. இதற்கு இரண்டு மூன்று வருஷங்கள் சென்றபின் பார்வதியம்மாளும் காலஞ்சென்றுவிட, மஹாலிங்கய்யரின் உத்தேசப்படி அவர் சொத்துக்களை மேலே சொன்னபடி அவரால் நியமிக்கப்பட்ட வெங்கடராமய்யர் மேல் பார்க்க யத்தனித்த ஸமயத்தில், ஸ்வீகாரம் கொடுத்துவிட்டாலும் கூட தன் பையன் தன் பையனே என்று பாகீரதியம்மாள் வற்புறுத்திச்சொன்னதின்பேரில் அவர் விலகிக்கொண்டார். பூரா சொத்துக்களும் பாகீரதியம்மாளின் ஆளுகையிலேயே வந்துவிட்டன. அதினால் மறுபடியும் ராமச்சந்திரனை யழைத்துக்கொண்டுவந்து திருநெல்வேலியிலேயே இருந்து வரும்படி நேரிட்டது.

அதுமுதல் தில்லைஸ்தானம் நில வரும்படியையும் திருநெல்வேலி நிலம் வரும்படியையும் ஒன்றாகவே உபயோகித்து வந்தாள். அவள் பர்த்தா கோபாலஸுந்தரய்யர் சிலவாளி என்று மஹாலிங்கய்யர் அபிப்பிராயப்பட்டதாக முன் சொன்னோம். அவர் சிலவாளியாயிருந்தாலும் வரும்படி ஏற்படுத்திக்கொள்ளவும் ஸமர்த்தர். இவளுக்கு அது முடியாததினால் பலவிதமாக சிலவுகள் ஏற்பட்டு சீக்கிரத்தில் கடன் உண்டாகிவிட்டது. ஆனால் சொத்து ஏராளமாயிருந்தபடியால் சிரமம் தெரியவில்லை. வேண்டியபோதெல்லாம் சொந்தப்பணமோ கடனோ அகப்பட்டுக்கொண்டிருந்தது. நினைத்த கார்யம் எதுவும் தடையன்னியில் நடந்து வந்தது. வைதிக கார்யங்கள் செய்து முடிப்பதிலும் ஆலய வழிபாடுகளிலும் கொஞ்சமேனும் சிந்தையன்னியிலேயே பணத்தை விநியோகம் செய்வாள். வறுமையினாலோ வியாதியினாலோ வருந்தும் தீனர்களைக்காண ஸஹி

யாள். அவளிடமிருந்து பழகினபடியால் அவள் குமாரர்களுக்கும் அவளுடைய மேன்மையான குணங்களெல்லாம் நன்றாய் பிடிபட்டன. இவர்களுக்கும் பணத்தின் சிரமமறியாமை, தான் நினைத்ததை நடத்தவேண்டுமென்ற மனோபாவம், முதலியன ஏற்பட்டன. இவ்விதமாக 1885 ஜனவரி முதல் 1894 ஸெப்டம்பர் வரை இரண்டு ஸஹோதரர்களும் தாயாரும் ஏக குடும்பமாகவே யிருந்து வந்தார்கள். அவர்களின் வித்யாப்யாஸத்தை யுத்தேசித்து திருநெல்வேலி, சென்னைப்பட்டணம், கும்பகோணம், இந்த ஊர்களில் குடித்தனம் செய்யும்படி ஏற்பட்டது.

## 5. வித்யாப்யாஸம்

திருநெல்வேலியில் ஹிந்து கலாசாலையில் வாசித்து வரும் காலத்தில் விங்க்ளேர் என்ற துரை அத்யக்ஷராக இருந்து வந்தார். அவரும் ஸீதாராமய்யர் முதலான மற்றும் உபாத்யாயர்களும் ராமச்சந்திரன் என்று அழைக்கப்பட்டு வந்த நம் ஸ்ரீராமனிடம் விசேஷப்ரீதியுடனிருந்து வந்தார்கள். ஆனால் நன்கு விஷயங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அவா மாத்திரம் மிகுந்திருந்ததே தவிர பள்ளிக்கூடப்பாடங்களை அதிகமாய் கவனிப்பதில்லையென்று தெரிகிறது. ஆகையால் நல்ல புத்திசாலி என்றும் விஷய க்ரஹணத்தில் ஸமர்த்தன் என்றும் பெயர் வாங்கின போதிலும் பரீக்ஷையில் சரியாக தேறவதில்லை.

சென்னைப்பட்டணம்போய் கிருஸ்தியன் கலாசாலையில் சேர்ந்து வாசித்து வந்த ஸமயத்தில் லெயிட்லா என்ற ஒரு வெள்ளைக்கார உபாத்யாயர் ஹிந்து மதத்தை உதாஸீன

மாகப்பேசி ஹிந்துக்கள் "கல்லைத்தொழுகிறார்கள். அதை விட என் கால் ஜோட்டைத்தொழலாம்" என்று சொன்னதை பொறுக்கமாட்டாதவர்களாக அங்கிருந்த மாணவர்கள் அந்த ஜோட்டையே பலாத்காரமாக கழற்றி அதைக்கொண்டே அவரை பலமாக அடித்துவிட்டார்கள். அவ்விதம் அடித்த கோஷ்டியில் நம் ராமச்சந்திரன் சேராமலிருந்தபோதிலும் எப்பொழுதுமே மத ஊக்கமுள்ளவனான படியால் இந்த ஸம்பவ விஷயமாக பின்னால் நடந்த பல மாணவ ஸங்கங்களிலும் குழப்பங்களிலும் சேரவேண்டியிருந்தது. அதினால் படிப்புக்கு விக்கினம் ஏற்பட்டதுடன் அப்பள்ளிக்கூடத்தையே பஹிஷ்கரித்துவிட்டு கும்பகோணம் வந்துவிடும்படி ஸம்பவித்தது. அக்குழப்பங்களில் இவருடைய அந்தியந்த ஸ்நேஹிதர்களான திருநெல்வேலி K. R. குருஸ்வாமி அய்யரும் மதுரை V. ராமச்சந்திரய்யரும் முக்கியமாயிருந்தார்கள். V. ராமச்சந்திரய்யர் இந்த ராஜதானியே சரிப்படாதென்று கல்கத்தாவுக்குப்போய் மேல் வாசித்தபடியால் இன்னமும் கல்கத்தா ராமச்சந்திரய்யர் என்றே பிரஸித்தியிருக்கிறது. நம் ராமச்சந்திரய்யர் கும்பகோணம் வந்து ஸர்க்கார் கலாசாலையில் சேர்ந்துகொண்டார். பின்னால் அக்கலாசாலையிலேயே தத்வசாஸ்திரத்தில் மிகப்பிரஸித்தி பெற்ற N. வைத்யநாதய்யரிடம் சிடராக ஏற்படும் பாக்கியம் கிடைத்தது. அம்மஹானால் ஏற்படுத்திவிடப்பட்ட வாஸனையும் ருசியுமே இவரை எந்த காலத்திலும் இடைவிடாது கூடவிருந்து நேர்வழியில் செல்லும்படி செய்துகொண்டு வந்தன. பலவிதமான இடஞ்சல்களுக்கு மத்தியில் 1892

ஜனவரிக்குள் B. A. பரீக்ஷை தேறிக்கொண்டார். இவர் இவ்விதமாக பலவிடங்களில் வித்யாப்யாஸம் செய்துவந்த தின் பலனாக பலர் ஸ்நேஹிதர்களாக ஏற்பட்டார்கள். இக் காலத்திய நண்பர்கள் போலல்லாமல் ஒருக்காலும் மறவாத வர்கள், ஒருக்காலும் அன்பு குன்றாதவர்கள். அவ்வன்பை அவருடன் நிறுத்தாமல் அவர் ஸந்ததிகளிடத்திலும் இன்னமும் ஜீவித்திருப்போர் பாராட்டி வருகிறார்கள்.

## 6. விவாஹம்

ராமஸ்வாமி சாஸ்திரிகளுக்கும் மஹாலிங்கய்யருக்கும் ஸஹோதரியான ஸுப்பலக்ஷ்மியின் குமாரர் வெங்கடராமய்யரைப்பற்றி முன் பிரஸ்தாபித்தோம். அவருக்கு நாராயணஸ்வாமி அய்யர் என்ற ஒரு தமயன் இருந்தார். ஆனால் அந்த நாராயணஸ்வாமி அய்யர் லக்ஷ்மி என்ற ஒரு பெண்ணையும், ஸுந்தரய்யர், ராமஸ்வாமி அய்யர் என்ற இரண்டு புத்திரர்களையும் வைத்துவிட்டு அதிபால்யத்திலேயே இறந்துவிட்டார். லக்ஷ்மியை விற்குடி பிச்சுவய்யர் குமாரர் ராமண்ணாவென்ற ராமஸ்வாமி அய்யருக்கு விவாஹமாயிருந்தது. ஸுந்தரய்யர் பவானி என்ற பார்யையை விட்டுவிட்டு ஸந்ததியன்னியில் இறந்துவிட்டார். ஆகையால் ராமஸ்வாமி அய்யர் தன் சிறிய தகப்பனாரான வெங்கடராமய்யரின் பார்வையிலேயே இருந்து வரும்படி ஏற்பட்டது. அவருக்கு திருவிடமருதூரில் சாஸ்திரக்ஞராகவும் சிவபக்தியில் பிரஸித்தராகவுமிருந்த ஸுந்தரேசுவர சாஸ்திரிகளுடைய பெண் மங்களாம்பாளை விவாஹம் செய்திருந்ததில் ஜானகி என்றவொரு புத்திரி ஜனித்தாள். கொஞ்சநாள்களுக்குள் மங்களாம்பாளும் காலமானாள்.

வெங்கடராமய்யர் தன் புத்திரியான மீனாக்ஷி ஸுந்தரத்திற்கும் தமயனார் பௌத்திரியான இந்த ஜானகிக்கும் விவாஹம் செய்து வைக்க உத்தேசித்து தன் பெண்ணுக்கு திருவையாறு ராஜகோபாலய்யரையும் ஜானகிக்கு நம் ராமச்சந்திரய்யரையும் தீர்மானம் செய்து பெரியோர்களின் அனுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு 1885 ல் அதிவிமரிசையாய் தான் அப்பொழுது முனிசீபாகவிருந்த மாயவரத்தில் விவாஹங்களை நடத்திவைத்தார். மாயவரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கிரஹம் வரை சுமார் நான்கு மைல் தூரத்திற்கும் விருந்தாளிகளின் ஸௌகர்யத்தை யுத்தேசித்து நிலைவிளக்குப் போட்டிருந்ததாகவும் அக்காலத்தில் மிகப்பிரஸித்தி பெற்றிருந்த மஹா வைத்யநாதய்யர் முதலான ஸங்கீத வித்வான்கள் கல்யாணப்பந்தலில் பாடி ஸகலர்களையும் ஆனந்திக்கச் செய்தார்களென்றும் சொல்வார்கள்.

இவ்வளவும் தன் மனதின் உத்ஸாஹத்தினாலும் குழந்தைகளிடமிருந்த அபிமானத்தினாலும் வெங்கடராமய்யர் நடத்தினாரே தவிர அவருக்கு அப்பொழுது சரீர ஸ்திதி மிகவும் க்ஷீணமாயிருந்தபடியால் அநேகமாய் படுத்த படுக்கையிலிருந்தே அவர் எல்லாக் கார்யங்களையும் கவனிக்கும்படி யிருந்தது. விவாஹங்கள் நடந்து கொஞ்ச காலத்திற்கெல்லாம் வெங்கடராமய்யர் காலஞ் சென்றுவிட்டார். அவருடைய புத்திரர்களான V. ஸ்வாமிநாதய்யர், V. கிருஷ்ணஸ்வாமி அய்யர் வகையறாக்களிடமிருந்து பிரிந்து தனியாகவே ராமஸ்வாமி அய்யர் காலக்ஷேபம் செய்யும்படி நேர்ந்தது. ஆனால் ஏற்கனவே

ஸப்ரிஜிஸ்டிராராக நியமிக்கப்பட்டு வேலை பார்த்துவந்த படியால் சிரமமில்லாமலே காலக்ஷேபம் நடந்து வந்தது. வெங்கடராமய்யரிருக்கும்போதே ஸீதாலக்ஷ்மி யென்பவளை ராமஸ்வாமி அய்யர் த்விதீயமாக விவாஹம் செய்து கொண்டிருந்தார். அவள் மூலமாக ராஜம், மஹாலிங்கம் என்று இரண்டு புத்திரர்கள் ஜனித்தார்கள். இவர்களெல்லாரும் ஜானகியிடம் பிரியமாகவே இருந்துவந்தபோதிலும் ராமஸ்வாமி அய்யரின் தமக்கை லக்ஷ்மியும் அவள் பர்த்தா ராமண்ணுவுமே ஜானகியை அடிக்கடி தங்கள் ஊராகிய விற்குடிக்கு அழைத்துப்போவது வழக்கமாயிருந்தபடியால் அவளுக்கு பிறந்தகம் விற்குடி என்ற மனோபாவமே இருந்து வரும்படி ஏற்பட்டது.

## 7. குடும்பப் பொறுப்பு

விவாஹமாகி கொஞ்சகாலத்திற்குப் பிறகு அதாவது விரோதி வருஷம் ஐப்பசிமாஸம் 11ம்தேதி (26-10-1889)ல் ராமச்சந்திரய்யருக்கு ஒரு புருஷப்பிரஜை பிறந்தது. அவனுக்குப் பின்னால் கிருஷ்ணஸ்வாமி என்று பெயரிடப்பட்டது. இதன் மத்தியில் அதாவது 1887 ல் ராஜகோபாலனுக்கு திருவாரூர் மடப்புரத்திலிருந்து பலவிடங்களில் டிப்டி கலெக்டர் உத்யோகம் பார்த்துவந்த T. V. நாராயணஸ்வாமி அய்யரின் மூத்த குமாரியான பாலாம்பாளை விவாஹம் செய்யப்பட்டது. அவர்களுக்கு ஜப வருஷம் ஆவணி மாஸம் 3ம் தேதி (17—8—1894)ல் ஒரு புருஷப் பிரஜை பிறந்தது. அவனுக்கு மஹாலிங்கம் என்று பெயரிடப்பட்டது. இவ்விதமாக இரண்டு ஸஹோதரர்களுக்கும் பிரஜாவிருத்தி யேற்பட்டதும் அவரவர்கள் குடும்ப யோக

க்ஷேமங்களை அவரவர்களை தனித்தனியே கவனித்து வருவது தான் உசிதமென்று தோன்றிற்று. அதுவரை யுள்ள கடன்களைத்தீர்க்க தில்லைஸ்தானம் நிலங்களை திருவையாறு முத்துகனபாடிகளுக்கு விற்கப்பட்டது. ராமச்சந்திரய்யருக்கு சென்னைப்பட்டணத்தில் சட்டப் பரீக்ஷைகளுக்கு வேண்டிய வகுப்புகளில் வாசிப்பு முடிந்து விட்டது. பரீக்ஷை மாத்திரம் தேறவில்லை. இதற்காக அங்கே அதிகச்செலவு செய்துகொண்டிருக்க அவசியமு மில்லை. ராமச்சந்திரய்யருடைய திருநெல்வேலி நிலங்களும் திருவையாறு நிலங்களும் கையைவிட்டுப் போய்விட்டன. அந்த ஊர்களில் போய் இருக்கவும் அவசியமில்லை. ஆகை யால் பலவித ஸௌகர்யங்களை கவனித்து சட்ட பரீக்ஷை தேறும் வரை மாயவரத்தில் இருப்பது நல்லதென்று தீர்மானித்து ராமச்சந்திரய்யர் 1894 ஸெப்டம்பர் முதல் 1895 ஜூன் வரையில் அங்கே குடித்தனம் செய்தார். 1896 ஆரம்பத்தில் இரண்டாவது கிரேட் வக்கீல் பரீக்ஷை யில் தேறினர். அந்த ஸமயத்தில் மாதாமஹர் சேஷா சாஸ்திரிகள் திருவையாற்றில் இவ்வுலகைவிட்டு ஈசன் திருவடி சேர்ந்தார். அவருடைய புத்திரன் குப்புஸ்வாமி என்பவன் அதிமேதாவியாயிருந்தவன் அல்பாயுஸ்ஸாக அதி பால்யத்திலேயே காலஞ்சென்று விட்டான். இரண்டாவது புத்திரி நாகரத்தினம் என்பவள் கடவாசல் வீரராகவய்ய ருக்கு வாழ்க்கைப்பட்டு பலவிதத்தில் சிரமதசையிலிருந் தாள். ஆகையால் சேஷா சாஸ்திரிகளின் பார்யையான ஸுப்பலக்ஷ்மியம்மாளை ஸம்ரக்ஷணை செய்யவேண்டிய பொறுப்பு அவர் மூத்த குமாரியான பாகீரதியையும் நம் ராமச்சந்திரய்யரையுமே நாடிற்று.

எந்த ஊரில் வக்கீலாக இருப்பதென்று தீர்மானிக்க முடியவில்லை. அச்சமயம் இவருடைய ஸ்நேஹிதரான C. S. மஹாதேவய்யருடைய மாமனர் கோபாலய்யரென்பவர் திருச்சிஞப்பள்ளி ஜில்லா குளித்தலையில் ஸ்டேஷன் மாஸ்டராகவிருந்தார். அவர் மூலமாக வஸதிக்கும் மற்றும் கார்யங்களுக்கும் குளித்தலை வெகு ஸௌகர்யமாயிருக்குமென்று தெரிந்துகொண்டார். அப்படியே தீர்மானித்து 1896 ஜூன் மாஸத்தில் ராமச்சந்திரய்யர் குளித்தலையில் வாஸம் ஏற்படுத்திக்கொண்டார். அப்பொழுது அங்கே S. மஹாதேவ சாஸ்திரிகள் என்பவர் டிஸ்டிரிக்ட் முனிசிப். அவர் ஸ்வபாவத்திலேயே மிகவும் உத்ஸாஹியாயிருந்ததுடன் இவரிடம் விசேஷ அபிமானமும் வெகுநாளாக வைத்தவர். அங்குள்ள முக்கியமான வக்கீல்களும் அதி சீக்ரத்தில் இவருடைய குணாதிசயங்களில் ஈடுபட்டு இவரிடம் மிக்க அன்பும் கௌரவமும் வைத்தார்கள். ஜம்புநாதய்யர் என்ற ஒரு பிரஸித்த நிர்வாஹி குமஸ்தாவாக அமைந்து ஸகல கார்யங்களையும் கவனித்து வந்தார். உத்தியோகமும் ஊரும் புதிதென்று ராமச்சந்திரய்யர் நினைக்க அவகாசமில்லாமலே எல்லா ஸௌகர்யங்களும் வாய்ந்தன.

---

# அத்யாயம் 3.

## ஞானத்தில் ஊக்கம்.

### 1. மதப்பற்று.

குளித்தலையில் இருந்த ஸமயத்தில் வயதுக்குத் தக்கபடி பந்து விளையாட்டு, சீட்டாட்டம், தினசரிப் பத்திரிகை வாசிப்பு, ஸங்கீதம், இவைகளில் சிலவழிந்த காலம் போக மற்ற வேளைகளில் முன் வாசித்து வந்த தத்துவ சாஸ்திர புஸ்தகங்களையும் அதற்கு அனுஸாரணையான புஸ்தகங்களையும் அடிக்கடி வாசித்து வருவார். இங்கிலீஷ் முறையிலேயே அச்சாஸ்திரத்தை பயின்றபடியால் நம் பிராசீன கிரந்தங்களில் பரிசயம் மிகக்குறைவாக இருந்தது. அதே காரணம்பற்றி ஆசாரங்களும் குறைவே. அனுசாரம் என்றைக்கும் இல்லை யென்றிருந்தபோதிலும் வைதிக ஆசாரம் போதாமலிருந்து வந்தது. அந்தத் தருணத்தில் தியோஸாபிகல் ஸொஸைட்டியைச்சேர்ந்து K. நாராயணஸ்வாமி அய்யரென்று பிரஸித்தராயிருந்த ஓர் உபன்யாஸகர் 1899 ல் குளித்தலைக்கு வந்து நம் மதத்திலுள்ள ஆசாரங்களெல்லாம் நவீன பௌதிக சாஸ்திரத்திற்கும் தத்வசாஸ்திரத்திற்கும் மிகப்பொருந்தியே இருக்கின்றனவென்றும் நம் மதமே பலவிதத்திலும் உண்மைக்கு கைகாட்டியாய் நிற்கும் உத்தமமான மதம் என்றும் இங்கிலீஷில் பல உபன்யாஸங்கள் செய்தார். அவைகளிலிருந்து நம் மதத்தை நன்கு போதிக்கக்கூடியதாக இங்கிலீஷில் புஸ்தகங்களிருந்தால் வாசிக்கலாம் என்று ராமச்சந்திரய்ய

ருக்குத்தோன்றிக் கேட்க, அவ்விதமே ஏராளமாக இருப்பதாக அவர் சொன்னதும், அவைகளை தருவித்து தானும் தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கும் தெரிவிக்கவேண்டுமென்ற ஊக்கம் ஏற்பட்டது. ஒரு கிளை ஸபையும் ஏற்படுத்தி தன் வசமுள்ள புஸ்தகங்களை அந்த ஸபைக்கு கொடுத்ததும் தவிர, ஏராளமாக தமிழிலும் இங்கிலீஷிலும் புஸ்தகங்களை தருவித்தார். அவைகளை தாமதமன்னியில் தான் வாசித்துக்கொள்வார். அதுவரை பிரதி ஞாயற்றுக் கிழமையிலும் தவராமல் மத்தியானம் நடந்துவந்த சீட்டாட்டத்தை நிறுத்தி அதே ஸ்நேஹித கோஷ்டியுடன் தத்வ விசாரம் செய்வதிலும் புஸ்தகங்களை வாசிப்பதிலும் காலத்தை சிலவழிக்கவாரம்பித்தார். K. நாராயணஸ்வாமி அய்யர் இவருடைய ஊக்கத்தைக்கண்டு வெகு அபிமானத்துடன் அடிக்கடி வருவார். அப்படியே அந்த ஸொஸைட்டியைச்சேர்ந்த ரிடைர்ட் ஸப்ஜட்ஜ் T. ராமச்சந்திராவும் ஏனங்குடி ராமச்சந்திர நாயுடுவும் வருவதுண்டு. இவ்விதமாக நம் மதத்தின் மேன்மையைப்பற்றி பிளாவட்ஸ்கி, ஆல்காட், பெஸண்டு முதலிய வெள்ளைக்காரர்கள் எடுத்துச் சொல்வதிலிருந்து தான் நம் மதத்தில் விசேஷப்பற்றுதல் ஏற்பட்டது. பால்யம் முதற்கொண்டு இங்கிலீஷ் பரிசயம் ஜாஸ்தியானபடியால் அப்பாஷை மூலமாகவே நம் மதத்தை கிரஹிப்பது ஸுலபமாய் தோன்றிற்று.

## 2. வேதாத்யயனம்.

நாளடைவில், மூலகிரந்தங்களிலிருந்து ஸங்கிரஹித்து எடுத்தெழுதினதுகளையும் தர்ஜமாக்களையும் மாத்திரம் பார்த்து வருவதில் அதிருப்தி யேற்பட்டது. ஸம்ஸ்கிரு

தத்திலுள்ள மூலக்கிரந்தங்களையே கற்கவேண்டுமென்ற எண்ணம் குடிகொண்டது. பிதாமஹரும் மாதாமஹரும் நிகரற்ற வித்வான்களாயிருந்தும், தான் அன்னிய பாஷை மூலமாகவே விஷயம் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறதே என்று வருந்தலானார். இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் காலத்தில் உபபாஷையாகவாவது கற்றுக்கொண்டிருந்த ஸம்ஸ்கிருதத்தை மறக்காமல் பயிற்சி செய்யவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார் வேதாந்தமென்று சொல்லப்படுகிற உபநிஷத்துக்களிலேயே நம் மதத்தத்வங்கள் அடங்கியிருப்பதால் தாமதமன்னியில் அவைகளை அத்யயனம் செய்யவேண்டுமென்று அடுத்தபடியாய் தோன்றிற்று. உத்தியோகமுறைக்கு பாதகமன்னியில் காலை ஏழு மணிக்குள் அத்யயனத்தை முடித்துக் கொள்ள நினைத்து பிரதி தினமும் காலை நான்கு மணி சுமாருக்கு எழுந்திருந்து அகண்டகாவேரிக்குப்போய் ஸ்நாநம் ஸந்த்யை முடித்துக்கொண்டு திரும்பிவரும்போது வழியில் வாய்க்கால் கரையோரமாயிருந்த சிவன் கோவிலில் ஆறு மணி முதல் ஏழுமணி வரை அத்யயனம் செய்துவிட்டு அப்புரமே மற்ற கார்யங்களை கவனிப்பதென்ற நியமம் ஏற்படுத்திக்கொண்டார். அத்யாபகராக சோழவந்தான் ஸ்வாமிநாத கனபாடிகள் ஏற்பட்டதும் இவர் பாக்கியமே. இக்கனபாடிகள் பின்னால் வெகுநாள் கழித்து கிரமப்படி ஸன்யாஸம் பெற்று ஸித்தியடைந்தாரென்பதும் இங்கு குறிப்பிடவேண்டிய விஷயமே. அவ்வத்யயனத்திற்கு வக்கீல்களாகவும் மற்றும் லௌகிகர்களாகவும் ஐந்தாறு பேர்களுக்குக் குறையாமல் வருவார்கள். அத்யயனம்

செய்தால், அதிலும் உபநிஷத் அத்யயனம் செய்தால், குடித்தனத்திற்கு லாயக்கில்லாமல் போய்விடுவார்கள் என்று சிலர்களே அவர்கள் பந்துக்கள் தடுத்துப்பார்த்ததும் உண்டு. இவ்விதமாக புருஷஸூக்தம், ருத்ரம், சமகம், தசோபநிஷத்துக்கள், முதலியன அத்யயனம் செய்யப் பட்டன.

## 3. ஸரஸ ஸ்வபாவம்.

ஈசுவரானுக்ரஹத்தினுலும் பெரியோர்களின் ஆசிர் வாதத்தினுலும் வைதிக சிரத்தையும் அனுஷ்டானமும் பலப்பட்டு வந்ததுடன் லௌகிக ஸம்பாத்யமும் கிரமமாய் அதிகரித்து வந்தது. அயலூர்களிலிருந்து ஸங்கீத வித் வானே, கதாப்பிரவசனம் செய்யும் பாகவதரோ, பௌரா ணிகரோ, சாஸ்திரக்ஞரோ, மற்றும் எவ்விதத்தில் பிரஸித் தரோ, யார் குளித்தலைக்கு வந்தாலும் இவருடன் கொஞ்ச நாளாவது தங்காமல் போவதில்லை. தானே பிடில் முதலிய வாத்தியங்கள் வாசிப்பார். வெகு ஆனந்தகரமாக சீட்டி யடிப்பதிலும் பாடுவதிலும் தேர்ந்தவர். எந்த ஸங்கீத கச்சேரியிலும் இவரே முதலில் இருப்பார். டென்னிஸ் முதலிய சரீரப்பயிற்சியிலும் முதலிலேயே நிற்பார். தத்வ விசாரத்திலும் இவரே முதல். அவருக்கு பரிசயமில்லாத வித்தை கிடையாது. அந்தந்த வித்தைகளில் தேர்ச்சி யடைந்தவர்களிடம் ஸுலபமாக குற்றம் கண்டு திருத்தியும் கொடுப்பார். இத்துடன் அதிஸரஸி. அவருடன் பேச வாரம்பித்தால் காலம் போனது தெரியாமல் வந்தவர்கள் பேசிக்கொண்டேயிருப்பார்கள். அவ்வளவு ஸரஸியாயிருந் தும் யாரும் தன்னிடம் ஸ்வாதீனமாவது ஔதாஸீன்ய

மாவது பாராட்ட கொஞ்சமேனும் இடங்கொடார். அதிதிகளுக்கு எவ்வித குறையுமன்னியில் தானே நேரில் கவனித்து ஸத்காரம் செய்வார். இன்னொருவர் துக்கப்படுவதைக்காண ஸஹியார். ஆனால் தன் விஷயத்திலாவது தன் ஸ்நேஹிதர்கள் அதிதிகள் விஷயத்திலாவது எதாவது அஜாக்கிரதையினால் குறை ஏற்பட்டுவிட்டதாக தோன்றிவிட்டால், வீட்டிலுள்ளவர்கள் வேலைக்காரர் முதலான எல்லாரிடத்திலும் அடங்காக்கோபம் வந்துவிடும். அந்த ஸமயத்தில் மாத்திரம் எதிர்க்காமலிருந்துவிட்டால், உடனே படிந்து ஸ்வபாவமான ஸாத்விக குணம் மேலிட்டுவிடும். அவ்விதம் கோபம் வருங்காலத்தில் பார்ப்பவர்களுக்கு இவர் அன்னியர்களின் சிரமமறியாது தன்கார்யமே குறி என்று பாராட்டுபவர் எனத் தோன்றும். ஆனால் கூடவிருந்து பழகினவர்கள் அக்கோபம் அடங்கின ஸ்திதியையும் அனுபவித்தவர்களாதலால் வாஸ்தவத்தில் அவரைப்போல் தயாளு கிடையாதென்பதை அறிவார்கள்.

## 4. குடும்பவிருத்தி

குளித்தலையிலிருந்த ஸமயத்தில் 1896 ஆகஸ்டில் ராஜம்மாள் என்ற ஒரு பெண்ணும், 1897 ஜுலையில் கங்கா பாகிரதி என்ற ஒரு பெண்ணும். 1898 டிஸம்பரில் கோபால ஸுந்தரம் என்ற ஒரு பையனும், 1899 கடைசியில் ஸரஸ்வதி என்ற ஒரு பெண்ணும், 1901 ஜுன் மாஸத்தில் மங்களாம்பாள் என்ற ஒரு பெண்ணும் பிறந்தார்கள். இவ்விதம் வெகு சீக்கிரத்தில் பெரிய ஸம்ஸாரியாக ஆகிவிட்டார். தாயாரும் மாதாமஹியும் கூட இருந்து வந்தார்கள். வரும்படி ஜாஸ்திப்பட்டும்கூட ஸம்ஸாரம் பலப்பட்டுவிட்ட

திஞல் ஏற்பட்ட நிர்பந்தங்களை நிவர்த்தித்துக்கொள்ளும் பொருட்டு தன் பிதா சொத்துக்களில் அப்பொழுது மிச்ச மிருந்த திருநெல்வேலி ஸன்யாஸிக்கிராமம் பெரிய வீட்டை யும் 1899 ல் விற்றுவிடும்படி ஏற்பட்டது.

## 5. திருநெல்வேலி.

அதற்கடுத்த வருஷம் இவரும் இவர் தம்பி ராஜ கோபாலய்யரும் பி. எல். பரீக்ஷையில் தேறினார்கள். ராஜ கோபாலய்யர் தன் சொத்துக்களிருந்து வந்த திருநெல் வேலியிலேயே வக்கீலாக இருக்கத் தீர்மானித்தார். குளித் தலையில் ஒரு புத்திரனும் திருநெல்வேலியில் ஒரு புத்திர னுமாயிருப்பதில் அடிக்கடி போய் வரவும் விசேஷங்களுக் குக்கூட சேர்ந்திருக்கவும் ஸாத்தியப்படாமலிருந்து வந்த தால் இவரும் திருநெல்வேலிக்கே போய்விடவேண்டு மென்று தாயார் வற்புறுத்தி வந்தாள். முதலில் ஸம்மதப் படாமல் போனுலும் கடைசியில் ஸம்மதித்து 1901 ஜூன் மாஸத்தில் ராமச்சந்திரய்யரும் திருநெல்வேலிக்கே குடித் தனமாய் வந்துவிட்டார். ராஜகோபாலய்யருடைய பூர்வீக வீடு திருநெல்வேலி கஸ்பா தெற்குரத வீதியிலிருந்தது. ராமச்சந்திரய்யர் நதி, ரயில்வே ஸ்டேஷன், பள்ளிக்கூடம், கச்சேரி இவைகள் ஸமீபமாயிருந்த ஸௌகர்யத்தை யுத்தே சித்து கைலாஸபுரம் அக்ரஹாரத்தில் ஜாகை வைத்துக் கொண்டார். அதன் பேரில் ராஜகோபாலய்யரும் கைலாஸ புரத்திற்கே வந்து வேறு ஜாகையில் இருந்து வந்தார்,

இவர்களுடைய பிதா இறந்தது முதல் அதிவாத்ஸல் யத்துடன் இவர்களை அபிமானித்து வந்த கைலாஸபுரம்

A. கிருஷ்ணஸ்வாமி அய்யர் என்ற பெரியார் வக்கீல் உத்தியோகத்தை நிறுத்திக்கொண்டு ஸ்வஸ்தமாக இருந்துவந்த ஸமயம் திருக்கோடிகாவல் A. ஸுந்தர சாஸ்திரிகள் திருநெல்வேலியில் ஸர்க்கார் வக்கீலாக இருந்து வந்தார். கஸ்பா தெற்குரத வீதியிலிருந்த வக்கீல் T. S. பிச்சுமணி அய்யர், வண்ணாரப்பேட்டையிலிருந்த வக்கீல் V. ரங்காசார்யார், மற்றும் ஊரிலுள்ள பிரமுகர்கள் எல்லாருமே இவரிடம் பால்யம் முதலே பரிசயமுள்ளவர்களாக இருந்தபடியால் எல்லா கார்யங்களுமே ஸௌகர்யமாய் நடந்துவர ஸாத்தியப்பட்டது. ஸ்ரீவைகுண்டம் K. V. ராஜகோபாலய்யர் என்ற வைகுண்டமய்யர் குமஸ்தாவாக அமைந்தார். சில மாஸங்களுக்குள் T. S. பிச்சுமணி அய்யரிடமிருந்து வந்த ஸுந்தரகிருஷ்ணய்யரும் இவரிடம் குமஸ்தாவாக சேர்ந்துகொண்டார். லௌகிக கார்யங்கள் கிரமப்படி சிரமமின்றியில் நடந்துவந்தன.

## 6. கிரந்தப்பயிற்சி.

குளித்தலையில் அத்யயனம் செய்துவந்த வேத பாகங்களை மறக்காமல் பழக்கத்தில் வைத்துக்கொண்டு வந்தார். இரண்டு வேளை ஸ்நாநம், நித்திய கர்மானுஷ்டானம், ஆலய தர்சனம், முதலியவைகளும் குறையன்னியில் நடந்துவந்தன. ஆனால் முன் சொன்னரீதியாக நம் மதத்தில் ஊக்கமேற்பட்டதே தியோஸாபிகல் ஸொஸைட்டி மூலமாயிருந்தபடியால் இங்கிலீஷ் புஸ்தகங்களை, அதிலும் பெஸண்டு, கிரான்ட் ஆலன், முதலிய ஆங்கிலர்கள் எழுதிய புஸ்தகங்களை வாசிப்பதிலேயே ருசி ஜாஸ்தியாக இருந்தது.

அப்புஸ்தகங்களில் சொல்லியிருக்கும் விஷயங்கள் சரியானபடி நம் மதத்தையொற்றிருக்கின்றனவாவென்று பார்ப்பதற்கு அவகாசமில்லை. அப்புஸ்தகங்களில் திருடமான விசுவாஸமுமிருந்தபடியால் அவ்விதம் ஊன்றி கவனிக்க அவசியம் தோன்றவுமில்லை. சென்னைப்பட்டணம் முதலிய இடங்களில் நடக்கும் அந்த ஸங்கத்தின் பெரிய கூட்டங்களுக்குத்தவறாமல் போய் வருவார். திருநெல்வேலியிலுள்ள கிளை ஸபை கார்யதர்சியாயிருந்த காப்பியிஸ்ட் ஸூப்ரின்டென்டெண்டு ராமச்சந்திர சாஸ்திரிகள் வீட்டில் பிரதி ஞாயற்றுக்கிழமையும் ஏதாவது புஸ்தகம் வாசிப்பு நடந்துகொண்டேயிருந்தது. அடிக்கடி பலபெரியோர்கள் வந்து பல விஷயங்களைப்பற்றி அறிய உபன்யாஸங்கள் செய்வதுமுண்டு. ஆனால் அந்த ஸங்க ஸம்பந்தமான உபன்யாஸங்களிலேயே இவருக்கு அதிகப்பற்றுதல் இருந்து வந்தது. பெஸென்ட், லெட்பீடர், பவானிசங்கரர், ராமச்சந்திரராவ், K. நாராயணஸ்வாமி அய்யர் முதலிய அச்சங்கத்தவர் வந்தால் இவர் உத்ஸாஹத்திற்கு அளவில்லை. ஆனால் நம் மதத்திற்கு அவர்கள் பௌதிக சாஸ்திரீதியாய்க் கொடுக்கும் பக்க பலத்தை மாத்திரம் இவர் அனுமோதிப்பரே தவிர பிராசீன ஸம்பிரதாயானுஷ்டானத்திற்கு விரோதமாய் அவர்களிடம் காணப்படும் ஆசாரங்களை அங்கீகரிக்கமாட்டார்.

## 7. ஊக்கப்பெறுக்கு.

இப்படி யிருந்துவருகையில் 1903ல் ஸப்ஜட்ஜாயிருந்த துரைஸ்வாமி அய்யங்காரும் கைலாஸபுரம் A. கிருஷ்ணஸ்வாமி அய்யரும் முக்கியமாயிருந்து கும்பகோணம் சாமா

சார்யார் என்பவரைக்கொண்டு கைலாஸபுரம் கோவில் முன் முகப்பில் பிரதிதினமும் ஸ்ரீமஹாபாரதத்தை பிரவசனம் செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். ஒரு வருஷத்திற்கு மேல் பிரவசனம் நடந்தது. அவருக்கு ஸங்கீதம் தெரியாது. லோக ரஞ்ஜகமாக மூலத்திலில்லாத உபகதைகள் சொல்லவும் சமத்காரமாகப்பேசவும் தெரியாது. ஆனால் மூலத்தில் ஒரு பதம் கூட விடாமல் அதிலிருக்கிறபடி ஸ்ரீவியாஸருடைய தாத்பர்யம் குழந்தைகளுக்குக்கூட மனதில் பதியும்படி வெகு அழகாய் பிரவசனம் செய்வார். இப்பிரவசனத்தை கேட்கக்கேட்க பல விஷயங்களை தெரிந்துகொண்டதுடன் இதையும் மற்றும் மூலக்கிரந்தங்களையும் நேரில் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் ராமச்சந்திரய்யருக்கு ஏற்பட்டது.

தவிரவும், இவருக்கு அத்யந்த ஸ்நேஹிதராயிருந்து பிரதிதினமும் அரைமணியாவது இவர்கூடவிருந்து விளையாட்டாகவே தத்வ விசாரம் செய்துகொண்டு ஸுந்தரய்யர் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு வேதாந்த ஸுந்தரய்யர் என்றே ஊரில் பிரஸித்தி. அவருக்கு ஸம்ஸ்கிருதம் அதிக பரிசயமில்லாமல் போனாலும் தமிழ் கிரந்தங்கள் மூலமாக வேதாந்த ஸாரங்களை நன்கு கிரஹித்திருந்தார். மற்றொரு ஸுந்தரய்யர் என்ற மஹான் கஸ்பா தெப்பக்குளத்தெருவில் இருந்தார். அவர் ஒரு பரீக்ஷையிலும் தேறினவரில்லை. ஒரு பள்ளிக்கூடத்தில் கீழ் வகுப்புக்கு உபாத்யாயர். ஆனால் தத்வசாஸ்திரத்தில் மாத்திரம் அதிநிபுணர். அவர் இங்கிலாந்திலுள்ள ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர், தாமஸ் ஹக்ஸ்லி, முதலான பிரமுகர்

களுடன் கடிதம் மூலமாகவே அடிக்கடி விஷயங்களை சர்ச்சை செய்வதுண்டு. மேற்கு தேசத்திய தத்வசாஸ்திர புஸ்தகங்களை தான் நன்றாக வாசித்துத்தெரிந்து, அதிலுள்ள குணதோஷங்களை அப்புஸ்தகங்களிலேயே ஒவ்வொரு பக்கத்திலும் குறித்து வைத்திருப்பார். அவரிடம் பால்யத்தில் நம் ராமச்சந்திரய்யர் சிஷ்யனாகவிருந்தார். இப்பொழுதும் அவர் இவரிடம் விசேஷ அபிமானம் பாராட்டி தன் குறிப்புகளுடன் கூடிய புஸ்தகங்களை அடிக்கடி அனுப்பிக்கொடுப்பார். அவர் அடிக்கடி சொல்வதிலிருந்தும் மேலேகண்ட வேதாந்த ஸுந்தரய்யர் அடிக்கடி எடுத்துக்காட்டுவதிலிருந்தும், இங்கிலீஷ் புஸ்தகங்களில் வரவர அசிரத்தை ஏற்பட்டு வந்தது. தத்வசாஸ்திரத்தில் எம். ஏ. பரீக்ஷைக்கு ஆஜராவதாக உத்தேசித்து வரவழைத்த மேற்கு தேசத்திய புஸ்தகங்களை வாசிக்கவாரம்பித்ததில் ருசியும் அக்கரையும் ஏற்படவில்லை. பரீக்ஷைக்கு வாசிக்கும் எண்ணத்தை நிறுத்திக்கொண்டார். நம் மதத்தை நன்கு அறிந்துகொள்ள இங்கிலீஷில் பிரசுரமாயிருக்கும் புஸ்தகங்கள் போதாவென்று உணர்ந்தார்.

## 8. பாக்யோதயம்.

எப்படியும் நம் மதத்தத்வங்களை தீரத்தெரிந்து கொள்ளவேண்டுமென்ற எண்ணம் திருடமாய் ஏற்பட்டது. ஆனால் நம் மதக்கிரந்தங்களை வாசித்திருந்த பண்டிதர்களிடம் அபிமானமிருந்ததே தவிர அவர்களிடம் விசுவாஸமேற்படவில்லை. அவர்கள் சரியானபடி கிரஹித்திருக்க மாட்டார்கள் என்றும், கிரஹித்திருந்தாலும் நமக்குவேண்

டியபடி எடுத்துச்சொல்லும் திறமை அவர்களுக்கு கிடை யாது என்றும் எண்ணியிருந்தார். ஒருவரிடமிருந்து ஒரு விஷயத்தை கிரஹித்து அதன் பிரயோஜனத்தை யடைய வேண்டுமேயானால் அவரிடம் பிராமாண்யபுத்தி திருடமா யிருந்தால்தான் ஸாத்தியப்படும் என்பதையும் நன்கு உணர்ந்திருந்தபடியால், அவ்விதம் தான் பிராமாண்யபுத்தி வைக்கும்படியாக யாரையும் காணவில்லையே என்று வருந்த லானார். இத்தருணத்தில் ஒருநாள் வேதாந்த ஸுந்தரய்ய ரிடம் இவ்வெண்ணத்தை வெளியிட்டதும் அவர் "உங்க ளுக்கு இப்பண்டிதர்களிடம் இவ்வளவு அவிசுவாஸமிருந் தால் தங்களுக்கு ஒரே வழிதான் இருக்கிறது. நம் மதத் திற்கு தற்காலம் தலைமை வஹித்துவரும் ஸ்ரீ ஸ்ருங்கேரி ஜகத்குரு அவர்களை தர்சனம் செய்து அவர்களுடைய அனுக்ரஹபுரஸ்ஸரமாக தங்கள் ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்துகொண்டு நல்ல ஞானத்தை ஸம்பாதித்துக்கொள்ள லாம்" என்று சொன்னார். இப்படிச் சொன்னதும் அவ் வாசார்யாரைக்கண்டு உடனே தர்சனம் செய்யவேண்டு மென்ற எண்ணம் உதித்தது. அவ்வெண்ணம் உதித்த க்ஷணம் முதலே அவ்வாசார்யாரவர்களின் கிருபைக்குப் பாத்திரமாகி சிரேயோமார்க்கத்தில் படிப்படியாக ஏறவாரம் பித்துவிட்டார்.

---

# அத்யாயம் 4.

## ஆசார்யானுக்ரஹம்

### 1. ஸ்ரீங்கேரி யாத்திரை.

---

ஸ்ரீங்கேரி வியாக்யான ஸிம்ஹாஸனத்தை அலங்கரித்து ஈசுவராம்சமெனவும் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாரின் அவதாரமெனவும் பிரஸித்தி பெற்று ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் என்றயோக பட்டம் வஹித்து வந்த அந்த லோகாசார்யாரவர்களை தர்சித்து கிருதார்த்தராகவேண்டுமென்ற எண்ணம் ராமச்சந்திரய்யருக்கு மேலிட்டதும் ஸ்ரீங்கேரிக்கு மார்க்கமின்னதென்று விசாரித்துத் தெரிந்துகொண்டார். தன் தாயார் பாகீரதியம்மாளை மாத்திரம் ஸஹாயமாக அழைத்துக் கொண்டு 1904 மே மாஸத்தில் புறப்பட்டார். பங்களூர் போய் அங்கிருந்தும் ரயில் மார்க்கமாகவே பீரூர் ஜங்ஷன் தாண்டி சிவமொக்காவுக்கு ஸமீபத்திலுள்ள தரிக்கரை என்ற ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கிருந்து ஸ்ரீங்கேரி 55 மைல். தபால் கொண்டு போவதற்காக ஒரே குதிரை வண்டிதான் உண்டு. பத்து மைலுக்கு ஒருதரம் மாற்றுக்குதிரைகள் தயாராயிருக்கும். பத்துமைல், பதினைந்து மைல்களுக்கு மத்தியில் எவ்வித குடியிருப்பும் கண்ணில் படாது. ரஸ்தாவுக்கு இருபக்கமும் அடர்ந்த காடுகள். ஒருபக்கம் ஆகாசத்தை அளாவிய மலைகளும் மற்றொரு பக்கம் அகாதமான பள்ளங்களுமிருக்கும். எதிரே வண்டி வந்தால் பல இடங்களில் ஒதுங்கிக்

கொள்ள இடம் கிடையாது. ரஸ்தாவில் இருபக்கமுமுள்ள மரங்கள் கூடாரம் போட்ட மாதிரி கவிந்து இருக்கும். சில விடங்களில் மரக்கொப்புகளை விலக்கிக்கொண்டுதான் வண்டி போகவேண்டியிருக்கும். வழியும் நேராக இராது. இடைவிடாது மூலைகள் திரும்பவேண்டிவரும். யானை புலி முதலிய துஷ்ட மிருகங்களின் ஸஞ்சாரமும் ஜாஸ்தி. ஸ்ரீராமரைப்பார்த்து மாரீசன் சொன்னபடி ரமணீயமா யிருந்தாலும் பயங்கரமாகவே இருக்கும். பயமற்றவர் களுக்கு அதிமனோஹரமான மார்க்கமென்றே தோன்றும். இவ்வழியாக குதிரை வண்டியில் இவர்கள் போய்க்கொண் டிருக்கும்போது கொப்பா என்ற ஊருக்கு மூன்று மைலுக்கு இப்பால் ரஸ்தாவில் ஒரு மூலை திரும்பினதும் நடு ரஸ்தா வில் குறுக்கே ஒரு பெரிய வேங்கைப்புலி படுத்திருப் பதைக்கண்டார்கள், ஸாயங்கால வேளை. வெளிச்சம் மங்கிக்கொண்டு வருகிறது. இனி தப்ப வழியில்லையென்று உறுதிகொண்டார்கள். குதிரையும் அப்புலியைக்கண்டு பதரி குதிக்கவாரம்பித்துவிட்டது. அக்குதிரை செய்த சப்தத்தினாலும் இவர்கள் செய்த சப்தத்தினாலும் புலி எழுந்தது. இனி அது தங்கள் பேரில் பாய்வது ஸித்தம் என்று மாதாவும் புத்திரனும் தீர்மானம் செய்துகொண் டார்கள். ஒவ்வொருவரும் மற்றவரை எப்படியாவது காப்பாற்றவேண்டுமென்ற எண்ணத்துடன் தானே முதல் இரையாவேன், தானே முதல் இரையாவேன், என்று விவாதித்துக்கொண்டார்கள். இவர்களுடைய மேலான மனோபாவத்தை ஸாக்ஷியாகவிருந்து கண்டு மெச்சின பகவான் அப்புலியிடமும் அந்தர்யாமியாக இருந்தபடியால்,

அது ஒருதரம் இவர்களை நன்கு உற்று நோக்கிவிட்டு நிதானமாய் உல்லாஸமாய் பக்கத்திலுள்ள பள்ளத்தாக்கில் இறங்கி மறைந்தது. அது இறங்கியும் இவர்களுக்கு பதட்டம் நீங்கவில்லை. வண்டிக்காரனுக்கு தன் ஸ்வாதீனம் வரவில்லை. குதிரைக்கு கிலிபிடித்து ஓரடி கூட எடுத்து வைக்கமுடியவில்லை. எல்லோரும் கொஞ்சம் ஆசுவாஸம் செய்துகொண்டு புறப்பட்டு மெள்ள மெள்ள கொப்பா போய்ச்சேர்ந்தார்கள். நன்ருக இருட்டிவிட்டபடியால் அன்று அங்கு தாமதித்துவிட்டு மறுநாள் ஸ்ரீங்கேரிக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

## 2. ஸத்குரு கடாக்ஷம்.

உடனே ராமச்சந்திரய்யரும் தாயாரும் ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீமத் ஆசார்யரவர்களின் தர்சனத்திற்காக புறப்பட்டுப்போனார்கள். அந்த ஸமயம் ஸ்ரீங்கேரியின் மத்தியிலுள்ள மலஹானிகரேசுவரருடைய ஆலயத்தில் கிரிஜா கல்யாண மஹோத்ஸவம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் கல்யாணக்கோலத்துடன் பரமசிவனும், எதிரில் கொஞ்சதூரத்தில் அம்பிகையும், இருவருக்கும் மத்தியில் இருவரையும் தர்சனம் செய்துகொண்டு ஆனந்தமாய் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களும், வீற்றிருக்கும் அத்புதமான ஸேவையைக்கண்டு பரவசரானார்கள். முதல் தர்சனமான அந்த ஸமயத்திலேயே ராமச்சந்திரய்யருக்கு ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடம் மனம் பற்றி அளவிலா பக்தியும், அவர்களுக்கு இவரிடம் அளவிலா வாத்ஸல்யமும் ஏற்பட்டன. அவரவர்களுடைய மனோநிலை அவரவர்களுக்கே தெரியுமாதலால் அதைப்பற்றி விசேஷமாக

சொல்வதற்கில்லை. யாத்திரையின் ஸௌகர்யத்தைப்பற்றி ஆசார்யாரவர்கள் கேட்ட ஸமயத்தில் புலி வந்த விஷயத்தைத்தெறியப்படுத்தினதும் "ஸத் கார்யத்தில் தீவிரமான ஸங்கல்பத்துடன் ப்ரவிருத்தி செய்தால் எவ்வித பெரிய விக்கினங்கள் தோன்றினும் முடிவில் ஒருவித சிரமத்திற்கும் இடமன்னியில் விலகும், கார்யம் கைகூடும்படி ஈசுவரன் அனுக்ரஹிக்க ஸித்தமாயிருக்கிறார் என்பதற்கு இதுவே அறிகுறி" என்று தைர்யம் சொல்லி யனுக்ரஹித்தார்கள்.

பிறகு ஸாவகாசமாய், இச்சிஷ்யரின் மனோநிலையை தெரிந்துகொள்ளக்கருதி இவர் இங்கிலீஷில் வாசித்துள்ள புஸ்தகங்களின் ஸாராம்சங்களை சொல்லச்சொல்லி, ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் முதலிய பாச்சாத்ய தத்வ சாஸ்திரிகளுடைய விசாரரீதியைக்கேட்டு மிகவும் ஸந்தோஷப்பட்டு, "யுக்தியினால் எவ்வளவு ஸாத்தியமோ அவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்கள். ஈசுவர தத்வம், ஜீவதத்வம், ஜகத்தத்வம் இம்மூன்றும் புத்தியினால் கண்டுபிடிக்கக் கூடியவைகளல்ல. புத்தியினால் அறியப்படாத்தன்மையும் அறியக்கூடாத்தன்மையுமே அவைகளின் தத்வம் ஆகும். இதை அவர்கள் தெரிந்துகொண்டிருப்பது மிகவும் மெச்சத்தக்கது. யுக்திக்கு அதீதமாயிருக்கிற தத்வங்களை அறிவிக்கிற சுருதி என்ற நிர்தோஷமான பிரமாணம் அவர்களுக்கு இவ்வாத்தினால் அதற்கு மேல் அவர்கள் விசாரம் செய்ய இடமில்லாமல் போய்விட்டது. நமக்கு அந்த சிரமம் இல்லை. யுக்தி கைவிட்டாலும் சுருதி நமக்கு தத்வத்தை விளக்கிக்காட்டும்" என்று சொல்லி சுறுக்கமாய் உபநிஷத்

ஸாராம்சத்தை நிர்வசனம் செய்து காட்டினார்கள். அத் தத்வத்தை நன்கு கிரஹிக்க மனஸ் அத்யந்தம் பரிசுத்த மாக வேண்டுமென்றும் அவ்விதம் மனஸ் சுத்தியடை வதற்கு கர்மானுஷ்டானமும் ஈசுவராராதனமும் அத்யா வச்யகமென்றும் எடுத்துக்காட்டினார்கள். அங்கு ராமச் சந்திரய்யர் தாமதித்த நாள்களில் ஆசார்யாரவர்களிட மிருந்து சில மந்திரோபதேசங்களையும் பெற்றுக்கொண் டார். சுருக்கமாக பூஜா விதானங்களையும் தெரிந்துகொண் டார். மாதாமஹர் பூஜை செய்து வந்த மூர்த்திகள் கிரஹத்திலிருந்ததால் அப்பூஜையையே செய்துவரும்படி அனுமதி பெற்றார். சாந்தி புரஸ்ஸரமாக பிரஸ்தானத்ரய பாஷ்யங்களும் உபதேசிக்கப்பட்டன. இவ்விதமாக ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் விசேஷ கருணைக்குப் பாத்திரமாகி அவர்கள் அனுக்ரஹத்துடன் ஊருக்குத்திரும்பினார்.

## 3. ஸத்ஸங்கம்.

ஊருக்குத் திரும்பி வந்தது முதல் ஸ்ரீமத் ஆசார்யா ரவர்களுடைய அபார மஹிமையையும் கருணையையும் பற்றி எல்லோருக்கும் அத்யுத்ஸாஹத்துடன் சொல்லி வருவார். தான் முன்னைவிட விசேஷ சிரத்தையுடன் ஆஹ்நிகங்களை செய்யத் துடங்கினார். நித்திய பூஜையை யும் யதாக்கிரமமாக செய்துவர ஆரம்பித்தார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களால் உபதேசிக்கப்பட்ட மந்திரங்களை ஊக் கத்துடன் ஆவிருத்தி செய்து வந்தார். பிரஸ்தானத்ரயத் தையும் கிரமப்படி பாராயணம் செய்து வந்தார். இந்த ஸமயத்தில் திருநெல்வேலி C. M. S. காலேஜில் ஸம்ஸ் கிருத பண்டிதராயிருந்த ராஜவல்லப சாஸ்திரிகள் முக்கிய

மாக வக்கீல் A. கிருஷ்ணஸ்வாமி அய்யருடைய ஆதரவின் பேரில் கைலாஸபுரத்திலேயே பிரதிதினம் பிரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தை பிரவசனம் செய்ய ஆரம்பித்தார்கள். நாள் தவராமல் அப்பிரவசனத்தையும் அதைத் துயர்ந்து நடந்த உபநிஷத் பாஷ்யம் கீதா பாஷ்யம் இவைகளுடைய பிரவசனத்தையும் மிகவும் ஆவலுடன் கவனித்து வந்தார். திருநெல்வேலி கஸ்பாவிலோ மற்றும் ஸமீபத்திலுள்ள பாளையங்கோட்டை முதலான எந்த இடத்திலோ யாராவது ஸத்விஷயமாகப் பிரவசனம் செய்வதாக தெரிந்தால் எந்தக் கார்யம் எப்படி யிருந்தாலும் உடனே போய் சிரவணம் செய்வார். ஊருக்கு வரும் எந்த வித்வானுயிருந்தாலும் தன் கூட கொஞ்ச நேரமாவது இருக்கச்செய்து அவர்கள் மூலம் ஸம்பாஷணையிலிருந்தோ பிரவசனத்திலிருந்தோ ஏதேனும் விஷயம் கிரஹிக்காமல் விடுவதில்லை. இவ்வித மாக விஷயக்கிரஹணத்தில் விசேஷ ஆவல் ஏற்பட்டு அதை ஸாத்தியமானமட்டும் நடத்திவந்தார். தானும் முன்போல் பல கிரந்தங்களையும் வாசித்து வந்தார்.

## 4. ஈசன் அனுக்ரஹம்.

இவ்விதமாக இரண்டு வருஷங்கள் சென்றதும், மறு படியும் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தர்சிக்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. அதன்பேரில் 1906 கோடை ரஜா காலத்தில் ஸஹாயத்திற்கு ஒரு பரிசாரகனை மாத்திரம் அழைத்துக்கொண்டு ஸ்ரீங்கேரி போய்ச்சேர்ந்தார். அது வரையில் இச்சிஷ்யனுக்கு ஏற்பட்டிருக்கும் மனோநிலையை ஆசார்யாரவர்கள் நன்கு அறிந்துகொண்டார்கள். இவர் நித்திய பூஜையில் உபயோகித்து வருகிற மூர்த்திகளைப்

பார்க்கவேண்டுமென்று ஆசார்யாரவர்கள் சொன்னதின் பேரில் அவைகளைக் கொண்டுபோய் காட்டினார். "மற்ற மூர்த்திகள் எல்லாம் ஸரியே. பாணலிங்கம் மாத்திரம் வேறு இருந்தால் நல்லது" என்று சொன்னார்கள். இப்படி சொன்ன க்ஷணத்தில் உத்திரதேசத்திலிருந்து ஒரு கௌடப்பிராஹ்மணர் வந்து ஜகதாசார்யாரை வந்தனம் செய்து ஒரு பெரிய பாணலிங்கத்தை அவர்களிடம் ஸமர்ப்பித்தார். அதை வெகு ஸந்தோஷத்துடன் ஆசார்யாரவர்கள் கிரஹித்துக்கொண்டு அப்பிராஹ்மணரை அனுப்பியபின் "உனக்கு வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தபடி பகவானே நேரில் வந்துவிட்டார். நீ எடுத்துக் கொண்டுபோய் ஆராதனம் செய்து கிருதார்த்தனுவாய்" என்று அப்பொழுதே அனுக்ரஹ புரஸ்ஸரமாகச்சொல்லி, தன் பூஜையிலேயே வைத்துக்கொண்டிருந்து, பின்னால் பாதபூஜா காலத்தில் இவரிடம் கொடுத்தருளினார்கள். இவரும் அதிவிநயத்துடனும் ஸந்தோஷத்துடனும் பெற்றுக்கொண்டார்.

## 5. ஸந்தேஹ நிவிருத்தி.

மற்றும் பலவிதமாகவும் அவர்களுடைய பூர்ணானுக்ரஹம் தனக்கிருப்பதாக உணர்ந்துகொண்டார். அவர்களுடைய ஸன்னிதி விசேஷத்தினாலேயே தன் மனஸ் தூய்மையடைந்து வருவதையும் ஸந்தேஹங்கள் தெளிந்து வருவதையும் நன்கு உணர்ந்தார். ஒருநாள் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் தன் குருநாதரான ஸ்ரீநரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகளவர்களின் அதிஷ்டானத்தில் மஹாலிங்கத்திற்கு அபிஷேகாதிகள் செய்துகொண்டிருந்தார். அபிஷேகம் முடிந்து

அலங்காரம் செய்யும்போது வெள்ளியால் செய்யப்பட்ட ஒரு பெரிய முக கவசத்தை லிங்கத்தின் பேரில் வைத்தார்கள். அதைப் பார்த்தவுடன் ராமச்சந்திரய்யருக்கு மனதில் "தேவதைகள் அப்பிரதய்க்ஷமாயிருப்பதால் அவர்களுக்கு எந்த ரூபம் கொடுத்தாலும் அதிகமாக பாதகமில்லை. இவ்வதிஷ்டானத்தில் ஸமாதியடைந்திருப்பவர் ஸன்யாஸி என்று தெரிந்திருக்கிற முறையிலாவது இந்த கவசத்தில் மீசை வைக்காமலிருந்திருக்கக்கூடாதா? அதுவும் பிடி மீசையல்லவா வைக்கப்பட்டிருக்கிறது?" என்ற எண்ணம் தோன்றிற்று. கர்ப்பக்ரஹத்தில் உட்கார்ந்து அலங்காரம் செய்துகொண்டிருந்த ஆசார்யாரவர்கள் உடனே வெளிப்பக்கம் திரும்பி ராமச்சந்திரய்யரைப் பார்த்து "ரூபமற்ற பொருளுக்கு ரூபம் கல்பித்தால் அது மாத்திரம் கூடாதோ?" என்று வினவினர். ராமச்சந்திரய்யரின் ஸந்தேஹம் உடனே நிவிருத்தியானதுடன் ஆசார்யாரவர்களின் ஸன்னிதியில் இருக்கும்போது மனதில் தோன்றும் எண்ணங்களிலும் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்று தெரிந்துகொண்டார். கொஞ்சநாள் அங்கிருந்து அவர்களுடைய தர்சனம் ஸல்லாபம் இவைகளினால் ஏற்படும் ஆனந்தத்தை யனுபவித்துவிட்டு பிறகு அவர்களுடைய அனுமதியின் பேரில் திருநெல்வேலிக்கு திரும்பினர்.

---

# அத்யாயம் 5.

## காசி யாத்திரை.

---

### 1. பிரயாணம்.

ராமச்சந்திரய்யர் திருநெல்வேலியில் வக்கீல் உத்யோகத்தில் நல்ல பெயருடன் தக்க ஸம்பாத்தியமும் செய்து வந்தார். முதல் தடவை ஸ்ரீங்கேரிக்குப் போய்விட்டு வந்த பிறகு 1904 நவம்பரில் பிறந்த பெண்ணுக்கு சாரதா என்று பெயரிட்டார். பிறகு 1905 டிஸம்பரில் சாந்திமதி என்ற ஒரு பெண்ணும் பிறந்தாள். இவ்விதம் குடும்பமும் விருத்தியாகிக்கொண்டு வந்தது. ஸகல விதமான லௌகிகப் பற்றுகளேயும் விட்டுவிட்டு ஆத்ம விசாரத்திலேயே காலத்தைக் கழிக்கவேண்டுமென்ற தோற்றம் ஒரு பக்கம் மேலிட்டுக்கொண்டே வந்தது. இக்குடும்பத்திற்கு தக்கபடி ஏற்பாடு செய்துவிட்டு அப்புரம் ஆத்ம விசாரத்திலிறங்குவதென்றால், அலை ஓய்ந்து ஸமுத்திர ஸ்நாநம் செய்வதுபோல் தானுகும் என்று நன்கு உணர்ந்தார். தீவ்ரமாய் வைராக்கியமேற்படுவதற்கு வேண்டிய மற்றும் பல வித ஸாதனங்களும் குடும்பவாழ்க்கையில் இருந்து வந்தன.

யாருக்கும் தெரியாமலே தான் தனியாகப்புறப்பட்டு விடவேண்டுமென்று 1907 ஆரம்பத்தில் தீர்மானித்துக் கொண்டார். தன் மூத்த குமாரனை கிருஷ்ணஸ்வாமி சென்னை ஸர்க்கார் கலாசாலையில் பி. ஏ. பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டு திருவல்லிக்கேணி விக்டோரியா ஹாஸ்டலில் ஜாகை வைத்துக்கொண்டிருந்தான். கர்ப்பவதியாயிருந்த

தன் பார்யையையும் பிரஸவத்திற்கென்று சென்னை மைலாப்பூரிலிருந்த அவளுடைய ஸஹோதரர்களின் கிரஹத்திற்கு மற்ற குழந்தைகளுடன் சேர்த்து அனுப்பி விட்டார். திருநெல்வேலியில் தன்னுடன் தாயாரும் மாதா மஹியும் தான் இருந்தார்கள். திருவிடமருதூரிலிருக்கும் தன் சிறிய தகப்பனார் ஸேதுராமய்யரை பார்க்கப்போவ தாகச்சொல்லிக்கொண்டு ஒருநாள் வீட்டை விட்டு புறப் பட்டுவிட்டார். திருவிடமருதூருக்குப்போய் தனக்கு யாத் திரைக்கு ஸௌகர்யமாயுள்ள சில பாத்திரங்களை வாங்கிக் கொண்டு அங்கிருந்து காஞ்சீபுரம் போனார். அங்கிருந்து திருநெல்வேலியில் தன் தம்பி ராஜகோபாலய்யருக்கு ஒரு கடிதமும், சென்னையில் தன் மூத்த குமாரனுக்கு ஒரு கடிதமும், சென்னையில் தன் பார்யைக்கு சிறிய தகப்பனார் முறையான வக்கீல் V. கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு ஒரு கடிதமும் எழுதி தபாலில் ரிஜிஸ்டர் செய்து அனுப்பிவிட் டார். அவைகளில் "ஆத்ம விசாரத்திலேயே காலத்தைக் கழிக்கவேண்டுமென்ற தீவ்ரமான எண்ணம் ஏற்பட்டிருப்ப தாலும் அதற்கு குடும்பத்திலிருந்தால் ஸாத்தியப்படாமல் ஜன்மம் வியர்த்தமாய் போய்விடும் என்று தோன்றுவதா லும் நான் வெளிக்கிளம்பிவிட்டேன். என் விஷயத்தில் யாரும் வருத்தப்படவேண்டியதில்லை. நானிருந்து குடும் பத்தை ஸம்ரக்ஷணை செய்வதைவிட ஸ்ரீபகவானே எவ் விதக் குறையுமன்னியில் குடும்பத்தை பார்த்துக்கொள் வார். மாதாவை பரித்யாகம் செய்வது மாத்திரம் நியாய மாகத் தோன்றாததினால் அவளை கொஞ்சநாள் கழித்து காசிக்கு நேரே அனுப்பிவிட்டால் அங்கே அவளை ஸந்தித்



மாணவன்

M. ராஜகோபாலன்.

துக்கொள்கிறேன். மாதாமஹியை அவளுடைய இரண்டாவது புத்திரி நாகரத்தினம் சென்னையிலிருப்பதால் அங்கே அனுப்பிவிடவேண்டியது. அனாவசியமாய் என்னை யாரும் தேடவேண்டாம்'' என்று எழுதியிருந்தார்.

## 2. பந்துக்களின் துயரம்.

இவர் குமாரன் கிருஷ்ணஸ்வாமி கடிதத்தைப்பார்த்து திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாதவனாய் ஆராத்துயரத்துடன் மைலாப்பூர் வந்து தன் தாயாரிடம் தெரிவித்தான். தனக்கு வந்த கடிதத்தைப்பார்த்த V. கிருஷ்ணஸ்வாமி அய்யரும் உடனே அவளிருப்பிடம் வந்து அவளையும் அவள் குழந்தைகளையும் தன் பங்களாவுக்கு அழைத்துச்சென்றார். தன் தம்பி சந்திரசேகரய்யரை உடனே காஞ்சீபுரத்திற்கு அனுப்பித் தேடச்சொன்னார். பால ஸம்ஸாரத்தை நிர்கதியாய் நிறுத்தின இவரிடம் அவருக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. என்ன செய்யலாம்? பலவிடங்களில் தேடிப்பார்த்தும் இவரைப்பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. கிருஷ்ணஸ்வாமி தன் அம்மான்கள் கூடவே இருந்து வந்தான்.

திருநெல்வேலியில் கடிதம் கிடைத்தவுடன் ராஜகோபாலய்யரும் மாதாவும் மாதாமஹியும் வருத்தம் தாங்கமாட்டாமல் துடித்தார்கள். அக்கடிதத்தில் கண்டபடி மாதாமஹியை அதிக தாமதமன்னியில் சென்னைக்கு அனுப்பப்பட்டது. ராமச்சந்திரய்யர் இருந்து வந்த வீட்டை உடனே காலிசெய்து தாயாரை ராஜகோபாலய்யர் தன் கூடவே வைத்துக்கொண்டார். பலபேர்களை யனுப்பி

பலவிடங்களில் தேடுவதற்கு ஏற்பாடு செய்தார். காஞ்சீ புரத்தில் தேடியதிலும் தகவல் ஒன்றும் தெரியவில்லை. இதற்குள் சிருங்கேரி ஸ்ரீ மஹா ஸன்னிதானம் யாத்திராக் கிரமமாக பங்களூர் பக்கம் வந்திருந்தபடியால் அவர்களிடம் போயிருக்கலாமோ என்று தோன்றி, இதைத் தெரிந்து கொள்ளவும் இவ்விஷயத்தை அவர்களிடம் நேரில் தெரி விக்கவும் ஒருவர் அனுப்பப்பட்டார். அக்காலத்தில் ராஜ கோபாலய்யருக்கு ஏற்பட்ட சிரமத்திற்கும் பணச்சிலவுக் கும் அளவேயில்லை. இவைகளைப் பொருட்படுத்தாமலே தேடி வந்தார். எங்கு தேடியும் ஸமாசாரம் தெரியவில்லை. எப்படியும் தன் தாயாரை காசிக்கு அனுப்பும்படி ராமச் சந்திரய்யர் எழுதியிருந்தபடியால் காசிக்குப்போகாமல் இருக்கமாட்டார் என்று நினைத்து காசியில் ஹநுமான் கட்டத்திலிருந்த ஜயபுரம் கணபதி சாஸ்திரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்று மாஸம் வரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

## 3. காசி வாஸம்.

ராமச்சந்திரய்யர் கோகர்ணம் முதலிய க்ஷேத்திரங் களுக்குச்சென்று அங்குள்ள ஆலயங்களில் தர்சனம்செய்து கொண்டு ஸாவகாசமாய் வாராணஸி வந்து சேர்ந்தார். அஹல்யாபாய் என்ற ஒரு ராணி முன்காலத்தில் ஏற்படுத்தி யிருந்த அன்னதான ஸத்திரத்தில் மத்தியானம் ஒருவேளை ஆஹாரம் க்ரஹித்துக்கொள்வார். இது தவிர அந்த ஸத்திரத்தில் போஜனம் செய்கிற ஒவ்வொருவருக்கும் ஏதோ தக்ஷிணையும் ஏற்பாடுண்டு. இவர் மாத்திரம் இந்த தக்ஷிணையை வாங்கிக்கொள்ளாமலேயிருந்து வந்ததை

கொஞ்சநாள் கவனித்து வந்த ஒருவர் இவருக்காகவென்று தானே அந்த தக்ஷிணையை வாங்கி வைத்துக்கொண்டு பிரதிதினமும் ராத்திரி கொஞ்சம் பால் வாங்கி இவருக்குக் கொடுத்து வந்தார். பிரதிதினமும் கிரமப்படி அருணோதயத்தில் எழுந்திருந்து கங்கையில் ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீமத் ஆசார்யாரவர்களால் அனுக்ரஹித்துக் கொடுக்கப்பட்ட மஹாலிங்கத்திற்கு அபிஷேகாதிகள் செய்து மிக பக்தி சிரத்தையுடன் ஆராதித்து வருவார். மத்தியானத்திற்குமேல் விவேகசூடாமணி, பஞ்சதசி முதலிய அத்வைதப்பிரகரணக்கிரந்தங்களை நன்கு வியாஸங்கம் செய்து வந்தார். இவருடைய உபசாந்தியையும் ஒதுக்கத்தையும் நித்திய சர்யையும் கவனித்து வந்த சிலர்கள் தங்களுக்கும் ஏதேனும் ஸத்விஷயங்களை எடுத்துச்சொல்லி அனுக்ரஹிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதின்பேரில் பிரதிதினம் வேதாந்தார்த்த நிர்வசனமும் நடத்திவந்தார். இவ்விதம் அவருடைய மனோபீஷ்டப்படி எவ்வித லௌகிக தொந்திரவுமன்னியில் ஸத்காலக்ஷேபம் நடந்து வந்தது. தான் ஊருக்கு எழுதியிருந்தபடி தன் தாயார் மாத்திரம் எப்படியும் வந்து சேருவாள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவளுடைய ஆயுட் காலம் வரை இப்படியே காலத்தைக்கழித்துவிட்டு அப்புறம் ஸன்னியாஸாசிரம ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டுமென்ற தீர்மானத்திலிருந்து வந்தார்.

## 4. தம்பி வருகை.

இவ்விதம் ராமச்சந்திரய்யர் காசியில் வந்திருக்கும் விஷயத்தை தெரிந்துகொண்ட ஜயபுரம் கணபதி சாஸ்

திரிகள் அவருக்கு தன் ஜாகையிலேயே இருக்க ஸௌகர் யப்படுத்திக்கொடுத்துவிட்டு அவருக்குத் தெரியாமல் திருநெல்வேலிக்கு ஸமாசாரம் தெரிவித்தார். இதைக் கேட்டவுடன் ராஜகோபாலய்யர் தூரயாத்திரைக்கு லாயக் கில்லாமலிருந்து வந்த தன் தேகஸ்திதியை உத்தேசித்து "தாயாரை தாமதமன்னியில் சென்னைக்கு அனுப்புகிறேன். நீ அவளை அழைத்துக்கொண்டு உடனே காசிக்குப் புறப் பட்டுப்போகவேண்டும். அங்கு போய் இரண்டு பேர்களும் அண்ணாவை ஊருக்கு திரும்பிவரும்படி கூடியமட்டும் பிரார்த்தித்துக் கேட்டுப்பாருங்கள். ஆனால் அவருடைய மனதின் பிடிமானம் எனக்கு நன்றாய் தெரியுமாதலால் அவர் ஊருக்கு திரும்புவாரென்று நிச்சயிக்க இடமில்லை. அவ்விதம் திரும்பிவர மறுத்துவிட்டால் தாயாரை காசியில் அவரிடம் விட்டுவிட்டு நீ மாத்திரம் சென்னைக்கு திரும்பி விடு" என்று சென்னையில் கிருஷ்ணஸ்வாமிக்கு எழுதினார். இதைப்பார்த்ததும் தன் தகப்பனாரின் இருப்பிடம் தெரிந்துவிட்டதென்பதில் ஆறுதல் ஒரு பக்கம் இருந்த போதிலும் அவரை திரும்பி அழைத்து வருகிற விஷயத் தில் அவனுக்கு மிகவும் அதைர்யம் ஏற்பட்டது. தான் சிறு பையன் போய் அவரை எப்படி திருப்பமுடியும் என்ற கவலையும் வருத்தமும் மேலிட்டது. இன்ன செய்வ தென்று ஒன்றும் தோன்றாதவனாக "தாங்களும் காசிக்கு கூடவராத விஷயத்தில் பிரயோஜனப்படாது. என்னையும் தாயாரையும் மாத்திரம் இக்கார்யத்தில் அனுப்புவது உசிதமில்லை. இந்த ஸமயத்தில் கைவிடக்கூடாது" என்று மிக வருத்தத்துடன் வற்புறுத்தி பதில் எழுதினான். அதன்பேரில் தன் சரீர ஸ்திதியை பொருட்படுத்தாது

வேண்டிய ஸௌகர்யங்களை தயாரித்துக்கொண்டு ராஜ கோபாலய்யர் புறப்பட்டார். காசி யாத்திரை பிறகு கிடைப் பது துர்லபமென்பதை நினைத்து அவர் பார்யை வாலாம் பாளும் குழந்தைகள் ஸஹிதம் புறப்பட்டாள். அவர் களுக்கு ஸஹாயத்திற்காக அவளுடைய பெரிய தாயார் ஸாவித்திரியம்மாளும் புறப்பட்டாள். ஒரு பரிசாரகனும் வேண்டியிருந்தது. இவ்விதமாக காசி யாத்திரைக்கு கூட்டம் ஜாஸ்தியாகிவிட்டது. எல்லோரும் நல்ல நாள் பார்த்து திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்தார்கள்.

தானே நேரில் போவதாலும் அதிகமாக பணச்சிலவா கிறதை யுத்தேசித்தும் கிருஷ்ணஸ்வாமி காசிக்கு புறப்பட வேண்டாமென்று ராஜகோபாலய்யரும் அவர் தாயாரும் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்கள் நினைத்தபடி ராமச் சந்திரய்யர் திரும்பிவர மறுத்துவிட்டால் அப்புரம் அவ ரைப்பார்க்கவே தனக்கு ஸந்தர்ப்பம் கிடைக்காமல் போய் விடுமே யென்று தானும் வருவேன் என்று கிருஷ்ண ஸ்வாமியும் கூடவே புறப்பட்டான். மாதாமஹியை அவள் புத்திரி நாகரத்தினத்தின் கிரஹத்திற்கு அனுப்பப்பட்ட தாக முன் சொல்லப்பட்டது. அப்புரம் அவளைப்பார்க்க ஸந்தர்ப்பம் நேரிடாமல் போய்விடலாம் என்று நினைத்தும் அவள் இஷ்டப்படும் விஷயத்தில் அவளையும் காசிக்கே அழைத்துக்கொண்டுபோய் தன்னிடம் வைத்துக்கொள்ள லாமென்று நினைத்தும் அவள் அப்பொழுதிருந்து வந்த ஸைதாப்பேட்டைக்கு பாகீரதியம்மாள் தகவல் சொல்லி யனுப்பினாள். ஆனால் காசியின் சீதோஷ்ணநிலையை யுத்தே

சித்து அந்த வயதில் காசியில் போய் இருக்க அவள் பிரியப்படவில்லை. ஸைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து எல்லோரையும் பார்த்து ஆசீர்வதித்து வழியனுப்பிவிட்டு திரும்பிவிட்டாள். சென்னையிலிருந்து காசி போய் சேரும் வரை நடந்த ஸம்பவங்கள் இங்கு பிரகிருதமில்லை. ஒருநாள் காலையில் காசி போய்ச்சேர்ந்தார்கள்.

## 5. ஸஹோதர ஸமாகமம்.

ஹநுமான் கட்டத்தில் கணபதி சாஸ்திரிகள் மடத்திற்கே நேரே போய் ராமச்சந்திரய்யர் பூஜை செய்து கொண்டிருந்த இடத்திற்கு சென்றார்கள். இவர்கள் வருகிற ஸமாசாரத்தை அவரிடம் சொல்லிவிட்டால் அவர் அங்கிருந்து புறப்பட்டுவிட்டால் என்ன செய்கிறதென்று நினைத்து கணபதி சாஸ்திரிகள் அவரிடம் பிரஸ்தாபிக்காமலே இருந்திருக்கிறார் என்று தெரிந்தது. கொஞ்சமேனும் எதிர்பாராத ஸமயத்தில் தன் தாயார், தம்பி, புத்திரன் முதலியோர்கள் திடீரென்று முன் நிற்கக்கண்டார். கண்களில் நீர் ததும்ப, தம்பியும் புத்திரனும் இவர் பாதத்தில் நமஸ்கரித்தார்கள். குமாரனைப் பார்ப்போமாவென்று பரிதபித்துக்கொண்டிருந்த தாயாரும் வாக்கு தழதழத்துப் பேசமுடியாமல் கண்ணும் கண்ணீருமாய் கீழே விழுந்தாள். "பூஜையை முடித்துக்கொண்டு வருகிறேன், நீங்களும் ஸாமான்களை இறக்கி வைக்கச்சொல்லி ஸ்நானமாகட்டும்" என்று இவர் சொன்னதும் மற்றவர்களுக்கு தன் ஞாபகம் வந்தது. இவர் திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டுப்போய் இரண்டு மாஸத்திற்குப் பிறகு, அதாவது 1907 ஏப்ரலில், சென்னையில் இவர் பார்வை

பிரஸவித்து ஒரு பையன் பிறந்திருந்தான். காசி யாத்திரை காலமாயிருந்ததை யுத்தேசித்து அவனுக்கு விசுவனுதன் என்று பின்னுல் பெயரிடப்பட்டது. அப்பையன் பிறந்த விஷயத்தை இவருக்குச்சொல்லி தீக்ஷா நிவிருத்தி செய்து வைக்கப்பட்டது. வந்த கார்யம் இன்னதென்று இவருக்கு நன்ருய் தெரியுமாதலால் என்ன கார்யமாய் வந்தீர்களென்று அவர் கேட்கவுமில்லை, இவர்களுக்கு இருந்த மனப்பதட்டத்தில் தாங்களாக ஏதேனும் சொல்லவும் நாவு எழும்ப வில்லை. அது விஷயமாக பிரஸ்தாபமே செய்யாமல் ஸ்நாந போஜனுதிகள் நடந்தன.

பிறகு மத்தியானத்திற்குமேல் ராஜகோபாலய்யர் தமயனைப்பார்த்து "தங்கள் அபிப்பிராயப்படி தாயாரை இவ்விடம் அழைத்து வந்துவிட்டேன். ஆனுலும் தாங்கள் இவ்விதம் குடும்பத்தை நிர்கதியாய்விட்டு வந்தது எவ் வகையிலும் உசிதமில்லை யென்றே எல்லோரும் நினைக் கிருர்கள். தாங்கள் ஒருவேளை ஸ்ரீமடத்திற்குப்போயிருக் கலாமோவென்று அங்கு மனுஷியர்களை அனுப்பினதிலும் தாங்கள் செய்த கார்யம் சரியல்லவென்று ஸ்ரீமஹா ஸன்னி தானமவர்களும் அபிப்பிராயப்படுவதாகத்தெரிந்தது. இவ் விதம் லோகத்திற்கும் தர்மத்திற்கும் ஒவ்வாத இக்கார் யத்தை தாங்கள் கைக்கொண்டது நியாயமல்ல. ஆகையால் தாங்கள் எங்கள் கூடவே ஊருக்கு திரும்பி வரவேண்டும்" என்று சொல்லி சித்திரகூட பர்வதத்தில் ஸ்ரீராமனிடம் பரதன் மன்ருடினதுபோல இந்த ராமனிடத்தில் அவர் தம்பி பலமுறை பலவாருக வியவகாரங்களை எடுத்துச் சொல்லியும் கெஞ்சிக்கேட்டும் பார்த்தார். சென்னை

V. கிருஷ்ணஸ்வாமி அய்யர் விஸ்தாரமாக எழுதிக்கொடுத்திருந்த கடிதத்தையும் கிருஷ்ணஸ்வாமி அவரிடம் கொடுத்தான். ஆனால் ஒரு விதத்திலாவது இடம் கொடுக்காமல் மேலுக்குமேல் ஸமாதானம் சொல்லியனுப்பும் நிலையிலேயே ராமச்சந்திரய்யர் இருந்து வந்தார். இதைப்பார்த்த ராஜகோபாலய்யர் "தங்களுடன் வியவகாரம் செய்ய நான் ஸமர்த்தன் அல்ல. தாங்கள் தெய்வமாக வைத்துக்கொண்டிருக்கிற ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தினிடத்திலேயே கேட்போம். அவர்கள் தங்கள் மனோநிலையையும் மற்றும் குடும்ப ஸ்திதி முதலிய விவரங்களையும் நன்கு அறிந்துகொண்டு எவ்விதம் தீர்மானிக்கிறார்களோ அப்படியாவது தாங்கள் நடக்க ஸம்மதிக்கவேண்டும். அவர்களுடைய வாக்கியத்திற்கு மேலான பிரமாணம் எங்களுக்கு இல்லை. தங்களுக்குமில்லை" என்று சொன்னார். கொஞ்ச நேரம் ஆலோசித்துவிட்டு "ஸரி, அப்படியே செய்வோம்" என்று ராமச்சந்திரய்யர் ஒப்புக்கொண்டார்.

## 6. ஆசார்யரின் நியமனம்.

உடனே ஸ்ரீ மடத்திற்கு இவர் காசியில் இருக்கிறதையும் மற்றவர்கள் இவரைத்தேடி காசிக்கு வந்திருக்கிறதையும் ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தின் ஆக்ஞைப்படி இவர் நடந்துகொள்ள ஸம்மதித்திருக்கிறதையும் ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தின் ஆக்ஞையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதையும் கண்டு ஒரு தந்தியும் விபரமாக கடிதங்களும் எழுதப்பட்டன. பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மத்தியில் ஒருநாள் கங்கா கட்டங்களில் ஸங்கல்ப புரஸ்ஸர



ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு
**ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ**
**பாரதீ ஸ்வாமிகள்.**

மாக ஸ்நாநாதிகளையும் தீர்த்தசிராத்தம் முதலியவை களையும் கிரமப்படி நடத்தினார்கள்.

நாலைந்து நாள்கள் கழித்து ஸ்ரீ மடத்திலிருந்து உடனே ராமச்சந்திரய்யரை புறப்பட்டு வரும்படி தந்தி கிடைத்தது. அப்பொழுது ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் பங்களூர் பக்கத்தில் யாத்திரையிலிருந்தார்கள். அவர்களு டைய ஆக்ஞையைப்பெற்று வருவதாகச்சொல்லி மற்ற எல்லோரையும் அதுவரை காசியிலேயே தாமதிக்கும்படி சொல்லிவிட்டு உடனே ராமச்சந்திரய்யர் புறப்பட்டுப் போனார். பங்களூரில் ஸ்ரீ மஹாஸன்னிதானத்தை தர்சனம் செய்தார். அவர்களும் மிக்க அன்புடன் ஸகல விஷயங் களையும் விஸ்தாரமாய்க்கேட்டு நன்கு தெரிந்துகொண்டு இவருடைய வைராக்கியத்தை மெச்சி, ஆனால் அவஸரப் படக்கூடாதென்றும் காலத்தில் கிரமப்படி இவர் எண்ணம் நிறைவேறுமென்றும் தைர்யம் சொல்லிவிட்டு "இப் பொழுது நீ மறுபடியும் காசிக்குப்போய் தம்பி முதலான வர்களை அழைத்துக்கொண்டு திருநெல்வேலிக்கே திரும் பிப்போ. அங்கு கொஞ்சநாள் கிருஹஸ்தனாக இருந்து பிறகு ஈசுவரானுக்ரஹத்தினால் உன் அபீஷ்டத்தையும் நிறைவேற்றிக்கொள்ளலாம்" என்று ஆக்ஞாபித்தார்கள். மோக்ஷப்பிரதமான ஸ்ரீவித்யா மஹாமந்திரத்தையும் அந்த ஸமயத்தில் இவருக்கு உபதேசித்து அனுக்ரஹித்தார்கள். ஆசார்யாரவர்களுடைய அவ்வாக்ஞையை சிரஸாவஹித்து ராமச்சந்திரய்யர் மறுபடியும் காசிக்கு திரும்பிவந்தார்.

## 7. காசியிலும் கர்மபலன்.

இதற்குள் மனோவிசாரத்தினாலும் பலவித அலைச்சலி னாலும் ஸ்வபாவமான பலக்குறைவினாலும் தளர்ச்சியடைந்

இருந்த ராஜகோபாலய்யரின் சரீரத்திற்கு கங்கா ஜலத்தின் சைத்தியம் ஏற்றுக்கொள்ளாததினால் ஜ்வரம் கண்டு வாத உபத்திரவம் ஆரம்பித்துவிட்டது. காசிக்கு வந்தும் கங்கா ஸ்நாநம் செய்வதற்கில்லாமலும் ஸ்ரீவிசுவேசுவரர் முதலான பகவத் மூர்த்திகளை பிரதிதினம் தர்சித்து கிருதார்த்தனாக யிடமில்லாமலும் செய்து வைத்த தன் கர்மத்தை மிகவும் நொந்துகொண்டார். ராமச்சந்திரய்யர் காசிக்கு திரும்பி வந்ததும் அவர் போய் வந்த ஸமாசாரத்தையும் ஆசார்யா ரவர்கள் செய்த அனுக்ரஹ விசேஷத்தையும் கேட்டு ஸந்தோஷித்தார். உடனே ஊருக்குப் புறப்பட வழியில் லாமல் நாளுக்கு நாள் வியாதி ஜாஸ்தியாகிறதே என்று மிகவும் வருந்தினார். பலவிதமாக பெரிய வைத்தியர்களைக் கொண்டு பார்த்ததிலும் குணத்திற்கு வாமல் இரண்டு மாதம் வரையில் காசியில் தாமதிக்கும்படியே நேரிட்டு விட்டது. பிறகு நடமாட சக்தி யேற்படாமலிருந்தபோதி லும் ஊருக்குப் புறப்பட்டுவிடவேண்டுமென்ற எண்ணம் தோன்றி அதற்கு வைத்தியர்களும் ஸம்மதி கொடுத்த படியால் புறப்பட்டுவிடுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. மறுநாள் ராஜகோபாலய்யரை மேனாப்பல்லாக்கில் ஏறச் செய்து ஸ்ரீ விசுவேசுவராலயம் முதலான திவ்ய க்ஷேத்தி ரங்களுக்குப்போய் தர்சனம் செய்து வைக்கப்பட்டது. மறுபடியும் கங்கா யாத்திரை ஏற்படுமென்று நிச்சயிப் பதற்கு இடமில்லாததினால் கயைக்கும் பிரயாகைக்கு மாவது அவசியம் போகவேண்டுமென்று தீர்மானித்து, அவ்விடங்களுக்கு முன்னாலேயே தக்க மனுஷ்யர்களை யனுப்பி, வேண்டிய ஸௌகர்யங்கள் செய்துகொண்டு,

எல்லோரும் அவ்விரண்டு புண்ய ஸ்தலங்களுக்குப்போய் அங்கு செய்யவேண்டிய சாஸ்திரோக்தமாயுள்ள சிராத்தாதி ஸகல கார்யங்களையும் கிரமப்படி நடத்தி முடித்துக்கொண்டார்கள்.

## 8. தாயின் கடன்.

பிறகு ஊருக்குத்திரும்ப ஏற்பாடு செய்யும்போது தாயார் பாகீரதியம்மாள் இந்த வயதில் காசிக்கு வந்துவிட்டு இனி ஊருக்கு திரும்புவதாக தனக்கு உத்தேசமில்லையென்றும் மற்றவர்கள் புறப்பட்டுப்போகலாம் என்றும் சொல்லிவிட்டாள். இரண்டு புத்திரர்கள் இருக்க, இவள் இப்படி தனியாய் காசியில் தங்கிவிட நினைப்பது நியாயமில்லையென்று ராமச்சந்திரய்யரும் ராஜகோபாலய்யரும் பலமுறை சொல்லியும் மரண காலத்திற்கு காசி கிடைக்காமல் போனால் மாத்திரம் தான் புத்திர ஸன்னிதியை விசேஷமாக சாஸ்திரங்கள் சொல்லியிருப்பதால், தான் காசியைவிட்டுவரப் பிரியப்படவில்லை யென்று ஒரே தீவிரமாக சொல்லிவிட்டாள். அவள் காசிக்கு வந்தது முதல் நாள் தவராமல் கங்கா ஸ்நாநமும், ஸ்ரீவிசுவேசுவரர் தர்சனமும், ஸ்ரீ மாதவர் தர்சனமும் தவராமல் செய்து வந்தாள். பரம்பரா தர்மமாகவும் பால்யம் முதலும் ஈசுவர பக்தியும் வைராக்கியமும் நன்கு வாய்த்திருந்த இவளுக்கு காசியை விட்டுப்போக மனது வரவில்லை. இவ்வவிமுக்த க்ஷேத்ரத்திலேயே மீதமுள்ள ஆயுஷ்காலத்தையும் கழித்து ஸ்ரீவிசுவேசுவர ஸன்னிதியிலேயே சரீர வியோகமடைந்து பரமபதத்தை யடையவேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டாள், அவளுடைய ஸங்கல்பத்தை மாற்ற சக்தி

யற்றவர்களாக அவளை காசியில் விட்டுவிட்டே இரண்டு புத்திரர்களும் புறப்பட்டுவிடும்படி ஏற்பட்டது.

அப்பொழுது அவளும் நல்ல ஆரோக்கியத்துட னேயே இருந்தாள். அப்படியிருந்தும் மற்றவர்கள் சென் னைக்குத்திரும்பி ரயில் மார்க்கமாக வந்துகொண்டிருக்கும் வழியில் ராஜமஹேந்திரம் ஸ்டேஷனில் ரயில் தங்கும் போது, அவளுக்கு உடம்பு அபாய ஸ்திதியிலிருப்பதாக அவஸரத்தந்தி ஒன்று கிடைத்தது. உடனே அங்கேயே ராமச்சந்திரய்யர் மாத்திரம் இறங்கிக்கொண்டு வடக்கே போகிற அடுத்த ரயிலில் காசிக்குத் திரும்பிப்போனார். மற்றவர்கள் நேரே சென்னைப்பட்டணம் வந்து சேர்ந் தார்கள். சென்னைப்பட்டணம் வந்து சேருவதற்கு முன்ன மேயே தாயார் பரலோகமடைந்துவிட்டாள் என்ற தந்தி வந்து காத்துக்கொண்டிருந்தது. ராமச்சந்திரய்யரும் காசிக்குப் போய்ச்சேரும் முன்னரே அவள் தேஹவியோக மடைந்து தஹன ஸஞ்சயனமுமாகிவிட்டதென்று அங்கு போனவுடன் தெரிந்துகொண்டார். இவர்கள் எல்லோரும் காசியைவிட்டுப் புறப்பட்ட மறுநாள் அகஸ்மாத்தாய் ராஜ கோபாலய்யருடைய ஷட்டகர் R. தியாகராஜய்யர் என்பவர் காசிக்கு வந்ததாகவும் அந்த ஸமயம் இவளுக்கு அதிஸாரம் மாதிரி கண்டு சிரமப்பட்டதாகவும் அதைப்பார்த்து அவரே கூடவிருந்து அந்திய காலத்தில் உதவினதாகவும் அந்திய ஸம்ஸ்காரங்களையும் அவரே செய்ததாகவும் தெரியவந்தது. உடனே மேல் நடக்கவேண்டிய கார்யங்களை உத்தேசித்து ராமச்சந்திரய்யர் சென்னைக்கு திரும்பிவிட் டார். சென்னைப்பட்டணத்திற்கு அடுத்த திருவொற்றியூர்

என்ற க்ஷேத்திரத்தில் ஒரு ஜாகை அமர்த்திக்கொண்டு உத்திரக்கிரியைகள் யாவற்றையும் யதாக்ரமமாய் செய்து முடித்தார்.

பிறகு எல்லோருமே திருநெல்வேலிக்கு திரும்பிவந்து சேர்ந்தார்கள். கிருஷ்ணஸ்வாமி மாத்திரம் வாசிப்பை உத்தேசித்து சென்னையில் தங்கினன். திருநெல்வேலிக்கு வந்த பிற்பாடு மறுபடியும் கிரமப்படி ராமச்சந்திரய்யர் குடும்ப பாரணத்தைச்செய்து வந்தார். முன்போலவே ஸகலவித தினசர்யைகளும் உத்தியோக முறைகளும் நடந்துவர ஆரம்பித்தன. நாளடைவில் மேலேகண்ட ஸம்பவங்கள் நடந்தனவென்பதைக்கூட யாரும் மறந்திருக்கும்படி எல்லா கார்யங்களும் நடந்து வந்தன.

# அத்யாயம் 6.

## ஸன்யாஸப்ரயத்னம்.

---

### 1. இல்லறம்

இவ்விதமாக உலைந்துபோன குடும்பத்தை மறுபடியும் பிரதிஷ்டை செய்து வைத்தது ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் அபார கருணையேயாகும். மறுபடியும் குடித்தனம் நடத்துவதில், இதற்கு முன் ராமச்சந்திரய்யரால் கொடுக்கவேண்டியதாயேற்பட்டுள்ள கடன்களினால் எவ்வித அஸௌகர்யமும் இவருக்கு இருக்கக்கூடாதென்று நினைத்து, அக்கடன்களைக்கொடுத்து தீர்த்துவிடும்படி ஸ்ரீ மடத்திலிருந்து ஐயாயிரம் ரூபாய் கொடுத்தனுப்பினார்கள். அக்காலத்தில் ராமச்சந்திரய்யருடைய முதல் இரண்டு புத்திரிகளுக்கு வயது பதினொன்றும்பத்துமாக இருந்ததால் அவர்களுக்கு விவாஹம் செய்யவேண்டியதும் அவசியமேயென்று அந்த சிலவு வகைக்கு வேறு மூவாயிரம் ரூபாயும் ஸ்ரீ மஹா ஸன்னிதானம் அனுக்ரஹித்துக்கொடுத்தார்கள். திருநெல்வேலியில் முன் ஸர்க்கார் வக்கீலாயிருந்து வந்த அப்பாத்துரை அய்யரின் குமாரர் வெங்கடசுப்பய்யருக்கு மூத்த பெண்ணாகிய ராஜம்மாளையும், விற்குடி ராமண்ணா அய்யர் அவர்களுடைய ஸ்வீகார புத்திரன் வெங்கடராமனுக்கு இரண்டாவது பெண்ணாகிய கங்காபாகீரதியையும், கொடுப்பதாக தீர்மானித்தார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் அனுக்ரஹத்தை முன்னிட்டு 1908 மே மாஸத்தில் இரண்டு விவாஹங்களையும் அதிகோலாஹலமாய் நடத்தினார். அந்தக்

கல்யாணங்கள் நடக்கும் ஸந்தர்ப்பங்களிலேயே ராமண்ணு அய்யர் அவர்களின் தம்பி அய்யாஸ்வாமி அய்யருடைய பெண் ஸுந்தராம்பாளை ராமச்சந்திரய்யருடைய மூத்த குமாரன் கிருஷ்ணஸ்வாமிக்குக் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டு அடுத்த மாஸத்தில் அந்த விவாஹமும் விற்குடியில் நடந்தது. அதற்கடுத்த மாஸத்தில் ராஜகோபாலய்யரின் மூத்த பெண் மீனாக்ஷியை கும்பகோணம் வக்கீல் A. C. நாராயணஸ்வாமி அய்யர் குமாரன் குஞ்சிதபாதனுக்கு விவாஹம் செய்து கொடுக்கப்பட்டது. இவ்விதமாய் காசிக்குப்போய்விட்டு வந்ததுமுதல் கார்ஹஸ்த்யம் மிகவும் பலப்பட்டுக்கொண்டு வந்தது.

## 2. ஆசார்யஸேவை.

ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தை தர்சனம் செய்து அவர்களுடைய அனுக்ரஹத்தைப்பெற வேண்டுமென்ற அவா ராமச்சந்திரய்யருக்கு மறுபடியும் மேலிட்டது. 1908 டிஸம்பரில் அவர்கள் திருச்சினாப்பள்ளி ஜில்லா கரூரில் விஜயம் செய்திருந்தார்கள். தன் புத்திரன் கிருஷ்ணஸ்வாமியையும் அழைத்துக்கொண்டு அங்கே போய் தர்சனம் செய்தார். ஆசார்யாரவர்கள் மதுரையில் தங்கியிருக்கும் ஸமயத்திலும் இவர் போய் தர்சனம் செய்து வந்தார். பிறகு யாத்திராக்கிரமத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் மார்க்கமாக திருநெல்வேலி ஜில்லாவிற்குள்ளேயே விஜயம் செய்ய வாரம்பித்துவிட்டபடியால் அடிக்கடி அவர்களை தர்சனம் செய்யக்கூடிய பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. அநேக கிராமங்களில் அவர்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களை கவனிப்பதற்காக இவர் தானே முன்னாலேயே போயிருந்து

ஏற்பாடு செய்து வருவார். 1909 ல் நடக்கவேண்டிய சாதுர் மாஸ்ய வாஸத்திற்கு தாம்ரபர்ணீ தீரத்தில் பாபநாச க்ஷேத்திரத்தை தீர்மானித்திருந்தபடியால் அங்கு வேண்டிய ஜாகை, பந்தல், ஸாமான்கள் சேகரித்தல் முதலிய ஸகலவித ஏற்பாடுகளையும் தானே நேரில் கவனித்து நடத்திவந்தார். அந்தக்காலங்களில் உத்தியோகமுறையை கவனிக்க அநேகமாய் அவகாசம் கிடையாது. அப்படியிருந்தாலும் இவருடைய ஆசார்ய பக்தியைக்கண்டு ஸந்தோஷப்படுகிறவர்களாகவே நியாயாதிபதிகள் இருந்து வந்தபடியால் அதிக அஸௌகர்யம் ஏற்படவில்லை. ஸ்ரீ மஹாஸன்னிதானம் பாபநாசத்திற்கு வந்த பிற்பாடு அநேகமாய் இவர் பிரதிதினமும் கச்சேரி கார்யம் முடிந்தவுடன் அடுத்த ரயிலில் போய்விட்டு மறுநாள் காலையில் திரும்பிவிடுவார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடத்தில் இவர் வைத்திருந்த பக்திக்கு அளவேயில்லை. அப்படியே அவர்களுடைய அனுக்ரஹமும் இருந்து வந்தது.

## 3. அனுக்ரஹ விசேஷம்.

பாபநாசத்தில் ஒரு நாள் ராத்திரி பூஜை யெல்லாம் முடிந்து ஸ்ரீ ஸன்னிதானம் விசிராந்திக்குப்போன பிற்பாடு ராமச்சந்திரய்யர் சிரமத்துடன் படுத்துக்கொள்வதற்காக தன் ஜாகைக்கு வந்து கொஞ்ச நாழிகைக்கெல்லாம் ஸ்ரீ ஸன்னிதானம் கூப்பிடுகிறார்கள் என்று ஒரு மனுஷியர் வந்து சொன்னதும் உடனே புறப்பட்டுப்போனார். அங்கே ஸ்ரீ ஸன்னிதானம் பத்மாஸனமிட்டு உட்கார்ந்துகொண்டு கையில் ஒரு புஷ்பத்தை வைத்துக்கொண்டிருக்கக் கண்டார். வந்தனம் செய்து நிற்கையில், "நாளை காலை எந்த

ரயிலில் ஊருக்குப்போகிறாய்'' என்று அவர்கள் கேட்ட தற்கு, இவர் "இரண்டாவது ரயிலில்'' என்று பதில் சொன்னார். அதற்கு அவர்கள் "முதல் ரயிலிலேயே போ'' என்று சொல்லி, கையை நீட்டச்சொல்லி, ஒரு க்ஷணம் தாமதித்து, தன் கையில் வைத்திருந்த புஷ்பத்தை ராமச்சந்திரய்யரிடம் கொடுத்தார்கள். ஏன் இப்படி ஆக்ஞை செய்கிறார்களென்று தெரிந்துகொள்ள இடமன்னியில், அப்படியே முதல் ரயிலில் ஏறி இவர் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார். முந்தின ராத்திரியில் அர்த்த ராத்திரி சுமாருக்கு தன் பார்யை கொஞ்சம் சிரமப்பட்டு பிரஸவமாகி ஒரு புத்திரன் ஜனித்திருப்பதாகத் தெரிந்துகொண்டார். ஸ்ரீஸன்னிதானம் தன் கையில் புஷ்பத்தைக்கொடுத்த க்ஷணமே குழந்தையின் ஜனனகாலமென்று தெரிய ஆச்சர்யமும் பக்தியும் மேலிட்டது. இதைக்கேட்டு ஆச்சர்யப்படாதவர்கள் இல்லை. ஆசார்யாளவர்களுடைய விசேஷ அனுக்ரஹத்திற்கு பாத்திரனாகிய அக்குழந்தைக்கு பின்னால் சங்கரன் என்று நாமதேயம் இடப்பட்டது.

## 4. ஆசார்ய திக்விஜயம்.

சாதுர்மாஸ்ய காலத்தில் நடந்த வைபவங்களையும் ஆச்சர்ய ஸம்பவங்களையும் எடுத்துச்சொல்வது இங்கே பிரகிருதமாகாது. சாதுர்மாஸ்யம் முடிந்த பிறகு ஆசார்யாளவர்கள் பாபநாசத்தைவிட்டுப் புறப்பட்டு பல கிராமங்களுக்கு விஜயம் செய்துவிட்டு நவராத்திரி பூஜைக்காக திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாளவர்கள் வாஸத்திற்காக ஸ்ரீ மடம் கட்டிடத்தை அதி ஊக்கத்துடனும் பக்தியுடனும் புதிப்பித்தும் மற்றும்

ஸகலவிதமான கார்யங்களேயும் அதிமனோஹரமாய் நிர்வஹித்தும் வந்த A. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களுடைய மஹிமையையும், ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில் ஈடுபட்டு பலவிதங்களில் ஆபாலவிருத்தர்களான ஜனங்கள் யாவரும் செய்து வந்த கைங்கர்ய விமர்சையையும், அப்பொழுது பொதுவாக ஊரில் தோன்றிய உத்ஸவ சோபையையும், வர்ணிப்பது ஸாத்தியமாகாது. கைலாஸபுரத்தில் ஆசார்யாரவர்கள் தங்கியிருந்த ஸமயத்தில் ராமச்சந்திரய்யர் கிரஹத்திலும் ராஜகோபாலய்யர் கிரஹத்திலும் விஜயமாகி அவர்களால் செய்யப்பட்ட பாதார்ச்சனையை வெகு கருணையுடன் அங்கீகரித்து ஆசீர்வதித்தார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டு, கிராமம் கிராமமாய் திருச்செந்தூர் போய் ஸ்ரீ கார்த்திகேயனை ஆராதித்து, திரும்பவும் பாளேயங் கோட்டை வந்து, நாங்குனேரி மார்க்கமாக கன்யாகுமாரிக்குப்போய் அம்பிகையை தர்சனம் செய்துகொண்டு, திருவனந்தபுரத்தில் ஸ்ரீ பத்மநாபர் தர்சனத்திற்காகப் போனார்கள். அங்கு அவர்களே அப்பொழுதுள்ள ஆஸ்திக சிகாமணியான மஹாராஜா மூலம்திருநாளவர்கள் கோட்டைக்கு வெளியில் பாதசாரியாக வந்து எதிர்கொண்டழைத்த விமர்சையையும் அங்கு நடந்த மற்றுமுள்ள வைபவங்களேயும் கண்கொண்டு ஆனந்தித்தவர்களில் ராமச்சந்திரய்யரும் ராஜகோபாலய்யரும் உண்டு. ஸ்ரீமஹா ஸன்னிதானம் அங்கிருந்து ஜனார்த்தனம், கொல்லம், வைக்கம் மார்க்கமாய் ஸ்ரீமத் பரமாசார்யாரான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாரவர்களின் ஜன்மபூமியான காலடி

க்ஷேத்திரத்திற்குப் போய்ச்சேர்ந்தார்கள். அங்கு ஸ்ரீமத் ஆசார்யார் ஆலயத்திலும் ஸ்ரீ சாரதாம்பாலயத்திலும் 1910 பிப்ரவரி மாஸத்தில் நடந்த கும்பாபிஷேக மஹோத்ஸவத்தையும் இவ்விருவரும் தர்சித்து கிருதார்த்தர்களானார்கள். பரதனுக்கு பரத்வாஜமுனிவர் செய்த ஆதித்ய விமர்சையே அங்கு நடந்த ஸம்பவங்களுக்கு உதாஹரணமாகும் என்று யாரும் உணர்ந்தார்கள்.

## 5. ஸன்யாஸத்தில் வேகம்.

அங்கு காலடிக்குப்போயிருந்த காலத்தில் ராமச்சந்திரய்யரின் பிரார்த்தனைக்கு இணங்கி ஸ்ரீ மஹாஸன்னிதானம் தன்னுடைய பாதங்களை அவர் நேரில் தொட்டு அவைகளில் சிரஸை வைத்து நமஸ்கரிக்க இடங்கொடுத்து மஹானுக்ரஹம் செய்தார்கள். அங்கிருந்து ஊருக்குத் திரும்புவதற்காக ராமச்சந்திரய்யர் ஆசார்யாரவர்களின் அனுமதியைப்பெற தர்சிக்கப்போன ஸமயத்தில் தான் முன்னமேயே லௌகிகப் பிரவிருத்தியை விட்டுப் புறப்பட்டது ஸரியல்லவென்று அவர்கள் ஆக்ஞையிட்டபடியால் மாத்திரம் அதற்குக் கட்டுப்பட்டு காசியிலிருந்து ஊருக்கு தான் வந்ததாகவும், தனக்கு குடும்பத்திலிருந்து வர கொஞ்சமேனும் மனதில்லாமலிருந்து வருவதாகவும், சீக்கிரம் தனக்கு ஸன்யாஸாச்ரமம் கிட்டும்படி அனுக்ரஹம் செய்யவேண்டுமென்றும், மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களும் "உன் அபீஷ்டப்படியே நடக்கும், யாதொரு கவலையும் வைத்துக்கொள்ள வேண்டாம்" என்று உத்திரவளித்தார்கள். அதைக்கேட்டு மிகவும் ஸந்தோஷபரிதராக ஊருக்குத் திரும்பிவந்தார்.

ஊருக்கு வந்து சேர்ந்தது முதல் ஸன்யாஸத்திற்கு ஸ்ரீ மஹாஸன்னிதானம் அனுக்ஞை கொடுத்துவிட்டதாகவே பாவித்து ஆசிரம ஸ்வீகாரத்திற்கு வேண்டிய விதிகளை ஒருவாறு கற்று வந்தார். இரண்டு மாஸம் சென்ற பிறகு ஒருநாள் காலை ஐந்து மணிக்கு யாருக்கும் தகவல் தெரிய இடமன்னியில் கிரஹத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டார். கிரஹத்திலுள்ள மற்றவர்களும் அடுத்த கிரஹத்திலிருந்துவந்த தம்பி ராஜகோபாலய்யரும் இவரைக் காணாது பரிதபித்து பலவிடங்களில் தேடினார்கள். ஒரு நாள் பூராவும் இவர்கள் மனதுபட்ட சிரமத்திற்கு அளவேயில்லை. இரண்டாவது நாள் இவர் மாதிரி முகஜாடையுடன் யாரோ ஒருவர் பாபநாசத்தில் காஷாய வஸ்திரத்துடன் ஸத்திரத்தில் ஓர் அரையிலிருப்பதாக தகவல் கிடைத்தது. உடனே ராஜகோபாலய்யர், ராஜவல்லப சாஸ்திரிகள், ஸர்க்கார் வக்கீல் A. ஸுந்தர சாஸ்திரிகள் முதலானவர்கள் புறப்பட்டுப்போய்ப் பார்த்தார்கள். ராமச்சந்திரய்யர் தான் என்று தெரிந்துகொண்டார்கள். ஆசிரம ஸ்வீகாரம் எப்படி நடந்ததென்று கேட்டதற்கு பிரேஷோச்சாரண புரஸ்ஸரமாய் ஆதுர விதானப்படி நடந்ததென்று இவர் எழுதிக் காட்டினார். அக்கினி கார்யங்கள் யாதொன்றும் நடக்கவில்லையென்றும் மஹா வாக்யாதி உபதேசங்கள் இன்னம் ஏற்படவில்லையென்றும் தெரிந்தது. பாபநாசத்திற்கு வந்ததும் முண்டனம் செய்துகொண்டு நதீ மத்தியில் பிரேஷோச்சாரணம் செய்து, சிகா யக்ஞோபவீத விஸர்ஜனம் செய்துவிட்டு, அன்று உபவாஸமிருந்து, ராத்திரியில் நடு நதியில் ஓர் பாறையில் திகம்பரராகவே தனித்து உட்

கார்ந்துகொண்டு ஜாகரணம் செய்ததாகவும், மறுநாள் பாபநாசம் ஸத்திரம் வேலை பார்த்துவந்த அனந்தய்யர் என்பவர் காஷாயத்தில் நனைத்து வஸ்திரம் கொண்டுவந்து கொடுத்ததாகவும் மற்றும் விபரமாகவும் இவர் மூலமாயும் அந்த அனந்தய்யர் மூலமாயும் தெரியவந்தது.

பிறகு A. ஸுந்தர சாஸ்திரிகள் வெளியில் வந்து மற்றவர்களுடன் ஆலோசித்ததில் "ப்ரேஷோச்சாரணமாகி விட்ட முறையில் இவரை மறுபடியும் கிரஹஸ்தாசிரமத்திற்குத்திருப்ப யத்தனிப்பது சாஸ்திர ஸம்மதமாகாது என்று எனக்கு தோன்றுகிறது. இருந்தாலும் இவர் செய்திருக்கும் கார்யம் கிரமப்படி ஸன்யாஸாசிரம ஸ்வீகாரம் ஆகுமாவென்பதில் எனக்கு மிகவும் ஸந்தேஹமிருக்கிறது. ஸன்யாஸாசிரமம் ஸித்திக்கவில்லை யென்று வைத்துக் கொண்டால் மாத்திரம் மறுபடியும் கிருஹஸ்தராக திரும்ப வழியிருக்கலாம் என்று தோன்றுகிறது. அப்படி வழியில்லை யென்றாலும் ஸன்யாஸாசிரமம் கிரமப்படி ஸித்திக்கும்படி செய்யவேண்டியதும் நம் கடமையே. எப்படியும் இவ்விஷயம் நமக்குள் தீர்மானமாகக்கூடியதில்லை. உடனே ஸ்ரீ மஹாஸன்னிதானத்தினிடத்தில் தெரிவிக்கவேண்டும்" என்று சொன்னார். மற்றவர்களும் அப்படியே அங்கீகரித்தார்கள். இத்தீர்மானத்தை விபரமாக இவரிடத்திலும் A. ஸுந்தர சாஸ்திரிகள் சொல்லி, ஸ்ரீ மஹாஸன்னிதானத்தினிடத்தில் இங்கு நடந்த ஸம்பவங்களெல்லாவற்றையும் தெரியப்படுத்தின பிறகு அவர்கள் எவ்விதம் தீர்மானம் செய்தாலும் அதன்படி கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று வாக்குறுதி கேட்டுக்கொண்டார். மறுநாள் காலை

யில் தீர்மானம் சொல்வதாகச் சொன்னார். மறுநாள் அவ்விதமே கட்டுப்படுவதாக உறுதி சொன்னார். ஆனால் இவர் சொன்ன மாதிரியில் தான் செய்தது ஸரியென்றே ஆசார்யாரவர்கள் சொல்வார்களென்ற திருடமான நம்பிக்கையிருந்ததாகத்தெரிந்தது. ஆசார்யாரவர்களிடத்தில் நடந்த விஷயங்களை ஸரியாகச் சொல்லவேண்டிய அவசியத்தையுத்தேசித்து எல்லா விஷயங்களையும் கண்டு இவர் கைப்படவே ஓர் லிகிதம் எழுதி வாங்கிக்கொள்ளப்பட்டது. அந்த லிகிதத்தை எடுத்துக்கொண்டு இவர் புத்திரன் கிருஷ்ணஸ்வாமியும் குமஸ்தா ஸுந்தரகிருஷ்ணய்யரும் உடனே தாமதமன்னியில் புறப்பட்டு காலடிக்குப்போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் திரும்பி வருவதை எதிர்பார்த்து மற்றவர்கள் திருநெல்வேலிக்கு திரும்பிவிட்டார்கள். இவருடைய போஜனாதிகளுக்கு ஸத்திரம் அனந்தய்யர் மூலமாகவே வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கப்பட்டன.

## 6. ஸத்குருவின் கருணை.

காலடிக்குப்போய் ஸ்ரீ மஹாஸன்னிதானத்தினிடத்தில் இவருடைய லிகிதத்தை கிருஷ்ணஸ்வாமி ஸமர்ப்பித்துவிட்டு மேல் ஒரு வார்த்தைகூட சொல்ல சக்தியற்றவனாக நின்றான். ஸ்ரீ ஸன்னிதானம் அவனுக்கு ஆசுவாஸம் சொல்லி, உட்காரும்படி செய்து, நடந்த ஸம்பவங்களைப் பற்றி விபரமாய் சொல்லச்சொல்லி கேட்டுக்கொண்டார்கள். எல்லாம் கேட்டு முடிந்த பிறகு "இந்தத்தடவை மிகவும் மேல் போய்விட்டதே. எப்படியும் கவனித்து நாளை சொல்கிறேன்'' என்று சொன்னார்கள். ஆசார்யாரவர்களுடைய

தீர்மானம் எப்படி ஏற்படுமோவென்று அன்று பூராவும் கிருஷ்ணஸ்வாமிக்கிருந்த மனஸ் சஞ்சலத்திற்குக்கரையே யில்லை. மறுநாள் காலையில் ஸ்ரீ மஹாஸன்னிதானம் "இவ் விஷயத்தை நன்ருய் கவனித்துப்பார்த்ததில் அவர் அனுஷ் டித்திருக்கிற கிரமம் ஆதுர ஸன்யாஸக்கிரமமாகத்தான் தெரிகிறது. ஆனால் சரீரம் ரோகாதிகளால் பீடிக்கப்பட்டு, மரணம் ஸந்நிஹிதமாய் தோன்றும்போது, எல்லா அங்கங் களையும் கிரமப்படி அனுஷ்டிக்க ஸௌகர்யமில்லாத ஸந்தர்ப்பத்தில் மாத்திரம், அந்த கிரமத்தை யனுஷ்டிக்க லாமே தவிர இவர் அனுஷ்டித்திருப்பது தவறுதலே யாகும். கார்ஹஸ்த்யம் நீங்கிப்போகாது. ஸன்யாஸாசிரம மும் ஸித்திக்காது. தவிரவும் இதுவரை பத்து பன்னி ரண்டு நாள்களாக கிரமமன்னியில் சிகா யக்ஞோப வீதாதிகள் இல்லாமலிருந்து வருவதும் தோஷமேயாகும். ஆகையால் மறுபடியும் ஜாதகாதி சௌள உபநயனுதி ஸம்ஸ்காரங்களை செய்துகொண்டால்தான் சுத்தராவார். அதற்கு வேண்டிய கிரமங்களையும் எழுதிக்கொடுக்கச் சொல்கிறேன். அதைக் கொண்டுபோய் அவரிடம் கொடுத்து அதில் கண்டபடி நடந்துகொள்ளச்சொல்லு. மற்ற விஷயங்கள் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்'' என்று ஆக்ஞாபித்தார்கள்.

உடனே கிருஷ்ணஸ்வாமி புறப்பட்டு திருநெல் வேலிக்கு வந்து ராஜகோபாலய்யரிடமும் A. ஸுந்தர சாஸ்திரிகளிடமும் இவ்விஷயங்களை யெல்லாம் தெரிவித் தான். அவர்களுடன் கிருஷ்ணஸ்வாமியும் மற்றும் சிலரும் பாபநாசம் போய் இவரிடம் காலடியில் நடந்த விஷயங்களை

யெல்லாம் சொல்லி ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் ஆக்ஞா ரூபமான கடிதம் கொடுக்கப்பட்டது. அதைப் பார்த்த வுடன் ஒன்றும் தோன்ருதவராக நாளை சொல்வதாகச் சொல்லிவிட்டார். மறுநாள் "அக்கடிதத்தில் கண்டபடி நடத்த ஏற்பாடு செய்யுங்கள்" என்று இவர் சொன்னுர். உடனே ஸமீபத்தில் கல்லிடைக்குறிச்சிக்கும் வீட்டு உபாத் யாயருக்கும் சொல்லியனுப்பி வைதிகர்களை தருவித்து மறுநாள் ஸகல ஜாதகாதி ஸம்ஸ்காரங்களும் விதிப்படி நடத்தப்பட்டன. அன்று ஸாயங்காலம் எல்லோரும் திருநெல்வேலிக்கு திரும்பினுர்கள்.

காசிக்குப்போய் திரும்பி வந்ததைவிட இது பெரிய ரகளையாகிவிட்டது. அப்பொழுதாவது கிரஹஸ்தராகவே யிருந்து வந்தார். இப்பொழுது முண்டனம் பிரேஷோச் சாரணம் இவைகளும் நடந்துவிட்டபடியால் ஸ்ரீமத் ஆசார் யாரவர்களுடைய ஸ்ரீமுகம் இல்லாத பக்ஷத்தில் வைதிகர் களுக்குள் அபிப்பிராய பேதம் பலமாக ஏற்பட்டிருக்கும் என்று தெரிந்தது. லௌகிகத்திலும், அடிக்கடி உத்யோக முறையில் இவ்விதமாக விட்டுவிட்டுப்போகும்படி யேற்பட் டதால் கொஞ்சம் அஸௌகர்யம் ஏற்பட்டது. இருந்தாலும் ஆசார்யாரவர்களின் ஆக்ஞையும் அனுக்ரஹமுமே தனக்கு சரணம் என்ற திருடமான விசுவாஸமும் தைர்யமும் இவ ருக்கு இருந்துவந்தபடியால் அதிக சிரமமன்னியில் மறுபடி யும் முன்போலவே குடும்ப கார்யங்களை கவனித்து நடத்தி வந்தார்.

## 7. கருணைப்பெருக்கு.

கூடிய சிக்கிரம் ஸ்ரீ மஹாஸ்ன்னிதானத்தை நேரில் தர்சனம் செய்து எப்படியும் தன் எண்ணம் எல்லாவற்றை

யும் தெரியப்படுத்தி அவர்களுடைய பூர்ணமான அனுக்ர ஹத்தைப்பெறவேண்டுமென்று நினைத்து வந்தார். சில மாஸங்கள் கழித்து அவ்வருஷம் சாதுர்மாஸ்யத்திற்காக ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் திருச்சிறுப்பள்ளி ஜில்லாவில் காவேரி வடகரையில் அய்யம்பாளையம் என்ற ஊரில் விஜயம் செய்வதாகத் தெரிந்ததால் அங்கு போய் தர்சனம் செய்தார். ஏகாந்தமாய் தர்சித்து வெகு நாழிகையிருந்து தன் மனோபீஷ்டப்படிக்கெல்லாம் தன் ஆற்றல்களை எடுத்துச்சொல்ல ஸௌகர்யம் வாய்த்தது. இவர் தனக்கிருந்த வேகத்தை எவ்வளவு காட்டியும் "அவஸரப்படவேண்டாம், எல்லாம் காலத்தில் கிரமமாய் நடக்கும்" என்றே அவர்கள் ஸமாதானம் சொல்லி வந்தார்கள்.

அங்கு சிலநாள் இருந்துவிட்டு ஊருக்குத் திரும்பும் போது நடந்த ஓர் ஆச்சர்ய ஸம்பவத்தை இங்கு குறிப்பிட வேண்டியதுண்டு. இவர் ஸ்ரீ ஸன்னிதானத்தினிடத்தில் மந்திராக்ஷதை வாங்கிக்கொண்டு வறுதி சொல்லிக்கொள்ளும் ஸமயத்தில் "ராஜகோபாலன் ஸௌக்கியமாயிருக்கிறானா?" என்று கேட்டார்கள். இவர் "ஆம்" என்று சொல்லியும், "நீ வரும்போது உடம்பு ஸரியாயிருந்ததா?" என்று மறுபடியும் கேட்டார்கள். இவர் மறுபடியும் "ஆம். அவனுக்கு உடம்பு ஒன்றுமில்லை" என்று சொன்ன பிறகு, "இருந்தாலும், இந்த விபூதியைக்கொண்டுபோ. ஊர்போய் சேர்ந்ததும் ஜலத்தில் கரைத்து அவன் வயற்றில் தடவு" என்று சொல்லி விபூதிப்பொட்டணம் ஒன்று கொடுத்தார்கள். இவருக்கு விசாரம் ஏற்பட்டுவிட்டது. உடனே புறப்பட்டு திருநெல்வேலிக்கு வந்தபோது ரயில்வே

ஸ்டேஷனிலேயே இவரை எதிர்பார்த்து ஒருவர் நிற்பதைக் கண்டார். தான் அன்று வந்து சேராமலிருந்தால் தந்தி கொடுத்திருப்பார்களென்று தெரிந்துகொண்டார். நாலைந்து நாளாக ராஜகோபாலய்யருக்கு மலஜல மோசனமாகாமல் வயிறு பொதும்பிக்கொண்டிருப்பதாகவும் மூச்சுவிடக்கூட முடியாமல் மிகவும் சிரமப்படுகிறதாகவும் நல்ல வைத்தியர்கள் பார்த்து வந்தும் கொஞ்சமேனும் குணம் தெரியாமல் மேலுக்குமேல் சிரமம் ஜாஸ்திப்படுகிறதாகவும் ஸமாசாரம் கிடைத்தது. உடனே வீட்டுக்குப்போய் ஸ்நாநம் செய்து அவ்விபூதியை கையில் எடுத்துக்கொண்டு ஸ்ரீ ஸன்னிதானத்தை தியானித்துக்கொண்டு ஜலத்தில் குழைத்து அவர்கள் சொல்லியனுப்பினப்பிரகாரமே ராஜகோபாலய்யரின் வயிற்றில் தடவினர். அப்பொழுது ராஜகோபாலய்யருக்கு பிரக்ஞைகூட ஸரியாகவில்லை. விபூதி தடவி இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் நீர் இறங்கியது. மூச்சு அடைப்பு நீங்கிற்று. நல்ல பிரக்ஞை திரும்பிற்று. ஸ்ரீமத் ஆசார்யாளவர்களின் பரிபூர்ண அனுக்ரஹத்தினலேயே உயிர் பிழைத்ததாக தெரிந்துகொண்டு ராஜகோபாலய்யர் படுத்தபடியே அவர்களிடத்தில் மிக பக்தியுடன் மனதைச் செலுத்தினர். கொஞ்சநாழிகை சென்றபிறகு ஆசார்யாளவர்களிடம் நடந்த ஸம்பாஷணையை ராமச்சந்திரய்யர் விபரமாகச் சொல்லிவிட்டு, "நீ வரும்போது ராஜகோபாலனுக்கு உடம்பு ஸரியாயிருந்ததா, என்று அவர்கள் கேட்டார்களே. அப்பொழுதே உனக்கு உடம்பு ஸரியாயில்லையா?" என்று கேட்டார். அதற்கு "ஆமாம். ஆனல் நீ புறப்படுவதற்கு இடஞ்சலாயிருக்குமே என்று நான்

சொல்லவில்லை'' என்று ராஜகோபாலய்யர் பதில் சொன்னார். பிறகு அதிசீக்கிரமாய் வியாதி குணப்பட்டு அவர் ஸ்வஸ்ததையை அடைந்தார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் தங்களிடம் வைத்திருந்த வாத்ஸல்யத்தை நினைத்து நினைத்து தங்களை வெகு தன்யர்களென்றே நினைத்து வந்தார்கள்.

## 8. பணத்தில் பற்றின்மை.

ராமச்சந்திரய்யருடைய நாமதேயத்திற்கு அனுகுணமாக ஜானகியென்ற மனையாள் ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. பொறுமைக்கே அதிதேவதையான பூமிதேவியின் புத்திரியான ஜானகி தேவியின் நாமம் பூண்ட இவளும் குடும்பத்தில் பலவிதமாக துக்கங்கள் ஏற்பட்டும் மனச் சோர்வு ஏற்படாமல் கார்ய நிர்வாஹம் செய்து வந்தாள். தன் பர்த்தா குடும்பப்பற்றுதலை நீக்கிக்கொள்ளவேண்டுமென்ற தீவிரமான எண்ணத்துடன் இருந்து வந்ததுடன் இரண்டு தடவை குடும்பத்தை நிர்கதியாய் விட்டுவிட்டுப் புறப்பட்டும் கூட அது விஷயமாய் கொஞ்சமேனும் மனச் சோர்வு காட்டாமல் நடந்துவந்தாள். அவருடைய உதார ஸ்வபாவத்தினாலும் பண ஸௌகர்யக்குறைவினால் மாத்திரம் எந்த கார்யமும் நிற்கக்கூடாதென்ற மனோபாவத்தினாலும் குடும்ப நிர்வாஹத்தில் பலவிதமான சிரமங்கள் ஏற்படும். அவைகளையெல்லாம் காட்டிக்கொள்ளாமலே நிர்வஹித்து வருவாள்.

ராமச்சந்திரய்யருக்கு பணவிஷயத்தில் என்றைக்குமே கவனம் கிடையாது என்று முன்னொரு தடவை சொல்லப்பட்டது. அவர் எண்ணத்திற்கு தக்கபடியே

பகவானும் அனுக்ரஹம் செய்தபடியால் உத்தியோகத்தில் நல்ல வரும்படி வந்துகொண்டிருந்தது. என்ன இருந்தாலும் கையில் பணமிருக்கும்போது பின்னால் வேண்டியிருக்குமே என்ற விசாரம் அவர் வைத்துக்கொள்ளாததினால் வரும்படி ஜாஸ்தியாய்க்கொண்டு வரும்போதே கடனும் ஜாஸ்தியாய்க் கொண்டுவந்தது. இதைப் பார்த்து இவருடைய ஸ்நேஹிதர்கள் அநேகர் இவரிடம் சொல்லிப் பார்த்ததுண்டு. ஆனால் அவர் ஸ்வபாவத்தை மாற்ற முடியவில்லை. உதாஹரணமாக, திருநெல்வேலியில் எந்த ஸத்விஷயமாகவும் பொதுவில் பணம் வசூலிப்பதென்றால் தனக்கு தோன்றினவாறு துகையைக்கண்டு கையெழுத்து செய்துவிடுவார். பணக்காரரென்று சொல்லக்கூடாத இவரே அவ்வளவு கொடுப்பதால் ஜாஸ்தி பணமும் செல்வாக்கும் வைத்துக்கொண்டிருக்கிற மற்ற பிரபுக்கள் இதைவிட ஜாஸ்தித்துகை அல்லது ஸமானமாகவாவது கொடுக்கும்படி ஏற்படும். இந்த லௌகிக நிர்பந்தத்தை உத்தேசித்து ஒருநாள் ஸர்க்கார் வக்கீல் A. ஸுந்தர சாஸ்திரிகள் இவரிடம் "இனி இது மாதிரி விஷயங்களில் முதலில் நீங்கள் கையெழுத்து செய்கிறதில்லையென்று வைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களுக்கு மிகவும் நிர்பந்தமாயிருக்கிறது" என்று சொன்னார். "அப்படியே செய்கிறேன்" என்று இவரும் சொல்லிவிட்டார். மறுநாள் ஒரு விஷயமாக ஒருவர் ஓர் உதவி ஜாபிதாவை எடுத்துக்கொண்டு ராமச்சந்திரய்யரிடம் வந்து ஸஹாயத்தை அபேக்ஷித்தார். "A. கிருஷ்ணஸ்வாமி அய்யர், A. ஸுந்தர சாஸ்திரிகள், முதலானவர்களிடம் போய்விட்டு என்னிடம் வாருங்கள்"

என்று இவர் சொன்னார். "அவர்களிடம் போகிறேன். இருந்தாலும் முதல் கையெழுத்து தங்களுடையதாக இருக்கவேண்டும். தவிரவும், நான் அவர்களைப் பார்த்துக் கொண்டு தங்களை ப்பார்க்க மறுபடியும் இரண்டாம் தரம் வரவேண்டுமே" என்று அவர் சொன்னார். "அதுவும் வாஸ்தவம்தான். இதற்காக நீங்கள் இன்னொரு தரம் அலையவேண்டாம்" என்று சொல்லி ஜாபிதாவில் நாலைந்து கையெழுத்துகளுக்கு இடம் விட்டுவிட்டு அப்புறம் தான் கையெழுத்து செய்து பணம் கொடுத்தனுப்பினார். பின்னால் A. ஸுந்தர சாஸ்திரிகளும் இதைப்பார்த்து ராமச்சந்திரய்யரின் ஸ்வபாவத்தை மாற்றுவது சிரமமென்று தெரிந்துகொண்டார்.

மற்றொரு ஸ்நேகிதர் இவரிடம் "பணத்தை லக்ஷ்யமன்னியில் தானம் செய்துவிடுகிறீர்களே. உங்களுக்கு எப்படித்தான் மனது வருகிறதோ தெரியவில்லை" என்று சொன்னதற்கு இவர் "என்றைக்காவது பணம் வந்தவுடன் பெட்டியில் எடுத்து வைத்து ஒருநாளாவது அப்பணம் பெட்டிக்குள் இருந்துவந்ததேயானால் அப்பணத்தில் என்னுடையது என்ற எண்ணம் ஏற்பட அவகாசமுண்டு. அப்படி ஒருநாளுமே அவகாசம் கொடுக்காததினால் அப்பணத்தை விட்டுப்பிரிவதில் துக்கம் ஏற்பட நியாயமில்லை" என்று பதில் சொன்னார். அதற்கு அவர் "அவ்விதம் இருப்பதே தவறுதல் என்று எனக்கு தோன்றுகிறது. தான் இறந்த பிற்பாடும் கூட தன் பணம் தன்னுடையதே என்று நினைத்து அதை இவ்விதமாக விநியோகப்படுத்தவேண்டுமென்று உயில் எழுதி

வைக்கிறதில்லையா? அப்படியிருக்க, தானிருக்கும்போதே மமதைக்கு இடம் கொடுக்கிறதில்லை யென்றால் நியாய மாகுமா? ஸன்யாஸிக்கு பணமும் இல்லை, மமதையுமில்லை. கிரஹஸ்தனுக்கு இரண்டும் வேண்டியதுதான்'' என்றார். ''அது ஸரியல்ல. கிரஹஸ்தனுக்கு பணம் வேண்டுமென் கிற அம்சத்தை ஒப்புக்கொண்டேன். மமதையும் வேண்டு மென்பது கிடையாது. உயில் விஷயம் சொன்னீர்களே, உயில் என்கிற சப்தமே நம் தேசபாஷைகளில் கிடையாது. இங்கிலீஷ் வில் என்பதைத்தான் தமிழில் உயில் என்று வியவஹரிக்கிறோம். ஜகத்தில் ஒரு பதார்த்தத்தையும் நாம் ஸ்ருஷ்டிக்க முடியாது. பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களை அனுபவிக்கவேண்டிய கர்மா செய்திருந் தால் அப்பதார்த்தங்களின் சேர்க்கை நமக்கு ஏற்படுகிறது. ஆகையால் நமக்கு அனுபவ பாத்தியதையைத்தவிர வேறு யாதொன்றும் சொல்வதற்கில்லை. அனுபவ காலத்திலும் அப்பதார்த்தங்கள் பகவானுக்கே பாத்தியப்பட்டவை யென்ற ஞாபகத்துடனிருந்தால் சிரேயஸ் உண்டு. நம் மாணத்துடன் நம் அனுபவ காலமும் முடிவடைவதால் அப்புரம் அந்த பதார்த்தங்களுக்கும் நமக்கும் எவ்வித ஸம்பந்தமும் கிடையாது. அவைகளை இன்னார்தான் இப் படித்தான் அனுபவிக்கவேண்டுமென்று சொல்ல நமக்கு என்ன பாத்தியதையிருக்கிறது? நாம் இருக்கும்போதே மமதையற்றிருக்கவேண்டுமென்று போதிக்கிற நம் மதம் இறந்த பிறகும் மமதையிருக்க ஸம்மதிக்குமா? ஆகையால் தான் உயில் என்கிற ஏற்பாடே பிராசீன ஹிந்து சட்டங் களில் கிடையாது. தன்னுடையது என்ற எண்ணம் மிகுந்த சில கோஷ்டியார்களுடைய ஸஹவாஸத்தினால் நமக்குள்ளும்

இப்பொழுது உயில் எழுதி வைக்கும் ஸம்பிரதாயம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுதுள்ள சட்டம் இடங்கொடுத்தாலும் அது சாஸ்திரீயமாகாது". என்று எடுத்துச்சொன்னார்.

மற்றொரு ஸ்நேகிதர் சென்னை பிரபல வக்கீலாகவும் நம் ராமச்சந்திரய்யரிடம் விசேஷ அன்பு செலுத்திவந்தவராகவுமிருந்த T. R. ராமச்சந்திரய்யரிடம் இவரைப் பற்றி பிரஸ்தாபித்துக்கொண்டிருக்கும்போது "ராமச்சந்திரய்யருக்கு எவ்வளவு அஸௌகர்யம் ஏற்பட்ட ஸமயத்திலும் தன் உதார ஸ்வபாவத்தை மாற்றிக்கொள்ளமுடியவில்லை. அவர் என்ன செய்வார்?'' என்று சொன்னதும், T. R. ராமச்சந்திரய்யர் "அனாதிஸித்தமான அவித்யையையே போக்கடித்து ஆத்ம ஸாக்ஷாத்காரம் செய்ய வேண்டுமென்று பிரவிருத்தி செய்கிறார். அவருக்கு இந்த ஸ்வபாவத்தை மாற்றமுடியவில்லை யென்றால் என்ன அர்த்தம்?" என்றார். "வாஸ்தவமே, இந்த ஸ்வபாவத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று பிரவிருத்தி செய்யவில்லை யென்றுதான் தோன்றுகிறது. மாற்றிக்கொள்ளவேண்டுமென்ற எண்ணமேயில்லையே'' என்று அந்த ஸ்நேகிதர் பதில் சொன்னார். அதுவே வாஸ்தவமான காரணம் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. நமக்காக பணமா? பணத்திற்காக நாமா? என்ற உறுதியிலேயே அவர் கடைசி வரையில் தன் ஸ்வபாவத்திற்கனுகுணமாகவே நடந்துவந்தார் என்றுதான் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. பணத்தின் சிரமத்தையறியாதவனென்று சொல்ல இடமில்லை. அச்சிரமத்தை பொருட்படுத்தவில்லை யென்பதுதான் வாஸ்தவம்.

# அத்யாயம் 7.

## கார்ஹஸ்த்யச்சிறப்பு.

### 1. மதப்பிரசாரம்.

ராமச்சந்திரய்யர் தியோஸாபிகல் ஸொஸைட்டியில் அங்கத்தினராக இருந்துவந்தார் என்று முன் ஒரு தடவை சொன்னோம். ஆனால் 1903 முதல், அதிலும் 1904 ல் ஸ்ரீமஹாஸன்னிதானத்தை தர்சனம் செய்துவிட்டுவந்தது முதல், அச்சங்கத்தில் பற்றுதல் வர வர குறைந்து கொண்டே வந்தது. நம் பிராசீன கிரந்தங்களைக் கற்றுணர உணர அச்சங்கத்தின் நிலை இவ்வளவுதான் என்று நன்கு அறிந்தார். ஆனாலும், இங்கிலீஷ் வாசிப்பில் இறங்கியிருப்பவர்களுக்கு அந்த வழியில் சொல்வதே உசிதமென்று நினைத்து, தான் அந்த ஸங்கத்தின் ஸம்பந்தத்தை விட்டு விடாமலே இருந்துகொண்டு, அச்சங்கக்கூட்டங்களில் நம் தத்வங்களை அடிக்கடி எடுத்துச்சொல்வார். பெஸெண்டு முதலியவர்களுடைய கொள்கைகளை நாம் எவ்வளவு தூரம் அங்கீகரிக்கலாமென்றும் எந்தெந்த அம்சங்களில் அவைகள் நம் பிராசீன வைதிக மதத்திற்கு முறண்படுகின்றனவென்பதையும் எடுத்துக்காட்டுவார். உள்ளூரிலும் அன்யமான ஊர்களிலும் மதவிஷயமான உபன்யாஸங்கள் செய்து வருவார். தான் காசிக்குப்போய்விட்டு வந்த பிறகும் அந்த ஸங்கத்தின் அங்கத்தினராகவே இருந்து கொண்டு அதிலுள்ள ஆபாஸக்கொள்கைகளைத்திருத்த முயன்றார். கடைசியில் 1909 ல் கொல்லத்தில் நடந்த ஒரு

ஸபையில் வர்ண தர்மத்தின் மஹிமையைப்பற்றி தான் எடுத்துரைத்தபோது, அதற்கு நேர் விபரீதமாய் தாத்பர்யப்படும்படியாய் அக்கிராஸனர் முடிவுரையில் எடுத்துச் சொன்னார். இதை கவனித்து வந்த ராமச்சந்திரய்யர் ஸங்கத்தில் இருந்து வருவதில் இனி தனக்காவது மற்றவர்களுக்காவது எவ்வித பயனும் ஏற்படாதென்று நன்கு தோன்றி ராஜீநாமா செய்தார். இத்தனை நாள் ஸங்கத்தில் ஊக்கத்துடனிருந்து வந்த இவர் ராஜீநாமா செய்ய என்ன காரணம் என்று அந்த ஸங்கத்தின் தலைவியான அன்னி பெஸெண்டு அம்மாள் கேட்க, தான் காரணங்களைக்கண்டு எழுதியனுப்புவதை பூராவும் தன் பத்திரிகையாகிய தியாஸபிஸ்டில் அச்சுப்போட்டு பிரசுரம் செய்வதாயிருந்தால் எழுதியனுப்புவதாக விடை கூறினார். இதற்கு பதிலே யில்லை. இவ்விதமாக இவருக்கு அந்த ஸங்கத்தின் ஸம்பந்தம் விலகிற்று.

ஆனாலும் இவர் முன்போலவே மத விஷயமான உபந்யாஸங்களை செய்து வருவார். அக்காலத்திலேயே திருநெல்வேலி கஸ்பாவில் சில சிறு பையன்கள் நவீன இயக்கங்களில் மோஹமடைந்து, ஜாதி ஏது, ஆசிரமம் ஏது, கோவில் ஏது, ஸ்வாமி ஏது, என்று சொல்லத் தலைப்பட்டார்கள். அவர்களை யுத்தேசித்து இவ்விஷயங்களைப்பற்றி அடிக்கடி உபன்யாஸங்கள் செய்யவேண்டியது அவசியமென்று நினைத்து முன் சொல்லிய வேதாந்த ஸுந்தரய்யரும் அம்பலவாணநாவலர் முதலியவர்களும் பிரயத்தினம் செய்ததின்பேரில் திருநெல்வேலி ஸ்வாமி நெல்லையப்பர் கோவில் ஸன்னிதியிலும் வஸந்த மண்டபத்திலும் அடிக்கடி உபன்

யாஸங்கள் நடைபெறும். அவைகளில் பெறும்பாகம் இவருடைய உபன்யாஸங்களே இருக்கும். அவைகளின் சுறுக்கம் அக்காலத்தில் பிரசுரமாய்க்கொண்டிருந்த "திருநாவுக்காசு" என்ற தமிழ் பத்திரிகையில் அடிக்கடி பிரசுரிக்கப் பட்டு வந்தது. இவ்விதமாக பலவிடங்களில் எடுத்துச் சொல்லிய விஷயங்களை ஒறுங்கே சேர்த்து இங்கிலீஷிலும் ஒரு புஸ்தகமாக வெளியிடவேண்டுமென்று சில நண்பர்கள் சொல்லி வந்ததை யனுஸரித்து அவ்விதமே "ஆத்ம வித்யா" என்ற நாமத்துடன் 1910 ல் ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீ விலாஸம் அச்சுக்கூடத்தின் மூலமாக ஒரு புஸ்தகம் பிரசுரிக்கப்பட்டது. அப்புஸ்தகத்தின் மஹிமையையும் பிரயோஜனத்தையும் பற்றி பல கனவான்கள் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு நடந்த பல உபன்யாஸச் சுறுக்கங்களையும் அதனுடன் சேர்த்து இப்பால் 1933 ல் "The Hindu Ideal" என்ற பெயருடன் இரண்டாவது பதிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

## 2. இல்லறப்பற்று.

தேசத்தின் அதிருஷ்டக்குறைவினால் சிருங்கேரி ஸ்ரீ மஹா ஸன்னிதானம் அவர்கள் 1912 ஆரம்பத்தில் மறைந்தார்கள். அவர்கள் ஸித்தியடைந்த விபரம் தெரிந்து சோகத்தை ஸஹிக்கமாட்டாதவராக ராமச்சந்திரய்யர் உடனே சிருங்கேரிக்குப் புறப்பட்டுப்போனார். அங்கு மஹா பூஜை முதலான விசேஷங்களுக்கும் அதன் பிறகு தத்காலம் ஜகத்குரு ஸ்தானம் வஹித்து வருகிற ஸ்ரீசந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளவர்களின் பட்டாபிஷேகத்திற்கும் இருந்துவிட்டு ஊர் திரும்பினார். ஸ்ரீ மஹா ஸன்னிதானம்

ஸித்தியடைந்ததுமே ராமச்சந்திரய்யருக்கு ஸன்யாஸத்தில் வைத்திருந்த மனோவேகம் குறைந்தது. பொதுவாகவே ஸகல வர்ண தர்மமும் ஆசிரம தர்மமும் க்ஷீணப்பட்டு வரும் இக்காலத்தில் ஸன்யாஸிகளின் தர்மம் மிகவும் குறைவுபட்டிருப்பதாக இவருக்கு எப்பொழுதும் எண்ணமுண்டு. ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தின் ஸாக்ஷாத் அனுக்ரஹத்தினால் அவ்வாசிரமத்தைப்பெற்று தன்னால் கூடிய வரையில் அனுஷ்டிக்கவேண்டுமென்ற எண்ணம் பலமாக இருந்தது. இதற்கிடமன்னியில் அவர்கள் ஸித்தியடைந்துவிடவே, இனி தனக்கு முக்கிய ப்ரஹ்மோபதேசம் செய்யக்கூடிய யோக்கியதையுள்ளவராக யாருமே கிடைப்பதரிது என்ற அபிப்பிராயம் மனதில் உள்ளூர இருந்தபடியால் இவருடைய ஸன்யாஸ வேகம் குறைந்தது.

## 3. கிரஹ நிர்மாணம்.

இதன் மத்தியில் இவருடைய மூத்த குமாரனான கிருஷ்ணஸ்வாமி சட்ட பரீக்ஷைகளில் தேறாமல் இரண்டாவது கிரேட் வக்கீலுக்கு வேண்டிய அர்ஹதையை மாத்திரம் பெற்றபடியாலும், ராஜகோபாலய்யர் திருநெல்வேலி சொத்துக்களை விற்றுவிட்டு தஞ்சாவூர் ஜில்லாவுக்கேபோய் விடுவதாக ஒரு யோசனை செய்தபடியாலும், தான் ஸ்திரமாயிருந்து குடித்தனம் பண்ணுவதான உத்தேசமில்லாததினாலும், தன் குமாரனை தஞ்சாவூர் ஜில்லா மாயவரத்தில் இருக்கும்படி 1911 மத்தியில் ஏற்பாடு செய்தார். அங்கேயே ஒரு வீடு வாங்கிவிடுவதாக நினைத்ததில் நிறைவேறவில்லை. தம்பியின் எண்ணமும் மாறிவந்தது. தனக்கும் மேலே சொன்ன காரணத்தினால் ஸன்யாஸத்திலிருந்த வேகம்

மங்கிற்று. அப்பொழுது, தான் ஒரு இடத்திலும் தன் குமாரன் ஒரு இடத்திலுமாக இருப்பது ஸரியாய்த்தோன்றாமல் அவனையும் திருநெல்வேலிக்கே வந்துவிடும்படி சொல்லி அவனும் 1912 மத்தியில் வந்துவிட்டான். அந்த ஸமயம் இவருடைய தீர்மானத்திற்கு அனுகுணமாக இவருடைய பூர்வீக வீடு இருந்துவந்த ஸன்யாஸிக்ராம அக்ரஹாரத்திலேயே பங்காருஸ்வாமி அய்யங்கார் என்ற ஒரு நண்பருடைய காலி மனை விலைக்கு வந்தது. முன் 1909 ல் ஸ்ரீ மஹா ஸன்னிதானம் திருநெல்வேலிக்கு விஜயம் செய்திருந்த காலத்தில் ஊர்வலமாக வரும்போது இவ்வக்ரஹாரக்கடைசியில் "இம்மனை காலியாய் இருக்கிறதே" என்று தன் பல்லாக்கைப் பிடித்துக்கொண்டு வந்த ராமச்சந்திரய்யரிடம் சொன்னதும் இப்பொழுது இவர் ஞாபகத்திற்கு வந்தது. தனக்கென்று உத்தேசித்தே ஸ்ரீ ஸன்னிதானம் அம்மனையை கருணைகடாக்ஷத்துடன் நோக்கி அவ்விதம் சொல்லியிருக்கிறார்கள் என்ற பாவனை தோன்றவே அதிக தாமதமின்னியில் அம்மனையை வாங்கினார். ராமச்சந்திரய்யருடைய பார்யைக்கு அவளுடைய தகப்பனாரிடமிருந்து கிடைத்த தொகையை மூலதனமாக வைத்து அம்மனையை வாங்கி கட்டிடம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஸமயத்தில் குலசேகரப்பட்டணம் மஹமதியர் ஒருவருக்காக இவர் ஆஜராகிக்கொண்டு ஒரு வியவஹாரம் மிகப் பெரிதாக நடந்துவந்தபடியால் வீடு கட்டுவது பூராவும் அவர் சிலவு என்று கூட சிலர்கள் பிரஸ்தாபிக்க ஹேதுவாயிருந்தது. வீட்டை சிறிதாகக் கட்டவேண்டுமென்று ராஜகோபாலய்யருடைய அபிப்பிராயம். ஆனால் ராமச்சந்தி

ரய்யர் அதற்கிசையாமல் தன் மனப்போக்கை யனுஸரித்து பெரிதாகவே கட்ட ஆரம்பித்துவிட்டார். அதிலும் திருப்திப்பட்டவராகவே ராஜகோபாலய்யர் பிரதிதினமும் ஸாயங்காலம் கட்டிடத்திற்கு வந்து நடக்கும் வேலையை மேல்ப்பார்த்து வந்தார். கட்டிட வேலை அதிவேகமாய் நடந்துவந்தது.

## 4. தம்பியின் வியோகம்.

இப்படியிருந்து வந்த மத்தியில் மேல் குத்துமான மெல்லாம் முடிந்து சுண்ணும்புப்பூச்சு ஆரம்பிக்கவேண்டியிருந்த தருணத்தில் ராஜகோபாலய்யருக்கு வாதஜ்வரம் கண்டு படுக்கையிலிருந்துவிட்டார். அவருக்கு அதிபால்யத்திலேயே ஒரு தடவை வாத உபத்ரவம் ஏற்பட்டு மாஸக்கணக்காக திருவிடமருதூரிலிருந்துகொண்டு வைத்தியம் செய்து குணமடைந்தது. இரண்டாம் தடவை முன் சொன்னபடி காசிக்குப்போயிருந்த ஸமயத்தில் சிரமப்பட்டார். இப்பொழுது மூன்ரும் தரமும் அதே மாதிரி ஆரம்பித்தவுடன் இனி பிழைக்கமாட்டேனென்ற எண்ணம் அவருக்கு வந்துவிட்டது. பலவித வைத்தியம் செய்து பார்த்தும் குணத்திற்கு வராமல் 1912 டிஸம்பர் 15ம் தேதியன்று பரமபதமடைந்தார். யுத்தாங்கத்தில் லக்ஷ்மணனைப் பறிகொடுத்துவிட்டதாக நினைத்து ஸ்ரீராமர் துயரமுற்று நின்றதே ராமச்சந்திரய்யர் அடைந்த துக்கத்திற்கு உவமையாகும். இருந்தாலும் தன் ஸ்வபாவ தைர்யத்தினல் தேறுதலை யடைந்துகொண்டு மற்ற குடும்பஸ்தர்களையும் தேற்றிவிட்டார். கிரமப்படி மேல் நடக்கவேண்டிய கிரியை

களெல்லாம் ராஜகோபாலய்யருடைய புத்திரனான மஹா லிங்கனால் எவ்வித குறையுமன்னியில் நடத்தப்பட்டன.

## 5. குடும்ப நிர்வாஹம்.

தன் தம்பியும் கூடவிருந்து ஆனந்திக்க வழியில்லையே என்ற துக்கமொருபக்கமிருக்க, ஸன்யாஸிக்ராமத்தில் கட்டிவந்த கிருஹத்திற்கு "ஸத்குரு விலாஸம்" என்று அன்வர்த்தமாக பெயரிட்டு 1913 ஜனவரியில் கிரமப்படி கிரஹப்பிரவேசம் செய்தார். அவருடைய மூன்றாவது புத்திரியான ஸரஸ்வதீ குழந்தைப்பருவத்திலேயே அதாவது 1901 லேயே இறந்துவிட்டாள். நான்காவது புத்திரியான மங்களாம்பாளுக்கு 1913 ல் வீடுகட்டி கிரஹப்பிரவேசமானவுடன் விவாஹம் நடத்த உத்தேசித்து அவளை கோபாலஸமுத்திரத்தில் பாப்புவய்யரென்று பிரஸித்தராயிருந்த லக்ஷ்மணய்யரின் ஜ்யேஷ்ட குமாரரான கிருஷ்ணய்யரின் குமாரர் லக்ஷ்மணய்யருக்கு விவாஹம் செய்து கொடுக்கப்பட்டது. அதே வருஷம் ஆகஸ்டு மாஸத்தில் ராமச்சந்திரய்யருக்கு ஒரு ஸ்திரீப்பிரஜையும் பிறந்தது. அவருடைய பார்யையின் சிறிய தாயாராகிய ஸாவித்திரி அம்மாள் அந்த ஸமயத்தில் மிகவும் உதவியாக இருந்தபடியால் அக்குழந்தைக்கும் ஸாவித்திரி என்றேபெயரிடப்பட்டது. இவ்விதமாக அக்கிரஹத்திற்கு வந்தது முதல் சோபனபரம்பரையாகவே இருந்து வந்தது. முன்னைவிட அதிதிகளும் பந்துக்களும் ஜாஸ்தி வந்து போவதாயிருந்தார்கள். வாரம் தவறினாலும் ஏதாவது கதாப்பிரவசனம், ஸங்கீதக்கச்சேரி முதலான ஸத்காலக்ஷேபங்கள் தவறுவதில்லை.

1914 ஆரம்பத்தில் சிவகிரி ஜமீன் வாரீஸ் பாத்தியதை விஷயமாக ஒரு பெரிய வியவஹாரத்தை இவரே முன் நின்று கவனித்து நடத்தும்படி ஏற்பட்டது. பகவத் ஸங்கல்பத்தால் வரும்படியும் ஜாஸ்தியாய்க்கொண்டே வந்தது. ஆனால் சிலவும் குறையாமல் அதைவிட ஜாஸ்தியாய்க் கொண்டே வந்தது. இதன் மத்தியில் இவருடைய புத்திரன் கிருஷ்ணஸ்வாமி மேல் பரீக்ஷைகளில் தேறி உத்தியோக முறைகளை ஸரிவர கவனிக்கக்கூடிய நிலமையில் வந்து விட்டதாகத் தோன்றினமையால் ஆத்ம விசாரத்திலேயே அதிக காலம் செலவழிக்கவேண்டுமென்ற எண்ணம் மறுபடியும் மேலிட்டது. ஏகாந்தமாய் பாஷ்யாதி கிரந்தங்கள் பார்ப்பதற்கு ஸௌகர்யமாயிருக்கும் பொருட்டு பக்கத்து மனையையும் வாங்கி அங்கு தோட்டம் வைத்து அதன் மத்தியில் ஆசிரமம் போன்ற மனோஹரமான ஒரு கட்டிடம் கட்டினார். அதில் பிரதிதினமும் ராஜவல்லப சாஸ்திரிகள் பத்துபேர்களுக்கு பிரஸ்தானத்திரய பாஷ்யங்களை பிரவசனம்செய்து வந்தார். 1916ல் இவருடைய மாதாமஹி காலஞ் சென்றாள். அதே வருஷத்தில் இவர் தன்னுடைய ஐந்தாவது புத்திரியான சாரதாம்பாளை கல்லிடைக்குறிச்சி ரு. ச. அப்பாத்துரை அய்யரென்று யாராலும் போற்றப்பட்டு வந்த வைத்தியநாதய்யரின் பௌத்திரன் காசி அய்யருக்கு விவாஹம் செய்து கொடுத்தார். உடனே அவ்வருஷத்தில் சிருங்கேரியில் ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் அதிஷ்டானத்திலும் திருப்பணி செய்யப்பட்டிருந்த ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்திலும் நடந்த கும்பாபிஷேக வைபவத்திற்கு இவரும், திருநெல்வேலியிலிருந்தும் கல்லிடைக்குறிச்சியிலிருந்

தும் மற்றும் அநேக பக்தர்களும், போயிருந்து அங்கு செய்யவேண்டிய பலவித கைங்கர்யங்களில் ஈடுபட்டு, ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் அனுக்ரஹத்திற்கும் ஸ்ரீ சாரதா சந்திரமௌளீசுவாருடைய பிரஸாதத்திற்கும், அப்பொழுது அங்கு வந்திருந்த மைஸூர் மஹாராஜா முதலிய கனவான்களினுடையவும் வித்வான்களினுடையவும் பிரீதிக்கும், பாத்திரமானார்கள். 1918 ல் ஆறுவது புத்திரியான காந்திமதியை கடயம் செல்லமய்யரென்ற ஈசுவர சின்ன செல்லமய்யருடைய பௌத்திரனும் லக்ஷ்மீ நாராயணய்யரின் புத்திரனுமான ஈசுவரய்யருக்கு விவாஹம் செய்து கொடுக்கப்பட்டது.

## 6. நிவிருத்தியில் நோக்கம்.

1918 ஆகஸ்டில் சிவகிரி ஜமீன் வியாஜ்யம் இவர் பக்கம் அனுகூலமாய் முடிவடைந்தது. இவருக்கு ஏற்பட்டிருந்த லௌகிக நிர்பந்தங்களையெல்லாம் விலக்கிக்கொடுப்பதாக அவ்வியாஜ்யத்தில் வெற்றிபெற்ற இவருடைய கக்ஷிக்காரர் நெடுகிலும் வாக்களித்து வந்ததை நம்பி, அவ்வியாஜ்யம் முடிந்தவுடன் தான் பூராவும் உத்தியோகத்திலிருந்து விசிராந்தியடையப் போவதாகச்சொல்லி, தான் கச்சேரிக்குப்போவதை நாளடைவில் கூடியமட்டும் சுருக்கிக் கொண்டே வந்திருந்தார். அவ்வியாஜ்யத்தில் அனுகூலமடைந்து ஜமீந்தார் ஸ்தானத்தை யடைந்துவிட்ட அக் கக்ஷிக்காரர் தன் வாக்குப்படி நடந்துகொள்ள பல காரணங்களைச்சொல்லி தாமதித்து வந்தபடியால், இவருக்கு தான் நினைத்தபடி விசிராந்தியடைய இடமில்லாமல்



வக்கீல்

G. ராமசந்திரய்யர்

போய்விட்டது. ஆனாலும் கச்சேரிக்குப்போவதை நிறுத்தி விட்டார். குடும்ப நிர்வாஹத்தை யுத்தேசித்து ஸம்பாத்தியம் செய்யவேண்டியது மிக அவசியமாயிருந்தும் நல்ல வரும்படி அனுயாஸமாக வந்துகொண்டிருந்த ஸமயமாகவிருந்தும் இவர் அர்த்தார்ஜனத்தில் கொஞ்சமேனும் நோக்கம் கொள்ளாமல் மிகவும் விமுகராகவே இருந்து வந்தார். அந்த ஜமீன் வியாஜ்யமும் சீக்கிரமாகவே ஹைகோர்ட்டில் அப்பீலில் முடிவுக்கு வருமென்று தோன்றினபடியால் அம்முடிவை மாத்திரம் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. இதன் மத்தியில் தன் இரண்டாவது புத்திரனை கோபாலஸுந்தரனுக்கு ஸுந்தரபாண்டியபுரம் செல்லமய்யர் என்ற வெங்கடராம தீக்ஷிதரின் புத்திரி ஸுப்பலக்ஷ்மியை 1919 ஜுன் மாஸத்தில் விவாஹம் செய்து வைத்தார். அக்கல்யாணம் முடிந்து ஊருக்குத் திரும்பிவந்து இரண்டு மாஸத்திற்கெல்லாம் இவருடைய இரண்டாவது புத்திரி கங்காபாகீரதிக்கு விஷஜ்வரம் கண்டு ஆகஸ்டு மாஸத்தில் அவள் இறந்துவிட்டாள். அதிலிருந்து நான்கு மாஸத்திற்கெல்லாம் அதாவது 1920 ஜனவரியில் மூத்த புத்திரியான ராஜம்மாளுக்கு திடீரென்று மயக்கமும் ஜன்னியும் ஏற்பட்டு அவஸ்தைப்பட்டு அவளும் தேகவியோகமடைந்தாள். இந்த ஸமயத்தில் சென்னையில் சிவகிரி ஜமீன் அப்பீல் வியாஜ்யம் விசாரணைக்கு வருவதாய் தெரிய, ஜமீந்தாரின் வேண்டுகோளின் பேரில் அங்கு போய் கூடவிருந்து கவனிக்கும்படி ஏற்பட்டது. அது அனுகூலமாகும் விஷயத்தில் சிரமமன்னியில் நிர்பந்தங்களை தானே நிவிருத்தி செய்து விட்டையாவது மீதப்படுத்தி வைத்து விட்டு குடும்பத்தை விட்டு விலகிக்கொள்ளலாமென்று

நினைத்தார். வியாஜ்யம் அனுகூலமானதைத்தவிர, இவர் நினைத்தபடி ஸௌகர்யம் ஏற்படவில்லை. ஏற்படமாட்டா தென்றும் நிச்சயமாய்த் தெரியவில்லை.

## 7. ஸநாதந தர்ம ஸபைகள்.

இவ்விதமாய் தாமதப்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில் திருநெல்வேலியில் சென்னை தேசீய மஹாநாடு ஒன்று கூட்டுவதாக ஏற்பாடு நடந்துவந்தது. அத்துடன் புதிய சீர்திருத்தக்காரர்களின் கூட்டமொன்றும் நடக்குமென்று தெரியவந்தது. ஸநாதன தர்மிகளின் கூட்டம் ஒன்றும் நடத்தவேண்டியது அவசியமென்று தீர்மானித்து இவரே வரவேற்பு ஸங்கத்தின் அத்யக்ஷஸ்தானம் வஹித்து ஒரு மஹா ஸபையை அதிவிமர்சையாக நடத்திவைத்தார். பங்களூரிலிருந்த ராஜ ஸபா பூஷணம் கர்பூர் ஸ்ரீநிவாஸ ராயர் என்ற ஆஸ்திகசிகாமணி ஸபாத்யக்ஷராக் இருந்து வெகு ரமணியமாக நடத்தினர்கள். சீர்குலைந்து கிடக்கும் வர்ணாசிரம தர்மத்தை எவ்வகையிலும் நிலை நிறுத்தவேண்டியது நம் கடமையேயாகும் என்று உணர்ந்து "சீர்திருத்தக்காரர்" களின் கூட்டத்திலும் வியவஹாரம் செய்ய வேண்டுமென்று அங்குள்ள ஆஸ்திகர் யாவரும் அக்கூட்டத்திலும் கலந்துகொண்டார்கள். புதுக்கொள்கைகளையுடைய அச்சீர்திருத்தக்காரர்கள் அதிஸ்வல்ப எண்ணிக்கையுள்ளவர்களாகவே இருந்தபடியாலும் சாஸ்திர பரிசயமற்றவர்களாகவே இருந்தபடியாலும் அவர்களுடைய மனோபீஷ்டப்படி அசாஸ்திரீயமான எவ்வித தீர்மானங்களும் நிறைவேறுவதற்கு இடமன்னியில் போய்விட்டது. சீர்திருத்தக்காரர்களின் பந்தலில் கோவிந்தநாம ஸங்கீர்த்தனம் கோஷிக்

கும்படி செய்து வைத்த பெருமை ராமச்சந்திரய்யரையே சேரும்.

வைதிக தர்மத்தில் இவருக்கு இருந்துவந்த விசேஷ ஊக்கத்தைக்கண்டு, காசி பாரத தர்ம மஹாமண்டல ஸபையார் மிகவும் மெச்சி, இவருடைய "ஸ்வதர்மஸேவை, ஸதாசாரம், பரோபகாரபராயணதை முதலிய குணங்களை"ப் போற்றி, விசேஷ "மானப்பத்திரிகை" ஒன்று அனுப்பினர்கள். அப்படியே ராஜவல்லப சாஸ்திரிகளுக்கு "மஹோபதேசகர்" என்ற பிருதும் அளித்தார்கள். பின்னால் ஸ்ரீவிவேக ஸம்வர்த்தனீ ஸபையின் ஆதரவில் ஜில்லா ஜட்ஜ் V. R. குப்புஸ்வாமி அய்யர் அக்ராஸனம் வஹித்து நடத்தின ஒரு பெரும் கூட்டத்தில் இந்த ஸம்மான பத்திரிகைகள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

ஸ்ரீ விவேக ஸம்வர்த்தனீ ஸபை திருநெல்வேலியில் 1897 வருஷத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு வெகு ஊக்கமாக தர்ம பிரசாரம் செய்து வந்த போதிலும் சொந்தமாக ஓரிடமில்லாமல் கொஞ்சநாள் தெப்பக்குளத்தெருவில் ஒரு கிரஹத்திலும் பிற்பாடு வெகு காலம் கைலாஸபுரம் கோவிலைச்சேர்ந்த வாஹன மண்டபத்திலும் தன் காரியாதிகளை நடத்திவந்தது. சிவகிரி ஜமீன் வியாஜ்யம் முடிவடையாமலிருக்கும்போது ஜமீன் கோர்ட்டார் ஆளுகையில் இருந்து வந்தது. அந்த ஸந்தர்ப்பத்தில் ஜமீன் தர்ம ஐவேசிலிருந்து இந்த கட்டிடத்திற்காக ஒரு பெரும் தொகை கொடுத்துதவவேண்டுமென்று மனுச்செய்துகொண்டதில் உபய கக்ஷிக்காரர்களுமே ஸம்மதித்து ரூ. 3500 கொடுக்கப்பட்டது. அதை மூலதனமாக வைத்துக்கொண்டு

ஸன்யாஸிக்ராம அக்ரஹாரத்தில் தாம்பிரபர்ணீ நதிக்கரையில் ஒரு மனை வாங்கி கட்டிடம் ஆரம்பிக்கப்பட்டது. கட்டிடம் கட்டும் விஷயத்தில் நம் ராமச்சந்திரய்யரையும், வக்கீல் K. N. சங்கரய்யரையும், வக்கீல் T. S. நாராயணய்யரையும் முதாண்மையாகவிருந்து கட்டவேண்டுமென்று ஸபையோர்கள் கேட்டுக்கொண்டார்கள். அப்படியே மிகவும் அக்கரை எடுத்துக்கொண்டு ஸபா மண்டபம் நிர்மாணம் செய்து வந்தார்கள். அக்காலம் ஸபா அத்யக்ஷரா யிருந்த A. ஸுந்தர சாஸ்திரிகள் கட்டிடம் முடிவதற்குள் தேஹவியோக மடைந்துவிட்டார். இந்த ஸம்பவத்தால் ஊக்கம் மிகவும் குறைந்தது. கட்டிடம் மேல் கட்டுவதற்கும் பண ஸௌகர்யமேற்படவில்லை. இந்த ஸந்தர்ப்பத்தில் திருநெல்வேலியில் ஸப்ஜட்ஜாயிருந்த R. A. கிருஷ்ணஸ்வாமி அய்யர் இவ்விஷயத்தில் மிகவும் சிரத்தையெடுத்துக் கொண்டு ஸபையோர்களை உத்ஸாஹப்படுத்திக்கொண்டு பலவிதமாய் திரவிய ஸஹாயம் ஏற்படும்படி செய்துவந்தார். அவருடைய முக்கிய பிரோத்ஸாஹனத்தினாலும் அநேகர்களுடைய உதவியினாலும் கட்டிடம் முடிவாகி 1921 மத்தியில் கிரஹப்பிரவேசமும் நடந்தது. ராமச்சந்திரய்யர் திருநெல்வேலிக்கு உத்யோக முறையில் வந்தது முதல் இந்த ஸபையின் அங்கத்தினராக இருந்து பல உபன்யாஸங்கள் செய்தும் மற்றும் விதமாயும் அன்பு காட்டி வந்ததற்கு அநுகுணமாக தானே கூடவிருந்து மண்டப நிர்மாணமும் செய்து கொடுத்து ஸந்தோஷித்தார்.

## 8. புறப்பட ஸித்தமாதல்.

இவருடைய குணாதிசயங்களைக்கண்டு, இவரே 1921ல் தஞ்சாவூரில் நடத்துவதாக தீர்மானித்த வர்ணாசிரம தர்ம

மஹா ஸங்கத்தில் அக்ராஸனம் வஹிக்கவேண்டுமென்று அவ்வூர் பிரமுகர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி 1921 ஆரம்பத்திலேயே ஒப்புக்கொண்டுவிட்டார். அம் மஹாஸபை நடப்பதற்குள் சிவகிரி ஜமீன்தாரிடம் தான் எதிர்பார்த்திருக்கும் ஸௌகர்யமும் நடந்துவிடும் என்று நினைத்தார். பலவித காரணங்களினால் இரண்டு கார்யங்களும் தாமதப்பட்டு வந்தன. தான் நினைத்தபடி ஜமீந்தாரிடம் கார்யம் ஸித்தியாகாதென்பதை எப்ரல் மாஸத்தில் நன்கு அறியும்படி ஏற்பட்டுவிட்டது. இனி தாமதிப்பதில் பிரயோஜனமில்லையென்றும் இம் மஹா ஸங்கத்தை யுத்தேசித்து தான் குடும்பத்தை விட்டு புறப்படுவதை நிறுத்துவது உசிதமில்லை யென்றும் தீர்மானித்துக்கொண்டார் இந்தீர்மானத்தை தன் புத்திரன் கிருஷ்ணஸ்வாமியிடம் சொல்லி "உனக்கு எவ்வித தொந்தரவுமில்லாமல் லௌகிக நிர்பந்தங்களை நானே கூடவிருந்து நிவிருத்தி செய்துவிட்டுப் புறப்படலாமென்று நினைத்திருந்தேன். அதற்கு இடமில்லாமல் போய்விட்டது. ஆகையால் நீயே வீட்டை விற்றுவிட்டு உசிதம்போல் ஏற்பாடு செய்துக்கொள். இதற்கு நான் இருக்கவேண்டுமென்று அவசியமில்லை. ஆகையால் நான் உடனேயே புறப்பட்டுவிடுகிறேன்" என்றார். அதற்கு கிருஷ்ணஸ்வாமி "தங்கள் மனோபாவத்தை நான் நன்கு அறிந்திருக்கிறபடியால் தாங்கள் புறப்படுவதை நான் தடுத்தாலும் நடக்காதென்று தெரியும். ஆனாலும் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிர்பந்தங்களை தாங்களே கூடவிருந்து நிவிருத்தி செய்வது தான் உசிதமாகும். தங்கள் வைராக்கிய நிஷ்டையை அறியா

தவர்கள் இந்த நிர்பந்தங்களை உத்தேசித்து தாங்கள் புறப் பட்டுவிட்டீர்களென்று வீண் அபவாதம் சொல்ல நேரிடும். அதற்கிடமன்னியில் செய்யவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். ''எனக்கு எது ஸரியென்று தோன்றுகிறதோ அப்படியேதான் செய்வேனேயல்லாது அபவாதத்தை லக்ஷ்யம் பண்ணுகிற ஸ்வபாவம் என்னிடமில்லை யென்பது உனக்குத் தெரியாதா? தவிரவும், நானே கடன் பட்டவனு யிருக்கிறபடியால் என்னிடமிருக்கக் கூடியதை விட உன்னிடமே ஜனங்களுக்கு ஜாஸ்தி தாக்ஷிண்யமும் அனு தாபமும் இருக்கும். ஆகையால், நான் புறப்பட்ட பிறகு நீயே வேண்டியது போல் கார்யங்களை நடத்திக்கொள்வது தான் உசிதம்'' என்று மறுபடியும் இவர் சொல்ல, ''தாங்கள் அபவாதத்திற்கு பயப்படாமல் போனாலும் நாங்கள் பயப் படவேண்டியே யிருக்கிறது. தங்களைப் பற்றி அவதூறாக யாரேனும் ஒரு வார்த்தை சொன்னால் எங்களுக்கு சிரமமா யிருக்கும். இந்த சிரமத்தை நிவிருத்தித்துக் கொடுப்பதற் காவது தாங்களே கூடவிருந்து ஏற்பாடு செய்யவேண்டும்'' என்று பலமுறை கிருஷ்ணஸ்வாமி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவரும் அங்கீகரித்தார். உடனே அவர் மாப்பிள்ளையும் கல்லிடைக்குறிச்சியில் தனிகரு மான காசி அய்யரைத் தருவித்து அவருக்கே தன் கிரஹத்தை கிரயம் செய்து கொடுத்து அவர் குடும்பத் தார் மூலமாகவே நிர்பந்தங்களை ஒருவாறு நிவிருத்தி செய்யப்பட்டது. கடன்காரர்களுக்கும் இவர் ஸ்வபாவம் நன்கு தெரிந்திருந்தபடியால் அவரவர்கள் தள்ளிக்கொடுக் கவேண்டி வந்ததை மனப்பூர்வமாக தள்ளிக் கொடுத்தார்

கள். அவர்களில் ஒருவரைப் பற்றி விசேஷமாக பிரஸ்தா பிக்க வேண்டியதுண்டு. திருநெல்வேலி ஸ்வாமி ஸன்னதித் தெரு வீரமணி அய்யர் குமாரர் கிருஷ்ணய்யருக்கு ஜவுளி பாக்கியில் செல்லவேண்டி யிருந்ததை கணக்கு தீர்க்கப் போன ஸமயத்தில் அவர் "நான் வியாபாரி, லாபத்தை உத்தேசித்தே பிரவிருத்திசெய்கிறவன். ஆகையால் என்னை நஷ்டப்படச் சொல்லக்கூடாது. நான் மனப்பூர்வமாய் அதிக தர்மங்கள் செய்திருக்கமாட்டேன். ராமச்சந்திரய்யர் கடன் பட்டதெல்லாம் அநேகமாய் தர்மசிலவுகளினுல் தான். ஆகையால் நான் தள்ளிக் கொடுக்கிற பாகத்திற்கு தக்கபடி அவருடைய புண்யத்திலும் எனக்கு பாகமுண்டென்று சொன்னுல்தான் தள்ளிக்கொடுப்பேன்" என்று மிகப் பெருந்தன்மையுடன் சொன்னர். பின்னுல் சில வருஷங் கள் சென்று அவரும் ஸந்யாஸம் பெற்று ஸித்தியடைந்தா ரென்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த ஏற்பாடெல்லாம் முடிந்து ஒரு மாஸத்திற் குள்ளாக தஞ்சாவூர் மஹாராநாடும் ஏற்பாடாகிவிட்டபடியால் இவர் அங்கே போய் அக்ராஸனம் வகித்து அதிசிறப்பாக நடத்திக் கொடுத்துவிட்டு ஊருக்குத் திரும்பிவந்தார்.

———

... KRISHNA ROW AGRAHARAM, KUMBAKONAM



# அத்யாயம் 8.

# சிருங்கேரி வாஸம்.

---

## 1. வீடு துறத்தல்

இனி தான் குடும்பத்தை விட்டுப் புறப்படுவதில் எவ்வித தடையுமிருக்க நியாயமில்லையென்று தீர்மானித்துக் கொண்டார். ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் பூர்ண அனுக்ரஹம் பலிக்கவேண்டிய காலம் நெறுங்கிவிட்டதென்று சந்தோஷித்தார். திருநெல்வேலியிலிருந்தே தனக்கு தெரிந்த ஒரு சாஸ்திரிகளைமாத்திரம் தன்கூட அழைத்துக்கொண்டு நெரூர் அல்லது காசி க்ஷேத்திரம் போய் அங்கே கிரம ஸன்னியாஸத்திற்குள்ள கிரியைகளை இரண்டு நாள்களில் நிறைவேற்றிவிட்டு அதிக ஆடம்பரமன்னியில் முக்கிய பக்ஷத்தை யவலம்பித்து ஆசிரம ஸ்வீகாரம் செய்து கொள்வதாக தீர்மானித்திருந்தார். இதைத் தெரிந்துகொண்ட கிருஷ்ணஸ்வாமி 1910ல் இவர் செய்து கொண்ட விதானம் தவறுதல் என்று ஏற்பட்டும் இப்பொழுதும் ஸம்பிரதாயத்திற்கு விரோதமாக ஏதேனும் புதுவழியை தேடிவிடுவாரோ என்று ஸந்தேஹப்பட்டு இவருக்கு தெரிவிக்காமலே இவருடைய உத்தேசத்தை ஒருவிதமாகக்கண்டு சிருங்கேரிக்கு கடிதம் எழுதினான். அங்கிருந்து, இவர் செய்ய உத்தேசிப்பது அவ்வளவு ஸரியல்லவென்றும் இவரை சிருங்கேரிக்கே அனுப்பும்படிக்கும் ஸ்ரீஸன்னிதானம் ஆக்ஞை செய்வதாக பதில் கிடைத்



ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள்.

தது. ராமசந்திரய்யர் ஸன்யாஸமே செய்துகொள்ளக் கூடாதென்று ராஜவல்லப சாஸ்திரிகள், நெல்லையப்ப சாஸ்திரிகள், A. K. ஸுந்தரய்யர் முதலான பெரியோர் கள் பலவிதமாய் வாதித்து தடுத்துப்பார்த்ததற்கு, ஸத் காரியத்திற்கு இடஞ்சல் ஏற்படுவது ஸஹஜம்தான் என்று பதிலளித்து, தான் திருடமான நிச்சயத்துடனேயே இருந்துவந்தார். அவர்கள் வார்த்தைகளும் பலன் படாமல் போனவுடன், இவர் சிருங்கேரிக்காவது போயிருக்கட்டும் என்று கிருஷ்ணஸ்வாமியும் ஸுந்தரய்யரும் சொல்லிப் பார்த்தார்கள். அதற்கும் அவர் இடங்கொடுக்காமல் தான் உத்தேசித்தபடியே செய்யப்போவதாக சொன்னதைக் கேட்டபிறகு அவருடைய உத்தேசம் அவ்வளவு சாஸ்திர ஸம்மதமாகத் தோன்றவில்லையென்று சொல்லும்படி ஏற் பட்டது. அதையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. கடைசி யில் அவருக்குத் தகவலன்னியில் சிருங்கேரியிலிருந்து வந்திருந்த கடிதத்தையும் அவரிடம் காட்டும்படி நேரிட் டது. அப்பொழுதும் தான் செய்ய உத்தேசித்தது ஸரியேயென்று அவர் சொன்னபோதிலும், சிருங்கேரிக்குப் போய் ஸ்ரீ ஸன்னிதானத்தினிடத்தில் தெரியப்படுத்தி அனுமதி வாங்கிக்கொள்ளவேண்டியது நியாயம் என்ற மட்டில் ஸம்மதித்துக்கொண்டார்.

இவர் எப்படியும் புறப்பட்டுப்போவது தீர்மான மென்ற விஷயம் எல்லோருக்கும் தெரியவரவே, இவரு டைய பந்துக்களும் ஸ்நேஹிதர்களும் மற்றும் அநேகர் களும் இவரைப் பார்த்துவிட்டுப் போவதற்காக பிரதி தினமும் வந்து போய்க்கொண்டேயிருந்தார்கள். அவர்

களுக்கெல்லாம் அவரவர்களுக்கு தக்கபடி ஸமாதானங் களும் உபதேசங்களும் செய்து வந்தார். தனக்கு அத்யந் தப்பிரீதி பாத்திரமான குமாரன் கிருஷ்ணஸ்வாமியிடம் குடும்ப நிர்வாஹமாகிற பெரிய பாரத்தை மாத்திரம் கொடுத்து அதற்கு வேண்டிய பிதிரார்ஜிதமான ஐவேசு யாதொன்றும் வைக்கவில்லையே என்று அவன் எண்ணுவா னென்று நினைக்க எவ்வித காரணமும் இல்லாமலிருந்த போதிலும் "ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய அனுக்ரஹத் தினால் உனக்கு எவ்வித குறையும் ஏற்படாது" என்று மனப்பூர்வமாக அவனை ஆசீர்வதித்துவிட்டு, அவ்வை வேசையெல்லாம் விட அனந்தகோடி மடங்கு ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாகவும் பலனை யளிக்கக்கூடிய சில மஹா மந்தி ரங்களை மிகக்கருணையுடன் உபதேசித்து அனுக்ரஹித் தார். இதுவே அபரிமிதமான பிதிரார்ஜிததனம் என்ற பாவனையுடன் கிருஷ்ணஸ்வாமியும் மிகபக்தியுடன் பெற்று ஸந்தோஷித்தான்.

பிறகு சுபமாக ஒரு நாள் பார்த்து அன்று சிருங்கேரி யாத்திரையாக கிரஹத்தைவிட்டுத் தனியாகப் புறப்பட்டு விட்டார். அவர் புறப்படப்போகும் விஷயம் வெகுநாளாக வீட்டில் யாருக்கும் தெரிந்திருந்தும், புறப்படும் ஸமயத் தில் அவர்களுக்கு தாங்கமுடியாத துக்கமேற்பட்டது. காலத்தினாலேயே அத்துக்கத்திற்கு பரிஹாரம் ஏற்பட வேண்டுமே தவிர வேறு வழியில்லை என்ற நியாயத்தினால் யாரும் அவர்களுக்கு ஸமாதானம் சொல்ல முன் வர முடியவில்லை.

## 2. துறவம் வேண்டல்

1921 ஸெப்டம்பர் 21ம் தேதி ராமச்சந்திரய்யர் சிருங்கேரிக்குப் போய்ச்சேர்ந்தார். ஸ்ரீ மஹாஸன்னிதானமும் ஸ்ரீ மடம் ஸர்வாதிகாரியான ஸ்ரீகண்ட சாஸ்திரிகளும் மிக்க ஆதரவுடன் வரவேற்று இவருக்கு வேண்டிய ஸௌகர்யங்களை செய்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். சிருங்கேரி ஊரும் ஸ்ரீ சாரதாம்பா ஆலயமும் ப்ராசீனமாயுள்ள ஸ்ரீ மடம் கட்டிடங்களும் துங்காநதிக்கு வடபுறமாகவும் மேல்புறமாகவும் இருந்து வருகின்றன. இங்கு ஜன ஸங்கம் ஜாஸ்தியாயிருப்பதை உத்தேசித்து முன்னிருந்த ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் தியான ஸமாதிகளுக்கு ஸௌகர்யமாயிருக்கும் பொருட்டு அக்கரையிலேயே அநேகமாய் இருந்து வருவார்கள். அப்படியிருப்பதிலேயே அவர்களுக்கு திருப்தியிருப்பதாகத் தெரிந்து அங்கேயே அதிரமணீயமாக ஸச்சிதாநந்த விலாஸம் என்ற நாமத்துடன் ஒரு ஜாகை ஏற்படுத்தப்பட்டது. அதிலும் கைங்கர்யத்திற்கு வேண்டிய மனுஷ்யர்களாவது இருப்பார்களென்று நினைத்து தனித்தனியாக கொாந்த ஸ்தலங்களில் சில அறைகளும் அமைக்கப்பட்டன. அதில் ஓர் அறையில் அவர்கள் அடிக்கடி தியான நிஷ்டர்களாக உட்கார்ந்திருப்பது வழக்கம். அவ்வறையே இப்பொழுது ராமச்சந்திரய்யரின் உபயோகத்திற்காக கொடுக்கப்பட்டது. ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் ஆசிரமத்திற்கு வெகு ஸமீபம். ஆஹ்நிகம், ஜபம், பூஜை, தியானம் முதலியவைகளுக்கு மிகவும் அனுகூலமான ஏகாந்தப்பிரதேசம். இவருடைய வித்யா குருவான முன் ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் வாஸத்தினுலும் தியானத்தினுலும் அதிபரிசுத்தியடைந்த இடம்.

அதிக தாமதமன்னியில் தன்னுடைய மனோநிலையையும் தனக்கு ஸன்யாஸத்திலிருக்கும் அவாவையும் ஸ்ரீ மஹாஸன்னிதானத்தினிடத்தில் விஸ்தாரமாகத் தெரியப்படுத்தினார். அதற்கு ஸ்ரீ மஹாஸன்னிதானம் இவருடைய உத்தேசம் மிகவும் ஸிலாக்யமானதென்றும் ஸன்யாஸாசிரமம் அத்யுத்கிருஷ்டமான ஆசிரமமாயிருப்பதால் அதற்கு வேண்டிய மனப்பரிபாகம் முதலான அதிகார ஸம்பத்துக்களை நன்கு அறிந்து நம்மிடமிருக்கிறதாவென்று பரிசீலனம் செய்து பார்க்கவேண்டுமென்றும் அவசியமானதை ஸம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்றும் அதுவும் தவிர இக்காலத்தில் ஆசிரம தர்மத்தை ஸரிவர பரிபாலித்து வருவது மிகவும் சிரம ஸாத்யமாயிருப்பதால் அவ்வாசிரம விதிகளை எல்லாவற்றையும் நன்கு தெரிந்துகொண்ட பிறகே ஆசிரம ஸ்வீகாரணம் செய்வது உசிதமாகும் என்றும் பல்வாறாக எடுத்துச் சொன்னார்கள். இவ்வாசிரம தர்ம விஷயமாக ஸ்ரீ மடத்திலுள்ள பலவித கிரந்தங்களையும் பார்த்துக்கொள்ளும்படிக்கு உத்திரவு செய்தார்கள். அப்புஸ்தகங்களைப் பார்க்கப் பார்க்க இவ்வாசிரமத்தின் அபாரமஹிமையும் அதைக்கொண்டு செலுத்துவதிலுள்ள சிரமமும் இவருக்கு முன்னைவிட பதின்மடங்கு நன்கு தெரியவந்தன. ஆனாலும் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் அனுக்ரஹத்தினால் அவ்வாசிரம தர்மத்தை குறையன்னியில் தன்னால் காப்பாற்றி வரலாமென்ற தைர்யமும் இருந்து வந்தது.

## 3. தினசர்யை

திருநெல்வேலியில் இருந்துவந்த காலத்தில் விசேஷ நாட்கள் தவிர மற்ற நாட்களில் வென்னீரில் தான் ஸ்நானம்

செய்வார். நவீன நாகரிகத்தில் சேர்ந்த காப்பி சாப்பிடும் அப்யாஸமும் இவருக்கு நன்கு ஏற்பட்டிருந்தது. காலையில் இதற்கு கொஞ்சம் தாமதமேற்பட்டுவிட்டால் அதற்கேற் பட்ட தலைவலியும் வரும். சிராத்த தினத்திலும் கூட சிராத்தம் முடிந்த பிறகு கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டு தான் பிறகு போஜனம் செய்வார். அன்று பூராவும் தலை வலியினால் மிகவும் வருந்துவார். படுக்கை தலையணைகளெல் லாம் கொஞ்சம் கூட அழுக்கில்லாமல் அதிமிருதுவாக இருக்கவேண்டும். கொசுவலை படுக்கைக்கு மேலே விதான மாகவாவது தொங்கிக்கொண்டிராத பக்ஷத்தில் தூக்கம் வராது. எங்கு வெளியில் புறப்பட்டாலும் தன் ஸௌகர் யத்தை கவனித்துக்கொள்ளக்கூடியவராக யாரேனும் கூட வந்தாகவேண்டும். தான் போகிறவிடங்களிலும் க்ரஹத் தில் உள்ள எவ்வித ஸௌகர்யமும் குறையாமல் இருக்க வேண்டுமென்றே அபேக்ஷிப்பார் ஆனால் தன்னால் யாருக் கும் அஸௌகர்யமேற்படாமலே நடந்தும் கொள்வார். இவ்விதமாக இருந்துவந்த இவர் தனியாக சிருங்கேரிக்குப் புறப்பட்ட தினம் முதல் குளிர்ந்த ஜலத்திலேயே ஸ்நாநம், ஒருவேளை ஆஹாரம், பூமியில் படுக்கை, என்று வேறு யாருடைய ஸஹாயத்தையும் எதிர்பாராமலிருந்து வருகிற தென்று தீர்மானம் செய்துகொண்டார். அதன் பிரகாரம் சிருங்கேரிக்குப் போய்ச்சேர்ந்தது முதல் பிரதிதினமும் காலை நான்குமணி சுமாருக்கு எழுந்திருந்து தன் இஷ்ட தேவதையான ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தியானம் செய்து விட்டு துங்காநதியில் ஸ்நாநம் செய்து ஸந்த்யா ஜபம் பூஜை முதலானதுகளை க்ரமப்படி செய்து முடித்துக்கொள்வார்.

அப்பொழுது ஸ்ரீ மஹாஸன்னிதானம் பிரதிதினம் காலை யில் பிரஹ்ம ஸூத்ர பாஷ்யமும் கொஞ்சநாள் கழித்து ஸ்ரீமத் பகவத்கீதா பாஷ்யமும் அதன் பிறகு உபநிஷத் பாஷ்யமும் கிரமமாய் நிர்வசனம் செய்து வந்தார்கள். இப் பிரவசனத்திற்கு நாள் தவறாமல் போயிருந்து சிரத்தா பக்தியுடன் சிரவணம் செய்து கவனித்து வந்தார். இதற்கு முன் பாஷ்யார்த்தம் தனக்கு நன்கு தெரிந்துவிட்டதாக எண்ணியிருந்தது தவறு என்று உணர்ந்தார். இவ்விதம் காலக்ஷேபம் செய்யும்படி ஏற்பட்ட பாக்கியத்தை நினைத்து நினைத்து ஸந்தோஷிப்பார். தான் முதலில் உத்தேசித்தபடி தனியே புறப்பட்டு காசிக்காவது வேறு எங்கேயாவது போய்விடாமல் சிருங்கேரிக்கு வந்து ஸ்ரீமத் ஆசார்யா ரவர்கள் ஸன்னிதியில் இருக்கும்படி ஏற்பட்டதேயென்று தன் பாக்கியத்தை மெச்சிக்கொள்வார். துங்கையிலேயே மாத்தியாஹ்நிக ஸ்நாநம் செய்து மாத்யாஹ்நிக பிரஹ்ம யக்ஞாதிகளை கிரமப்படி முடித்துக்கொண்டு ஸ்ரீ மடத்தில் ஒருவேளை ஆஹாரம் அருந்துவார். அதன் பிறகு ஸ்ரீமத் ஆசார்யாரவர்களால் எடுத்துக்கொடுக்கப்பட்ட ஸன்யாஸ விஷயமானகிரந்தங்களையும் வேதாந்தத்தில் பிரகரணக்கிரந் தங்களையும் வாசிப்பதிலாவது அவைகளின் அர்த்தத்தை அனுஸந்தானம் செய்வதிலாவது, அல்லது ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்தி தியானத்திலாவது காலத்தைக்கழித்து வருவார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு ஸௌகர்யப்படுகிறதாக தகவல் தெரிந்தால் அவர்களிடம் போய் அங்கு இருந்து தத்வ விஷயமாக ஸல்லாபங்களும் ஏற்படும். மறுபடியும் ஸாயங்காலம் நதியில் ஸ்நாநம் செய்து ஸந்தியாவந்த

ளுதிகளை முடித்துக்கொண்டு விசிராந்திக்காக தன் அறைக்கு வந்துவிடுவார். ஸௌகர்யப்பட்ட காலங்களில் அக்கரையில் உள்ள ஸ்ரீ சாரதாம்பா ஆலயம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப்போய் திவ்ய ஸேவை பெற்று திரும்புவார். இவ்விதமே தினசர்யை நடந்து வந்தது. முன் பழக்கங்களை திடீரென்று மாற்றினதினால் சரீரம் கொஞ்சம் மெலிந்ததாகத் தோன்றினபோதிலும் வெகு ஆரோக்கியமாகவும் ஸந்தோஷத்துடனும் இருந்து வந்தார். வெகு நாளாக இவர் கால்களில் குணப்படாமலிருந்த பத்துக்கள் கூட சிருங்கேரிக்கு வந்து கொஞ்சநாட்களுக்குள் இருந்த விடம் தெரியாமல் மறைந்துவிட்டன. ஸன்யாஸ ஸ்வீகாரத்திற்கு ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய அனுமதியை எதிர்பார்த்துக்கொண்டே இவ்விதமாக இவர் சிருங்கேரியில் காலம் கழித்து வந்தார்.

## 4. புத்திரன் வருகை.

இவர் சிருங்கேரிக்குப் புறப்பட்டு வரும் காலத்தில் இவருடைய கடைசி புத்திரன் சங்கரனுக்கு உபநயனம் ஆகவில்லை. அவனுக்கு பிரஹ்மோபதேசம் செய்ய முக்கிய அதிகாரியான இவர் இன்னமும் கிரஹஸ்தாசிரமியாகவே இருந்துவந்தபடியால் அவரைக்கொண்டே உபநயனம் செய்து வைப்பதுதான் உசிதம் என்று மூத்த குமாரனை கிருஷ்ணஸ்வாமி எண்ணினான். இவ்விஷயத்தையும் இவரிடம் தெரிவித்து ஸாத்தியமானால் இவ்வுபநயனத்தை மாத்திரம் நடத்திக்கொடுத்துவிட்டு சிருங்கேரிக்குத் திரும்பிப்போகலாமென்று சொல்லி இவரை எப்படியும் திருநெல்வேலிக்கு அழைத்துப்போக உத்தேசித்தும் ஸ்ரீமத்

ஆசார்யாரவர்களை தர்சித்துப்போகவும் கிருஷ்ணஸ்வாமி 1922 ஆரம்பத்தில் சிருங்கேரிக்குப் போனான். தன் அபிப்பிராயத்தை இவரிடம் தெரியப்படுத்தினதற்கு இவர் "நீ நினைத்தது ஸரித்தான். ஆனால் நானே வந்தாகவேண்டுமென்பது இல்லை. உன்னையே உபநயனத்தை நடத்திவிடும்படி நான் அநுமதி கொடுத்தால் போதும். மேலும் நான் ஸ்தலத்திலில்லாத ஸமயத்தில் ஜ்யேஷ்டப்பிராதாவான நீயே பிதாவுக்கு ஸமானமானதினால் பூர்ணாதிகாரமும் பெற்றிருக்கிறாய். ஆகையால் நீயே உபநயனத்தை நடத்திவிடு" என்று சொல்லிவிட்டார். ஸ்ரீ ஸன்னிதானமவர்களும் அப்படியே செய்யலாமென்று சொன்னார்கள்.

தன் தகப்பனாருடைய தினசர்யையை நன்கு கவனித்துவந்த கிருஷ்ணஸ்வாமிக்கு இவர் இருந்து வருகிறதே ஸன்யாஸ துல்யமாகத்தானே இருக்கிறது, காஷாயவஸ்திரம் எதற்காக, இப்படியே இருந்துவந்தால் தனக்காவது இவர் இங்கு ஸௌக்யமாய் இருக்கிறார் என்று ஸமாசாரம் தெரிந்துகொள்ள ஸாத்தியப்படுமே, என்ற எண்ணம் தோன்றிற்று. ஆனால் இதை இவர் கொஞ்சமேனும் அங்கீகரிக்கவில்லை. அதன் பேரில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்ளக்கருதி ஒரு நாள் அவர்களும் கிருஷ்ணஸ்வாமியும் தனித்திருந்த ஸந்தர்ப்பத்தில் "பிதா அவர்களுக்கு ஞானஸம்பாதனத்தில் வெகுநாளாக ஊக்கமிருந்து வருகிறதென்பது எனக்கும் நன்றாகத்தெரியும். ஆனால் பரமாசார்யாரவர்களின் ஸித்தாந்தப்படி கிரஹஸ்தருக்கும் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படலாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியானால்



சிருங்கேரியில் ஸ்ரீ ராமாநந்தர்

இவர் ஆசிரமம் மாற்றிக்கொள்ள அவசியம் என்ன? இப்பொழுது இருக்கிறபடியே இருந்து வரக்கூடாதா?'' என்று கிருஷ்ணஸ்வாமி அவர்களிடம் கேட்டான். அதற்கு அவர்கள் ''கிருஹஸ்தருக்கும் ஞானம் ஏற்படக்கூடியது தான். இப்படியே இருக்கலாம்'' என்றூர்கள். ''தங்கள் அபிப்பிராயம் இவ்விதமாக இருக்கிறதென்று பிதா அவர்களிடம் தெரிவிக்கட்டுமா?'' என்று இவன் கேட்டதற்கு, ''அப்படியே தெரிவிக்கலாம்'' என்று உத்திரவளித்தார்கள். இதைக்கேட்டு ஒருவாறு ஸந்தோஷமடைந்த கிருஷ்ணஸ்வாமி தன் பிதா அவர்களிடம் சென்று இந்த ஸம்பாஷணை விபரம் பூராவையும் சொன்னுன். அதை அவர் கேட்டுவிட்டு ''நீ கேழ்வை கேட்கத்தெரியாமல் கேட்டுவிட்டு இது ஆசார்யாரவர்கள் அபிப்பிராயம் என்கிருயே'' என்றூர். ''நான் கேட்ட கேழ்வையில் என்ன தப்பு?'' என்று கிருஷ்ணஸ்வாமி கேட்க, ''கிரஹஸ்தருக்கு ஞானம் ஏற்படக்கூடுமா கூடாதா என்பது இங்கே பிரகிருதமில்லை. ஞான ஸம்பாதனத்திற்கு கிரஹஸ்தாசிரமம், ஸன்யாஸாசிரமம் இவ்விரண்டில் எது சிலாக்யமான ஸாதனம் என்று நீ கேட்டிருந்தால் ஸன்யாஸாசிரம்மதான் என்று ஆசார்யாரவர்கள் சொல்லியிருப்பார்கள். அம்முறையிலேயே நான் ஸன்யாஸம் பெற உத்தேசிக்கிறேன். கிரஹஸ்தாசிரமத்திலிருந்துகொண்டே ஞானத்தை ஸம்பாதிப்பது அதிதுஸ்ஸாத்யமாயிருப்பதால் ஏதோ ஒரு புண்ணியசாலிக்கு ஸாத்தியப்படலாமேயொழிய ஸாமான்யமாக முடியாது'' என்று பதில் சொன்னூர். பிறகு ஸ்ரீ ஸன்னிதானத்தை தர்சிக்கப்போன ஸமயத்தில், ''நான் சொன்னதை

உன் பிதாவிடம் சொன்னுயா?'' என்று கேட்டதற்கு நடந்த விஷயத்தை கிருஷ்ணஸ்வாமி சொன்னுன். அதன் பேரில் அவர்கள் "அவர் சொல்வதே ஸரி. கிரஹஸ்தனுக்கு ஞானம் வரக்கூடாது என்ற நிர்பந்தம் கிடையாதென்பது வாஸ்தவம். ஆனுல் அப்படி ஸம்பவிக்கிறது மிகவும் துர்லபம். தவிரவும் கிருஹஸ்தராக இருந்து தன்னுல் ஞானம் ஸம்பாதிக்கமுடியாதென்ற எண்ணமும் தோன்றிவிட்டால் அவர் ஸன்யாஸம் வாங்கித்தான் தீரவேண்டும். அவ்வாசிரம தர்மத்தை, அதிலும் இக்காலத்தில, ஸரிவர பரிபாலித்து வருவது எவ்வளவு சிரமம் என்பதை இதற்குள் அவர் நன்கு உணர்ந்திருப்பார். இன்னம் அது விஷயமான கிரந்தங்களேயே பார்த்து வருகிருர். எல்லாம் பார்த்த பிறகும் கூட அவ்வாசிரமத்தில் இறங்கி ஸரியாய் நடந்துகொள்ள முடியும் என்ற தைர்யம் அவருக்கு இருக்குமேயானுல், நான் அனுமதி கொடுக்கவேண்டியதுதான் நியாயமாகும். அதிகார ஸம்பத்து பெற்று ஒருவர் ஸன்யாஸத்தை யபேக்ஷித்தால் அதைத் தடுக்கக்கூடாதென்றும் சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஆகையால் இவர் விஷயத்தில் இனி நீ விசாரம் வைத்துக்கொள்ளவேண்டாம்" என்று சொல்லி யனுக்ரஹித்தார்கள்.

அங்குள்ளவரையில் தன் பிதா அவர்களுடனேயே இருந்துவிட்டு கிருஷ்ணஸ்வாமி ஊருக்குத் திரும்பினுன். திரும்பும்போது அவர் ஸன்யாஸம் வாங்கிக்கொள்ளப் போகிருரே யென்ற துக்கம் கொஞ்சமேனும் தோன்ருமல் இந்த ஆனந்தகரமான ஸன்னிவேசத்தைவிட்டு தானே ஸம்ஸாரமாகிற காராக்கிருஹத்திற்குப் போகவேண்டியிருக்கிறதே என்ற துக்கம் மேலிட்டது.

## 5. துறவம் பூணல்

கிருஷ்ணஸ்வாமி வந்துவிட்டுப் போனவுடனேயே ஆசிரம ஸ்வீகாரம் செய்துகொள்ளவேண்டுமென்று இவர் வற்புறுத்தி வந்தார். அதற்கு ஸ்ரீ மடம் ஸர்வாதிகாரியும் இவருக்கு அந்தியந்த ஸ்நேஹிதருமான ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் தாமஸித்தேதான் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டார். அதை யொப்புக்கொள்ள இவருக்கு மனம் வரவில்லை. ஸ்ரீ சாரதாம்பாளிடத்திலேயே அனுமதி கேட்டுவிடுகிறதென்று தீர்மானித்து ஸ்ரீ சாரதாம்பா ஸன்னிதியில் சீட்டுப்போட்டுப் பார்த்ததில், தாமஸித்தே செய்யவேண்டுமென்று உத்திரவு கிடைத்தது. அப்பால் நஞ்சங்கோட்டில் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் தன் புத்திரிக்கு அதி கோலாஹலமாய் விவாஹம் நடத்திவைத்தார். அதற்கு இவரும் அவசியம் வந்தே தீரவேண்டுமென்று அவர் நிர்பந்தம் செய்ததினால் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் அனுமதியைப்பெற்றுக்கொண்டு அவ்விசேஷத்திற்கு போய்விட்டு வரும்படி நேரிட்டது.

இன்னம் கொஞ்சநாள் சென்ற பிறகு, இவருடைய தீவிரமான வைராக்கியமும் உபசாந்தியும் நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டே வருவதை கவனித்து ஸந்தோஷித்த ஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்கள் இவருக்கு கிரம ஸன்யாஸ விதிப்படி இரண்டு தினங்களில் செய்யவேண்டிய ஸாங்கமான ஸகல கர்மாக்களையும் யதாக்கிரமமாக செய்து வைக்கும்படி ஆக்ஞையிட்டார்கள். சிருங்கேரி ஸ்ரீ மடம் ஸம்பிரதாயத்தில் பீடாபிஷிக்தர்களாக இருக்கிற ஆசார்யா

ரவர்கள் தனக்குப் பிறகு அந்த ஸ்தானத்திற்கு வரவேண்டு மென்று தீர்மானிக்கப்படுகிறவருக்கு மாத்திரமே நேரில் உபதேசம் செய்வது என்ற வழக்கமிருந்து வருகிறது. அந்த ஸம்பிரதாயத்தை யனுஸரித்து ஸ்ரீமத் ஆசார்யா ரவர்களே நேரில் உபதேசம் செய்வதற்கிடமில்லாமலிருந் தது. இந்த ஸமயத்தில் பம்பாய் ராஜதானியைச்சேர்ந்த வடகன்னடம் ஜில்லாவிலுள்ள ஸ்ரீ நிலமாவு மடம் ஸ்வாமி களாகிய ஸ்ரீ கமலாநந்த நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள் ஸ்ரீ மஹாஸன்னிதானத்தினிடத்தில் வேதாந்த சிரவணம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் சில மாஸங்களாக சிருங்கேரியில் தாமஸித்துக்கொண்டு சிரவணம் செய்து வந்தார்கள். அவர்களைக்கொண்டே இவருக்கு உபதேசம் செய்து வைப்பதாக ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் தீர்மானித் தார்கள்.

1922 ஜுலை 21 ம் தேதி ஆரம்பித்து விதிவத்தாக ஸகல கார்யங்களையும் செய்து, பரமகுருவான ஸ்ரீ மஹா ஸன்னிதானம் ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்களின் அதிஷ்டானத்திலேயே அவர் களுக்கு துல்யமான நாமதேயத்தை வஹித்திருந்த ஸ்ரீ நிலமாவு மடம் ஸ்ரீ கமலாநந்த நரஸிம்ஹபாரதீ ஸ்வாமி களால் பிரணவ மஹா வாக்யோபதேசம் கொடுக்கப்பட்டு, தன் வெகுநாள் அபீஷ்டமான ஸன்யாஸாசிரமத்தை யடைந்து, மிகவும் ஸந்தோஷத்துடன் விளங்கினர். ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ என்ற யோகபட்டமும் கொடுக்கப் பட்டார். இனி இந்த பெயரினலேயேதான் இவரைப்பற்றி வியவஹரிப்பது உசிதமாகும்.

இவர் ஆசிரம ஸ்வீகாரம் செய்யும் முன்னரே தன் பூஜையிலிருந்த மூர்த்திகளை ஸ்ரீ மடத்திலேயே ஸமர்ப்பித்துவிட்டார். இவர் பூஜையில் இருந்த மஹாலிங்கம் வந்து சேர்ந்த விதம் முன் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும் ஸ்ரீ மடத்திற்கு இந்த மஹாலிங்கம் வந்தவுடன், ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் பூஜையில் அதாவது ஸ்ரீசந்திரமௌளீசுவரர் பக்கத்திலேயே வைக்கப்பட்டு ஆராதித்து வரப்பட்டது. அப்பால் ஸ்ரீ மஹாஸன்னிதானம் யாத்திரையாக தக்ஷிண தேசத்திற்கு விஜயம் செய்த காலத்திலும் அவர்களுடைய நித்திய பூஜையிலேயே இருந்து வந்தது. யாத்திரை மத்தியில் 1926 ல் மதுரைப்பக்கம் வந்த ஸமயத்தில் முள்ளிப்பள்ளம் என்ற கிராமத்தில் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்விதமாக இந்த மஹாலிங்கத்தை இவரைத்தவிர வேறு யாரும் கிரஹத்தில் வைத்து ஆராதிக்கும் பாக்கியம் பெறவில்லையென்பது இங்கு விசேஷமாக கவனிக்கத்தக்கது.

## 6. ஆசிரம தர்மம்

ஸன்யாஸம் பெற்ற பிறகு அவ்வாசிரமத்திற்கு ஏற்பட்ட ஸகல தர்மங்களையும் மிக சிரத்தையுடன் எவ்வித குறையுமன்னியில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய ஆக்ஞைப்படி யதாக்கிரமமாக அனுஷ்டித்து வந்தார். துங்கா நதி வடகரையில் ஸ்நாந கட்டத்திற்கு அதி ஸமீபத்தில் ஏகாந்தமாக ஓர் அறை இவருடைய உபயோகத்திற்காகக் கொடுக்கப்பட்டது. ஸ்நாந பிக்ஷாதிகளுக்குத்தவிர பாக்கி வேளைகளில் அவ்வறையிலேயே இருந்து தியானம் மனனம்

செய்து வருவார். முன்போலவே ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் செய்து வந்த பாஷ்ய பிரவசனத்திற்குப்போய் சிரவணம் செய்து வருவார். ஒருவிதமான லௌகிகப்பேச்சுக்கும் இடங் கொடுக்காமலே இருந்து வந்தார். ஸ்ரீ மடத்தி லிருந்தே இவருக்கு பிக்ஷை ஏற்பாடாயிருந்தது. பிக்ஷுவாக ரென்று பேர் தரித்த பிறகும் ஒரே இடத்தில் பிக்ஷை கிர ஹிக்கலாமாவென்றும் அதிலும் ஸ்ரீமத் ஆசார்யாரவர்க ளாகிய ஸன்யாஸியின் அன்னத்தை கிரஹிக்கலாமாவென் றும் பலவாருக ஸந்தேஹங்கள் தோன்றின. ஸ்ரீ மடத் திற்கு ஏற்பட்டிருக்கிற சொத்துக்கள் அந்தந்த தர்மங் களுக்கென்றே ஏற்பட்டிருப்பதால் அவைகளில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் ஸ்வான்பாத்தியம் கொண்டாடவில்லை யென்று தெரிந்துகொண்டு ஸமாதானமடைந்தார். மேலும் இப்பொழுதுள்ள ஸ்ரீ மஹாஸன்னிதானம் எவ்விதப்பற்று மற்றேயிருந்து வருவதாய் நன்கு தெரிந்தபடியால் ஸன்யா ஸியின் அன்னம் என்று நினைக்க எவ்வித நியாயமும் இல்லை யென்பதையும் உணர்ந்தார். இருந்தாலும் பிக்ஷை யெடுக் காமல் ஒரே இடத்தில் சாப்பிட்டு வருகிறோமே யென்று தோன்றிக்கொண்டேயிருந்தது. ஆனால் குரு ஸன்னிதா னத்தில் ஒரு வருஷமாவது இருந்து சிரவணம் செய்ய வேண்டுமென்ற சுருதி விதியை அனுஸரித்தும் கொஞ்ச நாள் அங்கேயே இருக்கவேண்டுமென்று ஸ்ரீமத் ஆசார்யா ரவர்கள் செய்த ஆக்ஞையை யனுஸரித்தும் ஒரு ஸம்வத் ஸரம் அங்கேயே இருந்தார். இவர் அங்கிருக்கும் காலத்தில் இவருடைய வைராக்கியத்தையும் ஞானத்திலுள்ள ஊக் கத்தையும் ஆசிரம தர்மானுஷ்டானத்திலுள்ள சிரத்தை

யையும் கண்டு ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் மிகவும் ஸந்தோஷித்தார்கள். ஸ்ரீ மடத்திலுள்ள அதிகாரிகளும் சிப்பந்திகளும் சிருங்கேரி ஊரிலுள்ள மற்றவர்களும் எல்லோருமே இவரிடம் விசேஷப்பிரீதியைச் செலுத்திவந்தார்கள். ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகளும் அவர்கள் ஆபீஸ் மானேஜரான B. மார்க்கஸஹாயமய்யரும் இவரிடம் வைத்திருந்த அன்புக்கு அளவேயில்லை.

## 7. ஸ்ரீ தீர்த்தமுத்தூர் ஸ்வாமிகள்

இவ்விதமாக ஸ்ரீ ராமாநந்தர் சிருங்கேரியில் இருந்து வந்த மத்தியில் சிருங்கேரிக்கு ஸமீபத்தில் தீர்த்தமுத்தூர் என்ற கிராமத்திலுள்ள ஒரு சிறிய மடத்தில் மடாதிபதியாயிருந்து வந்த ஸ்ரீ ஸ்வாமிகள் ஸித்தியடைந்துவிட்டார்கள். தனக்கு அடுத்த பட்டத்திற்கு யாரையும் உபதேசிக்காமலே ஸித்தியாய் விட்டபடியால் அப்பீடத்திற்கு ஓர் ஆசார்யாரை ஏற்படுத்தவேண்டுமென்று அவ்வூரார்கள் சிருங்கேரி ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தினிடத்தில் வந்து விக்ஞாபனம் செய்தார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து நல்ல வர்சஸ்வீயாயிருந்த ஒரு பையனை தெரிந்தெடுத்து அவனையே அப்பீடத்தில் அபிஷேகம் செய்து வைப்பதாகத் தீர்மானித்தார்கள். அவருக்கு பிரணவ மஹா வாக்கியோபதேசாதிகளை செய்து வைக்கும்படி ஸ்ரீ ராமாநந்தரையே ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் ஆக்ஞாபித்தார்கள். அப்பையனுடைய யோக்கியதையையும் விசேஷ பாக்கியத்தையும் கண்டு ஸந்தோஷித்து ஸ்ரீ ராமாநந்தரும் கிரமப்படி உபதேசாதிகளை செய்தார்.

## 8. பிரஸ்தானம்.

கொஞ்சநாள் சென்றதும் ஸ்ரீ மஹா ஸன்னிதானத்திற்கே சரீரத்தில் ஸௌக்கியக்குறைவு ஏற்பட்டதால் நாலைந்து மாஸம் வரை பாஷ்ய நிர்வசனாதிகளுக்கு இடமில்லாமல் போய்விட்டது. பலவிதமான கவலைகளுக்கும் இடமேற்பட்டது. இந்த ஸந்தர்ப்பத்தில் அவர்களை அவசியம் தர்சிக்கவேண்டுமென்ற எண்ணமும், ஸ்ரீ ராமாநந்தரையும் இந்த ஆசிரமத்தில் தர்சித்து வந்தனம்செய்து அனுக்ரஹம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற எண்ணமும், இவருடைய அனுமதியைக்கொண்டு உபநயனம்செய்து வைக்கப்பட்ட சங்கரனுக்கும் இவருடையவும் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடையவும் தர்சனம் செய்து வைக்கவேண்டுமென்ற எண்ணமும், கிருஷ்ணஸ்வாமிக்கு ஏற்பட்டு 1923 மே மாஸத்தில் அவன் சங்கரன் முதலானவர்களை அழைத்துக்கொண்டு சிருங்கேரிக்குப்போய் சேர்ந்தான். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் சரீர ஸ்திதி விஷயமாக பலவிதமான பிரஸ்தாபங்கள் காதில் பட்டிருந்தபோதிலும் அது விஷயமாய் எவ்வித கவலைக்கும் இடமில்லையென்பதை நேரில் தெரிந்துகொண்டான். ஸ்ரீ ராமாநந்தர் அனுஷ்டித்து வந்த தினசர்யையும் அங்குள்ளவர்கள் அவரிடம் செலுத்திவந்த அன்பையும் கவனித்து ஸந்தோஷமடைந்தான். அடுத்த சாதுர்மாஸ்யமானவுடன் தான் பரிவ்ராஜக தர்மங்களில் முக்கியமான பிக்ஷாடனத்தையே அவலம்பித்துக்கொண்டு ஸஞ்சாரம் செய்ய உத்தேசித்திருப்பதாக ஸ்ரீ ராமாநந்தர் சொல்ல, "சிருங்கேரியிலேயே இருந்தால் தனக்கு க்ஷேமஸமாசார



ஸ்ரீ நிலமாவு மடம்
ஸ்ரீ கமலாநந்த நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்.

மாவது கிடைத்துக்கொண்டிருக்கும். அயல் பிரதேசங்களில் ஸஞ்சாரம் செய்து வந்தால் அது கூட தெரிவதற்கு இடமில்லாமல் போய்விடுமே" என்று கிருஷ்ணஸ்வாமி கேட்டதற்கு, "அதிக தூரதேசம் போவதாக உத்தேசமில்லை. அநேகமாய் காவேரி தீரமாகவே இருக்கலாமென்று உத்தேசம்" என்று சொன்னார்கள். கொஞ்சநாள் அங்கு இருந்துவிட்டு கிருஷ்ணஸ்வாமி முதலானவர்கள் திருநெல்வேலிக்கு திரும்பினார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு ஸௌக்கியக்குறைவு ஏற்படுவதற்கு முன்னமேயே அங்கிருந்து அவர்கள் அனுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு இவருடைய ஆசிரம குருவான **ஸ்ரீ நிலமாவு மடம் ஸ்வாமிகளவர்கள்** யாத்திரையாகப் புறப்பட்டுவிட்டார்கள். அவர் யாத்திரை செய்துகொண்டிருக்கும் மத்தியில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் ஸௌக்கியக்குறைவைப்பற்றி கேழ்விப்பட்டு உடனே அவர்களை தர்சனம் செய்யவேண்டுமென்று சிருங்கேரிக்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தர்சிக்கப்போன ஸமயத்தில் அவர்கள் அந்தர்முகர்களாக லௌகிக வியாபாரங்களில் பற்றற்று ஆத்மாராமர்களாக இருக்கிறார்களென்று தெரிந்து கவலையைத் துறந்தார். அவர்களுடன் கொஞ்சநேரம் ஸம்பாஷித்துக்கொண்டிருந்துவிட்டு, தன் சரீர விஷயமாய் எவ்வித கவலையும் வேண்டாம் என்று ஸ்ரீமத் ஆசார்யாரவர்களாலேயே அபயம் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய அனுக்ரஹத்தைப் பெற்று, ஸ்ரீ ராமாநந்தரையும் கண்டு ஸந்தோஷித்து, அனுக்ரஹித்துவிட்டு, மறுபடியும் யாத்திரையில் புறப்

பட்டுவிட்டார். அதிசீக்கிரமாக அம்பாள் அனுக்ரஹத்தினாலேயே எவ்வித கவலைக்கும் இடமில்லாமல் ஸ்ரீ மஹா ஸன்னிதானமே மறுபடியும் கிரமப்படி ஸ்ரீ மடம் கார்யாதிகளை கவனிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பிறகு ஸ்ரீ ராமாநந்தர் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடம் சென்று வந்தனம் செய்து "காவேரி தீரத்தில் கிராமைகராத்திரமாக ஸஞ்சாரம் செய்துகொண்டு நிதித்யாஸனபாரனாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அனுமதி கொடுக்கவேண்டும்" என்று விநயத்துடன் பிரார்த்தித்தார். அதற்கு அவர்கள் "சிரவண மனன நிஷ்டாபரர்களாகக்கூடயிருக்க ஸாத்தியப்படாதவர்களுக்குத்தான் ஸஞ்சாரம் அவசியமாக விதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் நிதித்யாஸனம் செய்ய நினைத்தாலும் சிருங்கேரியிலிருந்தே செய்து வரலாம்" என்று சொன்னார்கள். ஒரேயிடத்தில் பிக்ஷை கிரஹிக்கவேண்டியிருக்கிறதே என்ற ஸந்தேஹம் இவர் மனதில் இருந்துகொண்டிருந்தபடியால் ஸ்ரீ மஹா ஸன்னிதானம் சொன்னதில் ஸமாதானமடையாமலே இருந்துவந்தார். பிறகு இவர் இஷ்டப்படியே செய்துவிடுகிறதென்று ஸ்ரீ மஹாஸன்னிதானமும் தீர்மானம் செய்துகொண்டு அவ்வருஷம் சாதுர்மாஸ்யம் முடிவை எதிர்பார்த்திருந்தார்கள். ஆசிரம ஸ்வீகார காலமும் சாதுர்மாஸ்ய மத்தியாய் இருந்தபடியால் இது இவருக்கு இரண்டாவது சாதுர்மாஸ்யமாகும். இச்சாதுர்மாஸ்யம் முடிந்ததும் 1923 ஸெப்டம்பர் 24ம் தேதியில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் அனுமதியைப் பெற்று சிருங்கேரியிலிருந்து புறப்பட்டுவிட்டார். தான் பாதசாரியாகவே காவேரி தீரத்திற்கு நாளடைவில் போய்ச்

சேருவதாக உத்தேசித்திருந்தார். ஆனால் சிருங்கேரியி லிருந்து நாலா பக்கங்களிலும் வெகுதூரம் வரை அடர்ந்த காடுகளும் மலைகளுமாயிருந்தபடியால் வழிகூட ஸரியாய் தெரிவதற்கிடமில்லாமலும் மத்தியில் தங்குவதற்கு தக்க வஸதிகளில்லாமலும் இருந்தபடியால் காடு தாண்டும் வரை யிலாவது அதாவது சுமார் ஐம்பது மைலுக்கு மோட்டார் காரில் போவதுதான் ஸௌகர்யமென்றும், அப்புரம் கொஞ்சதூரம் கிராமங்கள் இருந்தபோதிலும் மைஸூர் ஸம்ஸ்தான எல்லையைவிட்டு கோயமுத்தூர் ஜில்லாவுக்கு இறங்கும் பிரதேசத்திலும் மறுபடியும் காடுகள் வழியே வெகு தூரம் போகும்படி ஏற்படும் என்றும், ஆகையால் சிருங்கேரியிலிருந்து தரிக்கரை வரையில் ஸ்ரீ மடத்து மோட்டார்காரிலேயே போய் அங்கிருந்து ரயிலிலேயே இவர் உத்தேசிக்கும் இடமான கரூருக்குப் போகலாமென்றும் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் சொன்னதற்கு ஸ்ரீமத் ஆசார்யாரவர்களும் அனுமோதனம் கொடுத்தபடியால் அவ் விதமே இவர் அங்கிருந்து புறப்பட்டார். பங்களூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அதிஸமீபத்தில் இவருடைய ஸ்நாநத்திற் காகவேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கப்பட்ட படியால் அங்கிருந்து அங்கு வந்து சேர்ந்த தினம் காலையி லேயே புறப்பட்டு அன்று ராத்திரி கரூர் வந்து சேர்ந்து விட்டார்.

# அத்யாயம் 9.

## காவேரிதீர வாஸம்.

### 1. தண்டாதி விஸர்ஜனம்

ஸ்ரீ ராமாநந்தர் நேரே கரூர் வந்து சேர்ந்தவுடன் அமராவதி தீர்த்தத்தில் சுருத்யுக்தரீதியாய் தண்டவஸ்திர கமண்டலுக்களை பரித்யாகம் செய்துவிட்டார். சுத்த மௌனத்தை அவலம்பித்துக்கொண்டார். கரூருக்கு ஸமீபத்தில் நெரூர் என்ற க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளவர்களின் ஸமாதி ஸ்தலமிருப்பதை ஆஸ்திகர் யாவரும் அறிவார். யோகிகளுக்குள் சிரேஷ்டராயிருந்ததுடன் ஞான வைராக்கியங்களில் பராகாஷ்டையை அடைந்து ஜீவன் முக்தராயிருந்து லோகத்தை யனுக்ரஹித்து வந்த அப்பெரியாரின் ஸித்தி ஸ்தலத்தை நாடிச்சென்றார். அங்கு அவர்கள் அதிஷ்டானத்தில் தங்கி மூன்று நாள் ஆனந்த பாவசராக இருந்து வந்தார்.

அப்புரம் வாங்கல் கிராமத்திற்கும் அங்கிருந்து கடம்பங்குறிச்சி கிராமத்திற்கும் போனார். கடம்பங்குறிச்சி கணபதி ஆலயத்தில் போய் இவர் ஏகாந்தமாய் உட்கார்ந்திருந்தபோது கிராமத்திலிருந்து வந்து சிலர்கள் இவரை தர்சித்து இவர் யாரோ தெரியவில்லையே என்று வினவினார்கள். இவர் பதில் சொல்லாமல் மௌனியாகவேயிருந்தார். அதைக்கண்டு இவருடைய வர்ணத்தையும் ஆசிரமத்தையுமாவது தெரிந்துகொள்ளக்கருதி மிகவும் வற்

புறுத்திக்கேட்டார்கள். அதிக பேச்சுக்கிடமன்னியில் ஸம்ஸ்க்ருதத்தில் மாத்திரம் பேசுகிறதென்று வாரம்பித்தார். பிறகு கிராமத்தார்களால் விசேஷ சிரத்தையுடன் ஆதரிக்கப்பட்டவராக ஒரு தினம் அங்கு இருந்துவிட்டு, அடுத்த கிராமமான கொடுமுடிக்கும் அங்கிருந்து ஊஞ்சலூருக்கும் போய், அங்கிருந்து காவேரி வடகரையிலுள்ள அய்யம்பாளையம் என்ற பொம்மர்பாளையம் போனார். வடகரையிலும் கிராமம் கிராமமாக கிழக்கே ஸ்ரீநிவாஸநல்லூர் வரையில் வந்து, அங்கு நதியைத்தாண்டி, தென்கரையிலுள்ள திம்மாச்சிபுரம் கிராமம் வந்து, அங்கிருந்து மேற்கு முகமாக ஒவ்வொரு கிராமமாக மறுபடியும் கரூர் வந்து சேர்ந்தார்.

## 2. ஸஞ்சாரக்கிரமம்.

இப்படியே இனி ஸஞ்சாரக்கிரமம் ஏற்பட்டுவிட்டது. தென்கரையில் கிழக்கே திம்மாச்சிபுரத்திலிருந்து ஆரம்பித்து கிரமமாக கருப்பத்தூர், மஹாதானபுரம், கிருஷ்ணராஜபுரம், மேலக்கட்டளை, இந்த கிராமங்களில் தங்கிவிட்டு, அமராவதி கரையோரமாக புலியூர், செனப்பாட்டி, திருமாநிலையூர் வந்து அங்கு அமராவதியைத்தாண்டி, அக்கரையிலுள்ள கரூர் போய், அங்கிருந்து காவேரிக்கரையிலுள்ள நெரூர் போய், காவேரிக்கரையோரமாகவே வாங்கல், கடம்பங்குறிச்சி, கொடுமுடி, ஊஞ்சலூர் போய், அங்கு காவேரியைத்தாண்டி, வடகரையில் பொம்மர்பாளையம், கொந்தளம், வெங்கரை, மணப்பள்ளி, மோஹனூர் வரை போய், அங்கிருந்து நாகயநல்லூர், காட்டுபுத்தூர் இந்த இரண்டு கிராமங்கள் நதிக்கரையிலில்லாமலிருந்த

போதிலும் கிராமத்தார்களின் வேண்டுகோளின்படி அங்கேயும் போய்விட்டு, மறுபடியும் நதிக்கரையிலுள்ள அயலூர் வந்து, அப்புரம் கிரமமாக கிழக்கு முகமாக சிலப்பிள்ளையார்புத்தூர், நத்தம், வரதராஜபுரம், மஹேந்திரமங்கலம், ஸ்ரீநிவாஸநல்லூர் போய்ச்சேர்ந்து, அங்கு காவேரியைத்தாண்டி, திம்மாச்சிபுரம் வந்து சேருவார். இந்த இருபத்தேழு கிராமங்களிலேயே பிரதக்ஷிணமாக ஸஞ்சாரம் வைத்துக்கொண்டிருந்தார். தன் பூர்வாசிரமத்தில் குளித்தலை முதலான பிரதேசங்கள் பரிசிதமாயிருந்தபடியால் திம்மாச்சிபுரத்திற்கு கிழக்கே போவதில்லை.


அந்தந்த கிராமங்களிலுள்ள ஜனங்களின் ஸௌகர்யத்தை கவனித்து சில கிராமங்களில் ஒரு நாளும், சில கிராமங்களில் இரண்டு மூன்று நாட்களும், சில கிராமங்களில் ஐந்து நாட்களும், சில கிராமங்களில் ஏழு நாட்களும் எப்படியும் ஏழு நாட்களுக்கு மேல்படாமல் தங்கியிருந்து போவார். இவரிடம் அக்கிராம மஹா ஜனங்களுக்கிருந்த பக்திக்கு நிகரேயில்லை. முதல் ஸஞ்சாரத்தில் பிரதிக் கிராமத்திலும் ஏகான்ன பிக்ஷாக்ரமமாகவே பிக்ஷை கிரஹித்து வந்தார். மறுதடவை முதல் ஐந்து வீடுகளில் கரதல பிக்ஷை எடுப்பதென்று வைத்துக்கொண்டார். ஒரு கிராமம் விட்டுப் புறப்பட்டுப்போனால் மறுபடியும் அந்த கிராமத்திற்கு இவர் வர ஸாதாரணமாய் மூன்றுமாஸ காலமாகும். அப்பொழுதும் சிலர்கள் கிரஹத்திலேதான் பிக்ஷை கிரஹிக்கும்படி ஏற்படுமாதலால், இவருக்கு ஒரு கபளம் அன்னம் கூட கொடுக்கயிடமன்னியில் போனவர்கள் தங்களை மிகவும் நொந்துகொள்வார்கள். இவருக்கு நாம்

செய்யக்கூடிய வேறு கைங்கர்யமும் ஒன்றுமில்லையே யென்று வருத்தமடைவார்கள். இவர் என்றைக்கு எப்பொழுது வருகிறாரென்று ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். இவரிடம் ஈடுபடாதவரே இலர். ஆபாலவிருத்தர் யாவரும் இவரைக்கண்டு மகிழ்வார்கள். இவர் ஸம்ஸ்கிருதத்தில் மாத்திரம் பேசிக்கொண்டிருந்தபோதிலும் யாரும் எளிதில் அறியக்கூடிய நடையிலேயே பேசுவார். இவரை பூர்வாசிரமத்தில் அறிந்த யாரும் இவர் ஸம்ஸ்கிருதத்தில் இவ்வளவு லலிதமாய் பேசுவதைக்கண்டு ஆச்சர்யப்படும்படி யிருந்தது. இவருடைய ஸமீபத்தில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தால் பரம நாஸ்திகனாயிருப்பவனுக்கும் கொஞ்சம் ஆஸ்திகயம் ஏற்பட்டே தீரும்.

## 3. கிராமத்தார்களின் சிரத்தை

முன் கிராம நிர்மாணரீதியில் நதிக்கரையிலாவது வாய்க்கால்கரையிலாவது குளக்கரையிலாவது ஒரு ஸந்த்யாவந்தன ஜபமண்டபமும் ஸன்யாஸிகள் வந்தால் தாமஸிக்க ஒரு மண்டபமும் இருப்பதுண்டு. காலக்கிரமத்தில் கர்மானுஷ்டானம் குறையக்குறைய, ஸஞ்சாரம் செய்கிற ஸன்யாஸிகளும் குறையக்குறைய, இம்மண்டபங்கள் வெகு ஜீர்ணமாகி அநேக கிராமங்களில் இல்லாமலே போய்விட்டன. ஸ்ரீ ராமாநந்தர் இங்கு ஸஞ்சாரம் செய்ய ஆரம்பித்தவுடன் அநேக கிராமங்களில் இந்த மாதிரி யிருந்த மண்டபங்களை புதிப்பித்துக்கட்டினார்கள். ஸௌகர்யமாய் மண்டபங்களில்லாத கிராமங்களில் தேவாலயங்களிலுள்ள முன் மண்டபங்களிலேயே தங்கியிருப்பார். சில இடங்களில் இதற்கும் ஸௌகர்யமில்லாமல் காலி வீடுகளில் தங்கும்படியும் ஏற்

படும். எப்படியும் இவர் ஏகாந்த வாஸத்தையே விரும்பு கிறார் என்று தெரிந்து அஸ்தமித்த பிறகு இவரிடம் ஜனங்கள் அதிகமாக நெருங்கமாட்டார்கள். தானிருக்கு மிடத்தில் ராத்திரி வேளையில் வேறுயாரிருக்கவும் விளக்கு வைத்திருக்கவும் இடங்கொடுக்கமாட்டார். ராத்திரி எப் பொழுது படுத்துக்கொள்கிறார், எப்பொழுது எழுந்திருக் கிறார், என்பதை யாரும் அறியார். அதிகாலையில் எழுந் திருந்து, நதியில் ஸ்நாநம் செய்து, கௌபீனத்தை உணர்த்தி யுடுத்திக்கொண்டு, தனக்கேற்பட்டுள்ள அனுஷ் டானங்களை முடித்துக்கொண்டு, ஸூர்யோதயத்திற்கு முன் னமேயே மடத்திற்கு வந்து உட்கார்ந்துவிடுவார். அப ராஹ்னத்திலே பிக்ஷைக்குப் புறப்படுவார். கிரஹஸ்தர்கள் போஜனம் செய்த பிறகுதான் ஸன்யாஸி பிக்ஷைக்குப் போகவேண்டுமென்ற நியாயத்தை வற்புறுத்திச் சொல் வார். தனக்காகவென்று பிக்ஷையில் எவ்வித விசேஷமும் செய்யக்கூடாதென்று அடிக்கடி சொல்வார். ஸர்வ பூதங் களுக்கும் அபயம் கொடுப்பதே ஸன்யாஸியின் முக்கிய தர்மமாயிருப்பதால் தன்னால் எவருக்கும் கொஞ்சமேனும் ஹிம்ஸை யேற்படாமலிருக்கவேண்டுமென்று வெகு ஊக் கத்துடன் இருந்து வருவார். ஒரு ஊரில் இவருடைய வாஸத்திற்கு போக்கியமாயிருக்கும் பொருட்டு மண்டபத் திற்கு சுற்றியிருந்த அடர்ந்த செடிகளை வெட்டி பாம்புப் பொந்துகளை கிராமத்தார்கள் அடைத்துவிட்டார்களென்று தெரிந்தவுடன் "எனக்கு இருப்பிடம் வேண்டுமென்று வெகுநாளாக வாஸம் செய்து வந்த பாம்புகளுக்கு இருப்



தேவகிரியில் ஸ்ரீ ராமாநந்தர்.

பிடமில்லையென்று செய்யலாமா? செடிகளும் ஜீவர்களா யிற்றே அவர்களை ஹிம்ஸித்தது நியாயமாகுமா'' என்று கேட்டுவிட்டு இப்பாபத்திற்கு தான் அல்லவா காரண மானேம் என்று வருந்துவார்.

## 4. சில ஸம்பவங்கள்

பிராரப்தகர்மம் சரீரத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை மிகவும் திருடமாக வைத்திருந்தார். தான், தன்னுடையது என்ற இரண்டுவித அபிமானத்தை யும் கூடியமட்டும் குறைத்துக்கொண்டு பகவானிடம் அர்ப் பணம் செய்துவிட்டால், ஒருவித குறைவும் ஏற்படாது என்ற தைர்யமும் குடிகொண்டிருந்தது. உதாஹரணமாக, இவர் கரதல பிக்ஷைக்கு அக்கிரஹாரத்தில போகும் காலத் தில் அநேகமாய் பிரதக்ஷிணமாய் வரிசைக்கிரமமாகவே வீடுகளில் நுழைந்து பிக்ஷையை வேண்டுவார். சில வீடு களில் பிக்ஷை யளிக்கக்கூடாமல் தீட்டு முதலிய அஸந்தர்ப் பங்கள் ஏதேனும் இருந்தால், இவர் கூட வரும் கிரஹஸ்தர் யாரேனும் அதை உடனே தெரிவித்துவிடுவார். இவர் அவ்வீட்டிற்குப்போகாமலே அடுத்த வீட்டுக்குப்போய் விடுவார். இப்படியிருந்துகொண்டிருந்த கிரமத்தில் ஒருநாள் எவ்வித ஆக்ஷேபணையும் யாரும் சொல்லாமல் ஒரு கிரஹத் தில் சென்று பிக்ஷையை வேண்டினர். அவ்வீட்டிலிருந்த ஒரு பெண் உடனே கிரமப்படி ஒரு கபளம் அன்னம் இவர் கையில் இட்டாள். ஆனல் மிகவும் சூடாயிருந்தபடியால் வலது கையிலிருந்து இடது கைக்கு மாற்றிக்கொண்டார். மறுபடியும் வலதுகைக்கு மாற்றிக்கொண்டார். அப்பொழு தும் சூடு தாங்கமுடியாமலிருந்ததால் அப்படியே கீழே

போட்டுவிட்டு அடுத்த கிருஹத்திற்குப் போய்விட்டார். இதைப்பார்த்த அவ்வீட்டுக்காரர்களுக்கு ஆறுத்துயரம் ஏற்பட்டது. ஐந்து கிரஹங்களுக்கு மேல் இவர் பிக்ஷைக்குப் போவதில்லையானதினால் அன்று பிக்ஷை நான்கு கபளம்தான். தான் கொடுத்த கபளத்தை ஸ்ரீஸ்வாமிகள் கிரஹிக்கவில்லையே யென்ற துக்கத்துடன் அவருடைய ஆஹாரமும் அன்று குறைந்துவிட்டதே யென்று வருந்தினார்கள். பின்னால் விசாரிக்கையில் அவ்வீட்டில் பிக்ஷை தயாரித்த பெண் பர்மா என்ற விதேசத்தில் ஜனனமானவள் என்று தெரியவந்தது.

மற்றொரு நாள் இன்னொரு கிரஹத்தில் பிக்ஷா கபளத்தை வாங்கிக்கொண்டு உட்கொள்வதற்காக விண்டு எடுத்ததில் ஒரு மயிர் அகப்பட்டபடியால் அக்கபளத்தை அப்படியே கீழே போட்டுவிட்டு வெளியில் போய்விட்டார். அவ்வீட்டில் சிகை யெடுக்காத ஒரு விதவை யிருப்பதாக அப்புறம் தெரியவந்தது.

இவ்விதமாக அசுத்தமான அன்னமே இவர் உதரத்தில் சேரக்கூடாதென்று பகவான் கவனித்து வருகிறாரென்ற நம்பிக்கை இவருக்கு நன்கு ஏற்பட்டது. அந்தந்த கிராமத்தார்களும் இதை நன்கு அறிந்து அவருடைய கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்கும் எவ்வித இடஞ்சலும் ஏற்படாதபடி வெகு ஜாக்கிரதையாய் நடந்துவந்தார்கள். எல்லோருக்குமே இவரிடம் பயமற்று அபிமானமே மேலிட்டிருந்தது.

ஒரு ஸமயத்தில் இவருடைய சரீரம் மிகவும் உஷ்ணப்பட்டிருப்பதாக தெரிந்துகொண்ட ஒரு கிரஹஸ்தர் பால்

நெய் முதலானவைகளை ஜாஸ்தியாக இவருடைய ஆஹா ரத்தில் சேர்த்து கொடுக்கவேண்டுமென்று நினைத்து இவ ரிடம் கேட்க இவர் இடங்கொடுக்கவில்லை. சில தினங்கள் கழித்து அந்த கிரஹஸ்தர் ஸ்ரீஸ்வாமிகளிடம் வந்து பேசிக் கொண்டிருக்கையில் "தாங்கள் பிக்ஷா க்ரமம் வைத்துக் கொண்டிருப்பதெல்லாம் நியாயம்தான். ஆனால் ஒரு கப ளத்திற்குமேல் ஒரு கிரஹத்தில் வாங்கக்கூடாதென்று சொல்கிறீர்களே. ஒரு கிரஹத்தில் அன்னம் சமைத்து சாப்பிட சக்தியற்றவனாய் கஞ்சி காய்ச்சி காலக்ஷேபம் செய்கிறவனாயிருந்து அங்கு நீங்கள் பிக்ஷைக்குப் போய் விட்டால் அவன் எப்படி அன்ன கபளம் கொடுக்கமுடி யும்? இதற்காக அவன் வீட்டில் பிக்ஷைக்கே போகக் கூடாது என்பதும் நியாயமாகுமா?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் "அன்னம் என்றால் சாதம் என்று அர்த்தமில்லை. அந்த கிரஹஸ்தன் எதை ஆஹாரமாக வைத்துக்கொண்டிருக்கிறானோ அதுவே அன்னமாகும். அவ்வன்னம் கெட்டியாயிராமல் திரவமாயிருந்தால் கையில் கொடுக்கவேண்டுமென்ற நியமம் இல்லை. ஒரு தொன்னை யிலேயோ வேறு பாத்திரத்திலேயோ வைத்துக்கொடுக்க லாம்" என்று சொன்னார். மறுநாள் ஸ்ரீ ஸ்வாமிகள் பிக்ஷைக்கு இந்த கிரஹஸ்தர் வீட்டுக்கே போகும்படி நேரிட, நெய் பால் முதலிய உஷ்ண சமன யோக்கியமான பதார்த்தங்களை சேர்த்து வற்ற காய்ச்சி பாயஸமாக்கி ஒரு கிண்ணத்தில் வைத்து இவர் கையில் கொடுத்தார். பிக்ஷா மத்தியில் ஒன்றும் சொல்வதற்கிடமில்லாமல் அப்பிக்ஷை யையும் உட்கொண்டுவிட்டு மடத்திற்கு வந்து சேர்ந்தார்.

பிறகு அந்த கிரஹஸ்தரைத் தருவித்து "நீங்கள் செய்த கார்யம் அபிமானத்தினுல்தான் என்றிருந்தபோதிலும், ஸன்யாஸிக்கு புஷ்டிகரமான ஆஹாரம் கூடாதென்பதை ஞாபகப்படுத்திக்கொண்டேன். இனி இவ்விதம் செய்யாதேயுங்கள்" என்று சொன்ஞர்.

மற்ருெரு கிரஹஸ்தர் கோதுமை ஜீனி நெய் முதலியது கலந்து போளி மாதிரி செய்து பாலில் ஊரவைத்து ஒன்றுக்குள் ஒன்ருக பத்து போளிகளை வைத்து சுருட்டி இரும்பு குண்டு மாதிரி கனத்த ஒரு கபளத்தை ஒருநாள் இவரிடம் பிக்ஷையென்று கொடுக்கச்செய்தார். கையில் வாங்கி இடதுகையில் வைத்துக்கொண்டு எடுக்க எடுக்க உள்ளிருந்து போளி வந்துகொண்டேயிருந்தது. அன்று பிக்ஷயான பிறகு இந்த கிரஹஸ்தரையும் கூப்பிட்டு "இது மாதிரி ஆஹாரம் ஆசிரம தர்மத்திற்கு கொஞ்சமேனும் ஒவ்வாது. இனி கிரமப்படி பிக்ஷ யளிக்காத விஷயத்தில் பிக்ஷையையே நிறுத்திவிடும்படி ஏற்படும்" என்று எச்சரித்தார். இவர்கள் செய்யும் உபசாரங்களெல்லாம் அபிமானத்தினுல்தான் செய்கிருர்களென்று நன்கு தெரிந்திருந்தும் பசியாகிற வியாதிக்கு மருந்தாக மாத்திரமே பிக்ஷ யருந்தவேண்டுமென்ற விதியையே மேலாகப்பாராட்டி வந்தார்.

## 5. பெரியாரின் தர்சனம்.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளிடமிருந்து அறிந்த சில ஸம்பவங்களை இங்கு காணுவது உசிதமாகும் என்று நினைக்கிறேன். ஸஞ்சாரக்கிரமத்தில் நெரூர் சிவா

லயத்தில் தங்கி வருகையில் ஒருநாள் ராத்திரி படுத்துக் கொண்டிருக்கையில் தூக்கமென்றும் முழிப்பென்றும் சொல்வதற்கில்லாத ஸ்திதியிலிருக்கும்போது யாரோ ஒருவன் சுமார் இருபத்தைந்து வயதுள்ள வாலிபன் அதிமனோஹரனாய் தேஜஸ்வியாய் தன் பக்கத்தில் வந்து படுத்துக்கொண்டு தன்பேரில் காலைத்தூக்கிப்போடக்கண்டார். உடனே திடுக்கிட்டுப் பார்க்க அவன் திகம்பரனாயுமிருக்கக்கண்டு அடங்காக் கோபத்துடன் அவனை உதரித் தள்ளிவிட்டார். உடனே அவனும் மறைய, இவரும் விழித்துக்கொண்டார். வந்தவர் ஸ்ரீ ஸதாசிவேந்திரர் தானோ என்று நடுநடுங்கி தான் செய்த அபசாரத்திற்கு மிகவும் வருந்தினார். யாரென்றுகூட கேட்காமல் உதரியெரிந்தேனேயென்று துக்கித்தார். பிறகு அவ்விடத்திற்கு மறுபடியும் வரும்போதெல்லாம் அப்பொழுது கண்ட மூர்த்தியை எவ்வளவோ அனுஸந்தானம் செய்து பார்த்தார். மறுபடியும் தர்சனம் ஏற்படவில்லை.

இந்த ஸம்பவத்திற்கு இரண்டு மூன்று வருஷம் கழித்து மறுபடியும் நெரூருக்கு வந்த ஸமயத்தில் ஒரு நாள் ஸ்வப்னத்தில் மிகவும் ஆனந்தகரமாயிருந்த சந்திரிகையைப் பார்த்தார். இவ்வளவு பிரகாசம் எப்படி வந்ததென்று ஆகாசத்தில் பார்த்தவுடன் சுக்ல த்விதீயா சந்திரன் மாதிரி லேசான ரேகை மாத்திரம் தெரிந்தது. ஆனால் பிரகாசம் மாத்திரம் ஜாஸ்தி இருந்தது. உற்றுநோக்குங்கால் அந்த சந்திர ரேகையின்பேரில் வலது முழங்கையை வைத்துக்கொண்டு தேஜஸ்வியாய் ஸுந்தரனாய் ஓர் மஹா புருஷன் அதிஉல்லாஸமாய் ஆகாசத்தை விளாவி நிற்கக்

கண்டார். தான் முன் ஸ்வப்னம்போல் கண்ட மூர்த்தியே யென்று அறிந்து உற்று நோக்க, மந்த ஹாஸத்துடன் தன் அமிருதமயமான கடாக்ஷத்தை இவர்மீது மிகக்கருணை யுடன் செலுத்தினர். இவர் ஆனந்த பரிதராக ஒன்றும் செய்யத் தோன்ருதவராக ஸாஷ்டாங்கமாக வந்தனம் செய்தார். வந்தனம்செய்து நிமிர்ந்து பார்க்கையில் எல்லாம் மறைந்தது. தான் படுத்திருந்த ஆலயமே கண்ணில் பட்டது. இருந்தாலும் இக்காக்ஷி கிடைத்ததில் அடங்கா ஸந்தோஷத்தையடைந்தார். இவ்வனுபவத்தையே அடிக்கடி அனுஸந்தானம் செய்து ஆனந்திப்பார். இம் மூர்த்தியையே அடிக்கடி தியானம் செய்வார்.

கொஞ்ச நாள் சென்ற பிறகு கொடுமுடியில் இவர் தங்கியிருந்த ஒரு நாள் ராத்திரி ஸ்வப்னத்தில் ஒரு திவ்யமான ஊர்வலத்தைக் கண்டார். ஸகலாலங்கார பூஷிதர்களாக நான்குவித ஸேனைகளும் சூழ, ஸகலவிதமான வாத்தியங்களும் கோஷிக்க, நடுமத்தியில் நான்கு வெள்ளைக் குதிரைகள் பூட்டின ஒரு ஸ்வர்ண ரதத்தில் ஸர்வாலங்கார பூஷிதராய் கிரீடம் தரித்துக்கொண்டு ஸ்ரீ மஹா ஸன்னிதானம் (ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்கள்) ரத வீதியில் வருவதைக் கண்டார். தான் கௌபீனதாரியாயிருப்பதால் அந்த கோஷ்டியில் காணப்படுவது லௌகிகரீதியாய் உசிதமில்லையென்று நினைத்து ஒரு பக்கமுள்ள வீட்டோரமாக நின்று இக்காக்ஷியை கண்ணாரக்கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தார். ஊர்வலம் மெள்ள மெள்ள ஸமீபத்தில் வந்ததும் ஸ்ரீ மஹாஸன்னிதானம் இவரைப் பார்த்து தன் ஸமீபத்


தில் வரும்படி ஸம்ஞை காட்டினவுடன் இவர் அப்படியே போய் வந்தனம் செய்து அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு நின்ருர். "கைகளை நீட்டு" என்று அவர்கள் ஆக்ஞாபிக்க, இவரும் அப்படியே கைகளை நீட்டினுர். "இதைப் பிடி" என்று சொல்லி கையில் எதையோ போட்டார். இன்ன தென்று இவர் பார்க்கையில், அந்த க்ஷணமே பிறந்தவள் போல் உள்ள ஒரு பெண் குழந்தையை தன் கையில் கண் டார், திடுக்கிட்டார், இதென்னவென்று வினவினுர். "நாளை கிருஷ்ணஸ்வாமியிடம் கேள்" என்று பதிலளித்து விட்டு ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் புன்சிரிப்புடன் மறைந் தார்கள். இவரும் விழித்துக்கொண்டார்.

இந்த ஸ்வப்னம் மூலமாக தெரிந்ததைத்தவிர கிருஷ் ணஸ்வாமி மறுநாள் வரப்போகிருன் என்பது இவருக்கு தெரியாது. அகஸ்மாத்தாக கிருஷ்ணஸ்வாமியும் மறுநாள வர, கையில் பெண் குழந்தையைக்கண்டது வரையுள்ள ஸ்வப்ன பாகத்தை அவனிடம் சொல்லி "இந்த ஸ்வப்னத் திற்கு அர்த்தம் என்ன" என்று கேட்டார். "தங்களுக்கு தெரியாமல் எனக்கு என்ன தெரியப்போகிறது" என்று அவன் சொன்னதற்கு, "நீ சொல்லு. அப்புரம் உன்னை ஏன் கேட்டேன் என்று சொல்கிறேன்" என்ருர். உடனே கிருஷ்ணஸ்வாமி "ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடத்தில் ஸர்வ லோக நியந்தாவான ஈசுவர பாவனையே செய்து வரவேண்டு மென்பது ஸ்வப்னத்தில் கண்ட ராஜாதிராஜ வைபவங்களி ஞல் தெரிகிறது. பிரஹ்ம வித்யா ஸ்வரூபிணியான அம்பி கையை ஹைமவதீ யென்று உபநிஷத்தில் சொல்லியிருப் பதால், ஸ்வர்ண விக்ரஹம் போல தங்கள் கையில் ஸ்ரீமத்

ஆசார்யாரவர்கள் கொடுத்த குழந்தையும் பிரஹ்மவித்யையே யாகும். 'சிசுப்பருவத்தில் இப்பொழுது என்னால் உன்னிடம் கொடுக்கப்படுகிறது. அவளை ஸரியானபடி போஷித்து வந்து தருணியாக்கி உன் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டியது உன் பொறுப்பு. இப்பொறுப்பை உணர்ந்து வஹித்து கிருதார்த்தனுவாய்' என்று மந்தஹாஸத்துடன் அனுக்ரஹித்தார்கள் என்று எனக்கு தோன்றுகிறது" என்று சொன்னான். "இதுவே சரியான அர்த்தம்" என்று ஸ்ரீ ஸ்வாமிகளும் சொல்லி, அவனைக் கேட்கும்படி ஏற்பட்டதற்கு காரணத்தையும் சொன்னார். அதுமுதல் ஸ்ரீ ஸதாசிவேந்திரருடையவும் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடையவும் விசேஷ அனுக்ரஹம் தனக்கிருப்பதாக தைர்யம் கொண்டு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில் முன்னைவிட ஊக்கம் கொண்டார்.

## 6. ஆசார்ய தர்சனம்

இப்படியிருக்க, ஸ்ரீங்கேரி ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் 1924 ஜனவரியில் யாத்திரையாகப் புறப்பட்டு மைஸூர் பக்கம் வந்தபோது, கோயமுத்தூர் மஹாஜனங்கள் தங்கள் ஜில்லாவுக்கும் விஜயம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்படியே திருச்சினுப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஜில்லா வாஸிகளும் பிரார்த்தித்தபடியால், தக்ஷிண தேசம் பூராவுமே யாத்திரை செய்வதாக ஸம்மதித்தார்கள். அந்த யாத்திரையில் கிரமமாக 1924 கடைசியில் அகண்ட காவேரி வடகரையிலுள்ள ஸ்ரீ ராமஸமுத்திரம் என்ற அயலூர் கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்த



தேவகிரி ஆலயமும் ஸ்ரீ ராமாநந்தரும்.

ஸந்தர்ப்பத்தில் ஸமீபத்தில் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்த ஸ்ரீராமாநந்தர் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தர்சிப்பதற்காகப் போய் வந்தனம் செய்தார். அப்பொழுது இருவர்களுக்கும் நடந்த ஸம்பாஷணை ஏகாந்தத்தில் நடந்ததால் யாரும் தெரிந்துகொள்வதற்கில்லை. இருந்தாலும் அவர்களுடைய மனோநிலை எப்படி யிருந்திருக்குமென்று நாம் ஊஹித்துக்கொள்ளலாம்.

## 7. மௌன நிலை.

இவ்விதமாக பெரியோர்களின் அனுக்ரஹத்தை அவலம்பித்துக்கொண்டு ஸ்ரீ ராமாநந்தர் ஸஞ்சாரம் செய்துகொண்டு வந்த மத்தியில் 1924 ம் வருஷத்திய சாதுர்மாஸ்யத்தை மஹாதானபுரத்திலும் 1925 ம் வருஷத்திய சாதுர்மாஸ்யத்தை திருமாநிலையூரிலும் நடத்தினர். திருமாநிலையூர் சாதுர்மாஸ்ய காலத்தில் இனி ஸம்ஸ்கிருதத்தில் பேசுவதையும் நிறுத்திவிட்டாலொழிய லௌகிக வியவஹாரம் குறையாது என்று தீர்மானம் செய்துகொண்டார். ஸன்யாஸிகளுக்கு மௌனவிரதம் அவசியமில்லாமல் போனாலும் மௌனத்தில் பலவித ஸௌகர்யங்களிருக்கின்றனவென்று உணர்ந்தார். திருமாநிலையூரிலிருந்து சாதுர்மாஸ்யம் முடிந்தவுடன் நேரே நெரூர் ஸ்ரீ ஸதாசிவேந்திரர் ஸன்னிதிக்குப்போய் வந்தனம் செய்துவிட்டு மௌனத்தை அவலம்பித்துக்கொண்டார். அப்புறம் மௌனமாகவே ஸஞ்சாரம் செய்து வந்தார். 1926 ம் வருஷத்திய சாதுர்மாஸ்யம் கொடுமுடியிலும் 1927 ம் வருஷத்திய சாதுர்மாஸ்யம் காட்டுப்புத்தூரிலும் நடந்தன. வயதினால்

சரீரத்தில் கொஞ்சம் தளர்ச்சியேற்பட, ஸஞ்சாரத்தில் வர வர சிரமம் ஜாஸ்தி தெரிய வாரம்பித்தது. இதினால் நிதித்யாஸனாதிகளுக்கு ஸௌகர்யம் மிகவும் குறைகிறதென்பதை உணர்ந்தார். இனி எங்கேயாவது ஏகாந்தமாய் ஸ்திரமாய் இருந்துவிடவேண்டுமென்று தீர்மானித்தார். நாகயநல்லூரிலிருந்து மேற்கே மூன்று மைல் தூரத்தில் தேவகிரி யென்ற ஸ்ரீ தண்டாயுதபாணி க்ஷேத்திரமே மிகவும் லாயக்கானவிடம் என்று நிச்சயித்துக்கொண்டார். அந்த க்ஷேத்திரம் காட்டுப்புத்தூரிலிருந்து வடக்கே மூன்று மைல் தூரம். காட்டுப்புத்தூரில் சாதுர்மாஸ்யம் முடிந்த தினமே புறப்பட்டு அத்தேவகிரி போய்ச்சேர்ந்தார்.

# அத்யாயம் 10.

# தேவகிரி வாஸம்

## 1. நாகயநல்லூரார் பக்தி.

பிரபவ வருஷம் ஆவணி மாஸம் 26 ம் தேதி, 1927 ஸெப்டம்பர் 11 ம்வ, பானுவாரம் பௌர்ணமி தினம் காட்டுப்புத்தூரிலிருந்து புறப்பட்டு தேவகிரி போய்ச்சேர்ந்தார். பக்கத்தில் மூன்று மைலுக்கு அக்ரஹாரமேயில்லாததினால் நாகயநல்லூரிலிருந்தாவது காட்டுப்புத்தூரிலிருந்தாவது தான் பிக்ஷை வரவேண்டியிருந்தது. அந்த கிராமத்தார்களுக்கு இந்த சிரமத்தைக் கொடுக்கக்கூடாதென்று நினைத்து ஒரு வாரத்திற்கு ஒரு தரம் ஸக்துமா வாங்கி வைத்துக்கொண்டுவிடலாமென்று பார்த்தார். இதுவும் பதார்த்த ஸங்கிரஹமேயாகுமாதலால் கிரமமல்லவென்று எண்ணினார். கொஞ்சநாள் யாரேனும் கொண்டுவந்து கொடுத்த பழங்களையும்பாலையும் கிரஹித்து வந்தார். பிறகு பழம் மாத்திரமே போதுமென்று கிரஹித்துக்கொண்டிருந்தார். ஆஹார விஷயமாய் முன்னுள்ள பழக்கத்தை திடீரென்று மாற்றினதில் சரீரத்தில் கொஞ்சம் சோர்வு தெரிந்தது. இதைக்கண்டு ஸஹிக்காதவர்களாக நாகயநல்லூர் மஹாஜனங்கள் வந்து இவரிடம் "கிராமத்திலிருந்து பிரதிதினமும் பிக்ஷை கொண்டுவருவதில் எங்களுக்கு ஒரு வித சிரமமும் இல்லை. எங்களுக்குள் ஒரு கிரமம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறபடியால், இன்று ஒருவர் பிக்ஷை கொண்டுவந்தால் மறுபடியும் அவருக்கு பிக்ஷை முறை

வருவதற்கு இரண்டு மாஸத்திற்குக் குறையாமல் ஆகும். இரண்டு மாஸத்திற்கு ஒரு முறை தங்களுக்கு பிக்ஷை கொண்டுவந்து கொடுப்பது யாருக்கேனும் சிரமமாயிருக்குமா? தாங்கள் எங்கள் பிக்ஷையை எப்படியும் அங்கீகரிக்க வேண்டும். எங்களுக்கு சிரமம் இருக்குமோ என்ற ஸந்தேஹம் தங்களுக்கு கொஞ்சமேனும் வேண்டாம்'' என்று பலமுறை வற்புறுத்தி வந்தார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து தை மாஸம் அதாவது 1928 ஜனவரி 14 ம் தேதி முதல் அப்படியே அவர்களால் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட பிக்ஷையை கிரஹிக்கவாரம்பித்தார்.

அந்தந்த கிரஹத்திலிருந்து புருஷரோ, ஸ்திரீயோ, பாலரோ, யாராவது ஒருவர் பிக்ஷையை எடுத்துக்கொண்டு வருவார். ஸ்ரீ ஸ்வாமிகள் அபராஹ்னத்திலேயே பிக்ஷை கிரஹித்துக்கொண்டிருந்தபடியால் கொண்டுவந்தவர் அங்குள்ள மாத்தட்டில் பிக்ஷையை வைத்துவிட்டு திரும்பி விடுவார். தான் வீட்டிலேயே ஆஹாரம் செய்துவிட்டு வந்திருந்தாலும் வெய்யில் ஜாஸ்தியாயிருந்தாலும் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஸாவகாசமாயிருந்து போகவேண்டுமென்று நினைத்தாலும் மலையிலேயே தங்கிவிட்டு ஸாயங்காலமாக ஊருக்கு திரும்புவார். மழை, காற்று, வெய்யில் என்ன சிரமம் இருந்தபோதிலும் கொஞ்சமேனும் லக்ஷ்யம் செய்யாமல் காலத்தில் பிக்ஷையைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். நாகயநல்லூரிலிருந்து தேவகிரிக்கு வரும் வழியில் ஒரு காட்டாறு இருக்கிறது. எதிர்பாராமல் அதில் திடீரென்று வெள்ளம் வந்துவிட்டால் வேகம் வெகு ஜாஸ்தியாக இருக்கும். நதியைத்தாண்டி வருவது துஸ்ஸாத்யமாகும். அப்

படியிருந்தும் அதில் சிரமப்பட்டு நீந்திக்கொண்டாவது எப்படியும் பிக்ஷையைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். ஏதேனும் ஒருநாள் காட்டுப்புத்தூரிலிருந்தும் பிக்ஷை வருவதுண்டு. ஆனால் என்றைக்கும் நியதமாய் வந்து கொண்டிருந்தது நாகயநல்லூரிலிருந்துதான்.

தேவகிரிக்கு ஸமீபத்தில் நதியாவது தடாகமாவது கிடையாது. தேவகிரி மலைப்பிரதேசத்திலும் சேர்ந்ததல்ல. நாலாபக்கமும் வெட்டவெளியும் புஞ்சைக்காடுகளுமே கண்ணில் படக்கூடியதான ஒரு மேடான இடத்தில் உள்ள ஒரு குன்று. அதின்மேல் பிராசீனமாயுள்ள ஒரு தண்டாயுதபாணி ஆலயமிருக்கிறது. முன் காலங்களில் விசேஷமாக உத்ஸவாதிகள் நடந்துவந்ததாகவும் ஆலயத்திற்குள் ஒரு குஹையில் தேர் சங்கிலி அகப்பட்டதாகவும் சொல்வார்கள். பக்தர்களின் அபீஷ்டப்படி பழனி க்ஷேத்திரத்தில் ஸாந்நித்யம் கொள்ள உத்தேசித்து கைலாஸத்திலிருந்து புறப்பட்ட ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் வழியில் இப்பாறையில் பாத ஸ்பர்சம் செய்வித்து அனுக்ரஹித்ததாக ஸ்தல மாஹாத்மயம் சொல்வார்கள். அப்படியிருந்தும், போதுமான சொத்து இல்லாததினாலும் ஸமீபத்தில் அக்ரஹாரம் இல்லாததினாலும் நித்திய பூஜை ஸரிவர நடந்துவர ஸௌகர்யமில்லாமலே இருந்து வந்திருக்கிறது. ஸ்ரீ ஸ்வாமிகள் இவ்வாலயத்தில் போய் தங்க ஆரம்பித்தது முதல் நித்திய பூஜை கிரமமாக நடந்துவந்ததுடன் பலபேர்கள் பல வழிபாடுகளையும் செய்யவாரம்பித்தார்கள்.

பாறைக்கு வடபுரமாக தோட்டக்கிணர் மாதிரி இறங்கும் ஸௌகர்யத்துடன் ஒரு பெரிய சுனையிருக்கிறது,

ஸ்நாநத்திற்கும் தீர்த்தம் எடுத்துக்கொள்ளவும் ஸ்ரீ ஸ்வாமிகள் இதையே உபயோகித்துக்கொள்ளவேண்டியதாயிருந்தது. பக்கங்களிலுள்ள மரங்களிலிருந்து இலைகள் முதலியவை விழுந்து ஜலம் அசுத்தமாகக்கூடியதாயிருந்ததால் நாகயநல்லூர் மஹாஜனங்களே அடிக்கடி தூரெடுத்தும் சுத்தம் செய்தும் இறங்கும் படிகளை பழுது பார்த்தும் வந்தார்கள். மற்றும் ஸ்ரீ ஸ்வாமிகளின் வஸதிக்கு அநுகூலமான இதர ஸௌகர்யங்களையும் கவனித்து வந்தார்கள். நாகயநல்லூர் மஹாஜனங்கள் ஆபால விருத்தர் யாவருமே இவரிடம் விசேஷ அன்பும் பக்தியும் வைத்திருந்தார்கள். அவர்களில் N. R. கோபாலய்யர் செய்துவந்த கைங்கர்யம் மிகவும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் வைத்திருந்த அபிமானத்திற்கு ஓர் உதாஹரணம் இங்கு சொல்லவேண்டியதுண்டு. நாகயநல்லூரில் ராமநாத சாஸ்திரிகள் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவர் ஒருநாள் ராத்திரி படுத்துக்கொண்டிருந்தவர் காலை நான்குமணி சுமாருக்கு திடீரென்று எழுந்திருந்து "ஸ்ரீ ஸ்வாமிகள் சுனையில் விழுந்துவிட்டார்" என்று கதறிக்கொண்டு மற்றவர்களை எழுப்பினார். அவர்கள் ஸ்வப்னம் என்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் "இப்பொழுதே போயே தீரவேண்டும்" என்று கை லாந்தலை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார். வயதானவரை இருட்டில் தனியாக போகவிடக்கூடாதென்று சிலர்கள் கூடச்சென்றார்கள். இருட்டிலேயே தேவகிரிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். நேரே சுனைக்குப்போய் பார்க்கையில் ஜலத்தின் ஓரமாக ஸ்ரீ ஸ்வாமிகளைக் கண்டார்கள். வாஸ்தவத்தில்,

இறங்கும்போது படி தவறி கீழே விழுந்து பலமாக அடி பட்டிருந்தது. கீழே விழுந்தவுடன் கொஞ்ச நேரம் பிரக்ஞை தவறியிருந்ததாகவும் தெரிந்துகொண்டார்கள். உடனே கைத்தாங்கலாக ஸ்ரீ ஸ்வாமிகளை மேலே அழைத்து வந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ராமநாத சாஸ்திரிகள் வைத்திருந்த பக்தியின் மஹிமையைக்கண்டு எல்லோரும் ஆச்சர்யமடைந்தார்கள்.

மற்றொரு ஸமயம் இவர் தேவர்மலையைவிட்டே புறப்பட உத்தேசிக்கிறாரென்று கிராமத்தார்கள் தெரிந்து ராத்திரியே இவரிடம் வந்து காலில் விழுந்து பிரார்த்தித்து அவ்வுத்தேசததை மாற்றிக்கொண்டார்கள்.

## 2. ஒரு பக்தரின் வழிபாடு.

இவரை தர்சனம் செய்துவிட்டுப்போக பல ஊர்களிலிருந்து அநேக ஜனங்கள் பிரதிதினமும் வந்து போய்க் கொண்டேயிருந்தார்கள். விசேஷமாக அயலூரிலிருந்து பக்த திலகர் முத்துவீரம் பிள்ளையும் திருச்சினப்பள்ளி இரும்புக்கடை ஷண்முகஸுந்தரம் செட்டியாரும் இவருடைய கைங்கர்யத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தார்கள். ஸமீப கிராமங்களிலுள்ள ஸ்திரீ புமான்களும் அடிக்கடி வந்து தர்சனம் செய்து போவார்கள். தர்சிக்க வருபவர்களில் திருநெல்வேலி ஜில்லா மன்னார்கோவிலிலுள்ள முத்துகிருஷ்ணன் செட்டியார் என்ற ஒரு பக்தர் நாகயநல்லூர் கிராமத்தார் செய்துவரும் பிக்ஷா கைங்கர்யத்தைக் கண்டு இக்கைங்கர்ய புண்யம் தனக்கே வேண்டுமென்ற ரோக்கத்துடன் தேவகிரியிலேயே பிக்ஷை தயாரிக்கவேண்

டிய ஸௌகர்யங்களை ஏற்படுத்திக் கொடுத்துவிட நினைத்தார். ஆனால் ஸ்ரீ ஸ்வாமிகள் இதற்கு கொஞ்சமேனும் ஸம்மதிக்கவில்லை. நாகபகல்லூர் கிராமத்தார்களுக்காவது தன்னால் ஏதேனும் ஸௌகர்யம் செய்து கொடுக்கவேண்டுமென்று நினைத்தார். அதற்கு அவர்களும் இசையவில்லை. இக்கைங்கர்யத்தில் தனக்கும் ஒரு பங்கு வேண்டுமென்று இவ்விதமாக முயன்றும் பலன்படாமல் போனபிறகு, கிராம ஸமுதாயத்திற்காவது தன்னிடம் கிராமத்தார் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று மிகவும் வற்புறுத்தி, அவ்வூர் தேவாலய பூஜைக்கு உபயோகித்துக்கொள்ளும்படி இரண்டாயிரம் ரூபாய் ஸமர்ப்பணம் செய்தார். இப்பால் அத்தொகையைக்கொண்டு தக்க பூஸ்திதியும வாங்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.

## 3. அப்யாஸ நிலை.

ஜனங்கள் அதிகமாக வர ஆரம்பித்ததும் நிதித்யாஸனத்திற்கு ஸௌகர்யம் குறைவதை யுணர்ந்து வருந்தினார். இவர் மௌனியாயிருந்தபோதிலும் பார்க்க வருகிறவர்கள் தங்களுக்குள் லௌகிக விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டு இவருக்கு மனோவிக்ஷேபம் ஏற்படும்படியிருந்தது. ஏகாந்த வாஸத்திற்காக இங்கு வந்தும் ஸௌகர்யம் ஏற்படவில்லையே யென்று பலவாறு சிந்திப்பார். யாத்திரையிலிருந்த ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் இவருடைய மனோநிலையை அறிந்து, விக்ஷேபம் ஏற்படும் காலத்தில் மாண்டூக்ய உபநிஷத் பாஷ்யத்தை அடிக்கடி அனுஸந்தானம் செய்யும்படிக்கும், நிர்குண தியானத்தில் மனம் செல்லாதபோதெல்லாம் முன்னிருந்த ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின்



ஸ்ரீ நிலமாவு மடம்

ஸ்ரீபோதேந்திர நாராயண பாரதீ ஸ்வாமிகள்

மூர்த்தியை தியானம் செய்யும்படிக்கும் சொல்லியனுப்பி ஞர்கள். மனஸ் விக்ஷேபமடையும் காலங்களில் சாஸ்திரீய வியவஹாரங்களில் பிரவிருத்தி செய்தால் அதுவும் ப்ரஹ்மாப்யாஸத்திலேயே சேரும் என்றும் சொல்லியனுப்புவார்கள். அப்படியே மாண்டூக்ய உபநிஷத் பாஷ்யம் சில நாள் இவரால் அனுஸந்தானம் செய்யப்பட்டது. ஸகுண தியானத்திற்கு அனுகூலமாக இருக்கும் பொருட்டு முன் ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் படமொன்றும் இப்பொழுதுள்ள ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் படமொன்றும் இவருடைய ஆசிரம குருவான ஸ்ரீ நிலமாவு மடம் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய படமொன்றும் ஆலயத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டன. இவை தியானத்திற்கு வெகு உபகாரமாயிருந்தனவென்றும் தெரிகிறது.

## 4. கிரந்த ரசனே.

தேவகிரிக்கு தர்சனார்த்தம் வருகிற அநேகர்கள் தர்ம ஸம்பந்தமாயும் தார்மிகர்கள் இக்காலத்தில் நடந்துகொள்ள வேண்டிய விஷயமாயும் இவர் தண்ட கமண்டலு இல்லாமலிருப்பது நியாயம்தானவென்றும் மற்றும் பல விஷயமாகவும் அடிக்கடி இவரைக் கேழ்விகள் கேட்பதுண்டு. இவர் மௌனமாயிருந்தபடியால் ஸ்லேட்டிலும் காகிதத்திலும் இதெற்கெல்லாம் ஸமாதானம் எழுதிக்காட்டுவார். இவ்விஷயங்களேப்பற்றி இவர் லௌகிக வைதிக யுக்தி பிரமாணங்களுடன் மிகத்தெளிவாக அபிப்பிராயம் சொல்லிவந்தபடியால், இவர் சொல்லும் விஷயங்களே விபரமாக குறித்து வைத்திருந்தால் ஸாமான்யமாய் ஸகல ஆஸ்திகர்களுக்கும் உபகாரமாயிருக்குமென்று பலர் தெரிவித்துக் கேட்டுக்

கொண்டார்கள். அதற்கு இவர் இணங்கி சாஸ்திரீய வியவஹாரமாயிருப்பதால் பாதகமில்லையென்று ஸமாதானம் செய்துகொண்டு, தனக்கு ஸாவகாசமிருந்த வேளைகளில் சிற்சில விஷயங்களைப்பற்றி தமிழில் எழுதிவைப்பார். அது வர வர பெரிதாகிவிட்டது. இவ்விதமாக இவர் எழுதியுள்ளதை யெல்லாம் சேர்த்து பின்னால் "தர்ம விமர்சனம்" என்று பெயரிட்டு புஸ்தக ரூபமாக அச்சிட்டு வெளியிடப் பட்டிருக்கிறது.

இப்புஸ்தக விஷயமாக இங்கு ஒரு ஸம்பவம் குறிப்பிடவேண்டியதுண்டு. இதில் அநேக விஷயங்கள் மிகவும் யுக்தி யுக்தமாகவும் ஸாதாரண ஜனங்களுக்குக்கூட எளிதில் மனதில் பதியக்கூடிய நிலைமையிலும் எழுதியிருபபதை வாசகர்கள் நன்கு அறிவார்கள். சேலம் ஜில்லா சேந்தமங்கலத்திலிருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் சரித்திரத்தை "ஸ்ரீ ஸ்வயம்பிரகாச விஜயம்" என்ற பெயருடன் பிரசுரித்தவரும் இப்புஸ்தகத்திலுள்ள விஷயங்களைக்கண்டு மெச்சி, இப்புஸ்தகத்திலிருந்து அநேக விஷயங்கள் ஸம்பந்தமாயுள்ள வசனங்களை அப்படியப்படியே பங்க்தி பங்க்தியாக எடுத்து சேந்தமங்கலம் ஸ்வாமிகளவர்களின் வசனங்கள் போலக்கண்டு அப்புஸ்தகத்தில் "பிரசிநோத்தர மாலிகை" என்ற பாகத்தில் சேர்த்துவிட்டார். இது விஷயம் தெரிந்து ஆக்ஷேபித்ததில் கடைசியாக தன் தப்பிதத்தை ஒப்புக்கொண்டு தன் புஸ்தகத்தில் இதனடியில் கண்டபடி ஒரு குறிப்பு சேர்த்துவிடுவதாக ஒப்புக்கொண்டார்.

"இப் பிரச்நோத்தர மாலிகையிலுள்ள சில பகுதிகள் ஸ்ரீமத் ராமானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அருளியுள்ள

**தர்ம விமர்சனம்** என்னும் புத்தகத்திலுள்ள சில பகுதிகளைப் பின்பற்றிப் பொது ஜனங்களின் நன்மையைக்கருதி எழுதப்பட்டுள்ளனவென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் —— **வெளியிட்டோர்**'' அதன் பேரில் மேல்நடவடிக்கை நடத்தவேண்டியதில்லையென்று நிறுத்திக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீ ராமாநந்தர் தேவகிரியில் ஸான்னித்யமடைந்திருக்கும் தண்டாயுதபாணியின் பேரில் ஒரு ஸ்தோத்திரமும், தன் ஆசார்யாரவர்கள் விஷயமாகவும் ஸ்ரீ சாரதா விஷயமாகவும் சில ஸ்தோத்ரங்களும் செய்தார். ஆத்மானுஸந்தானத்திற்கு உபயோகப்படக்கூடியதாக மானஸோபதேச பஞ்சகம், ஆத்ம பஞ்சகம், கூட ஸித்தாந்த பஞ்சகம், முதலான சில்லரை பிரகரணங்களையும் எழுதினார். சிலதுகளுக்கு தானே வியாக்யானமும் எழுதி வைத்தார். ஸகுணோபாஸனக்கிரம ரீதியாய் ஸாலோக்யாதி கைவல்யாந்தமான மோக்ஷத்தை ஒரு ஸாதகன் எப்படி யடைவான் என்று உத்பிரேக்ஷித்து கிரம முக்தி மார்க்கத்தை நன்கு விளக்கி **கிரம முக்தி விலாஸம்** என்றவோர் அத்புதமான காவ்யத்தையும் ரசனை செய்து அதற்கு தானே விஸ்தாரமாக வியாக்யானத்தையும் எழுதினார். இவருக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஸாஹித்யம் செய்வதில் இவ்வளவு தேர்ச்சியிருக்குமென்று இதற்கு முன் யாரும் நினைக்கவில்லை. இவ்விதமாக இவர் தேவர் மலையில் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றிய கிரந்தங்கள் எல்லாவற்றையும் சேர்த்து இப்பால் "**முக்தி மார்க்கானுசிந்தனம்**'' என்று பெயரிட்ட ஒரு புஸ்தகம் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

## 5. ஆசிரம குருவின் ஸித்தி.

இவர் இவ்விதமாக தியானுதிகளிலும் சாஸ்திரீய வியவஹாரங்களிலுமாக தேவகிரியில் காலம் கழித்து வருகையில், இவருடைய ஆசிரம குருவான நிலமாவுமடம் ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் யாத்திரையாக பலவிடங்களுக்குப் போய்விட்டு, மதுரை ராமேசுவரம் கன்யாகுமாரி திருநெல்வேலி முதலான க்ஷேத்திரங்களை தர்சனம் செய்து கொண்டு, மறுபடியும் ஸ்வஸ்தானமான ரஸாலபுரம் என்ற நிலமாவுக்கு திரும்ப உத்தேசித்து, 1928 ல் திருச்சினுப்பள்ளி மார்க்கமாய் வந்துகொண்டிருந்தார்கள். காவேரி தீரத்தில் வரும்போது ஸ்ரீ ராமாநந்தரைப் பார்க்கவேண்டுமென்று நினைத்து பலதடவை பிரஸ்தாபித்து வந்தார். ஸமீபத்தில் வந்தவுடன் போய் தர்சிக்கவேண்டுமென்று ஸ்ரீ ராமாநந்தரும் எண்ணியிருந்தார். தைவ கதியால் இருவருடைய எண்ணமும் நிறைவேறுவதற்கில்லாமலே போய்விட்டது. நிலமாவு மடம் ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் டிஸம்பர் மாஸத்தில் மஹாதானபுரம் அக்கிரஹாரத்திற்கு விஜயம் செய்திருந்த ஸமயத்தில் ஸ்வல்பநாள் சரீரத்தில் உபாதி கண்டு விபவஞ மார்கழி 5வ (1928 டிஸம்பர் 19) ல் திடீரென்று ஸித்தியடைந்துவிட்டார்கள். இவ்விஷயம் கேழ்விப்பட்டதும் ஸ்ரீ ராமாநந்தர் மிகவும் துக்கித்தார். ஸ்ரீ குரு ஸ்வாமிகள் நெருருக்கு வரும் ஸமயத்தில் போய் தர்சிக்கலாமென்று உத்தேசித்தேனே, இவ்வளவு ஸமீபத்தில் வந்தும் தர்சனம் செய்ய பாக்கியமில்லாமல் போய்விட்டதே, என்று வருந்தினர். மஹா பூஜை தினத்தன்று (டிஸம்பர் 28) தேவகிரியிலிருந்து கால்நடையாகப் புறப்

பட்டு நாகயநல்லூர் மார்க்கமாக காவேரி வடகரைக்கு வந்து நதியைத்தாண்டி மஹாதானபுரம் வந்து சேர்ந்தார். இவர் வரும் ஸமாசாரம் தெரிந்து அக்கம் பக்கம் கிராமங்களிலுள்ள ஜனங்கள் இவரை தர்சிக்க ஏராளமாக வந்து சேர்ந்தார்கள். நேரே இவர் தன் குருவின் அதிஷ்டானம் சென்று மிக வருத்தத்துடன் வந்தனம் செய்து நின்றார். அன்று நடக்கவேண்டிய ஸகல கார்யங்களையும் தானே கூடவிருந்து கவனித்துவந்தார். மத்தியானம் கிராமத்தில் கரதலபிக்ஷை கிரஹித்துக்கொண்டு உடனே தேவகிரிக்குத் திரும்பிவிட்டார்.

ஸ்ரீ நிலமாவு மடம் பீடாதிபதியான குரு ஸ்வாமிகள் எதிர்ப்பார்க்காமல் திடீரென்று ஸித்திபாய்விட்டபடியால் அந்த பீடத்தில் யாரை எப்படி ஏற்படுத்துவதென்று யாருக்கும் தெரியவில்லை. ஸித்தியானவுடன் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வந்து பூஜா ஸாமான்களைத்தவிர மற்றவை யெல்லாவற்றையும் ஸீல் வைத்து பந்தோபஸ்து செய்துவிட்டார்கள். இந்த ஸ்திதியில் நெலமாவு க்ஷேத்திரத்திலுள்ள அம்மடத்தைச்சேர்ந்த சில சிஷ்யர்கள் அந்த ஸ்தானத்திற்குறியவனென்று தங்களுக்கு தோன்றின ஒரு பாலனை அழைத்துக்கொண்டு சிருங்கேரிக்குப்போய் ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தினிடத்தில் தெரியப்படுத்தினார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் எல்லா விஷயங்களையும் கேட்டுக்கொண்டு "இப்பையன் அந்த ஸ்தானத்திற்கு லாயக்காகவே தெரிகிறது. அந்த மடத்து பாம்பரை விட்டுப்போய்விட்டதென்று யாரும் நினைக்கவேண்டாம். ஸித்தியடைந்திருக்கிற ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஸாக்ஷாத்தாக

உபதேசம் பெற்ற ஸ்ரீ ராமாநந்தர் தேவகிரியில் இருக்கிறார். அவரைக்கொண்டே இவனுக்கு ஆசிரம ஸ்வீகாரம் செய்து வைத்தால் பரம்பராக்கிரமம் பரிபாலிக்கப்பட்டதாக ஆகும். அவ்விதமே நடத்த ஏற்பாடு செய்யுங்கள்'' என்று சொல்லி யனுக்ரஹித்தனுப்பினார்கள். அப்படியே ஸ்ரீரங்கம் குருபக்தசிகாமணி T. K. பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் மூலமாக "இங்கிருந்து வரும் பாலனுக்கு கூட விருந்து ஆசிரம ஸ்வீகாரம் செய்து வைத்து தாமே உபதேசம் செய்வதுதான் தங்கள் குருவினிடம் தாங்கள் கிருதக்ஞதையைக் காட்டினதாகும்'' என்று ஸ்ரீ ராமாநந்தருக்கும் சொல்லியனுப்பினார்கள். இவ்விஷயத்தை T. K. பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் தேவகிரிக்குப் போய் ஸ்ரீஸ்வாமிகளிடம் தெரிவித்ததும் அவ்விதமே செய்வதாக இவர் ஸம்மதித்தார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு மறுபடியும் (1929 ஜனவரி 6) மஹாதானபுரம் வந்து அப்பாலனுக்கு ஆசிரம ஸ்வீகாரம் செய்வித்து பிரணவ மஹா வாக்யோபதேசாதிகளை யதாக்கிரமமாக செய்து வைத்தார். போதேந்திர நாராயணபாரதீ என்று யோகபட்டமும் அளித்தார். இந்த பாலசிஷ்யனுடைய சிரத்தையையும் உபசாந்தியையும் தேஜஸ்ஸையும் கண்டு மகிழ்ந்தார். அங்கு அன்று நடந்த இந்த அபூர்வமான வைபவத்தைப்பார்த்து கிருதார்த்தர்களாக வேண்டுமென்று பலவிடங்களிலிருந்து ஜனங்கள் திரள் திரளாக வந்திருந்தார்கள். அன்று மழையினால் தொந்தரவு இருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது யாவரும் உத்ஸாஹமாகவே தர்சனாநந்தத்தை யனுபவித்து வந்தார்கள்.

அன்றுள்ள பூஜா வைபவத்தையும், பிராஹ்மண ஸந்தர்ப்பணை, ஜோதி கோலாஹலத்தையும், கூடியிருந்தவர்களின் பக்தியின் பெருக்கையும், அவ்வூர் கிராம மஹாஜனங்கள் காட்டின சிரத்தையையும், வர்ணிப்பது ஸாத்தியமாகாது. அன்று கிரமப்படி இம்மஹோத்ஸவத்தை அதிவிமர்சையாய் நடத்திக்கொடுத்துவிட்டு அபராஹ்னத்தில் காதலபிக்ஷை கிரஹித்துக்கொண்டு ஸ்ரீ ராமாநந்தர் ஸாயங்காலமே தேவகிரிக்குத் திரும்பிவிட்டார். சின்ன ஸ்வாமிகளும் சிலநாள் அவ்வூரில் தாமதித்துவிட்டு நேரே நெலமாவு போய்ச் சேர்ந்தார். மஹாதானபுரத்திலுள்ள அதிஷ்டானத்தில் நித்திய பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அங்கு ஓர் ஆலயம் கட்டுவதற்கு வேண்டிய பிரயத்தினங்களும் ஆரம்பிக்கப்பட்டன. மறுபடியும் பிப்ரவரி 1-ம் தேதியில் நடந்த மண்டலாபிஷேகத்திற்கும் ஸ்ரீ ராமாநந்தர் வந்து கூடவிருந்து நடத்திக்கொடுத்தார்.

## 6. ஸ்ரீ கும்பகோணம் ஆசார்யாரவர்கள்

ஸ்ரீ ராமாநந்தர் யதாபூர்வமாக தேவகிரியில் ஏகாந்தமாயிருந்து ஆத்மானுஸந்தானம் செய்து வந்த ஸமயத்தில் அந்தப்பக்கங்களில ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்த ஸ்ரீ கும்பகோணம் பீடாதிபதியான ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளென்ற ஆசார்யார் மோஹனூர் கிராமம் வந்து அங்கிருந்து யாத்திரையாக பல்லக்கில் போய்க் கொண்டிருக்கையில் ரஸ்தா ஓரமாயுள்ள இதுதான் தேவகிரி யென்று தெரிந்துகொண்டு உடனே பல்லக்கை விட்டு இறங்கி சுனைப்பக்கம் வந்தார்கள். அப்பொழுது அங்கேயே

இருந்த ஸ்ரீ ராமாநந்தர் அவர்களை வந்தனம் செய்து நின்றார். உடனே இருவரும் ஆலயத்திற்கு சென்றார்கள். இவ்விருவரும் பரஸ்பரம் தர்சனம் செய்ய நேர்ந்தது இதுவே முதல் தடவையாகும். ஸ்ரீ ராமாநந்தரின் வைராக்கியத்தையும் ஞானநிலையையும் கண்டு ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் மிகவும் ஸந்தோஷித்தார்கள. சில நிமிஷங்கள் அங்கு அவருடன் இருந்துவிட்டு புறப்பட்டுவிட்டார்கள். பிறகு தான் விஜயம் செய்கிற இடங்களிலும் இவருடைய மஹிமையைப் பற்றி அடிக்கடி சொல்வதுமுண்டு.

இப்படி யிருக்க, மத்வ ஸம்பிரதாயத்தைச்சேர்ந்த உத்திராதிமடம் பீடாதிபதியான ஸ்ரீ ஸத்ய த்யானதீர்த்த ஸ்வாமிகளவர்கள் தக்ஷிண தேசத்தில் யாத்திரை செய்து வந்ததில், தங்கள் ஸம்பிரதாயத்தையும் ஸித்தாந்தத்தையும் பிரசாரம் செய்து வருவதுடன் நிற்காமல், அத்வைத ஸித்தாந்தம் அவைதிகம் என்றும் கோஷித்துக்கொண்டிருந்தார். அவர்களுடன் இவ்விஷயமாக வாதாடுவதற்காக பலவிடங்களில் ஸதஸ் ஏற்படுத்தப்பார்த்ததிலும் சரிவர நடக்க இடமில்லாமலே போய்விட்டது. சில பக்தர்கள் இவ்விஷயங்களையெல்லாம் ஸ்ரீராமாநந்தரிடம் தெரிவித்து அந்த ஸ்வாமிகள் அத்வைத மதத்தின் பேரில் சொல்லும் தூஷணைகளுக்கு தெளிவான ஸமாதானங்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இவர்களுடைய அபேக்ஷைக்கு இணங்கி "உத்திராதி ஸ்வாமி வாத ஸமாதானம்" என்றதோர் வியாஸம் தமிழில் எழுதினார். அதிலுள்ள விஷய காம்பீர்யத்தைக்கண்டு மெச்சின



மஹாதானபுரத்தில்
ஸ்ரீ நிலமாவுமடம் ஸ்வாமிகளின் அதிஷ்டானம், 1933.

ஸ்ரீ கும்பகோணம் ஆசார்யாரவர்கள் அதை உடனே அச்சுப்போட்டு பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

## 7. மஹாதானபுரம் போதல்.

இப்படி தேவகிரியிலிருந்து வருகையில், எழுத்து வேலையையும் சுத்தமாக நிறுத்திவிட்டு கேவல நிதித்யாஸ பராகவும் ப்ரணவத்யானபராகவும் இருக்கவேண்டுமென்று நினைத்தார். ஆனால் எதிர்பாராதபடி விக்ஷேபங்கள் ஏற்பட்டன. சுனையின் பக்கத்துச்சுவர்கள் அடிக்கடி இடிந்து விழுந்து தீர்த்தம் அசுத்தமாகிக்கொண்டு வந்தபடியால் எவ்வளவு தடவை தூரு எடுத்தாலும் சுத்தம் என்று நினைப்பதற்கிடமில்லாமலிருந்தது. இந்த ஸந்தர்ப்பத்தில் மஹாதானபுரத்திலிருந்து நாராயண தீக்ஷிதர் என்பவர், "தங்கள் ஆசிரம குருவான ஸ்ரீ நெலமாவு மடாதிபதியவர்களின் அதிஷ்டானத்தில் தாங்கள் வந்திருந்து தங்கள் அப்யாஸங்களைச் செய்துகொண்டு எங்களையும் அனுக்ரஹிக்கவேண்டும்" என்று பலவாறாக பலமுறை பிரார்த்தித்து வந்தார். தன் குருவின் ஆக்ஞையே இது என்ற பாவனையுடன் தேவகிரியை விட்டு ஸ்ரீமுக வருஷம் ஸ்ரீ சங்கரஜயந்தி தினம், 1933 எப்ரல் 29 ம் தேதியன்று புறப்பட்டுவிட்டார். நாகயநல்லூர் கிராமம் வழியே சென்றார். தங்களுக்கே இவருடைய கைங்கர்யம் எப்பொழுதும் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்த இவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் தேவகிரியை விட்டே புறப்பட்டுவிட்டார் என்று தெரிந்தவுடன் ஏற்பட்ட துக்கத்திற்கு அளவேயில்லை. ஸ்ரீராமர் காட்டுக்குப் புறப்படும் காலத்தில் அயோத்தியா நகரவாஸிகள் பட்ட பாட்டை இவர்களும் அனுபவித்தார்கள். இருந்தாலும்

ஸ்ரீ ஸ்வாமிகளின் அபிப்பிராயத்திற்கு இடையூறு செய்ய இஷ்டமில்லாதவர்களாகவே வழியனுப்பிக் கொடுத்தார்கள். இவருடைய குருவின் ஸங்கல்பமே இவரை மஹாதானபுரத்திற்கு இழுக்கிறதென்று ஸமாதானம் செய்துகொண்டார்கள். தூரதேசம் போய்விடாமல் ஸமீபத்தில் தானே இருக்கப்போகிறுரென்று தேறுதலடைந்தார்கள். அன்று மத்தியானம் மஹாதானபுரம் வந்து சேர்ந்தார். அங்கு அதிஷ்டானத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயத்தின் முகப்பில் ஓர் அறையில் ஏகாந்தமாயிருந்து அப்யாஸம் செய்வதாக தீர்மானித்துக்கொண்டார். தன் குருநாதரை வணங்கிக்கொண்டு அன்று முதல் அங்கு வஸிக்கத்துடங்கினுர்.

# அத்யாயம் 11.

# மஹாதானபுரம்.

## 1. கிராமத்தார்களின் பக்தி.

மஹாதானபுரம் அகண்ட காவேரிக்கரையிலுள்ள கிராமங்களில் வைதிக சிரத்தையில் மிகவும் சிறந்தது. இந்த காலத்திலும் கூட வேதாத்யயன பரர்களாகவும் கர்மானுஷ்டான நிஷ்டர்களாகவும் அங்கு அநேகர்களை காணலாம். பெரியோர்களிடத்தில் விசுவாஸமும் அவர்களுக்கு ஸ்வபாவத்திலேயே வெகு ஜாஸ்தி. அதிலும் முன்னமேயே ஸ்ரீராமாநந்தருடைய நிலைமையைப்பற்றி அவர் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்த காலத்திலும், ஒரு சாதுர் மாஸ்ய காலத்திலும், பின்னால் நெலமாவு மடம் ஸ்வாமிகள் ஸித்தியடைந்த காலத்திலும், அடிக்கடி தாங்களே தேவகிரிக்குப்போய் தர்சித்து வந்த ஸந்தர்ப்பங்களிலும், நன்கு கண்டு அனுபவித்தவர்களாதலால் இவரிடம் விசேஷமான பக்தி வைத்திருந்தார்கள். இவர் மஹாதானபுரம் போனவுடன் முன்போல காதல பிக்ஷாக்கிரமம் வைத்துக்கொள்ளாமல் தானிருக்கும் இடத்திற்கு அயாசிதமாய் வரும் பிக்ஷையையே அருந்துவதென்று வைத்துக்கொண்டார். கொஞ்சகாலம் சென்றபின் பிக்ஷைக்காக வரும் ஸகல பதார்த்தங்களையும் ஒன்றாகக்கலந்து இருபதுநாள் கிரஹித்து வந்தார். பின்னால் ஒரு மாஸம் வரை பாலும் பழமும் கிரஹித்து வந்தார். ஜூலை 8 முதல் பாலையும் நிறுத்தி துரீயாதீத நிலைக்கு ஏற்பட்ட பழத்தை மாத்திரம் கிர

ஹித்து வந்தார். பிறகு ஸெப்டம்பர் 4 முதல் அவதூத சர்யைக்கு ஏற்பட்ட அஜகர விருத்தியை அவலம்பித்து பசிக்கும் வேளையில் யாரேனும் கொண்டுவந்து வாயில் போடுவதை யுட்கொண்டு வந்தார். எந்த விதமான நியமம் வைத்துக்கொண்டாலும் அததற்கு வேண்டியபடி மிக பக்தியுடன் கிராமத்தார்கள் நடந்துவந்தார்கள்.

## 2. ஆலய பரிஷ்காரம்.

இவர் இங்கு அதிஷ்டானத்திற்கு வந்தது முதல் ஆலயத்தை கூடிய சீக்கிரம் கட்டி முடித்து கும்பாபிஷேகம் செய்துவிடவேண்டுமென்று ஜனங்களுக்கு ஊக்கம் ஏற்பட்டது. இவ்விஷயத்தில் ஈரோடு வக்கீல் E. S. கணபதி அய்யரவர்கள் மிக்க சிரமம் எடுத்துக்கொண்டு அதிசீக்கிரமாக கட்டிடம் அநேக பாகங்களை பூர்த்தி செய்தார். கட்டிடவேலை பாக்கியில்லை யென்று ஏற்பட்ட பிறகு தான் கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமிகள் அபிப்பிராயப்பட்டபடியாலும் நினைத்தபடி பணம் வசூலாக தாமதித்தபடியாலும் கும்பாபிஷேகம் நடத்துவதற்கில்லாமலிருந்தது. ஆலயத்தில் எங்கு பார்த்தாலும் ராமகிருஷ்ணுத்யவதார கதைகளும் பெரியோர்களின் கதைகளுமே ஞாபகத்திற்கு வரும்படி படங்கள் இருந்தால் நன்றாயிருக்குமென்று ஸ்ரீ ஸ்வாமிகள் அபிப்பிராயப்பட, அவ்விதமே திருச்சினப்பள்ளி இரும்புக்கடை ஷண்முகஸுந்தரம் செட்டியார் படங்களை தருவித்து ஆலயத்தில் மாட்டிவைத்தார். விக்ஷேபமேயன்னியிலிருக்க நினைத்து இங்கு வந்திருக்க, படங்கள் விஷயமாகவும் கட்டிடவேலை பரிஷ்காரமாக வேண்டுமென்றும் ஏன் தனக்கு எண்ணம் தோன்று

கிறதென்று ஆலோசிப்பார். ஏகாந்தத்திலிருந்து வந்த தன்னை அக்ரஹாரத்திற்கு ஸமீபத்தில் ஜன ஸங்கமேற்படக்கூடிய இடத்தில் இருக்கும்படி இழுத்த தன் குரு ஸ்வாமிகளின் ஸங்கல்பமேதான் இவ்வெண்ணங்களுக்கும் காரணமாயிருக்குமோ என்று நினைத்துக்கொள்வார். தனக்காகவென்று இல்லாமல் தன் குருவின் ஆலயம் பூர்த்தியாகி கும்பாபிஷேகம் நடக்கவேண்டுமென்று நினைப்பதில் தோஷமிருக்கயிடமில்லையென்று தன்னையே ஸமாதானப்படுத்திக் கொள்வார். எப்படியும் இது மாதிரி விருத்திகள் குறைந்து மனஸ் விருத்தியற்று இருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டுமென்று தன் குருநாதரையே வணங்கிப் பிரார்த்திப்பார். மனஸ் உபசாந்தியை யடையும். ஜகத்தை மறந்து தன்னை அறிவார். பிறகு தன்னையும் மறந்து தானாகவிருப்பார். இந்நிலையை அதிக நேரம் பரிபாலிக்கமுடியவில்லையே யென்று வருந்துவார். அதிஷ்டானத்தின் வாசல் பக்கமாகவே நதிக்கோ வாய்க்காலுக்கோ ஸ்நாநாதிகளுக்கு போய் வருகிறவர்களுக்கு வழி. ஆகையால் அடிக்கடி ஜனங்கள் இவரை வந்தனம் செய்ய வருவார்கள். அதி ஸமீபத்திலேயே வண்டிகள், மோட்டார்கள் போகிற ரஸ்தா. அதற்கடுத்தாப்போல ரயில்ரோடு. சப்தமும் ஜாஸ்தியாயிருக்கும். ராத்திரி வேளையில் தவிர மற்ற ஸமயங்களில் நிஷ்டைக்கு ஸௌகர்யம் மிகவும் குறைவு. இதற்காக, தான் இருந்த அரைக்கதவை அதிகாலையில் சாற்றிவிட்டு ஒன்பது மணிக்குமேல் தான் திறக்கிறதென்றும் ராத்திரி அஸ்தமித்தவுடன் கதவை சாற்றிவிடுகிறதென்றும் செய்து பார்த்தார். இதில் கொஞ்சம் ஸௌகர்யம் ஏற்பட்டபோதி

லும் தனக்கு வேண்டியபடி அவகாசம் கிடையாதென்று உணர்ந்தார். கட்டிட வேலை முடிந்து கும்பாபிஷேகமாகி விட்டால் உடனே மறுபடியும் ஏதாவது ஏகாந்த ஸ்தலத்திற்குப் புறப்பட்டுவிடுவதே உசிதம் என்று தீர்மானித்தார்.

## 3. வீண் விக்ஷேபம்.


இவ்விதமாக இவர் இங்கிருந்த ஸமயத்தில், அடுத்த கிராமமான கிருஷ்ணராஜபுரத்தில் ஸ்ரீ ஸச்சிதாநந்த தீர்த்த ஸ்வாமிகள் என்பவர் சாஸ்திரக்ஞராகவும் வேதாந்த பாடப்ரவசனத்தில் ஸமர்த்தராகவுமிருக்கிறாரென்று இவர் கேழ்விப்பட்டார். இந்த அதிஷ்டானத்திலேயே பிரவசனம் செய்தால் உசிதமாயிருக்குமென்று சொல்லியனுப்பி அவரை இவ்வூருக்கு தருவித்தார். வந்து கொஞ்சநாள் சென்ற பிறகு அவருக்கிருந்த ஸம்பிரதாய வாஸனையால் ஸ்ரீ ராமாநந்தர் தண்ட கமண்டலுக்கள் இல்லாமலிருப்பது அசாஸ்திரீயம் என்று சொல்லவேண்டுமென்ற விருத்தி யேற்பட்டது. சிருங்கேரியில் ஸ்ரீ ராமாநந்தர் இருந்த ஸமயத்தில் ஆசிரம ஸ்வீகாரத்திற்கு முன்னும் பின்னும் ஸன்யாஸாசிரம தர்ம விஷயமாக பல கிரந்தங்களைப்பார்த்து பரிசீலனை செய்தாரென்று முன் சொல்லப்பட்டது. தன் உபயோகத்திற்காக அவைகளிலிருந்து ஆசிரமத்திற்கு வேண்டிய அதிகார ஸம்பத்து, ஆசிரம ஸ்வீகாரவிதிகள், ஆசிரம பேதங்கள், தினசர்யை, பிக்ஷா நியமங்கள், அனுஸந்தானக்கிரமம், அவசியம் வர்ஜிக்கவேண்டியவைகள், அந்த்யஸம்ஸ்கார விதிகள், முதலாக ஆசிரம ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் தேடியெடுத்துக் குறித்துவைத்திருந்தார். இவ்வளவு சிரமப்பட்டுக் குறித்த விஷயங்கள்

இதார்களுக்கும் பிரயோஜனப்படக்கூடியவைதானே, ஒரே இடத்தில் ஆசிரம தர்மங்கள் யாவையும் தெரிந்துகொள்ள ஸௌகர்யமாயிருக்குமே, என்ற எண்ணம் தோன்றி முன்னமேயே சிருங்கேரியிலிருந்து நான் எழுதிவைத்திருந்த குறிப்புகளை தருவித்து "பரமஹம்ஸ தர்ம விமர்சம்" என்றதோர் கிரந்தம் தயாரித்து வைத்திருந்தார். அதில் உபநிஷத்துக்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், ஸங்கிரஹ கிரந்தங்கள் முதலான பிரமாணங்களிலிருந்து வாக்கியங்களையெடுத்து விஷயவாரியாக வெகு அழகாக ரசனை செய்திருந்தார். ஸகல தர்மங்களும் அதிலேயே காணும்படியிருந்ததால் கிரந்தம் விஸ்தாரமாகவேயாகிவிட்டது. ஸாதாரணமாக அவ்வளவு விஸ்தாரம் வேண்டியதில்லையென்று பின்னால் நினைத்து அதற்கு ஸங்கிரஹ ரூபமாக "பரமஹம்ஸ தர்ம நிர்ணயம்" என்றதோர் சிறிய கிரந்தமும் எழுதிவைத்திருந்தார். இந்த கிரந்தங்களை பார்க்கும்படி நேர்ந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த தீர்த்த ஸ்வாமிகள் அவைகளில் இப்பொழுது ஸாதாரணமாக ஸன்யாஸிகளால் ஸம்பிரதாயமென்று அனுஷ்டிக்கப்பட்டு வருகிற அநேக கார்யங்கள் பிரமாண விருத்தமானவையென்று காணப்பட்டிருப்பதைக்கண்டார். ஸம்பிரதாய சரணராயிருக்கிற அவருக்கு ஸ்ரீ ராமாநந்தரையும் அவர் கிரந்தங்களையும் கண்டிக்க வேண்டுமென்ற புத்தியும் ஏற்பட்டது. ஸ்ரீ ராமாநந்தர் தண்ட கமண்டலு வஸ்திராதிகளை பரித்யாகம் செய்து, கொஞ்சகாலம் அயனத்திற்கு ஒருதடவை க்ஷௌரம் செய்துகொண்டும், தேவகிரிக்கு போனதுமுதல் க்ஷௌரமில்லாமலேயும், இருந்துவந்ததெல்லாம் சரியில்லையென்று

சொல்லவாரம்பித்தார். ஸ்ரீ ராமாநந்தர் இப்படியிருக்க வாரம்பித்து வெகு காலத்திற்குப்பிறகே, நெலமாவுமடம் ஸ்வாமிகளுக்கு ஸன்யாஸ ஸ்வீகாரம் செய்விக்கும்படி இந்த ஸ்ரீ ராமாநந்தருக்கே சிருங்கேரி ஸ்ரீ மஹாஸன்னிதானம் ஆக்ஞை யனுப்பினார்களென்பதையும் மறந்தார். அதன் பிறகே, ஸ்ரீ கும்பகோணம் ஆசார்ய ஸ்வாமிகளும் இவரை தேவகிரியில் பார்க்க நேர்ந்ததென்பதையும் மறந்தார். தன் வைதுஷ்ய பலத்தை மாத்திரம் வைத்து இக்கிரந்தங்களை கண்டிக்கத் தலைப்பட்டார். அவர் செய்யும் கண்டனத்திற்கு பதில் சொல்லவேண்டுமென்ற விருத்தி இவருக்கும் ஏற்பட்டது.

## 4. ஸ்ரீ ஞானனந்தர்.

இதற்கு மத்தியில் இவரை முன் இரண்டு மூன்று தடவை சிருங்கேரி, தேவகிரி முதலான இடங்களில் தர்சித்திருந்த மைசூர் ராஜ்யம் தக்ஷிண பிநாகினீ தீரம் பூதிக்கரை கிராமத்தைச்சேர்ந்த தக்க மிராசுதார் B. குண்டுராவ் என்பவருக்கு வெகுநாளாகவே ஸன்யாஸத்தில் நோக்கமிருந்தும் சிருங்கேரி முன் ஸ்ரீ மஹாஸன்னிதானத்திற்கு விசேஷ கிருபாபாத்திரமாயிருந்தும் இதுவரை ஸன்யாஸம் கிட்டாமலிருந்து வந்தது. பலவிடங்களில் தேடியும் வைராக்கிய ஸம்பத்தில் ஸ்ரீ ராமாநந்தரே ஈடற்றவர் என்று உணர்ந்து தனக்கு ஆசிரம ஸ்வீகாரம் செய்து வைத்து பிரணவ மஹா வாக்யோபதேசாதிகளை செய்யவேண்டுமென்று அடிக்கடி இவரிடம் வந்து பிரார்த்தித்து வந்தார். அவருடைய ஆத்ம குணத்தையும் சாந்தியையும் கண்டு



ஸ்ரீ ஞானானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள்.

மகிழ்ந்த ஸ்ரீராமாநந்தரும் கடைசியாக ஸம்மதம் கொடுத்து யுவ ஆசுவயுஜ சுத்த ஏகாதசி தினம் (1935 அக்டோபர் 8) அவருக்கு கிரம ஸன்யாஸவிதிப்படி ஸன்யாஸம் கொடுத்து உபதேசாதிகளை யதாவத்தாக நடத்தினர். அப்பொழுது உபதேசம் செய்யவேண்டியதற்காக மௌனத்தை விடும்படி ஏற்பட்டது. பிறகு அவருக்கு ஆசிரம தர்மங்களை நன்கு போதிக்கவும் அவசியமிருந்தபடியால் மறுபடியும் மௌனத்தை யவலம்பிக்க இடமில்லாமலே இருந்தது. இச்சிஷ்யருக்கு ஸ்ரீ ஞானனந்த ஸரஸ்வதீ என்றயோகபட்டம் அளிக்கப்பட்டது. வெகு ஆசார சீலர். நல்ல உபசாந்தர். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடத்திலும் ஸ்ரீ ராமாநந்தரிடத்திலும் விசேஷ குரு பக்தியுள்ளவர்.

## 5. ஸ்ரீ ஸத்யாநந்தர்.

இதற்கு கொஞ்ச காலத்திற்கு முன் கொந்தளம் கணபதி ஸுப்ரஹ்மண்ய அய்யர் என்பவர் பலவிதமான நவீன வாசிப்பிலும் கொள்கைகளிலும் பலவாறாக ஈடுபட்டு அலைந்து பார்த்தும் மனதிற்கு ஸுகமேற்படாமலிருந்துகொண்டிருக்கும் ஸங்கர்ப்பத்தில் ஸ்ரீ ராமாநந்தரை தர்சிக்க ஏற்பட்டது. உடனே அவர் மனம் இவரிடம் பற்றி தானும் அந்நிலையை அடையவேண்டுமென்ற பேரவா ஏற்பட்டது. தனக்கு விவாஹமாகவில்லை யென்றும் தான் ஸம்ரக்ஷணை செய்யவேண்டியவளாக தாயார் மாத்திரமிருக்கிறாளென்றும் அவளையும் பந்துக்கள் பார்த்துக்கொள்வார்களென்றும் ஆகையால் தனக்கு உடனே ஸன்யாஸம் கொடுக்கவேண்டுமென்றும் இவரை வற்புறுத்தலானர். முன் பலவிதமான தவறுதல்கள் ஏற்பட்டிருக்

கக்கூடியதால், கொஞ்சகாலம் ஸமிதாதானம், பிக்ஷாடனம் முதலான பிரஹ்மசர்யாசிரம தர்மங்களை குறைவன்னியில் அனுஷ்டித்து, விசேஷமாக காயத்திரீ பலத்தை ஸம்பாதித்துக்கொண்டு, தாயாரின் அனுமதியையும் பெற்று வர வேண்டுமென்று ஸ்ரீராமாநந்தர் சொல்லியனுப்பிவிட்டார். அப்படியே அவர் கொஞ்சகாலம் பிரஹ்மசர்யாசிரம தர்மங்களை அனுஷ்டித்துவரும் மத்தியில் தாயாரும் காலஞ் சென்றுவிட்டாள். அவர் பிக்ஷாடனுதிக்ரமங்களை யனுஷ்டித்து வந்த பிடிமானத்தைக்கண்டு ஸந்தோஷித்த ஸ்ரீ ராமாநந்தர் ஆசிரமம் கொடுத்துவிடத் தீர்மானித்தார். அவருடைய பூர்வ சரித்திரத்தை தெரிந்த சிலர்கள் பலமாக ஆக்ஷேபித்தார்கள். அவ்வாக்ஷேபணைகளை பொருட்படுத்தாமல் எவ்வளவு தோஷமிருந்தாலும் திருடமான வைராக்கியமிருந்து ஸர்வ பிராயச்சித்த ரூபமான ஸன்யாஸத்தை யவலம்பித்தவுடன் பறந்துவிடும் என்று ஸமாதானம் சொல்லி 1935 அக்டோபர் 17 ல் இவருக்கும் ஸன்யாஸம் கொடுத்தார். சிரவணுதிகளுக்கு வேண்டிய யோக்கியதை அவரிடமில்லாததினுல் சிரவணுங்கமான தண்டாதிகளும் அவருக்கு வேண்டாமென்றும் இவர் நாரத பரிவிராஜக உபநிஷத் ஐந்தாவது உபதேசத்தில் காணப்படும் வைராக்கிய ஸன்யாஸியாவார் என்றும் சொல்லிவிட்டார். இவருக்கு ஸத்யாநந்த ஸரஸ்வதீ என்ற யோகபட்டம் அளிக்கப்பட்டது.

## 6. சரீர அஸௌக்கியம்.

ஏற்கனவே ஸ்ரீ ஸச்சிதாநந்த தீர்த்த ஸ்வாமிகள் செய்துவந்த க்ஷிக்கு இந்த ஸன்யாஸம் மிகவும் பக்க

பலத்தைக் கொடுத்தது. இப்படியிருந்துவந்த மத்தியில் ஸ்ரீ ராமாநந்தருக்கு கொஞ்சநாளாக இருந்துவந்த மூல உபத்திரவம் ஜாஸ்தியாகி கப ஜ்வரமும் கண்டு 1935 நவம்பர் 3 முதல் மிகவும் சிரமப்பட்டார். நவம்பர் 15ம் தேதியன்று போன பிராணனே திரும்பிவந்ததென்று சொல்லும்படியிருந்தது. அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் குணத்திற்கு வந்துகொண்டிருந்தது. இவ்விதமாக இவர் சிரமப்பட்டுக்கொண்டிருந்த ஸமாசாரம் தெரிந்து திருநெல்வேலியிலிருந்து இவருடைய பூர்வாசிரம பந்துக்கள் யாவரும் மஹாதானபுரம் வந்தார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ ஸத்யாநந்தர் செய்த சுசுரூஷை அபரிமிதமானது. வைத்தியமுறையில் மருந்து கிரஹிக்க இவர் மறுத்துவிட்டபோதிலும் ஆஹார நியமங்களையும் மற்றும் அவசியமான ஸௌகர்யங்களையும் அநேக பக்தர்கள் கவனித்து வந்தார்கள். அவர்களில் அவ்வூர் டாக்டர்களாகிய A. ஸாம்பமூர்த்தி அய்யரும் M. P. நடேசய்யரும் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு அளவேயில்லை. பகவத் ஸங்கல்பத்தால் நாளடைவில் குணம் ஏற்பட்டது.

## 7. மீண்டும் யாத்திரை.

வியாதி குணமாய்க்கொண்டு வரும்போதே இனி சரீரத்தில் முன்னிருந்த பலமிராதென்பதை நன்கு உணர்ந்தார். இந்த சரீரத்தை ஸாதனமாக வைத்து இதுவரை ஸாதிக்காத விஷயங்களை இனிமேல் ஸாதிக்கப் போகிறதில்லையென்று தெரிந்து கொண்டார். தன் குரு ஸந்நிதியிலிருந்தும் பலவித காரணங்களினால் மனதில் விக்ஷேபமே ஜாஸ்தியாவதால் மறுபடியும் ஏகாந்த வாஸத்தையே நாட

வேண்டுமென்று தீர்மானித்தார். நதிக்குப்போய் ஸ்நானம் செய்யும்படியான சக்தியேற்பட்டவுடன் இவ்வூரை விட்டுப் புறப்பட்டு விடுகிறதென்று நிச்சயித்துக் கொண்டார். அப்படியே 1936ம் ஷு பிப்ரவரி மாஸம் 22ம் தேதி காலையில் ஸ்ரீ ஸத்யாநந்தரை மாத்திரம் அழைத்துக்கொண்டு யாருக்கும் தகவல் கொடுக்காமல் புறப்பட்டுவிட்டார். மறுநாள் காலையில் மடத்திலுள்ள மதுரைஸ்வாமிகளென்று சொல்லப்படுகிற ஸ்ரீ ஸச்சிதானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளும் மற்றவர்களும் இவரைக் காணுமல் தவித்தார்கள். இவரைத் தேடிவருவோமென்று சிலர்கள் புறப்பட்டு பல வூர்களில் தேடியலேந்தார்கள். முதல்நாள் தர்சனம் செய்து விட்டுப்போன கிருஷ்ணஸ்வாமிக்கும் திருச்சிருப்பள்ளிக்கு ஸமாசாரம் தெரிவிக்கப்பட்டவுடன் அவனும் திருச்சிருப்பள்ளி ஷண்முகஸுந்தரம் செட்டியாரும் மற்றும் சிலரும் வந்து சேர்ந்தார்கள். ஆறுமயிலுக்கப்பால் மாயனூரில் ஸ்ரீ ஸ்வாமிகளிருப்பதாக தகவல் கிடைத்ததும் எல்லாரும் அங்குபோய் தர்சனம் செய்தார்கள். இனி யாத்திரையாகப் புறப்ப்ட்டாய் விட்டதென்று ஒரே தீவிரமாக சொல்லிவிட்டார். வியாதியினுல் ஏற்பட்ட பலஹீனம் இன்னமுமிருந்தபடியால் நியமங்களே அதற்கு தகுந்தபடி வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஊர்திரும்பினுர்கள். மாயனூரில் மார்ச்சு 21வரை தங்கி விட்டு, அக்கரையில் ஸ்ரீராமஸமுத்திரம் என்ற அயலூரில் இவருக்காகவென்று அதிபக்தியுடன் அவ்வூர் மிராசுதாரான A. S. நடேசய்யர் என்ற குப்புஸ்வாமி அய்யர் கட்டி வைத்த மடத்தில்போய் கொஞ்சநாள் தங்கினுர். அங்கும்

மனதுக்கு விக்ஷேபமே ஏற்பட்டுவருவதைக்கண்டு தான் ஆதியில் உத்தேசித்தபடி கொல்லிமலைக்கே போய்விடுவதாக, அங்கிருந்து 1936 மே 21ம் தேதியில் புறப்பட்டு, மத்தியில் சிரம பரிஹாரத்திற்காக மாத்திரம் தங்கிக்கொண்டு வரகூர் மார்க்கமாக 23ம் தேதி கொல்லிமலையேறி, ஸ்ரீ தர்மகோசேசுவரர் என்ற அறப்பளீசுவரர் ஸன்னிதி போய்ச்சேர்ந்தார். முறுங்கை முத்தாக்கவுண்டரும் நாகயநல்லூர் கோபாலய்யருமே வழிகாட்டிக்கொண்டு போனதாகத் தெரிகிறது. மலையடிவாரத்திலிருந்து ஸூர்யோதயத்திற்குமுன் புறப்பட்டு நிற்காமலே நடந்து ஸூர்யன் அஸ்தமித்தபிறகே அவ்வாலயமபோய்ச் சேர்ந்திருக்கிறுர்கள். சரீரத்தை லக்ஷ்யம் செய்யாமல் மனோவேகத்தினலேயே ஸ்ரீ ஸ்வாமிகள் போய்ச்சேர்ந்தாரென்று சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

———

# அத்யாயம் 12.

## கொல்லிமலை.

---

### 1. ஏகாந்தவாஸம்.


கொல்லிமலையில் இவர் தங்கியிருந்த க்ஷேத்திரம் அதிகஹனமான அரண்யத்தின் மத்தியில் அதிரமணீயமான பிரதேசத்தில் அமைந்திருக்கிறது. அதற்கு ஸமீபத்தில் இருக்கிற அக்ரஹாரமான விசுவாம்பா ஸமுத்திரம் பன்னிரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. அதில் எட்டு மைல் தூரம் மலையில் ஏறுவது ரொம்பவும் சிரம ஸாத்தியம். அந்த க்ஷேத்திரத்திற்கு ஸமீபத்தில் ஸ்வச்சமான தீர்த்தத்துடன் ஒரு நதி பிரவஹிக்கிறது. ஆனால் தீர்த்தத்தையுபயோகித்தால் மலை ஜ்வரம் வந்துவிடும் என்கிறார்கள். நதியும் வெகு பள்ளத்திலிருப்பதால் கோவிலில் அபிஷேகத்திற்கு தீர்த்தம் எடுத்துக்கொண்டு போவதுகூட சிரம ஸாத்தியமாயிருக்கிறது. கோவில் பூஜைக்கு அக்கம் பக்கம் கிராமங்களிலிருந்து வந்து போக ஸௌகர்யமில்லாததினால் அங்கு மலையிலேயே தங்கக்கூடியவர்தான் அர்ச்சகர் ஸ்தானத்திற்கு வேண்டியிருக்கிறது. ஸ்ரீ ஸ்வாமிகள் அங்கு போன ஸமயத்தில் ஒரு பாலக்காடு பிராஹ்மணரும் அவர் பையனும் பூஜையை கவனித்து வந்தார்கள். அந்த பிராஹ்மணருக்கு அடிக்கடி ஜ்வரம் ஏற்பட்டு ரக்தசோகை மாதிரி இருந்தது. இன்னம் கொஞ்சநாள் ஜீவித்திருக்க நினைத்தால் மலையைவிட்டு இறங்கித்தான் ஆகவேண்டுமென்ற நிலையில் இருந்தார். அப்படியிருந்தும் ஸ்ரீ ஸ்வா

மிகள் அங்கு வந்து சேர்ந்தது முதல் தன்னால் முடிந்த ஸௌகர்யங்களை செய்து கொடுத்து பிக்ஷைக்கும் ஏற்பாடு செய்து வந்தார். மலையின் மேலே பாலும் பழமும் ஸுலபமாய் கிடைக்குமென்று ஸ்ரீ ஸ்வாமிகள் நினைத்திருந்தது தவறு என்று அங்கு போனவுடன் தெரிந்து, இவ்வர்ச்சகர் கொடுக்கும் பிக்ஷையையே அருந்தும்படி ஏற்பட்டது. அப்படியிருந்தாலும் தன் மனோபீஷ்டப்படி அதிரமணீயமான பிரதேசத்தில் ஏகாந்த வாஸம் கிடைத்ததில் ஸந்தோஷமடைந்து ஒருவித விக்கினமுமன்னியில் பிரணவ த்யானைகபரராய் ஆனந்தமாயிருந்து வந்தார்.

## 2. அங்கும் பிராரப்தம்

கொஞ்சநாள் இப்படியிருந்து வருகையில் அங்கே போயும் பிராரப்த கர்மா கூடவே துயர்ந்துவருமாதலால், இவருக்கும் மலைஜ்வரம் கண்டு மிகவும் கஷ்டப்பட்டார். இது தெரிந்து கிருஷ்ணஸ்வாமி ஜூன் மாஸத்தில் ஒருநாள் போய் தர்சனம் செய்துவந்தான். தன் சரீர ஸ்திதியைப் பற்றி பயப்பட வேண்டாமென்றும் கிரமமாக அங்குள்ள சீதோஷ்ண ஸ்திதிக்கு சரீரம் ஒற்றுவந்துவிடும் என்றும் தைர்யம்சொல்லி யனுப்பிவிட்டார். அப்படியே கொஞ்ச நாளுக்கெல்லாம் ஜ்வரமும் நின்றுவிட்டதாக தெரிந்தது. ஆனாலும் மலையைவிட்டு இறங்கி மலையடிவாரத்திலாவது வந்திருக்கவேண்டுமென்று கிருஷ்ண்ஸ்வாமி கேட்டுக் கொண்டதற்கு "மலையைவிட்டு இறங்குவதற்காக நான் ஏறவில்லை. இனி மனப்பூர்வமாக இறங்குகிற உத்தேசமில்லை. பிரக்ஞாபங்கம் ஏற்பட்டாலும் ஸித்தியாய் விட்டா

டாலும் உங்கள் இஷ்டம்போல் செய்யலாம்'' என்று ஒரே தீர்மானமாக ஸ்ரீ ஸ்வாமிகள் சொல்லிவிட்டார். அதை நினைத்து நினைத்து அவர்களுடைய ஸித்திகாலத்தில் கூடப்போயிருக்க ஸௌகர்யமேற்படாதுபோல் தோன்றுகிறதே என்று கிருஷ்ணஸ்வாமி மிகவும் வருந்தினான். கூடவிருந்து கைங்கர்யம்செய்ய பாக்கியமில்லாமல் போனாலும் கடைசி கைங்கர்யமாவது கிடைக்குமோவென்று அசைர்யப்பட்டு தன் மனோநிலையை சிருங்கேரி ஸ்ரீ மஹா ஸன்னிதானத்திற்கு லிகிதமூலமாய் தெரிவித்துக் கொண்டான் அதற்கு வந்த பதிலில் "ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் தற்கால தீர்மானம் அவருடைய ஆசிரமத்திற்கும் ஸங்கல்பத்திற்கும் சரியானதாக இருந்த போதிலும் உங்களை உத்தேசித்து வியஸனப்படும்படியாக விருக்கிறது. அவர் ஸன்யாஸம் செய்யும் காலத்திலேயே 'தனக்கு ஒருவருமில்லை. தான் ஒருவருக்கும் இல்லை. தன் சரீரத்தின்பேரில் உள்ள அபிமானத்தை எல்லோரும் விட்டுவிடவேண்டியது' என்று மஹாஜனங்கள் முன்பாக சொல்லியிருக்கிறார். அப்போது சொன்ன சபதங்களுக்கு அர்த்தப்பிராப்தி காலம இப்போதுதான் வந்ததாக நாம் நிச்சயித்துக்கொண்டு அவருடைய ஸ்தூல சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் அபிமானத்தை விட்டுவிடவேண்டியதே தவிர வேறேயில்லை...............தர்ம சாஸ்திரங்களையும் பெரியவர்களுடைய ஆசாரத்தையும், விசாரிக்கிறபோது ஸ்ரீ ஸ்வாமிகள் மலையின்பேரிலேயே ஸித்தியடைந்தால் பிறகு அந்த களேபரத்தைப் பார்த்தவர்கள் லௌகிகமாக பூமியில் அடக்கம் செய்தாலும் செய்யலாம். யாரும்



மஹாதானபுரத்தில்
ஸ்ரீ நிலமாவுமடம் ஸ்வாமிகளின் அதிஷ்டானம், 1939.

பாராதபடி வனமிருகங்கள் சாப்பிட்டுப்போனாலும் அது வும் சாஸ்திரீயமேதான். அல்லது மலையைவிட்டு கீழே கொண்டுவந்து சிரத்தையுள்ளவர்கள் யாராவதும் ஸமந்த்ரக மாகவோ மந்த்ரமன்னியிலேயோ பூமியில் அடக்கம் செய்துவிடலாம். நீங்கள் நேரில் கஷ்டப்பட்டுக்கொண்டு அவ்விடத்திற்குப் போகவேண்டுமென்கிற நிர்பந்தமில்லை.''

என்றெழுதியிருந்தபோதிலும் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் ஸ்திதியைப்பற்றி அடிக்கடி கிருஷ்ணஸ்வாமி விசாரித்து வந்தான்.

அரப்பளீசுவரர் ஆலயத்தில் பூஜை செய்துவந்த பிராஹ்மணர் சிவதிவிஜரல்ல. பாலக்காடு பக்கத்திலிருந்து அகஸ்மாத்தாக வந்து அங்கேயே தங்கிவிட்டார். அந்த மலைக்காட்டு மத்தியில் அதிகமாக அவரிடத்தில் ஆசாரத்தை யெதிர்பார்க்கவும் ஸாத்தியமில்லை. ஆனால் நம் ஸ்வாமிகளிடத்தில் விசேஷ பக்தியை செலுத்தி அவர்களுக்கு பிக்ஷையையும் அளித்து வந்தார். ஸ்ரீஸ்வாமிகள் தேவகிரி, மஹாதானபரம் முதலான இடங்களில் இருந்த ஸமயங்களில் லால்குடியிலிருந்து கௌரியம்மாள் என்பவளும், சிறுதூரிலிருந்து லக்ஷ்மியம்மாள் என்பவளும் அடிக்கடி இவர்களை மிக பக்தியுடன் வந்து ஸேவித்திருந்தார்கள். அவ்விருவர்களும் அமங்கலிகள். லௌகிக ஸௌகர்யமும் கொஞ்சமிருந்தபடியால் இந்த ஸ்ரீஸ்வாமிகளையே அண்டி கிரார்த்தர்களாகவேண்டுமென்று நினைத்திருந்தார்கள். இப்பொழுது ஸ்ரீஸ்வாமிகள் ஏகாந்த வாஸத்தை யுத்தேசித்தே கொல்லிமலைக்குப் போனபோதிலும், அங்கும் ஜ்வரம் வருகிறதென்றும் பிக்ஷை அவ்வளவு ஸௌகர்

யமாயில்லை யென்றும் இவர்கள் கேழ்விப்பட்டவுடன், தாங்களே அங்கே போய் பிக்ஷை தயாரித்துக் கொடுப்பதாக உறுதிகொண்டு, மலையிலேயே தங்கிவிடவேண்டியதற்கு வேண்டிய ஸௌகர்யங்களை செய்துகொண்டு போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் அந்த ஸமயம் ஸ்ரீஸ்வாமிகள் அநேகமாய் கஞ்சியையே கிரஹித்து வரக்கூடிய ஸ்திதியிலிருந்தார். அன்னபிக்ஷை யெடுத்துக்கொள்ளும்படி ஏற்பட்டவுடன், தனக்காகவென்று இவர்கள் பாகம் செய்து கொடுப்பது உசிதமில்லையென்று சொல்லிவிட்டார். அவ்விருவர்களில் லக்ஷ்மியம்மாளுக்கு முதலில் பலமாக ஜ்வரம் கண்டு அங்கிருக்கமுடியாமல் மலையைவிட்டு இறங்கி ஊர் போய்ச்சேர்ந்தாள். கௌரியம்மாள் மாத்திரம் என்ன வந்தாலும் திரும்புவதில்லை யென்ற பிடிவாதங்கொண்டிருந்தாள். ஆனால் அவளுக்கும் அடிக்கடி ஜ்வரம் ஏற்பட்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தாள். ஸ்ரீஸ்வாமிகளுக்கு பிக்ஷை போடும் நோக்கத்துடன் போனவிடத்தில் அதற்குமிடமன்னியில் தானும் அசக்தையாக ஏற்பட்டு கவலைப்பட வேண்டிய ஸ்திதியிலிருந்து வந்தாள். ஜ்வரம் நாளுக்குநாள் மிகவும் ஜாஸ்தியாகிவிட்டபடியால் அவளும் ஒரு டோலி ஏற்பாடு செய்துகொண்டு மலையைவிட்டு கீழே இறங்கி ஊருக்குப்போய் உடம்பை ஸ்வஸ்தப்படுத்திக் கொண்டு திரும்பலாமென்று நினைத்து ஒரு நாள் மெதுவாக கீழே இறங்கிவிட்டாள். இதற்கு கொஞ்ச நாள் முன்னமேயே அவ்வர்ச்சகர் இனி தன்னால் மலையில் தாமதிக்க முடியாதென்று உணர்ந்து தன் பையனை மாத்திரம் மலையில் வைத்துவிட்டு இறங்கிவிட்டார். ஆகையால் மலையில்

ஸ்ரீஸ்வாமிகளைத் தவிர அந்த சிறு பையனும் கோவில் பல வேலைக்காரர் இரண்டு மூன்று கவுண்டர்களும்தான் இருந்தார்கள். மறுபடியும் ஏகாந்த வாஸம் சித்தித்த தென்று ஸ்ரீஸ்வாமிகள் ஸந்தோஷித்தார். சில நாள்கள் சென்று பாலக்காட்டிலிருந்து இன்னொரு பிராஹ்மணரும் அர்ச்சகராக வந்து சேர்ந்து இவரிடம் மிக ஈடுபட்டவராக இருந்து வந்தார்.

## 3. தேஹம் துறத்தல்.

தன்னால் இனி இந்த லோகத்திலிருந்து ஸாதிக்கவேண் டிய கார்யம் யாதொன்றுமில்லையென்று தீர்மானித்துக் கொண்டார். பிக்ஷையை நிறுத்தின காலம் முதல் கொஞ் சம் அவலும், தீர்த்தமுமே கிரஹித்து வந்தார். அங்குள்ள வர்கள் வெறும் அவல் உப்பாவது, வெல்லமாவது இல்லா மல் சாப்பிட்டால் போதாதென்று சொல்லி மிகவும் சிரமப் பட்டு கொஞ்சம் பால் ஸம்பாதித்துக் கொடுப்பார்கள். பாலில் ஊரவைத்து அவலை கொஞ்ச நாள் கிரஹித்து வந் தார். இதன் மத்தியில் மறுபடியும் அடிக்கடி ஜ்வரம் தோன்றி மறைந்துகொண்டிருந்தது. முன் சரீரத்திலுள்ள காம்பீர்யம் குறையவாரம்பித்தது.

முன் சொல்லியபடி இவரால் இயற்றப்பட்ட ஸம்ஸ்கி ருத கிரந்தங்களை சேர்த்து முக்திமார்க்கானு சிந்தனம் என்று பெயரிட்டு அச்சிடப்பட்ட புஸ்தகத்தின் முதல் பிரதி அச்சுக்கூடத்திலிருந்து வெளிவந்தவுடன் இவரு டைய பார்வைக்காக கொல்லிமலைக்கு அனுப்பப்பட்டது. புதிய அர்ச்சகரை கூடவைத்துக்கொண்டு கொஞ்ச தூரம் பார்த்துவிட்டு "இன்று கொஞ்சம் சிரமமாயிருக்கிறது,

நாளை பாக்கி பார்ப்போம்" என்று சொல்லிவிட்டார். மறுநாள் அதாவது 1936 டிஸம்பர் 25 தாத்ரு வருஷம் மார்கழி மாஸம் 11-ம் தேதி மார்க்கசீர்ஷ சுக்லதிரயோதசி வெள்ளிக்கிழமை காலையில் இவர் வழக்கம்போல் வெளியில் வாராததைக்கண்ட அங்குள்ளவர்கள் இவர் தங்கியிருந்த அறையில் போய் பார்த்தார்கள். தரையில் படுத்திருக்கக் கண்டார்கள். திடுக்கிட்டு "ஏன் இப்படி?" என்று வினவினார்கள். "எழுந்திருந்தேன். அப்படியே விழுந்து விட்டேன். அப்புறம் எழுந்திருக்க முடியவில்லை" என்று சொன்னார். பிறகு கைத்தாங்கலாக தூக்கிவிட்டார்கள். பேச்சு நின்றுவிட்டது. பிரக்ஞை நன்றாகவிருந்தபடியால் ஸித்திகாலம் ஸமீபித்துவிட்டதென்று தானே மௌனமாயிருந்தாரா, பேச சக்தியற்றிருந்தாரா, என்று சொல்ல முடியவில்லை. இந்த ஸ்திதியைக்கண்டு உடனே விசுவாம்பா ஸமுத்திரம் கிராமத்திற்கு சொல்லியனுப்பி அங்கிருந்து திருநெல்வேலிக்குத் தகவல் அனுப்பும்படி சொல்ல ஒரு மனுஷியனை அங்குள்ளவர்கள் அனுப்பிவிட்டு ஸ்ரீஸ்வாமிகள் கூடவே இருந்துவந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக பிராணன் ஒடுங்கிக்கொண்டே வந்தது. பிரக்ஞை மாத்திரம் கடைசிவரை கொஞ்சமேனும் தவறவேயில்லை. தியானத்திலிருக்கும் நிலையிலேயே பார்வை இருந்து வந்தது. அன்று ராத்திரி ஒன்பது மணி சுமாருக்கு விதேஹ கைவல்யம் அடைந்தார்.

## 4. ஸமாதிப்பிரதிஷ்டை.

இவருடைய தேகஸ்திதி நம்புவதற்கிடமில்லாமலிருக்கிறதென்று கேள்விப்பட்ட விசுவாம்பா ஸமுத்திரம் கிரா

ஹஸ்தரான V. P. ராமஸ்வாமி அய்யர் உடனே துரையூர் போய் திருநெல்வேலியில் கிருஷ்ணஸ்வாமிக்கு தந்தி கொடுத்துவிட்டு ஊருக்குத் திரும்பினவுடன் மலைக்கு புறப்பட்டுப்போனார். இவர் அங்கு போய் சேருவதற்கு வெகு நாழிகைக்கு முன்னமேயே ஸ்ரீ ஸ்வாமிகள் ஸித்தி யாய்விட்டபடியால் கோவிலுக்கு வெளியில் ஒரு கட்டிடத் தில் இவருடைய சரீரத்தை உட்காரவைத்து அங்குள்ள வர்கள் பந்தோபஸ்தாக காத்துக்கொண்டிருப்பதைக்கண் டார். மிகவும் வியஸனமடைந்தார். தான் இவ்வளவு ஸமீ பத்திலிருந்தும் இவரை முன்னமேயே தன் கிராமத்திற்கு அழைத்துப்போக இடமில்லாமல் போய்விட்டதே என்று துக்கித்தார். மலையின் பேரில் மேல் நடக்கவேண்டிய கார் யங்களுக்கு ஸௌகர்யமில்லாததினால் இந்த சரீரத்தை யாவது கீழே எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று சொன்னார். அதற்கு அங்குள்ளவர்கள் "நாங்கள் கொஞ்ச நாட்களுக்கு முன்னமேயே, தாங்கள் இங்கு நிர்ஜனமான பிரதேசத்தில் இருந்து வருகிறீர்களே, திடீரென்று ஸித்தி யாய்விட்டால் நாங்கள் நடந்துகொள்ளவேண்டியது எப்படி, என்று ஸ்ரீ ஸ்வாமிகளையே கேட்டோம். அதற்கு அவர்கள், இதற்கு விசாரப்படவேண்டாம், இங்கேயே கோவிலுக்கு வெளியில் அமந்த்ரகமாக நீங்களே அடக்கம் செய்து விடுங்கள், அப்புறம் கிராமத்திற்கும், திருநெல்வேலிக்கும் தகவல் கொடுத்தால் போதும், என்று சொல்லியிருக் கிறார்கள். ஆகையால் அப்படியேதான் நாங்கள் செய்யப் போகிறோம்" என்று சொல்லிவிட்டார்கள். ராமஸ்வாமி அய்யர் எவ்வளவு சொல்லிப்பார்த்தும் சரீரத்தை யெடுத்

துக்கொண்டுபோக அவர்கள் ஸம்மதிக்காதபடியால் தாங்க முடியாத மனோவருத்தத்துடன் மலையிறங்கி வந்துவிட்டார்.

திருநெல்வேலிக்குக் கொடுத்த தந்தி கிருஷ்ணஸ்வாமிக்குக் கிடைத்தவுடன் தன் தம்பி சங்கரனையும் வெங்கடேசுவர கனபாடிகளென்பவரையும் அழைத்துக்கொண்டு ராத்திரியே மோட்டார்கார் வைத்துக்கொண்டு நேறே காலையில திருச்சினாப்பள்ளிக்கு வந்து சேர்ந்தான். அங்கு அதிக தாமதமன்னியில் ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு தன் தங்கை புருஷனை ரங்கஸ்வாமியையும், அகஸ்மாத்தாக கொல்லிமலைக்கே புறப்பட்டு வந்திருந்த அத்யந்த பக்தரான தஞ்சாவூர் வக்கீல் V. S. வெங்கடராமய்யரையும், அழைத்துக்கொண்டு மத்தியானம் இரண்டு மணி சுமாருக்கு விசுவாம்பா ஸமுத்திரம் வந்து சேர்ந்தான். மலையிலிருந்து ஒரு ஸமாசாரமும் கிடைக்கவில்லையென்றும் மலைக்குப்போன ராமஸ்வாமி அய்யர் இன்னமும் திரும்பவில்லையென்றும் தெரிந்து உடனே இவர்களெல்லாரும் மலைக்குப் புறப்பட்டார்கள். கொஞ்சதூரம் போனதும் மலையிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்த ராமஸ்வாமி அய்யரையும் கோவில் அர்ச்சகரால் அனுப்பப்பட்ட இரண்டு ஆட்களையும் கண்டு மலையின்மேல் நடந்திருந்த ஸம்பவங்களைக்கேட்டு மிகவும் துக்கித்தார்கள். எப்படியும் மலைக்குப்போய் வருவது அவசியமென்று அந்த ஆட்களையே வழிகாட்டவழைத்துக்கொண்டு சுமார் அர்த்த ராத்திரி ஸமயத்திற்கு கோவில் போய்ச்சேர்ந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளின் மூர்த்தியை தர்சித்து ஆருத்தியாம் அடைந்தபோதிலும் மேல் நடக்கவேண்டிய கார்யங்களை

உத்தேசித்து மனதை தைர்யப்படுத்திக்கொண்டார்கள். அங்குள்ளவர்கள் முதலில் ராமஸ்வாமி அய்யரிடம் சொன்ன படியே இவர்களிடமும் சொன்னார்கள். அதற்கு கிருஷ்ண ஸ்வாமி "ஸ்ரீஸ்வாமிகள் உங்களிடம் சொல்லிவிட்டுப் போனது நியாயமே. ஸம்ஸ்காரங்களை மந்திரவத்தாக செய்வதற்கு யாரும் இல்லாத பக்ஷத்தில் அவ்விதம் செய் தால் தவறில்லை. ஆனால் மந்திரவத்தாகவே செய்யக் கட மைப்பட்ட நான் வந்த பிறகு அது மாதிரி அடக்கம் செய் தால் தோஷமேயாகும்" என்று சொன்னதின்பேரில் "உரி மையுள்ள தாங்கள் வந்துவிட்டபடியால் இனி தங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்" என்று சொன்னார்கள். உடனே சரீரத்தை மலையிலிருந்து கீழே இறக்கவேண்டிய தற்கு டோலி முதலிய ஸௌகர்யங்களை அவர்களே செய்து கொடுத்து தாங்களும் கிராமத்திற்கு கூடவே வந்தார்கள். கோவிலைவிட்டு காலை ஐந்து மணிக்குப்புறப்பட்டு மத்தியா னம் இரண்டு மணி சுமாருக்கு விசுவாம்பா ஸமுத்திரம் கிராமம் வந்து சேர்ந்தார்கள். உடனே கிரமப்படி அபிஷே காதிகளை செய்து வைத்து அஸ்தமனத்திற்குள்ளாக கனனக்கிரியைகள் நடந்து அவபிருதஸ்நாநம் நடந்தது. பிறகு ஸந்தியாவந்தனம் செய்து வேதிகையில் பூஜை யதாக் கிரமமாக ஆரம்பிக்கப்பட்டு ராத்திரி பத்துமணிக்கு தீபா ராதனை நடந்து முடிவடைந்தது. மலையிலிருந்து வந்திருந்த சுமார் இருபத்தைந்து ஆட்களும் விசேஷ பக்தியுடன் தர்சனம் செய்து பிரஸாதம் பெற்று ராமஸ்வாமி அய்யர் கிரஹத்திலேயே சாப்பிட்டுவிட்டு விடைபெற்றுக்கொண்டு திரும்பிப்போனார்கள். அக்கம் பக்கம் கிராமத்திலுள்ள

அநேக ஜனங்களும் வந்து இந்த ஸேவையில் ஈடுபட்டார்கள். திரயோதசியில் ஸித்தியடைந்தபோதிலும் மேலே கண்ட காரணங்களினால் பௌர்ணமியில்தான் கனனம் செய்யப்பட்டது. இரண்டு தினங்களுமே விசேஷ புண்ய தினங்களாய் அமைந்தன. இவ்விதம் இரண்டு நாள் தாமத மேற்பட்டும் சரீரத்தில் மலையிலிருந்து இறக்குவதிலாவது அபிஷேகாதிகள் செய்வதிலாவது ஒருவித சிரமமும் இல்லாமல் அங்கங்கள் அதிமிருதுவாய் அதிபரிசுத்தமாய் எவ்வித விகாரமுமற்றிருந்தன. கண்களும் அர்த்தோன் மீலிதமாக த்யான நிலையிலிருந்ததைப் பார்த்து யாரும் ஆச்சர்யப்படும்படி இருந்தன. கொல்லிமலையில் ஸ்ரீ ஸ்வாமிகள் தங்கியிருந்தவிடத்தில் பிரவஹிக்கிற பஞ்சநதி என்ற நதியே விசுவாம்பா ஸமுத்திரத்திலும் பிரவஹிக்கிறது. ஊருக்கு மேல்புரமாக நதிக்கரையில் இருக்கிற பிள்ளையார் கோவிலுக்கு தென்மேற்குப்பக்கத்தில் ஸமாதி வேதிகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## 5. மஹாபூஜாதிகள்.

மறுநாள் காலையில் திருச்சினாப்பள்ளி, மஹாதானபுரம் திருநெல்வேலி முதலான இடங்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது. இவரிடம் ஸன்யாஸம் பெற்ற ஸ்ரீ ஞானாநந்த ஸ்வாமிகள் மஹாதானபுரத்திலிருந்து உடனே புறப்பட்டு வந்துவிட்டார். மற்ற இரண்டு புத்திரர்களான கோபால ஸுந்தரனும் விசுவநாதனும் அவர் கூட வந்தார்கள். இரண்டாம் நாள் இரண்டு வேளை பூஜையையும் மூன்றும் நாள் காலை பூஜையையும் கிருஷ்ணஸ்வாமியே செய்து

விட்டு மேல் நடக்கவேண்டிய கார்யங்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து தம்பிகள் முதலானவர்கள் ஸஹிதம் திருநெல்வேலிக்குப் புறப்பட்டுவிட்டான். ஸ்ரீ ஞானாநந்த ஸ்வாமிகளவர்களே மூன்றும் நாள் ராத்திரி பூஜை முதல் மஹா பூஜை வரையில் எல்லாக் கார்யங்களையும் அதிசிரத்தையுடன் செய்து தன் குருநாதரின் விசேஷ அனுக்ரஹத்திற்குப் பாத்திரரானார். மறுநாள் ஆராதனையையும் செய்துவிட்டு மஹாதானபுரம் திரும்பிப்போனார். கிருஷ்ணஸ்வாமியும் நேரே திருநெல்வேலிக்கு வந்து மஹாபூஜை ஆராதனை வரையுள்ள ஸகல கார்யங்களையும் யதாக்கிரமமாக செய்து முடித்தான். மஹாதானபுரத்திலிருந்து வந்திருந்த சில பக்தர்கள் விசுவாம்பா ஸமுத்திரம் ஸமாதி வேதிகையிலிருந்து கொஞ்சம் மிருத்திகை கிரஹித்துக்கொண்டு மஹாதானபுரத்திற்குப்போய் அங்கேயும் அதிகோலாஹலமாய் ஆராதனம் செய்தார்கள். முன் ஓர் இடத்திலிருந்து அனுக்ரஹம் செய்து வந்த இப்பெரியார் இப்பொழுது ரூபமற்று எங்கும் நிறைந்திருக்கும் பிரஹ்ம சைதன்யத்துடன் கலந்துவிட்டபடியால் எங்கிருந்து ஆராதித்தாலும் உசிதமேயாகும் என்று எல்லோரும் நினைத்தார்கள், விசுவாம்பாஸமுத்திரத்தில் நடந்த இந்த மஹாயக்ஞத்தில் ராமஸ்வாமி அய்யர் எடுத்துக்கொண்ட பரிசிரமத்திற்கும் அவர் செய்துவந்த அதிதிஸத்காரத்திற்கும் எதையும் உபமானம் சொல்வதற்கில்லை. ஸ்ரீஸ்வாமிகளின் ஸஞ்சாரக்கிரமத்தில் இவ்வூர் சேர்ந்திராததினால் இவரை முன் பார்த்திராதவர்களே ஜாஸ்தி. அப்படியிருந்தும் இக்கைங்கர்யத்தில் அவர்கள் எல்லோரும் ஏகமனதுடன் ஈடுபட்டதற்கு அவர்களுடைய ஸ்வபாவ நற்குணமும் பெரியோரி

டமுள்ள விசுவாஸமுமே காரணமாகும். நித்தியபூஜைக்கும் அவர்களே ஏற்பாடு செய்துவருகிறதாகத் தெரிகிறது.


ஸ்ரீஸ்வாமிகளவர்கள் ஸித்தியான விஷயம் நெலமாவு மடத்திற்குத் தெரியப்படுத்தியதில் தனக்கு அதிபால்யத்தில் ஸன்யாஸம் கொடுத்து உபதேசம் செய்துவைத்த இவரை மறுபடியும் தர்சிக்க இடமில்லாமல் போய்விட்டதேயென்ற வருத்தம் ஒருபக்கமிருக்க அம்மடம் ஸ்ரீஸ்வாமிகள் தன் ஆசிரம குருவான இவருக்கு கிரமப்படி ஆராதனை செய்தார்கள். ஸ்ரீமஹா ஸன்னிதானத்திற்குத் தெரிவிக்கப்பட்டவுடன் ஆராதனை வகையரு கார்யங்களுக்கு ஸ்ரீசாரதா சந்திர மௌளீசுவர பிரஸாத ரூபமாக ஐம்பது ரூபாய் அனுப்பிக் கொடுத்ததுடன் அங்கிருந்து கிருஷ்ணஸ்வாமிக்கு அனுப்பிய கடிதத்தில் "முக்கியமாக இந்த உலக வியவகாரத்தைத் துறந்து ஸதா பகவத் தியானம் செய்துகொண்டு ஆத்மாராமராயிருந்த ஸ்ரீராமாநந்த ஸ்வாமிகள் அவர்கள் கைவல்யமடைந்ததற்கு தாங்கள் யாரும் ஜாஸ்தி வியஸனப்படுவதற்கு அவகாசமில்லை என்ற சங்கதி தங்களைப்போலொத்தத் தெரிந்தவர்களுக்கு எழுத வேண்டியதவசியமில்லையல்லவா? சாஸ்திர ரீதியாகக்கூட இதற்கு அவகாசமில்லை என்று காணவருகிறது" என்று ஆறுதல் சொல்லியனுப்பினார்கள். இவ்விதமாக யாராலும் போற்றப்பட்டுவந்த ஸ்ரீராமாநந்தர் அகண்ட சைதன்னியத்துடன் கலந்து பரிபூர்ணரானார்.

## 6. சரித்திர பலன்

ஒரு பெரியாரின் சரித்திரத்தை எழுதுவதென்றால், பால்யத்திலேயே விசேஷ மஹிமையைக் காட்டியதாகவும்,

அநேக அத்புதஸம்பவங்கள் நடந்ததாகவும், அநேகம்பேர்கள் அவர்களை நாடி பலவிதமான அனுகூலங்களைப் பெற்றதாகவும், அபாரமான சக்திகளும் ஸித்திகளும் ஏற்பட்டிருந்ததாகவும், மற்றும் விதமாய் இவர் ஸாமான்ய மனுஷியர் ஜாபிதாவில் சேர்க்கக்கூடியவரல்லவென்று காட்டக்கூடிய வர்ணனைகளும் சொல்வதே வழக்கமாயிருந்து வருகிறது. அதுவும் கொஞ்சகாலமாக இவ்வழக்கம் முற்றிக்கொண்டு வருகிறது. வாஸ்தவ ஸம்பவங்களுடன் பக்திப்பெறுக்கால் கல்பிக்கப்பட்ட ஸம்பவங்களை கலந்தாலும் பாதகமில்லையென்று சிலர்கள் அபிப்ராயப்படுகிறார்களென்றும் தெரிகிறது. தர்மத்தை நிலைநாட்டி வழிகாட்ட வந்த ஸ்ரீராமர் வாஸ்வதத்தில் அமானுஷராக இருந்தும் தான் மனிதனென்றே ஆசரணையிலும் ஸுகதுக்கானுபவங்களிலும் காட்டி வந்திருக்கிறார். தன்னை மனிதன் என்றே பாவிக்கிறேன் என்றும் வியக்தமாய் சொல்லியிருக்கிறார். மனிதர்களுக்கு வழிகாட்ட மனிதர் சரித்திரமே உபயோகப்படும். அதிலும் ஸாமான்ய மனிதராக இருந்து ஸம்ஸார சுழலில் அகப்பட்டுக்கொண்டு அதிலிருந்து எப்படியும் விடுதலையடைய வேண்டுமென்று நினைத்து அதற்காக பாடுபட்டவர் சரித்திரம்தான் நமக்கு வேண்டும். ஒருவித தோஷமுமற்று விசேஷமாக ஈசுவரானுக்கிரஹத்தினால் கைதூக்கி விடப்படும் பக்தர்கள் வெகு சிலரே. கதியற்று உழன்றுகொண்டு கிடப்பவரே அனந்தம். இவர்களின் மத்தியில் யாரேனும் பவக்கடலைத் தாண்டியிருக்கிறாரென்றால் நமக்கும் கொஞ்சம் தைர்யமேற்படும். நாமும் பிரயத்தினம் செய்து பார்க்கலா

மென்று தோன்றும். இங்கிலீஷ் வாசிப்புக்கும் ஸந்யாஸத்திற்கும் எவ்வளவு தூரம், பணத்தில் உழலும் வக்கீல் உத்யோகத்திற்கும் தானதர்மத்திற்கும் எவ்வளவு தூரம், குழந்தை குட்டிகளுடைய அபிமான பாசக்கயறுக்கும் ஞானத்திற்கும் எவ்வளவு தூரம், ஔபாஸனம்கூட செய்ய சக்தியற்றவனுக்கு மோக்ஷம் எப்படி கிட்டும், என்று இதுமாதிரி காரணத்திற்குமேல் காரணம் கல்பித்துக் கொண்டு எவ்வித பிரயத்தினமும் செய்யத் தயாராயில்லாமல் நாமே நம்மை அதைர்யப்படுத்திக்கொண்டு வருகிறோம். நாகரிகம் முற்றியதாகச் சொல்லிக்கொள்ளும் இக்காலத்திலும்கூட சாஸ்திரத்திலும் குருவாக்கியத்திலும் திருடமான விசுவாஸமும், எப்படியும் இனி ஜன்மமடையாமலிருக்க வழிதேட வேண்டுமென்ற பிடிவாதமும், இருக்குமேயானால் எதற்கும் அஞ்சவேண்டாம் என்பதே இச்சரித்திரத்திலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். நடந்த ஸம்பவங்களை அப்படி அப்படியே கண்டிருக்கிறேன். அந்தந்த காலங்களில் இருந்திருக்கக்கூடிய மனோநிலைகளைக்கூட எடுத்துக்காட்டாமல் வாசிப்போர் ஊஹித்துக்கொள்ளட்டும் என்று விட்டிருக்கிறேன். இது பொழுது போக்குவதற்காக எழுதப்பட்ட கதையல்ல. பாஷாபிவிருத்திக்காக கல்பிக்கப்பட்ட வர்ணனையோ வியாஸமோ அல்ல. ஸ்ரீராமாநந்தரிடம் ஈடுபட்டு அவருடைய லௌகிக சரித்திரம் தெரியவேண்டுமென்று கேட்டுக்கொண்ட சில நண்பர்களின் வேண்டுகோளின்பேரில் எழுதப்பட்டது. ஒவ்வொருவருடைய கர்மகதியும் பூர்வவாஸனையும் தனித்



மஹாதானபுரத்தில்
ஸ்ரீ ராமாநந்தர் ஆலயம்

தனியாகவே யிருப்பதால் இச்சரித்திரத்தைப் பார்த்து விட்டு இவர் நடந்து கொண்டபடி நாமும் நடப்போமென்று ஆரம்பித்தால் நடக்கவும் நடக்காது, ஸபலமுமாகாது. அவரவர்கள் தனித்தனியே கஷ்டப்பட்டு மனமுருகி ஒரு குருநாதரையடைந்து அவர் சொல்படிநடந்து வரவேண்டுமென்றும், இரண்டற்ற ஒன்றை நாடும் மோக்ஷமார்க்கத்தில் அக்குருவும் கொஞ்சதூரம் தான் வழிகாட்டி வருவாரென்றும், அப்புறம் தானே தனித்திருந்து தடுமாற்றமன்னியில் நிர்பயமாய் மெல்ல மெல்லச் சென்று கடைப்பிடியை கைபிடிக்க வேண்டுமென்றும், இது முதலான சாசுவதமான தர்மதத்வங்களே இச்சரித்திரத்திலிருந்து வெளியாகும். அவ்விதம் ஒவ்வொருவரும் கடைத்தேறுமாறு பிரயத்தினம் செய்யவேண்டிய தைர்யத்தையும் ஸகல தேவதாஸ்வரூபியாயும் ஆசார்யரூபியாகவுமிருக்கிற பகவானே கொடுத்து அருள்புரிவாராக!

WORKS OF

# SRI RAMANANDA SARASVATI SVAMINAH

## MUKTIMARGANUCHINTANAM.

In *Sanskrit*, being a collection of his writings concerning mainly the stages in the attainment of Sadyo Mukti and Krama Mukti. [Rs. 2—0—0.

## DHARMA VIMARSANAM.

In *Tamil*, being a collection of his writings while at Devagiri on various topics of Dharma, Pravritti and Nivritti. [Out of Stock]. [Rs. 2—0—0.

## UTTARADI SVAMI VADA SAMADHANAM.

In *Tamil*, being a refutation seriatim of some of the objections raised against the Advaita Doctrine. [Not for Sale.

## THE HINDU IDEAL.

In *English*, being the revised and enlarged edition of Atma Vidya, published by him in his Purvasrama. It aims at an enunciation of the characteristics of the Hindu system of thought and practice and deals incidentally with many current problems which have any bearing on our religion. His miscellaneous writings also have been incorporated herein. [Rs. 3—0—0

Copies can be had of

The Madras Law Journal Press, Mylapore, Madras.
R. Krishnaswami Aiyar, Advocate, Tinnevelly.

Works of
SRI RAMANANDA SARASVATI SVAMINAH.

*Some opinions on the first Edition.*

The book contains discourses explaining some of the salient points, philosophical and practical, relating to Atma Vidya as understood by Advaitins. In this age of growing materialism, a book of this kind must be welcome to all genuine lovers of the old Vedic Religion of India — *The Hindu.*

Laudable attempt to explain from first principles the processes that the mind of man should go through in order to be prepared for the study and knowlege of the great Self — *United India and Native States.*

Beautiful and most interesting book. I am inclined to believe that it is the best of the many modern books written by Hindus on the subject — *Dr. F. Otto Schrader, Adyar.*

A very valuable contribution to the spiritual literature of modern India — *T. S. Nellayappa Sastri, B. A., L. T.*

Interesting and suggestive — *Prof. K. Sundararama Aiyar, M. A., Kumbhakonam.*

A lucid, intelligible and at the same time learned treatise on a very difficult subject — *G. Gangadhara Somayajulu, M. A., B. L., District Judge.*

To all thoughtful souls, the book would, I think, serve as a key to the solution of many difficult problems in life — *M. B. Narayanaswami Aiyar, B.A., B.L., Sub Judge.*

POPULAR PRESENTATION SERIES
By R. KRISHNASWAMI AIYAR, M. A., B. L.

## I. THOUGHTS FROM THE VEDANTA.

This is a philosophical consideration of metaphysical questions handled in an original way. It considers the problems in the light of Vedantic thought and displays much depth of thinking and originality of philosophical presentment—*The Prabuddha Bharata.*

The author has successfully attempted to bring out the basic principles of the Vedanta philosophy in simple language...... Quite handy and reliable.—*The Vedanta Kesari.*

This is by far the most popular book of its kind that has ever been published—*The Kalpaka.*

A most valuable study for our young men... A boon to all who desire to learn the elements of the Vedanta without being bored by technicalities—*Prof. K. Sundararama Aiyar, M. A.*, Kumbakonam.

The best book on Vedanta philosophy—*Dr. Ram Narayana*, Delhi.

A very lucid exposition in the simplest possible language of some of the most difficult philosophical problems which man has tried to tackle from remote antiquity—*Pramatha Nath Bose*, Ranchi.

Really a great work on Vedanta. It is inimitable. *G. Gangadhara Somayajulu*, M.A., B.L., District Judge.

It contains in a brief compass all the vital elements of our Vedanta—*Dewan Bahadur K. S. Ramaswami Sastri, B.A., B.L.*, District Judge.

It is an attempt not only to present the fundamentals of the Vedanta in a very popular style as it professes to do but also to bring out the full ethical value of Abhyasa on which our Sages justly lay every stress.—*Rao Bahadur P.T. Subrahmanya Aiyar*, Salem.

It seems to me it will serve well the purpose you had in view of a popular presentation of some of the chief topics of that philosophy—*Sir John G. Woodroffe, Kt.*, High Court Judge, Calcutta.

POPULAR PRESENTATION SERIES

By R. KRISHNASWAMI AIYAR, M. A., B. L.

## 2. THOUGHTS FROM THE GITA.

The exposition of the omnipresence of God from the Vedantic standpoint is charming and complete. .. We safely recommend the book to the public as a faithful introduction not only to the Gita but to the Advaita philosophy in general.— *The Prabuddha Bharata.*

Clearly and concisely written.. He interprets the Gita from the viewpoint of the absolute monist but he develops his theme without attacking others who differ from him.— ***The Theosophist.***

It combines lucidity with conciseness in its presentation of the Advaita interpretation of the Gita. To present the non-dualist system of thought in broad outline, to link its various phases with appropriate verses from the Gita, to take the reader step by step almost by imperceptible stages in this Samanvaya—this is the task attempted by our author with a remarkable degree of success— ***The Hindu.***

The subject is clearly analysed and explained with many illustrations Such of the modern educated sections of the people as are unable to read the original will find in the book a very reliable account of some of the fundamental ideas of the Vedantic system of thought—*The Vedanta Kesari.*

Very useful and illuminating exposition of the Gita which, we are sure, will be as inspiring to the learned as it will be a kindly light to the uninitiated—*The Hindu Mind.*

It is a masterly treatment of the various stages in the march of the Soul towards the Supreme Goal. It is highly interesting from beginning to end. It is an invaluable and indispensable companion to every student of life.—*The Light of Asia.*

Popular Presentation Series
By R. KRISHNASWAMI AIYAR, M. A., B. L.

## 3. FROM THE MASTER'S LIPS.

This is a very arresting and interesting book. The author here gives to the world the thoughts of one of the greatest spiritual forces of to-day. He has, by his skilful use of dialogue, given us not a chronicle but a portrait in which the discerning reader will trace a considerable resemblance to the present Head of the Sringeri Mutt.—*The Hindu.*

The dialogues are intended to show that the strict observance of Sanatana Dharma must prevent one from sin and misery and lead him to happiness and bliss. Religious, social and educational problems are also discussed in the light of Sanatana doctrine—*The Madras Mail.*

Mr. Krishnaswami Aiyar has done a real service in putting down his impressions of the Svamiji's views on the various questions now agitating the minds of the Hindus, in permanent form. If for nothing else, at least as an authoritative exposition of the Sanatanist points of view, the book is valuable. But it is much more—*The Bharata Dharma.*

A variety of topics of present day interest presented in a lucid and charming style—*The Dharmic Hindu.*

It is a splendid production promising solutions to many difficult problems that confront us in these materialistic days. Complicated philosophical ideas have been expounded in simple language and in a telling and convincing manner— *N. Chandra Sekhara Aiyar*, B. A., B. L., District Judge.

Remarkable and timely publication. On account of the diversity and importance of the topics discussed, the clear exposition, subtle analysis and profound learning apparent at each turn of the argument ... the book is bound to be of the greatest help to all Astikas—*The Arya Dharma.*

POPULAR PRESENTATION SERIES
By R. KRISHNASWAMI AIYAR, M. A., B. L.

## 4. THOUGHTS FROM THE ETERNAL LAW.

This book may be described as a primer of Hinduism. His treatment of the subject shows that he is not only well versed in the Hindu scriptures but has bestowed much careful thought on their teaching. —*The Hindu.*

An admirable exposition of some fundamental questions of Religion and Philosophy and, based on them, of conduct of individuals in private and social life from the point of view of the followers of Sankara. Things are stated and proved like propositions in Euclid—*The Federated India.*

A clear analysis and in many respects an intelligent presentation of the fundamental principles of Hinduism. That Mr. Aiyar has been able to give a clear and synthetic presentation of the doctrines of the Srutis, Smirtis, Puranas and ritualistic books in a small book of this kind does much credit to the author's erudition and grasp of essential principles. ... Barring some of the views expressed on social questions, we have nothing but praise for the book -*The Vedanta Kesari.*

An exposition of the principles which lie behind the numerous practices and observances of the Hindu religion ... Written in an easy and intelligent way, it is free from all abstruse technicalities. It is likely to create in its readers a deeper interest in Hinduism—*The Prabuddha Bharata.*

புஸ்தகம் கிடைக்குமிடம்:—

1. ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ்,
23, ஸம்பந்தமூர்த்தி தெரு,
மதுரை.

2. ஸ்ரீ கமலாநந்த பாரதி அதிஷ்டானம்
மஹாதானபுரம்.
திருச்சி ஜில்லா.

3. R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்
அட்வொகேட்
திருநெல்வேலி.